
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2024

www.tnpscthervupettagam.com




















SHANKAR IAS ACADEMY™

Best Academy for Civil Services Exam Coaching

SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


TNPSC துளிகள் ....................................................................................... 11

தமிழ்நாடு செய்திகள் ....................................................................................... 24

- 2024 ஆம் ஆண்டில் அதிக கடன் பெற்ற மாநிலம் ....................................... 24
- கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் 125வது ஆண்டு நிறைவு ....................................... 25
- வைக்கம் சத்தியாகிரகத்தின் 100வது ஆண்டு நிறைவு ....................................... 26
- 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இட ஒதுக்கீடு ....................................... 27
- குமிட்டிபதியில் பாறை ஓவியங்கள் ....................................... 27
- நாய்களில் பரவும் மாங்கே நோய் ....................................... 28
- தமிழ்நாட்டிற்கான இந்தியப் பறவைகளின் நிலை குறித்த அறிக்கை ....................................... 29
- 2024 ஆம் ஆண்டு தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை – தமிழ்நாடு ....................................... 29
- யானைக்கால் நோய் பாதிப்பு குறித்த நிலை 2024 ....................................... 30
- இந்திய-சிங்கப்பூர் திட்டத்தின் இரண்டாம் கட்டம் ....................................... 32
- மலைக் கணவாய்ப் பகுதிகளில் உள்ள சாலைகளின் தாங்கும் திறன் ....................................... 32
- வாக்குப்பதிவில் குறைந்து வரும் பாலின இடைவெளி ....................................... 32
- நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு ....................................... 33
- உடல் ரீதியான தண்டனையை நீக்குவதற்கான வழிகாட்டுதல்கள் ....................................... 34

தேசியச் செய்திகள் ....................................................................................... 35

- வருடாந்திர இந்திய காசநோய் அறிக்கை 2024 ....................................... 35
- பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகள் ....................................... 36
- MGNREGA கீழான ஊதிய விகிதம் உயர்வு 2024-25 ....................................... 37
- நீர் சுத்திகரிப்பு அமைப்புத் தொடர்பான (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகள், 2023 ....................................... 37
- ‘சாகர் அங்காளன்’ வழிகாட்டுதல்கள் ....................................... 38
- GROW இணைய தளம் மற்றும் அறிக்கை ....................................... 38
- ‘SARTHI’ இணைய தளம் ....................................... 39
- SWATI இணைய தளம் ....................................... 40
- இந்தியாவின் தொலைதூரக் கிராமங்களில் APAAR ....................................... 40
- சட்ட ஆணையத்தின் 287வது அறிக்கை ....................................... 41
- இந்தியாவில் வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை ....................................... 42
- பெருந்தொற்று திட்டம் மற்றும் சீர்தரச் செயல்பாட்டு முறைமை ....................................... 43
- நெகிழிக் கழிவு மேலாண்மை (திருத்தம்) விதிகள், 2024 ....................................... 43
- 'ஒரு வாகனம், ஒரு FASTag’ முன்னெடுப்பு ....................................... 44
- இந்தியாவின் வேகமான உள்நாட்டு IP/MPLS ரவுட்டர் ....................................... 44
- ‘இந்தியாவிற்குள்ளேயே திருமணம் செய்துகொள்ளுங்கள்’ என்ற கருத்து ....................................... 45
- RoDTEP திட்டத்தின் விரிவாக்கம் ....................................... 46

60 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு ..... 46
இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஸ்தாபன தினம் ..... 47
'பாரத்-சக்தி' பயிற்சி ..... 47
இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் ..... 47
INS துஷில் ..... 48
சூரியசக்தி ஒளிமின்னழுத்த தகடு உற்பத்தி நிலை 2024 ..... 48
INDRA செயலி ..... 49
இந்தியாவின் மின்னணு சாதனம் சார்ந்த விளையாட்டுகள் குறித்த அறிக்கை 2024 ..... 49
இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி ..... 50
இந்தியாவின் நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தி 2023-24 ..... 51
இந்தியாவின் அணுசக்தி செயல்திட்டம் ..... 51
2025 ஆம் ஆண்டிற்குள் யூரியா இறக்குமதி நிறுத்தம் ..... 52
மின்சார வாகனப் பயன்பாட்டு ஊக்குவிப்பு திட்டம் 2024 ..... 53
காட்டுக் கடுகு உற்பத்தி 2024 ..... 54
USSD அடிப்படையிலான அழைப்பு பகிர்தல் ..... 54
NICES திட்டம் ..... 55
நட்பு நாடுகளுக்கான வெங்காய ஏற்றுமதி ..... 55
தேசத்தின் நலன் குறித்த அறிக்கை ..... 56
கருங்காய்ச்சல் ஒழிப்பு ..... 57
பருவநிலை மாற்றத்திற்கு எதிரான உரிமை ..... 58
இந்தியாவின் இரண்டாவது வெளிநாட்டுத் துறைமுகம் ..... 59
வாக்காளர்கள் மத்தியில் வேட்பாளரின் தனியுரிமைக்கான உரிமை ..... 60
அரிசி கொள்முதலுக்கான மானிய வரம்பு மீறல் மீதான நடவடிக்கை தடுப்பு விதி ..... 61
2024 ஆம் நிதியாண்டில் நெடுஞ்சாலைகள் ..... 62
மொத்த கருவுறுதல் விகிதத்தின் நிலை - லான்செட் அறிக்கை ..... 63
புலம்பெயர்ந்தோருக்கான சிறப்பு வாக்குச் சாவடிகள் ..... 63
6 மாநிலங்களில் பருத்தி சோதனை ஆய்வகங்கள் ..... 64
இந்தியாவின் பாதுகாப்பு உறவுகள் மேலாண்மைத் திறன் ..... 65
வசதியுரிமை குறித்து உச்ச நீதிமன்றம் ..... 66
CDP-SURAKSHA ..... 67
சாக்சம் செயலி ..... 67
'SPACE' இயங்குதளம் ..... 68
பிலிப்பைன்ஸுக்கு பிரம்மோஸ் ஏவுகணைகள் வழங்கல் ..... 68
நீண்ட ஆயுள் கொண்ட இந்தியா முன்னெடுப்பு ..... 69
ஷோம்பென் பழங்குடியினர் வாக்குப்பதிவு ..... 69
திரவ நைட்ரஜன் நுகர்வு ..... 69
எத்திலீன் ஆக்சைடு கலப்பு ..... 70
உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான NOTTO அடையாள எண் ..... 71
கிரிம்சன் பாராகுடா ..... 71

குழந்தைப் பராமரிப்பிற்கான விடுப்பு ..... 72
ISHAN திட்டம் ..... 72
இந்தியாவின் தூய்மையான ஆற்றல் பரிமாற்றம் ..... 73
இண்டஸ் இன்ட் வங்கியின் CBDC ..... 74
கிரேட் நிக்கோபார் தீவு மேம்பாட்டுத் திட்டம் ..... 75
சர்வதேசச் செய்திகள் ..... 76
தன்பாலினத் திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்குதல் - தாய்லாந்து ..... 76
உலகின் மூன்றாவது பெரிய மசூதி ..... 76
கழுதையின் தோல் வர்த்தகத்திற்குத் தடை ..... 77
புகையிலை எதிர்ப்புச் சட்டம் ரத்து - நியூசிலாந்து ..... 78
எரிசக்தி சாசன ஒப்பந்தத்தில் இருந்து விலகல் ..... 78
சர்வதேச ஒளி மாசு வழிகாட்டுதல்கள் ..... 79
ஷெங்கன் பகுதியில் புதிய சேர்க்கை ..... 79
மனிதர்களில் அரிதான வகையில் புபோனிக் பிளேக் நோய் பாதிப்பு ..... 80
தைவானில் மாபெரும் நிலநடுக்கம் ..... 81
CoViNet – உலக சுகாதார அமைப்பு (WHO) ..... 81
துல்லிய காலத் தரவு மாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு நெறிமுறைக் கூட்டுறவு ..... 82
பொழுதுபோக்கு ரீதியிலான கஞ்சா பயன்பாடு சட்டப்பூர்வமாக்கல் – ஜெர்மனி ..... 82
யுனைட் அவேர் தரவுத் தளம் ..... 83
புலம்பெயர்ந்தோர் உயிரிழப்புகளை ஆவணப்படுத்துதல் ..... 83
வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் 75வது ஆண்டு விழா ..... 84
மைக்கேலேஞ்சலோவின் தாவீது சிற்பத்தின் மாண்பு ..... 85
மேற்கத்திய குதிரை மூளை அழற்சி வைரஸ் ..... 85
ZiG – ஜிம்பாவே ..... 86
ஊடுபாலினத்தவர் மீதான UNHRC தீர்மானம் ..... 87
பாலஸ்தீனிய அரசின் ஐ.நா. உறுப்பினர் விண்ணப்பம் ..... 88
உலக சுகாதார அமைப்பின் SARAH செயற்கை நுண்ணறிவு ..... 88
ரஷ்யாவின் கடல்வழி கச்சா எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகள் ..... 89
சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் ..... 90
உலக வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவரங்கள் 2024 ..... 90
இந்தியப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு ..... 91
ஆப்கானிஸ்தானில் நில உரிமைகள் ..... 92
உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி ..... 92
தூய்மையான ஆற்றல் பயன்பாட்டு மாற்றத்திற்கான திட்டம் 2023 ..... 93
ஈரான்-இஸ்ரேல் மோதல் 2024 ..... 94
Men5CV மூளைக்காய்ச்சல் தடுப்பூசி – நைஜீரியா ..... 95
செயற்கைக் கோள் வழி கைபேசி அழைப்பு சேவைகள் - சீனா ..... 96
38வது ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை உறுப்பினர் – சுவீடன் ..... 97
நைஜரில் இருந்து அமெரிக்கா படைகள் திரும்ப அழைப்பு ..... 97

துபாய் வெள்ளம் 2024 ..... 98
அரல் கடல் வற்றிய நிலை ..... 99
யூவிச்சோல்-S காலரா தடுப்பூசி ..... 100
நோயாளிப் பாதுகாப்பு உரிமைகள் சாசனம் ..... 100
முதல் எல்லை அடையாளக் குறி ..... 100
உலகளாவிய சோடியம் அளவுக்குறியீடு ..... 101
உலகளாவிய நெகிழி ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் ..... 102
UNCTAD அமைப்பின் பெயர் மாற்றம் ..... 102
மரகேஷ் ஒப்பந்தத்தின் 30வது ஆண்டு நிறைவு ..... 102
சீனாவின் இராணுவ மறுசீரமைப்பு ..... 103
இந்தியர்களுக்கான புதிய ஷெங்கன் விசா விதிகள் ..... 103
நிம்பஸ் திட்டம் ..... 104
பொருளாதாரச் செய்திகள் ..... 105
வெளிநாட்டு நிதி வரவு ..... 105
UPI பரிவர்த்தனைகள் அதிகரிப்பு ..... 106
இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு ..... 106
டிஜிட்டல் இந்தியா நம்பகத்தன்மை சரிபார்ப்பு முகமை ..... 108
முதல் வணிகரீதியிலான உத்திசார் கச்சா எண்ணெய் சேமிப்பகம் ..... 109
இந்தியா – நிகர முழுமையடைந்த எஃகு இறக்குமதியாளர் ..... 109
4வது பெரிய டிஜிட்டல் சேவை ஏற்றுமதியாளர் ..... 110
2024 ஆம் நிதியாண்டில் வர்த்தகச் செயல்திறன் ..... 111
20 ஆண்டுகளில் இல்லாத அளவில் இந்தியாவின் மிக மோசமான வைப்புத் தொகை நெருக்கடி ..... 112
பருப்பு இறக்குமதி 2023-24 ..... 113
2024 ஆம் நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் குடும்பக் கடன் ..... 113
முன்கூட்டிய பரிமாற்ற விலை நிர்ணய ஒப்பந்தங்கள் ..... 114
மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி ..... 114
நேரடி வரி வசூல் 2023-24 ..... 115
மேம்படுத்தக்கூடிய தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரம் ..... 116
நிகர குடும்ப சேமிப்பு வீழ்ச்சி ..... 116
இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 2024 ..... 117
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 118
நிலவிற்கான விண்வெளி நிலையம் - நாசா ..... 118
நுண்ணுயிர் எதிர்ப்பி ஜோசுரபால்பின் ..... 118
OpenAI: சோரா ..... 119
'ஓல்ட் ஸ்மோக்கர்' இராட்சத செந்நிற நட்சத்திரம் ..... 120
அலாஸ்கா அம்மை: ஆர்த்தோபாக்ஸ் வைரஸ் ..... 120
Pi – தனிநபர் பயன்பாடு சார்ந்த செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள் ..... 121
மைட்டோகாண்ட்ரியல் காக்ஸியெல்லா எதிர்வினையாக்கிகள் ..... 121
கார்பன் நுண்குழாய்களின் சோடியம் வினையூக்கி சேர்க்கை முறை ..... 122

திரிக்கை வடிவிலான காந்தப் புலம் ........ 123
E Ink திரைகள் ........ 124
கலாம் – 250 ........ 124
PRATUSH தொலைநோக்கி ........ 125
கொரியாவின் அணுக்கரு இணைவு உலை ........ 125
உலகின் மிகவும் சக்தி வாய்ந்த சீரொளிக் கற்றை ........ 126
அக்னி-பிரைம் ஏவுகணை 2024 ........ 127
வியாழனின் துணைக் கோளில் ஓசோன் ........ 127
CAR T-செல் சிகிச்சை - NexCAR19 ........ 128
முழு சூரிய கிரகணம் ........ 129
ஹாலி வகை வால் நட்சத்திரம் : சேய்மை தூரப் புள்ளி ........ 129
OptiDrop இயங்குதளம் ........ 130
டிராகன்களின் தாய் எனப்படும் வால் நட்சத்திரம் ........ 131
இந்தியாவின் அணு கடிகாரங்கள் ........ 131
Igla-S சுமந்து செல்லக் கூடிய வகையிலான வான்வழி பாதுகாப்பு அமைப்பு ........ 132
பெரேக்ரின் ஆய்வுக் கலம்- 1 ........ 132
அமெரிக்காவின் ஒடிசியஸ் ........ 133
ஜூக்-2 ஏவுகலம் ........ 134
600வது காமா-கதிர் வெடிப்பு ........ 134
புதிய வைரஸ் போன்ற உயிரியல் வடிவங்கள் ........ 135
வளிமண்டல அலைகள் குறித்த ஆய்வு ........ 136
யுரேனஸ் மற்றும் நெப்டியூனைச் சுற்றி மூன்று புதிய துணைக்கோள்கள் ........ 136
டெராஹெர்ட்ஸ் சேதத் தடுப்பு குறியீடுகள் ........ 137
சூரியனின் முழு வட்டின் புகைப்படம் ........ 138
TSAT-1A செயற்கைக்கோள் ........ 138
பாக்டீரிய நினைவகம் மற்றும் மறுநினைவாக்கம் ........ 139
நிலவிற்கான ஒருங்கிணைந்த நேர மண்டலம் ........ 140
இயற்கையில் காணப்படும் முதல் கட்டமைப்பு மூலக்கூறு ........ 140
சூரியனுக்கு அண்மை நிலையில் வரும் வால் நட்சத்திரங்கள் ........ 141
ஜோசுரபால்பின் ........ 142
விக்னர் படிகம் ........ 142
கைபேசியுடனான நேரடி தகவல் தொடர்பு செயற்கைக்கோள் - ஸ்பேஸ் எக்ஸ் ........ 143
உயர் அதிர்வெண் கொண்ட பிளாஸ்மா அலைகள் – செவ்வாய் ........ 144
30 டோராடஸ் B : மீவொளிர் விண்முகில் ........ 145
மெர்செனரி உளவு மென்பொருள்: ஆப்பிள் நிறுவனம் ........ 145
நீர் ஏற்பு பலபடிச் சேர்மம் - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் ........ 146
கையா BH3 கருந்துளை ........ 146
பேரண்ட விரிவாக்க வீதத்தின் அளவீட்டு முரண்பாடு ........ 147
STEVE நிகழ்வின் மர்மம் ........ 148

எபுலோபிசியம் விவிபாரஸ் – இராட்சத பாக்டீரியா ....... 148
புவியிடங்காட்டி சேவை முடக்கம் – இஸ்ரேல் ....... 149
அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ் – உயிர்க்கொல்லி பூஞ்சை ....... 150
UC-POP-Au – ஒளிவழி வேதிவினையூக்கி ....... 151
பலபடி சேர்ம மின்பகுளி சவ்வு எரிபொருள் கலன் ....... 151
காந்தவிண்மீனிலிருந்து வெளிவரும் அரிய மாபெரும் ஒளிக்கற்றை ....... 152
மூலக்கூறு துளையிடல் விளைவு ....... 152
மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் VASA-1 ....... 153
நாசாவின் ACS3 திட்டம் ....... 154
கிரிஸ்டல் மேஸ் 2 ஏவுகணை ....... 154

**சுற்றுச்சூழல் செய்திகள் ....... 155**

அரிய வெள்ளை நிற ஜென்டூ பென்குயின் ....... 155
டெரோசர் - புதிய இனங்கள் ....... 156
அண்டார்டிக் துருவச்சுழல் நீரோட்டம் ....... 156
அதிக வெப்பம் குறித்த உலகளாவிய உச்சி மாநாடு ....... 157
சீர்குலைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டமைத்தல் – EU ....... 157
சூழல் அழிப்பு - ஒரு குற்றம் ....... 158
தென்கிழக்கு ஆப்பிரிக்க மலைப் பாங்கான தீவுக் கூட்டம் குறித்த ஆய்வு ....... 158
18 புதிய புவியியல் பூங்காக்கள் வலையமைப்பு ....... 159
ஜிப்ஸ் கழுகுகள் - மோயார் பள்ளத்தாக்கு ....... 160
சிக்காடா வண்ணத்துப்பூச்சி ....... 161
புலி வடிவ படை வரிப் பூனை ....... 161
வளர்க்கப்படும் யானைகளின் மரபணு விவரக் குறிப்பு ....... 162
குறையும் ஆப்பிரிக்க ஊண் உண்ணும் பறவைகளின் எண்ணிக்கை ....... 162
ஒரு மில்லியன் இளையோர் நடவடிக்கைகளுக்கான சவால் ....... 163
ஆர்க்டிக் துருவ சூழல் காற்றின் திசை மாற்றம் ....... 163
India Flora இயங்கலை தரவுத் தளம் ....... 164
கடல்சார் நினோ குறியீடு ....... 165
'Forever chemicals' – இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ....... 166
துளையிடும் வாய்ப்பகுதிகளுடன் கூடிய ஆண் கொசுக்கள் ....... 166
நெப்டிஸ் ஃபிலிரா ....... 167
புதிய உண்ணக் கூடிய காளான் வகைகள் ....... 168
மத்தி மீன்களின் மிகப்பெரிய இடம் பெயர்வு ....... 168
எரிமலை சுழல் வளையங்கள் ....... 169
உலக வனக் கண்காணிப்பு இணைய தளத்தின் அறிக்கை ....... 169
ரிங்வுடைட் ....... 170
கரிபா ஏரியின் நீர் மட்டம் ....... 171
4வது உலகளாவிய மாபெரும் பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு ....... 172
சலாஸ் ஒய் கோமேஸ் ....... 172

பனிப்பாறை ஏரிகளின் விரிவாக்கம் ...... 173
பிரேசிலில் புலி வடிவப் படைவரிப் பூனை ...... 174
அண்டார்டிகா பனிப்படலத் துள்ளல் ...... 174
மீனுருவ நீர்வாழ் பாலூட்டி இனங்களின் உரிமைகள் பிரகடனம் ...... 175
கார்பனை உறிஞ்சும் துந்த்ரா பகுதி முதன்மை மூலமாக மாற்றம் ...... 176
கடல் சார் பொருளாதாரம் பற்றிய IUCN அமைப்பின் அறிக்கை ...... 176
பாரோ அறிக்கை ...... 177
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ...... 178
உணவுக் கழிவுகள் குறியீட்டு அறிக்கை 2024 ...... 178
வாரிசுரிமை வரி: ஆக்ஸ்ஃபாம் அறிக்கை ...... 178
ஒழுங்கற்ற பருவநிலை: FAO அறிக்கை ...... 179
EIU வணிக சூழல் தரவரிசை 2024 ...... 180
எண்ணிம மய சிறு தீவு நாடுகள் - UNDP ...... 181
WADA ஊக்கமருந்து எதிர்ப்பு அறிக்கை ...... 182
ஹுருன் அமைப்பின் உலக யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2024 ...... 182
உலக கல்லீரல் அழற்சி நோய் குறித்த அறிக்கை, 2024 – WHO ...... 183
QS அமைப்பின் பாடத்தின் அடிப்படையிலான உலகப் பல்கலைக்கழகத் தர வரிசை 2024 ...... 184
உலக இணையவெளிக் குற்றங்கள் அறிக்கை ...... 185
நோய்க் கண்காணிப்புச் செயல்முறைக்கான நுண் உணர்விகள் ...... 186
உருவாகும் நெகிழிக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தின அறிக்கை ...... 186
நிலையான மேம்பாட்டிற்காக நிதியளித்தல் அறிக்கை 2024 ...... 188
உலகின் பரபரப்பான முதல் 10 விமான நிலையங்கள் 2023 ...... 189
உலக மக்கள் தொகை குறித்த நிலை - 2024 ...... 189
ஆர்க்டிக் பகுதியில் நிலவும் நெகிழி மாசு நெருக்கடி குறித்த அறிக்கை ...... 190
உணவு நெருக்கடி பற்றிய உலகளாவிய அறிக்கை ...... 191
மலிவான கடவுச் சீட்டு தரவரிசை ...... 192
ஆசியாவின் பருவநிலை 2023 ...... 193
உலக நாடுகளின் இராணுவச் செலவினம் 2023 ...... 194
மாநிலச் செய்திகள் ...... 195
AFSPA சட்டத்தின் நீட்டிப்பு ...... 195
நிலம் சார் துறைமுகம் - சப்ரூம் ...... 195
முத்தரப்பு ஒப்பந்தம் - திரிபுரா ...... 196
5,200 ஆண்டுகள் பழமையான ஹரப்பா குடியிருப்பு ...... 197
மாற்றீடு பயிர் முறை ...... 198
லடாக்கிற்கான குறுகிய தொலைவு பாதை ...... 198
முரியா பழங்குடியினர் பிரச்சினைகள் ...... 199
போஹாக் பிஹு ...... 200
உத்தரப் பிரதேச மாநிலத்தின் மதரசா கல்வி வாரியச் சட்டம், 2004 ...... 200
பசுமைக் கடன் வழங்கீட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல் ...... 201

மணிப்பூரில் ஓபியம் சாகுபடி ....202
புதிய புவிசார் குறியீடுகள் - உத்தரப் பிரதேசம் ....202
புதிய தொல்லியல் தளங்கள் – தெலுங்கானா ....203
இலட்சுமண தீர்த்த நதி ....204
பஹாரியா பழங்குடியினர் ....205
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....205**
பல்வேறு படைப்பிரிவுகளில் புதிய நியமனங்கள் ....205
14வது வருடாந்திர ஏஜிஸ் கிரஹாம் பெல் விருதுகள் ....206
தேசியப் படைப்பாளிகளுக்கான விருதுகள் ....206
அறிவியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கான G.D. பிர்லா விருது 2023 ....206
முதலாவது பே ஜல் சர்வேக்சன் விருதுகள் ....207
டேனியல் கான்மேன் ....207
ஃபோர்ப்ஸ் இதழின் உலகின் பில்லியனர்கள் பட்டியல் 2024 ....208
மன்மோகன் சிங் ஓய்வு ....208
FIDE தரவரிசைகள் ....209
உலகளாவிய இளம் தலைவர்கள் சமூகம் 2024 ....210
பீட்டர் ஹிக்ஸ் ....210
சாகர் சம்மான் விருதுகள் 2024 ....211
ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் NS-25 விண்வெளிப் பயணம் ....212
IRDAI வெள்ளி விழா ....212
பெருங்கடல்களுக்கான பத்தாண்டு கால இலக்கு மாநாடு 2024 ....212
**விளையாட்டுச் செய்திகள் ....214**
ஹாக்கி இந்தியா விருதுகள் 2023 ....214
விஸ்டன் புத்தகத்தில் இடம் பெற்ற உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்கள் ....214
காமன்வெல்த் போட்டிகளை நடத்தும் நாடு ....215
லாரூஸ் உலக விளையாட்டு விருதுகள் 2024 ....215
**முக்கிய தினங்கள் ....216**
ஒடிசா மாநில உருவாக்க தினம் – ஏப்ரல் 01 ....216
பார்வைத் திறன் இழப்பு தடுப்பு வாரம் 2024 ....217
உலக மதியிறுக்க நிலை விழிப்புணர்வு தினம் – ஏப்ரல் 02 ....217
சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02 ....217
சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 04 ....218
தேசிய கடல்சார் தினம் - ஏப்ரல் 05 ....218
சர்வதேச மனசாட்சித் தினம் - ஏப்ரல் 05 ....219
சர்வதேச மேம்பாட்டிற்கான விளையாட்டு தினம் - ஏப்ரல் 06 ....219
1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற டுட்சிகளுக்கு எதிரான இனப் படுகொலையின் சர்வதேச பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07 ....219
உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07 ....220
உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10 ....221

உலக நடக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11 ....... 221
பாதுகாப்பான தாய்மார்களுக்கான தேசிய தினம் - ஏப்ரல் 11 ....... 222
சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12 ....... 223
ஜாலியன் வாலாபாக் படுகொலை தினம் - ஏப்ரல் 13 ....... 223
உலக துளிமம் தினம் - ஏப்ரல் 14 ....... 224
B.R. அம்பேத்கர் ஜெயந்தி - ஏப்ரல் 14 ....... 225
40வது சியாச்சின் தினம் - ஏப்ரல் 13 ....... 225
உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம் - ஏப்ரல் 14 ....... 226
உலக கலை தினம் - ஏப்ரல் 15 ....... 227
தேசிய தீயணைப்புச் சேவை தினம் - ஏப்ரல் 14 ....... 227
உலக இரத்தம் உறையாமை நோய் தினம் - ஏப்ரல் 17 ....... 228
சர்வதேச வணிக நோக்கம் சாரா வானொலி தினம் - ஏப்ரல் 18 ....... 229
உலகப் பாரம்பரியத் தினம் - ஏப்ரல் 18 ....... 229
உலக கல்லீரல் தினம் - ஏப்ரல் 19 ....... 230
தேசிய குடிமைப் பணிகள் தினம் - ஏப்ரல் 21 ....... 230
உலக பூமி தினம் - ஏப்ரல் 22 ....... 231
உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23 ....... 231
உலக ஆய்வக தினம் - ஏப்ரல் 23 ....... 232
ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய மொழி தினம் - ஏப்ரல் 23 ....... 232
உலக ஆய்வக விலங்குகள் தினம் - ஏப்ரல் 24 ....... 233
தேசியப் பஞ்சாயத்து தினம் - ஏப்ரல் 24 ....... 233
உலக மலேரியா தினம் - ஏப்ரல் 25 ....... 234
உலக பென்குயின் தினம் - ஏப்ரல் 25 ....... 235
உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26 ....... 235
சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் - ஏப்ரல் 26 ....... 235
நிழல்கள் இல்லா தினம் 2024 - ஏப்ரல் 24 ....... 236
சர்வதேச ICT துறையில் பெண்கள் தினம் - ஏப்ரல் 25 ....... 237
உலக கால்நடை தினம் - ஏப்ரல் 27 ....... 237
கோங்ஜோம் தினம் - ஏப்ரல் 23 ....... 237
உலக நோய்த்தடுப்பு வாரம் - ஏப்ரல் 24 - 30 ....... 238
உலகப் பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உரிமை தினம் - ஏப்ரல் 28 ....... 238
ஆயுஷ்மான் பாரத் திவாஸ் - ஏப்ரல் 30 ....... 239
இதரச் செய்திகள் ....... 240
இதுவரை கண்டறியப்படாத மிகப் பழமையான தோல் படிமம் ....... 240
900 ஆண்டுகள் பழமையான சாளுக்கியர் காலக் கல்வெட்டு ....... 240
இந்தியப் பெருங்கடலில் ‘புவிஈர்ப்புத் துளை’ ....... 241
EEG கண்டுபிடிக்கப் பட்டதன் 100வது ஆண்டு நிறைவு ....... 241
ஃபனிகிரியில் இக்ஷ்வாகு கால நாணயங்கள் ....... 242
இராட்சத ப்ளியோசர் மண்டை ஓடு கண்டுபிடிப்பு ....... 243

**எகிப்தில் பதனிடப்பட்ட வாலில்லாப் பெருங்குரங்குச் சடலம் ......243**
**"டெரர் பீஸ்ட்ஸ்" புழுக்களின் புதைபடிவங்கள் ......244**
**வாசுகி இண்டிகஸ் ......245**

# TNPSC துளிகள்

- ❖ பல்வேறு மருந்துகள் குறிப்பிட்ட விகிதத்தில் ஒரே மருந்தாக கலக்கப்பட்ட (FDC) சளி எதிர்ப்பு மருந்தினை 4 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குப் பயன்படுத்தச் செய்வதற்கு இந்திய மருந்துகள் ஒழுங்குமுறை அமைப்பான மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது தடைவிதித்துள்ளது.
  - ○ இந்த சளி எதிர்ப்பிற்கான நிலையான விகித மருந்துக் கலவை (FDC) என்பது குளோர்ஃப்பெனிரமைன் மேலேட் மற்றும் ஃப்பெனைலெஃப்ரின் ஆகிய இரண்டு மருந்துகளின் கலவையாகும்.
- ❖ சவுதி அரேபியா நாடானது பிரபஞ்ச பேரழகி போட்டியில் முதன்முறையாக பங்கேற்க உள்ள நிகழ்வானது அந்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
  - ○ ரூமி அல்கஹ்தானி அந்நாட்டின் சார்பாக இப்போட்டியில் பங்கேற்க உள்ள முதல் போட்டியாளர் ஆவார்.
- ❖ இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம், இந்தியப் பொதுக் காப்பீட்டு நிறுவனம் மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கோ. லிமிடெட் ஆகியவை 2023-24 ஆம் நிதியாண்டிற்கான உள்நாட்டின் அமைப்பு ரீதியிலான முக்கியக் காப்பீட்டு நிறுவனங்களாக (Domestic Systemically Important Insurers D-SIIs) தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ❖ புனிதக் குறியீடான 'ஓம்' வடிவில் வடிவமைக்கப்பட்ட உலகின் முதல் கோவில் ஆனது தற்போது ராஜஸ்தானின் பாலி நகரில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- ❖ இந்திய-பிரிட்டிஷ் பத்திரிகையாளரும் விமர்சகருமான மதுமிதா முர்கியா எழுதிய “Code Dependent: Living in the Shadow of AI” என்ற புத்தகமானது 2024 ஆம் ஆண்டிற்கான புனைவு கதை அல்லாத புத்தகத்திற்கான மகளிர் பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
- ○ இந்தப் புத்தகம் ஆனது மனித சமுதாயத்தில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்து ஆராய்கிறது.
- ❖ கமல் கிஷோர், ஐக்கிய நாடுகள் சபையின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகத்தின் (UNDRR) உதவித் தலைமை செயலாளராகவும், பேரிடர் அபாயக் குறைப்பிற்கான பொதுச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ இவர் இந்தியாவின் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உயர் அதிகாரி ஆவார்.
- ❖ 2024 ஆம் ஆண்டிற்கான ரொமைன் ரோலண்ட் புத்தகப் பரிசானது பங்கஜ் குமார் சாட்டர்ஜியின் 'ஸ்டாலினர் திவான்' என்ற வங்காள மொழிபெயர்ப்பு நூலிற்கு வழங்கப் பட்டுள்ளது.
- ❖ மின் மற்றும் மின்னணு பொறியாளர்கள் அமைப்பின் (IEEE) கேரளா பிரிவானது, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவரான S. சோமநாத் அவர்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான K.P.P. நம்பியார் விருது வழங்கி கௌரவித்து உள்ளது.
- ❖ சுனில் பார்தி மிட்டல் பிரிட்டன் நாட்டு மன்னர் கையால் கௌரவ வீரத் திருமகன் பட்டத்தினைப் பெற்ற முதல் இந்திய குடிமகன் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ❖ அதானி குழுமம் ஆனது, சமீபத்தில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் கான்பூர் நகரில் 500 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள தெற்காசியாவின் மிகப்பெரிய வெடிமருந்து மற்றும் ஆயுத ஏவுகணை வளாகத்தினைச் சமீபத்தில் திறந்து வைத்துள்ளது.

❖ BioAsia எனப்படும் ஆசியாவின் முதன்மையான உயிரித் தொழில்நுட்பம் மற்றும் உயிர் அறிவியல் மாநாடானது (21வது) ஹைதராபாத் மாநிலத்தில் நடைபெற்றது.

 ○ நடப்பு ஆண்டு உச்சி மாநாட்டின் கருத்துரு, "தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவு □□□□□□□□□□□□□ கொண்டு உயிர் அறிவியலை மாற்றியமைத்தல்" என்பதாகும்.

❖ க்ருத்ரிம் என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) புத்தொழில் நிறுவனமானது, அதன் beta version AI (பகுதியளவு நிறைவு செய்யப்பட்ட சோதனை பயன்பாட்டிற்கான) உரையாடு மென்பொருளினை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ வட இந்தியாவின் முதல் அரசு ஹோமியோபதி கல்லூரியானது ஜம்மு காஷ்மீரின் கத்வா மாவட்டத்தில் உள்ள ஜஸ்ரோட்டா பகுதியில் நிறுவப்படவுள்ளது.

❖ அந்தமான் & நிக்கோபர் படைப் பிரிவானது, தனது முதலாவது அனைத்து மகளிர் கடல்சார் கண்காணிப்பு நடவடிக்கையினை INS உட்கோர்ஷ் என்ற கடற்படை விமான நிலையத்தில் மேற்கொண்டது.

 ○ இந்த நடவடிக்கையானது, படைத்தளபதி சுபாங்கி ஸ்வரூப், துணைப் படைத் தளபதி திவ்யா சர்மா மற்றும் துணைப் படைத்தளபதி வைஷாலி மிஸ்ரா ஆகிய கடற்படை அதிகாரிகள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

❖ இந்தியக் கடற்படையின் INS டிர் கப்பலானது, செய்ஷல்சில் நடைபெற்ற கட்லாஸ் எக்ஸ்பிரஸ் - 2024 என்ற பயிற்சியில் பங்கேற்றது.

❖ டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனமானது, சத்தீஸ்கரில் உள்ள ராஜ்நந்த்கான் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு வரும் இந்தியாவின் மிகப்பெரிய சூரிய சக்தி மற்றும் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) மையத்தின் பணிகளை நிறைவு செய்துள்ளது.

○ இது 100 மெகாவாட் சூரியசக்தி ஒளி மின்னழுத்த தொழில்நுட்பம் சார்ந்த மின் உற்பத்தி நிலையம் மற்றும் சுமார் 120 மெகாவாட் திறன் கொண்ட பயன்பாட்டு அளவிலான மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

❖ கமல் கிஷோர் (55) பேரிடர் அபாயக் குறைப்புப் பிரிவின் உதவித் தலைமைச் செயலாளராகவும், அப்பிரிவின் தலைமைச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ மத்திய அரசானது, 'அனுவாதினி' செயலி எனப்படுகின்ற ஒரு செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

 ○ அனைத்துப் பள்ளி மற்றும் உயர்கல்வி படிப்புகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை எண்ணிம வடிவத்தில், குறிப்பாக இந்திய அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ள இந்திய மொழிகளில் கிடைக்கப் பெறச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ தமிழ்நாட்டினைச் சேர்ந்த காலச்சுவடு பதிப்பகம் நிறுவனம் ஆனது 2023 ஆம் ஆண்டின் சிறந்த பதிப்பாளர் விருதினை வென்றுள்ளது.

❖ மத்திய அரசானது, சுமார் 38,000 கோடி ரூபாய் மதிப்பிலான பேரிடர் நிவாரண நிதியை வழங்காமல் தமிழக மாநில மக்களை மாற்றாந்தாய் போல் நடத்துவதாகக் குற்றம் சாட்டி தமிழக அரசானது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

 ○ மிக்சாங் புயலின் இரட்டைப் பேரழிவுகள் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு ஆகியவற்றிற்கு உதவுவதற்காக மாநில அரசால்

இந்த நிதி கோரப்படுகிறது.

- இஸ்ரேல் ஆனது காஸாவில் உடனடி போர் நிறுத்தம் செய்யவும், ஆயுதத் தடையை அமல்படுத்துவதற்கும் வேண்டி அரசுகளுக்கு அழைப்பு விடுக்கும் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திற்கு வாக்களிப்பதை இந்தியா புறக்கணித்தது.
- ஒடிசா அரசிற்குச் சொந்தமான பாரதீப் துறைமுகம், 2024 ஆம் நிதியாண்டில் 145.38 மில்லியன் டன் சரக்கைக் கையாண்டதன் மூலம், சரக்குப் பொருட்களின் அளவுகளின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரியத் துறைமுகமாக உருவெடுத்து குஜராத்தில் உள்ள தீன்தயாள் துறைமுக வாரியத்தினைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- உலகின் மிகவும் வயதான மனிதர் என்று கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற வெனிசுலா நாட்டினைச் சேர்ந்த ஜுவான் விசென்டே பெரெஸ் மோரா (114) என்பவர் சமீபத்தில் காலமானார்.
- 2023-24 ஆம் ஆண்டிற்கான (56வது) தேசிய கோ-கோ சாம்பியன்ஷிப் போட்டியில் மகாராஷ்டிரா அணி வெற்றி பெற்றுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களின் நிலை குறித்த ஆணையம் (CSW) ஆனது, 2025 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள தனது 69வது கூட்டத்திற்குத் தலைமை ஏற்பதற்கு சவுதி அரேபியாவை ஒரு மனதாக நியமித்துள்ளது.
- டெல்லி பல்கலைக்கழகத்தின் காளிந்தி கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் மீனா சரண்டாவிற்கு 2024 ஆம் ஆண்டிற்கான 'சர்வதேசக் கலாச்சார விருது' வழங்கப்பட்டு உள்ளது.
- அதானி கிரீன் எனர்ஜி நிறுவனமானது, 10000 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனைத் தாண்டிய இந்தியாவின் முதல் நிறுவனமாக மாறியுள்ளது.
- ஜம்மு & காஷ்மீரைச் சேர்ந்த பில்கிஸ் மிர், இந்த ஆண்டு பாரீஸ் கோடைகால ஒலிம்பிக் போட்டியில் நடுவர் உறுப்பினராக இந்தியாவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற உள்ளார்.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி எதிர்கால ஆற்றல் நிறுவனமான PJSC- மஸ்தர், ஆனது உலகளாவிய எதிர்கால ஆற்றல் உச்சிமாநாடு (WFES) நடத்தத் தயாராகி வருகிறது.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்ற மீராபாய் சானு, IWF உலகக் கோப்பை போட்டியின் மகளிர் 49 கிலோகிராம் எடையினருக்கான B பிரிவில் மூன்றாவது இடத்தைப் பெற்றதையடுத்து 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.
- மைக்ரோசாப்ட் மற்றும் ஓபன்AI ஆகியவை இணைந்து "ஸ்டார்கேட்" என்ற செயற்கை நுண்ணறிவு மீக்கணினியினை உருவாக்கி வருகின்றன.
- முதல் செயற்கை நுண்ணறிவு அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட IRAH எனப் படும் இந்திய அறிவியல் புனைகதை சார்ந்த விறுவிறுப்பான இந்தி-மொழி திரைப் படம் ஆனது சமீபத்தில் வெளியானது.
- இந்தியாவின் முதல் சிறிய அளவிலான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (SSLNG) உற்பத்தி அலகு ஆனது சமீபத்தில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள கெயில் இந்தியா நிறுவனத்தின் விஜயப்பூர் வளாகத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய விமானப்படையானது அதன் செயல் திறன்களையும், அதி முக்கியத்துவம் கொண்ட நடவடிக்கைகளுக்கான ஒரு தயார்நிலையையும் பரிசோதிப்பதற்காக 10 நாட்கள் அளவிலான ‘ககன் சக்தி-2024’ என்ற பயிற்சியை உத்தரப் பிரதேசத்தில் மேற்

கொண்டு வருகிறது.

- சத்தீஸ்கர் மாநிலத்தில் அமைந்துள்ள பாரத் அலுமினியம் கம்பெனி லிமிடெட் (BALCO) நிறுவனமானது, அலுமினியம் செயல்பாட்டு முன்னெடுப்பு (ASI) செயல்திறன் தரநிலை V3 சான்றிதழைப் பெற்ற முதல் இந்திய நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- கத்தியா கெஹு (கோதுமை) என்று பிரபலமாக அறியப்படும் உத்தரப் பிரதேசத்தில் உள்ள புந்தேல்கண்ட் பகுதியின் உள்நாட்டுப் பண்ணை உற்பத்தி வகை கோதுமைக்கு மதிப்பு மிக்க புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) பாதுகாப்புச் சபையின் செயலாளர்களின் 19வது கூட்டம் ஆனது கஜகஸ்தானின் ஆஸ்தானா நகரில் நடைபெற்றது.
- நியூயார்க் நகரில் அமைந்துள்ள ஹியூம் நிறுவனம் ஆனது, 'மனவெழுச்சி நுண்ணறிவுடன் கூடிய முதல் உரையாடும் வகையிலான செயற்கை நுண்ணறிவினை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள REC லிமிடெட் நிறுவனம் ஆனது, 'புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு நிதியளித்தல்' பிரிவில் 2024 ஆம் ஆண்டிற்கான SKOCH ESG விருதை வென்று உள்ளது.
- டாக்டர் கார்த்திக் கொம்முரி பற்சீரமைப்பியல் மற்றும் தாடை வலி ஆகிய பிரிவுகளில் நிபுணத்துவம் பெற்ற புகழ்பெற்ற வெளிநாடுவாழ் பல்மருத்துவ நிபுணர் எனும் மதிப்பு மிக்க தேசியப் புகழ் விருதை பெற்றுள்ளார்.
- சர்வதேச எரிசக்தி முகமை (IAEA) மற்றும் பெல்ஜியம் அரசு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த முதல் அணுசக்தி உச்சி மாநாடானது பிரஸ்ஸல்ஸ் என்ற நகரில் நடத்தப் பட்டது.
- ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான 2024 ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் சமூகக் கணக்கெடுப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் (UN-ESCAP) வெளியிடப் பட்டுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது, மேற்கு வங்காளத்தில் உள்ள ஜுன்புட் கிராமத்தில் நாட்டின் ஆயுத அமைப்புகளுக்கான சிறிய சோதனை மையத்தை உருவாக்குவதற்கான திட்டத்தினைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.
- இந்திய கடலோரக் காவல்படையானது, தமிழ்நாடு மாநிலத்தின் இராமேஸ்வரம் அருகே அமைந்துள்ள மண்டபம் பகுதியில் செயல்பாட்டுத் தயார்நிலை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டை மதிப்பாய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நீர்வாழ் மையத்தைத் திறந்து வைத்துள்ளது.
- இந்தியக் கடற்படை, கடலோரக் காவல்படை, கடல்சார் காவல்துறை, மீன்வளத் துறை, சுங்கத் துறை மற்றும் இதரப் பாதுகாப்பு அமைப்புகள் ஆனது சாகர் கவாச் எனப்படும் கடலோரப் பாதுகாப்புப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.
- மகாராஷ்டிராவின் சாங்லி மாவட்டத்தில் உள்ள மிராஜ் என்ற சிறிய நகரத்தின் சித்தார் மற்றும் தம்புரா ஆகிய இசைக்கருவிகளுக்கு, புகழ்பெற்ற புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளன.
- C-DOT மற்றும் காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை '10-ஜிகாபிட் திறன் கொண்ட சமச்சீரான செயல்பாட்டு ஒளியிழை வலையமைப்பு (அதாவது, XGS-PON) ஒளியிழை கம்பி முனையம் (OLT) மற்றும் ஒளியிழை வலை அமைப்பு அலகு (ONU) ஆகியவற்றிற்கான பல்வேறு முன்மாதிரிகளை உருவாக்கச் செய்வதற்கான

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- நாசாவின் செவ்வாய்க் கிரகத்தின் எந்திர ஹெலிகாப்டரான இங்ஜெனியூட்டி, மூன்று ஆண்டுகளில் டஜன் கணக்கான முறை விண்வெளியில் பறந்த பிறகு மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பியுள்ளது.
  - வேறொரு உலகில் ஆற்றலூட்டப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட பறக்கும் நிலையை அடையும் முதல் வாகனம் இதுவாகும்.
- புகழ்பெற்ற எழுத்தாளர் சாம் பிட்ரோடா 'The Idea of Democracy' என்ற தலைப்பிலான புதிய புத்தகத்தினை எழுதியுள்ளார்.
  - இது ஜனநாயகத்தின் தற்போதைய நிலை மற்றும் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் அதன் சாத்தியமான சவால்கள் குறித்து ஆராய்கிறது.
- GAIL (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது, 'சிறந்த கட்டுமானத் திட்டங்களுக்கான சாதனை விருது' பிரிவில் மதிப்புமிக்க 15வது CIDC விஸ்வகர்மா விருதினைப் பெற்று உள்ளது.
  - பரௌனி – கௌஹாத்தி இயற்கை எரிவாயு குழாய் அமைப்புத் திட்டத்தில் (BGPL) அதன் குறிப்பிடத்தக்கச் சாதனைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சிறு வணிக கடன்கள் ஆனது 2024 ஆம் நிதி ஆண்டில் அதிகரித்து ஒரு புதிய சாதனை அளவினை எட்டியுள்ளதோடு, 5 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவினையும் கடந்தது.
- இந்திய மூலதனச் சந்தைக் கட்டுப்பாட்டு அமைப்பான இந்தியப் பங்குச்சந்தை மற்றும் பரிமாற்ற ஒழுங்குமுறை ஆணையம் (SEBI) ஆனது அதன் தகவல் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகளுக்காக ISO/IEC 27001:2022 என்ற தரச் சான்றிதழைப் பெற்று உள்ளது.
- ரஷ்ய நாட்டின் மறைந்த எதிர்க் கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி மற்றும் அவரது மனைவி யூலியா ஆகியோருக்கு "ஊடக சுதந்திரப் பரிசு" வழங்கப்பட உள்ளது.
- 'ஹார்டெஸ்ட் கீசர்' என்று அழைக்கப்படும் பிரிட்டன் என்பவர், ஆப்பிரிக்க கண்டத்தின் முழு நீளமான 16,000 கிலோமீட்டர்களுக்கு மேலான தொலைவிற்கு ஓடிய முதல் நபர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- இங்கிலாந்தைச் சேர்ந்த பிரிட் ஜான் ஆல்பிரட் டின்னிஸ்வுட் (111) என்பவர், உலகின் தற்போதைய மிக வயதான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்று உள்ளார்.
- ரோமானியக் கலாச்சாரத்தை கொண்டாடுவதற்காகவும், ரோமானிய மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் ஏப்ரல் 08 ஆம் தேதியன்று சர்வதேச ரோமானிய தினம் அனுசரிக்கப்படுகிறது.
- விண்வெளி ஆய்வுக்கான முயற்சியினை மேம்படுத்தச் செய்வதற்கான முயற்சியை அங்கீகரிக்கும் வகையில், விண்வெளி ஆய்விற்கான மதிப்புமிக்க 2024 ஆம் ஆண்டு ஜான் L. 'ஜாக்' ஸ்விகர்ட் ஜூனியர் விருதானது இந்தியாவின் சந்திரயான்-3 ஆய்வுக் குழுவிற்கு வழங்கப் பட்டது.
- பெங்களூருவைச் சேர்ந்த கன்னடக் கவிஞரும், எழுத்தாளருமான மம்தா G. சாகர், இலக்கிய உலகில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக என்று, உலக எழுத்தாளர்களின் அமைப்பின் (WOW) உலக இலக்கியப் பரிசைச் சமீபத்தில் வென்றுள்ளார்.
- உச்ச நீதிமன்றம் ஆனது நீதிபதி அனிருத்தா போஸ் என்பவரை போபால் நகரில் உள்ள உள்ள தேசிய நீதித்துறை அகாடமியின் (NJAC) இயக்குநராக நியமித்துள்ளது.

- கடற்படைப் பணியாளர்களின் தலைமைத் தளபதி அட்மிரல் ஹரி குமார், கடற் கொள்ளை எதிர்ப்பு மீதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டதற்காக, INS சாரதா என்ற ரோந்துக் கப்பலுக்கு 'On the Spot Unit Citation' விருதினை வழங்கினார்.
  - ஓமரி என்ற ஈரானிய மீன்பிடிக் கப்பலின் அனைத்து 19 பணியாளர்களையும் (11 ஈரானியர்கள் மற்றும் 8 பாகிஸ்தானியர்கள்) பாதுகாப்பாக விடுவிக்கும் பணியில் இந்தக் கப்பல் ஈடுபட்டது.
- டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை நிறுவனம் ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் விளம்பரப் பட விருதை வென்றதன் மூலம் மிகவும் மதிப்புமிக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- HDFC வங்கியானது, லட்சத்தீவில் தனது கிளையைத் திறந்த முதல் தனியார் வங்கி ஆகும்.
- தெருவோரங்களில் வாழும் குழந்தைகளின் அவல நிலையைப் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அவர்களின் உள்ளடக்கம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 12 ஆம் தேதியன்று தெருவோரங்களில் வாழும் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- இந்திய-அமெரிக்க நடிகரும், 'Mean Girls' என்ற திரைப்பட நடிகையுமான அவந்திகா வந்தனாபு, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் இந்த ஆண்டிற்கான சிறந்த தெற்காசிய நபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- பிரெஞ்சு வாகனத் தயாரிப்பு நிறுவனமான சிற்றோயின் (Citroën), இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 500 ë-C3 ரக மின்சார வாகனங்களை இந்தோனேசியாவிற்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது.
  - இது ஒரு பன்னாட்டு மகிழுந்து உற்பத்தி நிறுவனம் இந்தியாவில் இருந்து மின்சார வாகனங்களை ஏற்றுமதி செய்யும் முதல் நிகழ்வாகும்.
- சிறப்பு நூலகர்களின் பங்களிப்பையும் தகவல் மேலாண்மையில் அவர்களின் சிறந்தப் பங்களிப்பினையும் பாராட்டுவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் 13 ஆம் தேதியன்று சர்வதேச சிறப்பு நூலகர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சமண மடாதிபதி ஆச்சார்யர் லோகேஷ் முனி, தங்கத்தின் தன்னார்வச் சேவைக்கான அமெரிக்க அதிபரின் தங்கப் பதக்க விருதினைப் பெற்ற முதல் இந்தியத் துறவி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- அதானி க்ரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனம் குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள கவ்டா எனுமிடத்தில் 538 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உலகின் மிகப்பெரியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்காவினை உருவாக்கி வருகிறது.
- டஸ்ட்லிக் எனப்படும் இந்தியா - உஸ்பெகிஸ்தான் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியானது உஸ்பெகிஸ்தானில் தொடங்கியது.
- ஐக்கியப் பேரரசானது லிண்டி கேமரூன் என்பவரை இந்தியாவிற்கான முதல் பெண் உயர் ஆணையராக நியமித்துள்ளது.
- பூர்வீக குடிமக்கள் பிரச்சினைகளுக்கான ஐநா நிரந்தர மன்றத்தின் 23வது அமர்வு அமெரிக்காவின் நியூயார்க்கில் தொடங்கியுள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழுவானது, அதன் நிர்வாக இயக்குநரான

கிறிஸ்டலினா ஜார்ஜீவாவின் பதவிக் காலத்தை இரண்டாவது ஐந்தாண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது.

- இந்தியா மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னணி வீரர் ரோஹித் சர்மா டி20 போட்டியில் 500 சிக்ஸர்களை அடித்த முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற ஒரு சாதனையைப் படைத்துள்ளார்.
- நடப்பு நிதியாண்டில் நாட்டில் உள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் வணிக பயன்பாட்டு நிலக்கரித் தொகுதிகளில் 170 மில்லியன் டன் நிலக்கரியை உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்திய இராணுவம் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மனிதரால் எளிதில் சுமந்து செல்லக் கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் ஏவுகணை ஆயுத அமைப்பின் பரிசோதனையை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- 51வது தேசிய கேரம் (சுண்டாட்டம்) சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிருக்கான இறுதிப் போட்டியில் வென்று ரஷ்மி குமாரி 12வது முறையாக தேசிய மகளிர் கேரம் பட்டத்தை வென்றுள்ளார்.
- இந்திரா காந்திக்குப் பிறகு நியூஸ் வீக் என்ற அமெரிக்க இதழின் அட்டைப் படத்தில் இடம் பெறும் இந்தியாவின் 2வது பிரதமர் என்ற பெருமையினை இந்தியப் பிரதமர் பெற உள்ளார்.
  - முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நியூஸ்வீக் இதழின் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இதழின் அட்டைப் படத்தில் இடம்பெற்றார்.
- நாசா நிறுவனமானது தற்போது அதன் புதிய புவிக் கண்காணிப்பு PACE செயற்கைக் கோளில் இருந்து பெறப்பட்ட அறிவியல் சார் தரவுகளை பொது வெளியில் வெளியிட்டு உள்ளது.
  - கடல் வளம், காற்றின் தரம் மற்றும் மாறி வரும் பருவநிலையின் விளைவுகள் ஆகியவற்றின் முக்கியமான மதிப்பீடுகளை இது வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் கத்தியால் தாக்கப்பட்ட பிரிட்டிஷ் - அமெரிக்க எழுத்தாளர் சல்மான் ருஷ்டி, 'Knife: Meditations After an Attempted Murder' எனப்படும் தனது புதிய சுயசரிதை புத்தகத்தில் இந்த சம்பவம் குறித்து விவரித்துள்ளார்.
- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் குளோபல் ஹெல்த் அமைப்பின் இயக்குனர் டாக்டர் ககன்தீப் காங், உலக சுகாதாரத்திற்கான மதிப்புமிக்க ஜான் டிர்க்ஸ் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க அரசானது அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு இடையேயான முதலாவது முத்தரப்பு உச்சி மாநாட்டினை வாஷிங்டன் D.C. நகரில் அமைந்துள்ள வெள்ளை மாளிகையில் நடத்தியது.
- சர்வதேச தலைப்பாகை தினம் என்பது சீக்கிய மதத்தில் தலைப்பாகை அணிவதன் வளமான கலாச்சார மற்றும் சமய முக்கியத்துவத்தைக் கௌரவிப்பதற்காக ஏப்ரல் 13 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திரக் கொண்டாட்டமாகும்.
- பிரின்ஸ்டனில் உள்ள உயர்கல்வி நிறுவனத்தின் அறிவியல் கணிமையியலாளரும் கணிதவியலாளருமான அவி விக்டர்சன் என்பவர் 2023 ஆம் ஆண்டின் A.M. டூரிங் என்ற விருதினைப் பெற்றுள்ளார்.
- லித்துவேனியாவைச் சேர்ந்த மைகோலாஸ் அலெக்னா 74.35 மீட்டர் தூரம் வரை வட்டு

எறிந்ததன் மூலம் ஆடவர் தடகளத்தில் நீண்ட காலமாக முறியடிக்கப் படாத உலகச் சாதனையை முறியடித்தார்.

- இந்திய தபால் அலுவலக நிறுவனம் ஆனது அண்டார்டிகாவில் உள்ள பாரதி நிலையத்தில் தனது மூன்றாவது தபால் நிலையத்தைத் திறந்துள்ளது.
  - இந்தத் துறையானது இதற்கு முன்னர் 1984 ஆம் ஆண்டில் தக்சின் கங்கோத்ரி நிலையத்தில் ஒரு தபால் நிலையத்தையும் 1990 ஆம் ஆண்டில் மைத்ரி நிலையத்தில் மற்றொரு நிலையத்தினையும் நிறுவியது.
- சித்திரகூட்டில் உள்ள துளசி (ஷபரி) நீர்வீழ்ச்சியில் அமைக்கப்பட்டுள்ள உத்தரப் பிரதேசத்தின் முதல் கண்ணாடியினாலான நடைமேம்பாலம் விரைவில் திறக்கப்பட உள்ளது.
- பேராசிரியர் ராமன் மிட்டல் மற்றும் பேராசிரியை சீமா சிங் ஆகியோர் “Law and Spirituality: Reconnecting the Bond” என்ற புத்தகத்தினைத் தொகுத்துள்ளனர்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, வெளிநாட்டுச் சந்தைகளில் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கத்திற்கு எதிராக இந்தியர்கள் தங்கள் இழப்புக் காப்பு முதலீட்டு (ஹெட்ஜிங்) உத்திகளைப் பன்முகப்படுத்த உதவும் வகையில் ஒரு குறிப்பிடத் தக்க கொள்கை திருத்தத்தை அறிமுகப்படுத்தியது.
- அமிதாப் பச்சனுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கப் பட்டுள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது, ஏவுகல இயந்திரங்களுக்கான இலகுரக கார்பன்-கார்பன் (C-C) குழல் முனையை உருவாக்கியுள்ளது என்ற நிலையில் இது ஏவுகல இயந்திர தொழில் நுட்பத்தில் ஒரு திருப்புமுனை மிக்க கண்டுபிடிப்பு என்று கூறப்படுகிறது.
- இமாச்சலப் பிரதேச கிரிக்கெட் சங்க (HPCA) மைதானம் ஆனது, அதிநவீன 'கலப்பு வகை ஆடுகளத்தினை' அமைக்க BCCI அமைப்பால் அனுமதியளிக்கப்பட்ட முதல் மைதானமாக மாறியுள்ளது.
- இருபது ஆண்டுகளாக தலைமைப் பொறுப்பில் இருந்த சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங், மே 15 ஆம் தேதியன்று பதவி விலகுவதையடுத்து, அவரது பிரதிநிதி லாரன்ஸ் வோங்கிடம் அவர் அதிகாரத்தை ஒப்படைக்க உள்ளார்.
- நடிகைக்குப் பணப்பட்டுவாடா செய்த வழக்கில் குற்றவியல் விசாரணையை எதிர் கொள்ளும் முதல் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆவார்.
- மனிதர்களின் குரல் மற்றும் குரல் ஒலி ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 16 ஆம் தேதியன்று உலக குரல் தினம் கொண்டாடப் படுகிறது.
- சானி இந்தியா நிறுவனமானது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட உள்ள முழுவதும் மின்சாரத்தில் இயங்கக்கூடிய SKT105E என்ற முதல் சரக்குந்தினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- உலகப் பொருளாதார மன்றம் ஆனது நைக்கா (Nykaa) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் நைக்கா ஃபேஷன் தலைமை நிர்வாக அதிகாரி அத்வைதா நாயரை ‘2024 ஆம் ஆண்டின் உலகளாவிய இளம் தலைவர்’ என்று குறிப்பிட்டுள்ளது.
- கேரள மாநிலத்தின் சுகாதாரத் துறையானது, பெருந்தொற்று குறித்த ஆய்வு மற்றும் குறைந்தபட்சமாக எட்டு நோய்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்கான பல்வேறு

விரிவான நியம நடவடிக்கை முறைமைகளை (SOP) விரைவில் வெளியிட உள்ளது.

❖ கடல் வாழ் உயிரினங்களுக்கானச் சூழலை மேம்படுத்துவதற்காக என்று இந்தியாவின் இரண்டாவது (பாண்டிச்சேரிக்கு அடுத்தபடியாக) செயற்கைப் பவளப் பாறைகள் என்பது, மும்பையின் வொர்லி கோலிவாடா அருகே நிறுவப்பட்டுள்ளது.

❖ செயற்கை நுண்ணறிவினால் உருவாக்கப்பட்ட 2 நடுவர்கள் அங்கத்துவம் வகிக்கும் நடுவர் குழுவினைக் கொண்ட உலகின் முதல் 'செயற்கை நுண்ணறிவுகளின் அழகி' என்ற அழகுப் போட்டியானது அறிவிக்கப்பட்டது.

❖ அஜய் பங்கா, ஆலியா பட் மற்றும் சாக்சி மாலிக் உள்ளிட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 8 பேர், டைம் இதழின் 2024 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

❖ அராபிகா காபி இனத்தின் மரபணு ஆனது, எத்தியோப்பியாவின் காடுகளில் 610,000 முதல் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக மதிப்பிடப்பட்ட இரண்டு காபி பயிர் இனங்களுக்கிடையிலான இயற்கையான இனச்சேர்க்கையின் காரணமாக தோன்றி உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

  ○ இது சுமார் 300,000 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவில் தோன்றிய ஹோமோ சேபியன்ஸ் இனத்தை விட இந்த இனம் பழமையானது என்பதைக் குறிக்கிறது.

❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் ஆனது, "நடமாடும் வாகனங்களில்" இந்தியாவின் முதல் மருத்துவச் சாதனங்களின் அளவுத் திருத்த வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.

○ இந்த வசதியானது, இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அனைவருக்கும் IITM என்ற முன்னெடுப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ 42வது நிறுவனங்களுக்கு இடையேயான விண்வெளிக் குப்பைகள் மேலாண்மை ஒருங்கிணைப்புக் குழுவின் (IADC) வருடாந்திரக் கூட்டமானது பெங்களூருவில் நடத்தப் பட்டது.

  ○ இந்த முன்னெடுப்பானது, 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து இந்திய விண்வெளி நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் குப்பைகள் இல்லாத விண்வெளித் திட்டங்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு, சீன எழுத்துக்களைக் கண்டுபிடித்தவராகக் கருதப் படும் காங்ஜி என்ற புராண கதாப்பாத்திரத்திற்கு கௌரவமளிக்கும் விதமாக என்று ஆண்டுதோறும் ஏப்ரல் 20 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையின் சீன மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.

❖ உலகளாவியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் படைப்பாற்றல் மற்றும் புதுமையின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 21 ஆம் தேதியன்று உலக படைப்பாற்றல் மற்றும் புதுமை தினம் அனுசரிக்கப் படுகிறது.

❖ இந்தியா 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆர்க்டிக் பகுதிக்கான தனது முதல் குளிர்கால ஆய்வுப் பயணத்தினை நிறைவு செய்த நிகழ்வானது, அதன் ஆர்க்டிக் ஆய்வு முயற்சிகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

❖ கடற்படை துணைத் தளபதி தினேஷ் குமார் திரிபாதி அடுத்த கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, "உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட நீண்ட தூர வரம்புடைய குறையொலி சீர்வேக எறிகணையின்" ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- ❖ குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி தக்ஷ்வி வகானி 25 மீட்டர் தூரம் குறைந்த உயரத்தில் (16.5 செ.மீ.) லிம்போ ஸ்கேட்டிங் செய்து (கிடை மட்ட அளவிலான) கின்னஸ் உலக சாதனையினைப் படைத்துள்ளார்.
- ❖ எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரகத்திற்கு ஒரு விண்கலத்தைச் சுமந்துச் செல்லக்கூடிய சுழலும் வகையிலான வெடிப்பு முறையில் தூண்டுவிக்கப்படும் எந்திரம் (RDRE) எனப் படும் புதிய வகை ஏவு கல இயந்திரத்தை நாசா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- ❖ சூடான் மற்றும் அண்டை நாடுகளுக்கான சர்வதேச மனிதாபிமான மாநாடு ஆனது பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் நடைபெற்றது.
- ❖ 16வது உலக எதிர்கால எரிசக்தி உச்சி மாநாடு (2024) ஆனது அபுதாபியில் நடத்தப் பட்டது.
- ❖ GMR ஐதராபாத் சர்வதேச விமான நிலைய லிமிடெட் நிறுவனமானது, ஸ்கைட்ராக்ஸ் என்ற நிறுவனத்தின் இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த விமான நிலைய ஊழியர்களுக்கான 2024 ஆம் ஆண்டின் விருதைப் பெற்றுள்ளது.
- ❖ 17 வயதான D குகேஷ், கேண்டிடேட்ஸ் (சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான தேர்வு நிலை) சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்று, இந்த உலகப் பட்டத்தை வென்ற இளம் வயது வீரராக வரலாறு படைத்துள்ளார்.
- ❖ அனந்த் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் நிறுவனர் பவுலூரி சுப்பா ராவிற்கு இந்திய வானூர்தி அறிவியல் சமூகத்தின் (ASI) 'ஆர்யபட்டா விருது' வழங்கப்பட்டுள்ளது.
  - ○ "இந்தியாவில் விண்வெளி அறிவியலை மேம்படுத்துவதில் ராவ் ஆற்றிய மகத்தான வாழ்நாள் அளவிலானப் பங்களிப்பு" என்ற விருது அங்கீகாரத்தைப் பெற்றார்.
- ❖ மெட்டா நிறுவனமானது அதன் மிகவும் திறன் மிக்க Meta Llama 3 எனப்படும் பெரிய மொழி மாதிரியினை (LLM) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ நேபாள நாடானது, LGBT சமூகத்தினைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய இடமாக தனது நாட்டை மேம்படுத்துவதற்காக தனது முதல் சர்வதேச ரெயின்போ (பல் சமூக) சுற்றுலா மாநாட்டை காத்மண்டு நகரில் நடத்தியது.
- ❖ ஏப்ரல் 24 ஆம் தேதியானது உலக அளவில் பலதரப்பு மற்றும் அமைதிக்கான அரசு முறை தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பேராளர்களின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஏப்ரல் 25 ஆம் தேதியன்று சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் உலகளவில் அனுசரிக்கப்பட்டது.
  - ○ 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் தேதியன்று, ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகள் முதன்முறையாக சான் பிரான்சிஸ்கோ நகரில் ஒன்று கூடினர்.
- ❖ இன்டெல் நிறுவனமானது, மனித மூளையின் பல்வேறு செயல்பாடுகளை பின்பற்றும் செயல்முறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டும் உலகின் மிகப்பெரிய நியூரோமார்பிக் (நரம்பியல் மண்டல அமைப்பினை ஒத்த) ஹாலா பாயிண்ட் எனும் கணினியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தோனேசியாவின் வெளிப்புற பகுதியின் அமைந்துள்ள ஒரு தொலைதூர எரிமலை சமீபத்தில் மீண்டும் வெடித்துள்ளது.

- ரியூட்டர்ஸ் நிறுவனத்தின் புகைப்படக்கலைஞர் முகமது சலேம், காசா பகுதியில் தனது உறவினரின் ஐந்து வயது மகளின் உடலைக் கட்டித் தழுவியவாறு அமர்ந்து இருக்கும் பாலஸ்தீனப் பெண்ணின் புகைப்படத்திற்காக 2024 ஆம் ஆண்டின் மதிப்பு மிக்க உலக பத்திரிகைப் புகைப்படத்திற்கான விருதை வென்றுள்ளார்.
- புகழ்பெற்ற தொழிலதிபரும் புரவலருமான ரத்தன் டாடா அவர்களுக்கு, 2021 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க KISS மனிதாபிமான விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் நிதியாண்டில், வேலைப்பாடுகள் இல்லாத தங்க ஆபரணங்களின் ஏற்றுமதியில் இந்தியா குறிப்பிடத்தக்க எழுச்சியைக் கண்டுள்ளது.
  - முந்தைய நிதியாண்டில் 4,199.96 மில்லியன் டாலராக இருந்த இது 61.72% அதிகரித்து 6,792.24 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது,
- இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள், பேராசிரியர் நைமா கத்தூன் என்பவரை அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் (AMU) முதல் பெண் துணை வேந்தராக நியமித்துள்ளார்.
- சர்வதேச கைவினைப் பொருட்கள் பேரவை (WCCI) ஆனது இந்த ஆண்டிற்கான இந்தியாவின் உலக கைவினை நகரமாக (WCC) இறுதிப் பரிந்துரைப் பட்டியலில் இடம் பெறுவதற்கு முன்பாக, அதன் கைவினை உற்பத்திப் பகுதிகளை மிகவும் நன்கு ஆய்வு செய்வதற்காக ஸ்ரீநகரைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- 28வது பங்குதாரர்கள் மாநாட்டின் (COP28) தலைவர் டாக்டர். சுல்தான் அல் ஜாபர், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஐக்கிய அரபு அமீரக ஒருமித்த ஒரு கருத்து ஒப்பந்தத்தினை வழங்குவதன் மூலம் ஆற்றல் மாற்றத்தை முன்னெடுத்துச் சென்ற அவரது மிகப்பெரும் தலைமைத்துவத்திற்காக உலக எரிசக்தி சபையின் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்காலம் குறித்த உச்சி மாநாடு ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது.
- மாடர்னா எனப்படும் உயிரித் தொழில்நுட்ப நிறுவனம் ஆனது, கென்யாவில் அதன் கோவிட் தடுப்பூசிகளுக்கான தேவை கடுமையாக வீழ்ச்சியடைந்ததை அடுத்து, தடுப்பூசி தயாரிக்கும் ஆலையினை அங்கு நிறுவும் திட்டத்தை இடை நிறுத்தியுள்ளது.
- பருவநிலை மாற்றம் மற்றும் அதன் தீய விளைவுகள் பற்றிய விழிப்பு உணர்வைப் பரப்புவதற்காக இந்தியாவின் மிகப்பெரிய பருவநிலை கணிப்பு கடிகாரத்தினை அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையானது (CSIR) புது டெல்லியில் உள்ள அதன் தலைமையகக் கட்டிடத்தில் நிறுவி செயல் படுத்தியது.
- இந்தியாவின் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது, சீனா கைபேசிச் சேவை நிறுவனத்தைப் பின்னுக்குத் தள்ளி, தரவு ஓட்டப் பயன்பாட்டில் உலகின் மிகப் பெரியக் கைபேசிச் சேவை இயக்க நிறுவனமாக மாறியுள்ளது.
- 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் தேதியன்று இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் ஆன ஆர்யபட்டா விண்ணில் ஏவப்பட்டதன் 50 வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டு செயற்கைக்கோள் தொழில்நுட்ப தினம் அனுசரிக்கப்பட்டது.

- இந்தியாவில் அதிக சர்க்கரை (2.7 கிராம்) அளவுகள் கொண்ட குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களை விற்பனை செய்ததாகக் கூறப்படும் நெஸ்லே குழுமத்திற்கு எதிராக "தகுந்த நடவடிக்கை" எடுக்குமாறு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தினை (FSSAI) மத்திய அரசு கோரியுள்ளது.
- ICC ஆடவர் டி20 உலகக் கோப்பைப் போட்டிக்கான அதிகாரப்பூர்வ தூதராக பழம்பெரும் ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இங்கிலாந்தில் உள்ள ஐக்கியப் பேரரசின் பிரிக்ட்டன் மற்றும் ஹோவ் சிட்டி சபையானது, இரண்டு உலகப் போர்களில் பங்கேற்ற இந்திய வீரர்களின் பங்கை நினைவு கூரும் வகையில் இந்த ஆண்டின் அக்டோபர் மாதம் முதல் ஆண்டுதோறும் பல்வேறு சமயச் சார்புள்ள நிகழ்வுகளை அந்நகரின் இந்தியா கேட் நினைவிடத்தில் நிகழ்த்த முடிவு செய்துள்ளது.
- கூகுளின் டீப் மைண்ட் மற்றும் ஸ்டான்ஃப்போர்ட் பல்கலைக்கழக அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மொபைல் ALOHA எனப்படும் குறைந்த விலையிலான, அனைவரும் அணுகும் வகையிலான, கைகளால் இயக்கக்கூடிய தொலை இயக்க வன்பொருள் அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - ஒரு மனித உருவத்திலான எந்திரமான இது ஒரு பயனரால் தொலை இயக்கி மூலம் இயக்கப்படும் மாதிரியாக்கக் கற்றல் மூலம் ஒரு சுயமானச் முறையில் செயல்படும்.
- "இந்திய உளவியலின் தந்தை" எனப்படும் சுதிர் காக்கர் சமீபத்தில் காலமானார்.
- 26வது உலக எரிசக்தி மாநாடானது நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடத்தப் பட்டது.
- பத்து பலதரப்பு மேம்பாட்டு வங்கிகளின் (MDBs) கூட்டணியானது, மேம்பாட்டின் நிலை மற்றும் தாக்கத்திற்கு கூடுதல் மூலதனத்தை வழங்குவதற்காக வேண்டி "உலக ஒத்துழைப்பிலான இணை நிதியுதவி" என்ற புதிய இணை-நிதியளிப்புத் தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நடிகர் ரன்தீப் ஹூடா இந்தியத் திரைத்துறைக்கு ஆற்றியப் பெரும் பங்களிப்பினைப் பாராட்டி லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ASEAN எதிர்கால மன்றத்தின் (AFF 2024) இரண்டாவது முழு நிறைவான அமர்வானது வியட்நாமின் ஹனோய் நகரில் நடைபெற்றது.
    - மக்களை மையமாகக் கொண்ட ASEAN சமூகத்திற்கு விரிவான ஒரு பாதுகாப்பு வழங்குவதை உறுதி செய்வதற்கான வழிகள் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கப் பட்டது.
- நடனக் கலையினை உலகளாவிய மதிப்பு கொண்டதாக மேம்படுத்துவதற்காக என்று ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 29 ஆம் தேதியன்று சர்வதேச நடன தினம் கொண்டாடப் படுகிறது.
- தன்னுடன் போட்டியிட்ட மற்ற அனைத்து வேட்பாளர்களும் தேர்தலில் இருந்து விலகியதனாலும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டதாலும் குஜாரத்தின் சூரத் நகரைச் சேர்ந்த பாஜக வேட்பாளர் முகேஷ் தலால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

- 2024 ஆம் ஆண்டு ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பைப் போட்டியின் தூதராக யுவராஜ் சிங் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- நாசா விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் சோதனை பயணத் திட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பபட உள்ள போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலத்தில் பயணிக்க உள்ளனர்.
- இந்தியக் கடற்படையானது கடல்சார் பாதுகாப்பு சார்ந்த பல்வேறு சவால்களை எதிர் கொள்வதற்கான அதன் தயார்நிலையை சரிபார்க்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக கிழக்குக் கடற்கரையில் ஒரு விரிவான பயிற்சியை மேற்கொண்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு அமைப்பானது BIS தர நிலையின் 6 என்ற மிக அதிகமான அச்சுறுத்தல் நிலைக்கு எதிராக வேண்டி இந்தியாவின் பாதுகாப்பிற்காக இலகுவான குண்டு துளைக்காத மேலுடையினை உருவாக்கியுள்ளது.
- பொது மருந்துக் கடைகளில் மருத்துவர் ஆலோசனையுடன் கூடிய மருந்துச் சீட்டு இல்லாமல் வழங்கப்படும் மருந்துகளின் பட்டியலை முடிவு செய்வதற்காக அதுல் கோயலின் கீழ் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இந்திய அரசின் நிதி அமைச்சகம் ஆனது, தேசிய உரங்கள் நிறுவனத்திற்கு நவரத்னா அந்தஸ்தினை வழங்கியுள்ளது.
- தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கி (நபார்டு) ஆனது புவி தினத்தை முன்னிட்டு இந்தியாவின் பசுமை நிதியளித்தலுக்கான தேவையை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட அதன் பருவநிலை உத்தி 2030 என்ற ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- காம்ரூப் தேர்தல் மாவட்டத்தின் முறைசார் வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு பிரிவு (SVEEP) ஆனது, கௌகாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வையும், ஈடுபாட்டையும் வலுவாக மேம்படுத்துவதற்காக முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஒரு நகல் வாக்குப்பதிவு இயந்திரத்தை உருவாக்கியுள்ளது.
- இந்தியக் கடற்படையின் இரண்டு பெண் அதிகாரிகள் மேற்கொண்ட முதலாவது 2 மாத கால கடல் கடந்தப் பயணத்திற்குப் பிறகு இந்தியக் கடற்படையின் கப்பல் INSV தாரிணி கோவாவில் உள்ள தனது துறைமுகத்திற்குத் திரும்பியது.
    - இந்தப் பயணம் ஆனது கப்பல் படைத் தளபதிகளான தில்னா. K மற்றும் ரூபா. A ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.
- ஆசியா முழுவதும் புலிகள் வாழும் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக வேண்டி அடுத்த பத்தாண்டுகளுக்கு 1 பில்லியன் டாலர் மதிப்பிலான புதிய நிதியானது திரட்டப் படுவதற்காக 2024 ஆம் ஆண்டு புலிகள் வளங்காப்பு மாநாடு ஆனது பூடான் நாட்டினால் நடத்தப்பட்டது.
    - இந்த மாநாட்டின் கருத்துரு, "புலிகள் வாழும் பகுதிகளுக்கான நிலையான நிதி" என்பதாகும்.
- கல்விக் கருவியாக ஜாஸ் இசை பயன்படுத்தப்படுவதன் நற்பண்புகள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காகவும், மக்களிடையே அனுதாபம், பேச்சுவார்த்தை மற்றும் மேம்பட்ட ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காகவும் ஏப்ரல் 30 ஆம் தேதியன்று சர்வதேச

ஜாஸ் இசை தினம் கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## 2024 ஆம் ஆண்டில் அதிக கடன் பெற்ற மாநிலம்

- 2023-24 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த சந்தைக் கடன்களானது 1,13,000 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- இதன் மூலம், தமிழ்நாடு மாநில அரசானது தொடர்ந்து நான்காவது நிதியாண்டில் அதிக கடன் பெற்ற மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- மகாராஷ்டிரா 1,10,000 கோடி ரூபாய், உத்தரப் பிரதேசம் 97,700 கோடி ரூபாய், கர்நாடகம் 81,000 கோடி ரூபாய், ராஜஸ்தான் 73,600 கோடி ரூபாய், ஆந்திரா 68,400 கோடி ரூபாய் ஆகிய அளவில் கடன் பெற்று அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள், மாநில மேம்பாட்டுக் கடன் (SDL) எனப்படும் அரசுப் பத்திரங்களை ஏலம் விடுவதன் மூலம் சந்தையில் இருந்து கடன் பெறுகின்றன.
- 2022-23 ஆம் நிதியாண்டிலும், 2021-22 ஆம் நிதியாண்டிலும் தமிழகத்தின் மொத்தச் சந்தைக் கடன்கள் 87,000 கோடி ரூபாயாக இருந்தது.
- 2024-25 ஆம் ஆண்டில் மொத்தமாக 1,55,584.48 கோடி ரூபாய் கடன் பெறுவதற்கு மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று நிலுவையில் உள்ள கடன் 8,33,361.80 கோடி ரூபாயாக இருக்கும்.

## To bridge fiscal deficit

The Tamil Nadu government raises funds through the issue of bonds known as State Development Loans (SDLs).




**Gross market borrowings**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| Fiscal 2023-24* | 53,000 |
| Fiscal 2022-23 | 87,000 |
| Fiscal 2021-22 | 87,000 |

**Repayment of market borrowings**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| Fiscal 2023-24* | 21,320 |
| Fiscal 2022-23 | 21,278.30 |
| Fiscal 2021-22 | 14,500 |

*Data pertain to April-Sept.

**Outstanding liabilities from SDLs**

| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| At end of Mar. 2024 | 6,00,992.9 |
| At end of Mar. 2023 | 5,18,367 |
| At end of Mar. 2022 | 4,50,364.5 |

**Total outstanding liabilities**


| Year | Amount (in ₹ crore) |
|---|---|
| At end of Mar. 2024 | 8,34,543.5 |
| At end of Mar. 2023 | 7,41,497.7 |
| At the end of Mar. 2022 | 6,67,974.9 |

Source: Reserve Bank of India's report titled State Finances: A Study of Budgets of 2023-24

## கொடைக்கானல் சூரிய ஆய்வகத்தின் 125வது ஆண்டு நிறைவு


- கொடைக்கானல் சூரிய ஆய்வகமானது (KSO) இந்தியாவின் மிகப் பழமையானது மற்றும் உலகின் பழமையான சூரிய ஆய்வகங்களில் ஒன்றாகும்.
- ஏப்ரல் 01 ஆம் தேதியன்று, இந்த ஆய்வகமானது தனது 125வது நிறைவு நாளினைக் கொண்டாடியது.
- 1899 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த ஆய்வகம் ஆனது, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள அழகான மலைக்குன்றுகளின் மேல் 2100 மீ உயரத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- இது சுமார் 1.2 லட்சத்திற்கும் அதிகமான எண்ணிம மயமாக்கப்பட்ட சூரியப் புகைப் படங்களைக் கொண்டு சூரியனைப் பற்றிய தொடர்ச்சியான தினசரி தகவல் பதிவைக் கொண்டுள்ளது.

## வைக்கம் சத்தியாகிரகத்தின் 100வது ஆண்டு நிறைவு




- திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற கோயில் நகரில், 1924 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று அகிம்சைப் போராட்டம் தொடங்கப்பட்டது.
- நாடு முழுவதும் விரைவில் பரவிய கோவில் நுழைவு இயக்கங்களில் இதுவே முதன்மை ஆனதாகும்.
- சத்தியாகிரகம் ஆனது வளர்ந்து வரும் தேசியவாத இயக்கத்தின் மத்தியில் சமூகச் சீர்திருத்தத்தை முன்னிறுத்தி, காந்தியவாத எதிர்ப்பு முறைகளை திருவிதாங்கூர் மாகாணத்திற்குக் கொண்டு வந்தது.
- வைக்கம் சத்தியாகிரகம் ஆனது 600 நாட்களுக்கு மேல் நீடித்தது.
- ஈழவத் தலைவர் T. K. மாதவன் 1917 ஆம் ஆண்டில் தனது தேசாபிமானி இதழில் எழுதிய தலையங்கத்தில் கோயில் நுழைவுப் பிரச்சினை குறித்து முதலில் எழுதினார்.
- 1921 ஆம் ஆண்டில் காந்தியைச் சந்தித்த மாதவன், மாபெரும் அளவிலான கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு மகாத்மாவின் ஆதரவைப் பெற்றார்.
- 1923 ஆம் ஆண்டில் காக்கிநாடாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் அமர்வில், தீண்டாமை ஒழிப்பினை ஒரு முக்கியப் பிரச்சினையாக மேற்கொள்வதற்கான ஒரு தீர்மானம் ஆனது கேரள மாகாண காங்கிரஸ் குழுவினால் நிறைவேற்றப்பட்டது.
- 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் திருவிதாங்கூர் மகாராஜா ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க கோவில் நுழைவுப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட நிலையில் இது அந்த மாகாணத்தின் கோவில்களில் விளிம்பு நிலை சாதியினர் நுழைவதற்கான பல வருட காலத் தடையை நீக்கியது.

## 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு இட ஒதுக்கீடு




- ❖ கல்வி மற்றும் பொது வேலைவாய்ப்பில் வழங்கப்படும் 69% இடஒதுக்கீட்டிற்கு மாநில அரசின் மக்கள் தொகையில் 89% பேர் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளனர் என்று தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- ❖ எனவே, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் (EWS) பிரிவின் கீழ் மற்றவர்களுக்கு கூடுதலாக 10% இடஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கு மாநில அரசினைக் கட்டாயப் படுத்த முடியாது.
- ❖ மாநிலத்தில் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் சேர்க்கைக்கான 10% EWS ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டி மாநில அரசுக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் கோரி இருந்தார்.
- ❖ 1982 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றம் பிறப்பித்த சில உத்தரவுகளைப் பின்பற்றி, மாநிலத்தில் உள்ள சாதிகள் மற்றும் சமூகங்களின் 100% இல்ல வாரியான கணக்கெடுப்பு 1983 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ அம்பாசங்கர் ஆணையம் (1983) ஆனது, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் உட்பட மாநிலத்தின் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினரின் விகிதம் ஆனது மொத்த மக்கள்தொகையில் 68% என்று வெளிப்படுத்தியது.
- ❖ 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி, தமிழ்நாட்டில் பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்டப் பழங்குடியினரின் மக்கள் தொகை முறையே 20% மற்றும் 1.1% ஆக உள்ளது.
- ❖ சட்டநாதன் ஆணையம் எனப்படும் முதல் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஆனது 1970 ஆம் ஆண்டில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

## குமிட்டிபதியில் பாறை ஓவியங்கள்

- ❖ சுமார் 3,000 ஆண்டுகள் பழமையானது என்று நம்பப்படும் இந்த குகை ஓவியங்கள் கொங்கு மண்டலத்தில் உள்ள முக்கியமான பாறைக் கலைகளில் ஒன்றாகும்.
- ❖ வெள்ளை நிறமிகளால் வரையப்பட்ட இந்த ஓவியங்கள் யானை, தேர் (சிலர் மயில் என்று


கூறுகிறார்கள்) மற்றும் இந்தப் பகுதியின் ஆரம்ப கால மக்களின் வாழ்க்கை ஆகியவற்றைச் சித்தரிக்கிறது.

- தேர் போன்ற தோற்றம் கொண்ட ஓவியங்கள், மனித உருவங்கள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றின் ஓவியங்கள் இந்தக் குகையில் காணப்படுகின்றன என்பதோடு இந்தப் பகுதியின் வரலாற்றுக்கு முந்தைய மக்களின் வாழ்க்கை குறித்த சாட்சியங்கள், அவர்களின் வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் கலாச்சாரம் ஆகியவையும் இங்கு காணப் படுகின்றன.
- இந்தக் குகையில் சிறு குழிகள் மற்றும் துளைகள் காணப்படுகின்றன என்ற நிலையில் அவை தண்ணீர் மற்றும் பிற பொருட்களைச் சேமிக்க பயன்படுத்தப்பட்டதாக நம்பப் படுகிறது.
- இதே போன்ற பாறை ஓவியங்கள் கோவை மாவட்டத்தில் உள்ள தொண்டாமுத்தூர் அருகே அமைந்துள்ள வெள்ளருக்கம் பாளையம், விராலியூர் மற்றும் கோவனூர் ஆகிய இடங்களில் காணப் படும் மலை உச்சிகளில் காணப்படுகின்றன.




## நாய்களில் பரவும் மாங்கே நோய்

- டோலே என்று அழைக்கப்படும் ஆசியக் காட்டு நாய்களின் கூட்டமானது முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் அமைந்துள்ள பொக்காபுரத்தைச் சுற்றி காணப்படுவதாக அறியப்படுகிறது.
- ஒட்டுண்ணிப் பூச்சிகளால் ஏற்படும் மாங்கே எனப்படும் ஒரு வகை தோல் நோயினால் மூன்று விலங்குகள் பாதிக்கப்பட்டதாக கருதப்படுகிறது.
- பூச்சிகளின் தாக்குதலால் ஏற்படும் விலங்குகளின் மீதான தோல் நோயான மாங்கே நோய் என்பது வீக்கம், அரிப்பு, தோல் தடித்தல் மற்றும் முடி உதிர்தல் ஆகிய பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும்.
- மிகவும் கடுமையான மாங்கே நோய் பாதிப்பானது, மனிதர்களில் மிகக் கடும் சொறி சிரங்குகளையும் ஏற்படுத்துகின்ற சர்கோப்டெஸ் ஸ்கேபி என்ற ஒட்டுண்ணிப் பூச்சி வகைகளால் ஏற்படுகிறது.




## தமிழ்நாட்டிற்கான இந்தியப் பறவைகளின் நிலை குறித்த அறிக்கை




- தமிழகத்தில் வலசை வரும் வாத்துகள், நீர்ப்பறவைகள், பருந்துகள், வனவாழ் பறவைகள் மற்றும் திறந்தவெளி வாழ்விடங்களைச் சார்ந்து வாழும் பிற இனங்கள் பெருமளவில் குறைந்து வருகின்றன.
- தமிழ்நாட்டில் காணப்படும் 85 இனங்கள் 'உயர் வளங்காப்பு முன்னுரிமை வழங்கப் படும் இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டின் நீண்ட காலப் போக்கு (கடந்த 30 வருடங்கள்) பொதுவாக புள்ளிகள் கொண்ட பறவைகளான நீலச் சிறகு வாத்து, ஆலா, நண்டு உண்ணும் உப்புக் கொத்தி, மணல் நிற உப்புக்கொத்தி, கிளுவை மற்றும் களியன் போன்ற பறவைகளின் வருகை கூட வேகமாக குறைந்து வருவதைக் குறிக்கிறது.
- MYNA தளம் ஒரு குறிப்பிட்டப் புவியிடத்தில் உள்ள பறவைகள் மற்றும் அவற்றின் வளங் காப்பு அந்தஸ்து குறித்து அடையாளம் காண உதவுகிறது.

## 2024 ஆம் ஆண்டு தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கை – தமிழ்நாடு

- தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளுக்கு ஏப்ரல் 19 ஆம் தேதியன்று நடைபெற்ற தேர்தலில் 69.72 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- தமிழக மாநிலத்தில் முந்தையப் பொதுத் தேர்தல்களில் பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்களை விட இது ஒப்பீட்டளவில் குறைவாகும்.

- ❖ தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 6,23,33,925 வாக்காளர்களில் 4,34,58,875 பேர் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி வாக்கு செலுத்தினர்.
- ❖ இதில் சதவீத அடிப்படையில், பெண் வாக்காளர்கள் (69.85%) எண்ணிக்கையானது ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையினை (69.58%) மிகவும் ஒரு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் விஞ்சியுள்ளது.
- ❖ தருமபுரியில் அதிகபட்சமாக 81.20 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- ❖ மத்திய சென்னையில் வாக்குப் பதிவானது 53.96 சதவீதம் ஆக குறைந்துள்ளது.
- ❖ ஒன்பது இடங்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமான பெண் வாக்காளர்கள் வாக்களித்து உள்ளனர்.
- ❖ 'இதர' பிரிவில், கரூரில் அதிக சதவீத வாக்குகளும் (62.22), தருமபுரியில் (50.28) அதிக வாக்குகளும் பதிவாகியுள்ளது.





## யானைக்கால் நோய் பாதிப்பு குறித்த நிலை 2024

- ❖ யானைக்கால் நோயை ஒழிப்பதற்கான ஒரு நிலையை தமிழகம் தற்போது நெருங்கி வருகிறது.
- ❖ "தேவையான அனைத்து மாபெரும் அளவிலான மருந்து வழங்கீட்டு (MDA) சுற்றுகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றியதன் மூலம், ஒரு சதவீதத்திற்கும் குறைவான

மைக்ரோஃபைலேரியா (நுண்புழு) பாதிப்பு விகிதத்தை எட்டிய ஒரே இந்திய மாநிலமாக தமிழகம் உள்ளது.

❖ நிணநீர் யானைக்கால் நோய் என்பது புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகும். என்ற நிலையில் இதற்குச் சரியான முறையில் சிகிச்சை அளிக்காமல் விட்டால், அது வாழ்நாள் முழுவதுமான இயலாமைக்கு வழி வகுக்கும்.

❖ முன்னதாக, தமிழ்நாடு மாநிலமானது ஆந்திரப் பிரதேசம், பீகார், குஜராத், கேரளா, மகாராஷ்டிரா, ஒடிசா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுடன் சேர்ந்து ஒரு சேர நாட்டின் மொத்த யானைக்கால் நோய்ப் பாதிப்பு எண்ணிக்கையில் 95% பங்கினைக் கொண்டிருந்தது.



Significant stride

Tamil Nadu was among the nine States that contributed to 95% of the total burden of lymphatic filariasis in India. However, now, the State is closer to eliminating the disease.

Transmission Assessment Surveys (TAS)

| Survey | Month/Year | Coverage | Microfilaria rate |
|---|---|---|---|
| TAS-I | July 2014 | 36,833 children | 0.18% |
| TAS-II | November 2016 | 38,954 children | 0.21% |
| TAS-III | September 2018 | 39,754 children | 0.10% |

Thinking ahead: T.N. was the pioneer State in the country to launch the MDA programme in Cuddalore district in 1996.

Under the one time confirmatory mapping conducted in 45 Health Unit Districts in the State in 2022

- Number of sentinel sites covered: 465
- Number of random sites covered: 465
- Total number of night blood samples collected: 2,80,305

*Number of samples that tested positive for microfilaria: 3 (Chengalpattu, Cheyyar, Erode)

Some challenges:

- Migration from endemic regions increases the likelihood of new cases emerging
- Enhancing morbidity management is essential
- Development of guidelines, tools/diagnostics and strategies for post-mass drug administration and post-validation surveillance is crucial
- Collaborative networks between vector-borne disease control programmes and surgical societies are lacking or at most, minimal

Source: Tamil Nadu at the brink of eliminating lymphatic filariasis'/Tamil Nadu Journal of Public Health and Medical Research'

❖ 1996 ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டத்தில் MDA திட்டத்தினை ஒரு சோதனை முறைத் திட்டமாக அறிமுகப்படுத்தியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்தது.

❖ அதன் வெற்றியின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் உள்ள 25 பிற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

❖ 2014, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரவல் மதிப்பீட்டு ஆய்வுகளில் (TAS) முறையே 0.18%, 0.21% மற்றும் 0.10% என்ற நுண்புழு பாதிப்பு வீதம் பதிவானது.

## இந்திய-சிங்கப்பூர் திட்டத்தின் இரண்டாம் கட்டம்

- தமிழ்நாடு பொது சுகாதாரம் (DPH) மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை ஆனது சிங்கப்பூர் சுகாதார சேவைகள் மற்றும் சிங்கப்பூர் சர்வதேச அறக்கட்டளை (SIF) உடன் ஒத்துழைப்பினை மேற்கொண்டுள்ளது.
- இது ஒருங்கிணைந்த மகப்பேறியல் உயிர்ப்பித்தல் அவசரநிலைகள் மற்றும் தாய் மற்றும் சேய் சுகாதார (EMCH) சேவைகளை மேம்படுத்துவதற்கான ஒரு பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் ஆனது நிறைவடைந்து, இரண்டாம் கட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.
- இதன் விளைவாக, கோவிட்-19 பெருந்தொற்றுகளின் போது 90 ஆக உயர்ந்த பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் ஆனது, 2022-2023 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் குழந்தை பிறப்புகளுக்கு சுமார் 52 ஆக தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் இறப்பு விகிதம் குறைந்தது.
- இரண்டாம் கட்டம் மேற்கொள்ளப்பட உள்ள அடுத்த இரண்டு ஆண்டுகளில், இந்த EMCH திட்டமானது தமிழ்நாட்டில் உள்ள 140க்கும் மேற்பட்ட தாய் மற்றும் சேய் நல (MCH) நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்கும்.
- முதல் கட்டத்தின் போது, மாநிலத்தில் 1,000க்கும் மேற்பட்ட உள்ளூர் தாய் மற்றும் சேய் நல (MCH) நிபுணர்களுக்கு வெற்றிகரமாக பயிற்சி அளிக்கப்பட்டது.


## மலைக் கணவாய்ப் பகுதிகளில் உள்ள சாலைகளின் தாங்கும் திறன்

- பெங்களூருவின் இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM-B) மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) ஆகியவை முறையே நீலகிரி மற்றும் கொடைக்கானல் செல்லும் வழியில் அமைந்த மலைக் கணவாய் சாலைகளின் சுமை தாங்கும் திறனை நிர்ணயிக்க தேவையான ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளன.
- இந்த மலை வாசஸ்தலங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படும் வாகனங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஒரு உச்சவரம்பினை நிர்ணயம் செய்வது தொடர்பான நீதிமன்றத்தின் கருத்துடன் அரசாங்கம் உடன்பட்டுள்ளது.
- மேலும், இது சர்வதேச நாடுகளின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்பவும், நிபுணர் நுண்ணறிவுகளை பயன்படுத்துவதன் மூலமும் சாலைகளின் சுமை தாங்கும் திறனை மதிப்பிட முனைகிறது.
- UNWTO வழங்கிய 'சுற்றுலா வரும் மக்களை உள்ளடக்கும் திறன்' வரையறையானது, புறநிலை, பொருளாதார, சமூக-கலாச்சார, உயிர் இயற்பியல் மற்றும் சுற்றுச்சூழல் திறன்கள் போன்ற பல்வேறு அளவுருக்களின் கீழ் சுமை தாங்கும் திறனை மதிப்பிடச் செய்வதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

## வாக்குப்பதிவில் குறைந்து வரும் பாலின இடைவெளி

- பொதுத் தேர்தல்களில் தொடர்ந்து மூன்றாவது முறையாகப் பெண் வாக்காளர்கள் ஆண்களை விட சற்றே அதிக விகிதத்தில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி உள்ளனர்.

- கடந்த காலத்தில் தமிழகத்தின் வாக்குப்பதிவு விகிதத்தில் பரவலாக இருந்து வந்த பாலின இடைவெளி ஆனது குறைந்து வருவதை இது சுட்டிக் காட்டியுள்ளது.
- ஆண்களின் வாக்குப்பதிவானது, 1951-52 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது மக்களவை தேர்தலிலிருந்து, பல தசாப்தங்களாக பெண்களின் வாக்குப் பதிவினை விட ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தது.
- 1980 ஆம் ஆண்டில், மாநிலத்தின் வாக்காளர்கள் எண்ணிக்கை 2.81 கோடி ஆகும். அவர்களில் 1.40 கோடி பெண்கள் ஆவர்.
- 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், வாக்காளர்கள் எண்ணிக்கை 6.23 கோடியாக இருந்தனர் என்ற நிலையில் அவர்களில் 3.1 கோடி பேர் பெண்கள் ஆவர்.
- 2009 ஆம் ஆண்டு வரை, பொதுத் தேர்தல்களில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்திய பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோர் மீதான சதவீதத்தின் அடிப்படையில் குறிப்பிடத் தக்க அளவில் பாலின இடைவெளி இருந்தது.
- இருப்பினும், முதன்முறையாக, 2014 ஆம் ஆண்டு தேர்தலில், பெண் வாக்காளர்கள் எண்ணிக்கையானது ஆண் வாக்காளர் எண்ணிக்கையினை மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் மிஞ்சியது.





## நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு

- நீலகிரி வரையாடு (நீலகிரிட்ராகஸ் ஹைலோக்ரியஸ்) அழிந்து வரும் இனம் என்ற நிலையில் இருந்து அகற்ற வேண்டும் என்ற தீர்மானத்துடன், தமிழக அரசு மாநில விலங்கினங்கள் குறித்த ஒத்திசைவுக் கணக்கெடுப்பை மேற்கொண்டு வருகிறது.
- IUCN அமைப்பின் பிரதிநிதியும் இந்தக் கணக்கெடுப்பில் ஒரு பார்வையாளராக இதன் அங்கத்தினராக இடம் பெற்றுள்ளார்.
- இந்த விலங்கானது IUCN அமைப்பின் அழிந்து வரும் உயிரினமாகப் பட்டியலிடப்பட்டு உள்ளது மற்றும் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதலாவது

அட்டவணையின் கீழ் பாதுகாக்கப் படுகிறது.

- 2015 ஆம் ஆண்டு உலக வனவிலங்கு நிதியம்- இந்தியா வெளியிட்ட அறிக்கையில் தற்போது, மேற்குத் தொடர்ச்சி மலையில் சுமார் 3,000 வரையாடுகள் உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.




## உடல் ரீதியான தண்டனையை நீக்குவதற்கான வழிகாட்டுதல்கள்

- தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையானது பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதனை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களை (GECP) வெளியிட்டுள்ளது.
- மாணவர்களின் மனநலத்தைப் பாதுகாப்பது மற்றும் இந்த வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்துவதற்காக வேண்டி தேசியக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR) பல்வேறு வழிகாட்டுதல்களை பங்குதாரர்களுக்கு அறிமுகப் படுத்துவதற்கான விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது ஆகியவை இதில் அடங்கும்.
- NCPCR வழங்கிய உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதனை ஒழிப்பதற்கான வழிகாட்டுதல்களை அமல்படுத்துமாறு தமிழக அரசிற்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- 2009 ஆம் ஆண்டு இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைகள் சட்டத்தின் 17(1)வது பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ளபடி, உடல் ரீதியான ஒரு தண்டனை என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

# தேசியச் செய்திகள்


## வருடாந்திர இந்திய காசநோய் அறிக்கை 2024

- இந்திய அரசின் முயற்சிகளால் 2015 ஆம் ஆண்டு முதல் காசநோய் பாதிப்பு சுமார் 16% சதவீதமும் (ஒவ்வோர் ஆண்டும் புதிய பாதிப்புகள் பதிவாகின்றன) மற்றும் காச நோயால் ஏற்படும் உயிரிழப்பு விகிதம் சுமார் 18% சதவீதமும் குறைந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் சுமார் 2.3 லட்சம் கண்டறியப்படாத மற்றும் பதிவு செய்யப்படாத பதிவுகள் இருந்தன என்ற நிலையில், இது அதற்கு முந்தைய ஆண்டில் 3.2 லட்சமாக இருந்தது என்று அறிக்கை கூறுகிறது.
- அரசாங்கத்தின் Ni-kshay என்ற இணைய தளமானது அனைத்து வகை காசநோய் நோயாளிகளையும் கண்காணித்து வருவதையடுத்து இந்த இடைவெளியானது பல ஆண்டுகளாக குறைந்து வருகிறது.
- 2023 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 25.5 லட்சம் பாதிப்புகளில் 33% அல்லது 8.4 லட்சம் பாதிப்புகள் தனியார் துறையினால் பதிவு செய்யப்பட்டவை.
- இதனை ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டில் தனியார் துறையில் சுமார் 1.9 லட்சம் பாதிப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன.
- முந்தைய ஆண்டில் 27.4 லட்சமாக இருந்த காசநோய்ப் பாதிப்பு ஆனது, 2023 ஆம் ஆண்டில் 27.8 லட்சமாக சற்று அதிகரித்துள்ளது.
- சமீபத்தியத் தரவுகளின்படி, நோய்த் தொற்று காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள் ஆனது 3.2 லட்சமாக இருந்தது.
- இந்தியாவில் 2021 ஆம் ஆண்டில் 4.94 லட்சமாக இருந்த காசநோய் உயிரிழப்பு ஆனது, 2022 ஆம் ஆண்டில் 3.31 லட்சமாகக் குறைந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் முந்தைய மதிப்பீட்டு முறையின் படி மேற்கொள்ளப்பட்ட பல தரவுகளின் படி சுமார் 29.4 லட்சமாக இருந்த ஓராண்டில் பதிவான பாதிப்புகளின் எண்ணிக்கையானது 2022 ஆம் ஆண்டில் 27.4 லட்சமாகக் குறைந்துள்ளது.

**TB CASES IN INDIA OVER THE YEARS**

| | India TB Report 2020 | 2023 | 2024 |
|---|---|---|---|
| Estimated TB cases | 26.9 lakh | 27.4 lakh | 27.8 lakh |
| Number of cases reported | 24.04 lakh | 24.2 lakh | 25.5 lakh |
| Reporting from private sector | 6.8 lakh | 7.3 lakh | 8.4 lakh |
| % cases from private sector | 28.20% | 30% | 32.90% |
| Estimated mortality | 4.36 lakh | 3.2 lakh | 3.2 lakh |

## பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகள்




- மதிப்பாய்வு செய்யப்பட்ட 514 மக்களவை பாராளுமன்ற உறுப்பினர்களுள் 225 (44%) பேர் தங்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவாகியுள்ளதாக வெளிப்படுத்தியுள்ளனர்.
- தேர்தல் உரிமைகள் அமைப்பான ஜனநாயக சீர்திருத்தச் சங்கத்தினால் (Association of Democratic Reforms - (ADR)) நன்கு ஆய்வு செய்யப்பட்ட சுய-உறுதிப் பத்திரங்களின் அடிப்படையில் இந்தத் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- மதிப்பாய்வு செய்யப்பட்டவர்களில், 100 கோடி ரூபாய்க்கும் மேல் சொத்து மதிப்பு கொண்ட 5% செல்வந்தர்கள் ஆவர்.
- கடுமையான குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்ட தற்போது பதவியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒன்பது பேர் மீது கொலைக் குற்றம் சாட்டப் பட்டு உள்ளது.
- இந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர் பா.ஜ.க. கட்சியினைச் சேர்ந்தவர்கள் என்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.
- மேலும், தற்போது பதவியில் உள்ள 28 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை முயற்சி தொடர்பான வழக்குகள் தங்கள் மீது பதிவாகியிருப்பதாக அறிவித்துள்ள நிலையில் அவர்களில் பெரும்பாலானோர் (21 பாராளுமன்ற உறுப்பினர்கள்) பா.ஜ.க. கட்சியினை சேர்ந்தவர்கள் ஆவர்.
- இதேபோல், தற்போது பதவியில் உள்ள 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது, மூன்று கற்பழிப்பு குற்றச்சாட்டுகள் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான மிகவும் கடுமையான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள் பதிவாகியுள்ளது.
- 73% பாராளுமன்ற உறுப்பினர்கள் பட்டதாரி அல்லது உயர் கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ள உறுப்பினர்கள் ஆவர், அதே சமயம் அப்பதவியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் 15% பேர் மட்டுமே பெண்கள் ஆவர்.

## MGNREGA கீழான ஊதிய விகிதம் உயர்வு 2024-25


| State | 2023-24 (MGNREGA wages per day in ₹) | 2024-25 (MGNREGA wages per day in ₹) |
|---|---|---|
| Andaman and Nicobar Islands | 311-328 | 329-347 |
| Andhra Pradesh | 272 | 300 |
| Arunachal Pradesh | 234 | 234 |
| Assam | 238 | 249 |
| Bihar | 228 | 245 |
| Chhattisgarh | 221 | 243 |
| Dadra and Nagar Haveli | 297 | 324 |
| Daman and Diu | 297 | 324 |
| Goa | 322 | 356 |
| Gujarat | 256 | 280 |
| Haryana | 357 | 374 |
| HP | 224-280 | 236-295 |
| Jammu and Kashmir & Ladakh | 244 | 259 |
| Jharkhand | 228 | 245 |
| Karnataka | 316 | 349 |
| Kerala | 333 | 346 |
| Lakshadweep | 304 | 315 |
| Madhya Pradesh | 221 | 243 |
| Maharashtra | 273 | 297 |
| Manipur | 260 | 272 |
| Meghalaya | 238 | 254 |
| Mizoram | 249 | 266 |
| Nagaland | 224 | 234 |
| Odisha | 237 | 254 |
| Puducherry | 294 | 319 |
| Punjab | 303 | 322 |
| Rajasthan | 255 | 266 |
| Sikkim | 236 | 249 |
| Tamil Nadu | 294 | 319 |
| Telangana | 272 | 300 |
| Tripura | 226 | 242 |
| Uttar Pradesh | 230 | 237 |
| Uttarakhand | 230 | 237 |

- ❖ மத்திய அரசானது, 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் (MGNREGA) கீழ், பயிற்சித் திறன் சாரா உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கான 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான திருத்தப்பட்ட புதிய ஊதிய விகிதங்களைச் சமீபத்தில் அறிவித்துள்ளது.
- ❖ ஊரக மேம்பாட்டு அமைச்சகம் ஆனது 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் 6(1) என்ற பிரிவின் கீழ், புதிய ஊதிய விகிதங்களை அறிவித்துள்ளது.
- ❖ இந்தப் புதிய ஊதிய விகிதங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் தொடங்க உள்ள நிதியாண்டிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.
- ❖ கோவா மாநிலத்தில் நடப்பு நிதியாண்டில் ஒரு நாளைக்கு 322 ரூபாயாக உள்ள ஊதிய விகிதமானது அதிகபட்சமாக 10.56 சதவீதம் அளவிற்கு உயர்த்தப்பட்டு, 2024-2025 ஆம் நிதியாண்டில் ஒரு நாளைக்கு 356 ரூபாயாக வழங்கப்படும்.
- ❖ அதே சமயம், உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரக்காண்ட் ஆகிய சில மாநிலங்களில் தற்போது ஒரு நாளைக்கு 230 ரூபாயாக உள்ள ஊதிய விகிதத்தில் குறைந்தபட்சமாக தலா 3.04 சதவீதம் உயர்த்தப்பட்டு 237 ரூபாயாக வழங்கப்படும்.
- ❖ தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (NREGS) கீழ், ஒரு நாளைக்கு 374 ரூபாய் என்ற அதிகபட்ச ஊதிய விகிதமானது ஹரியானா மாநிலத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ளது.
- ❖ ஒரு நாளைக்கு 234 ரூபாய் என்ற மிகக் குறைந்த ஊதிய விகிதமானது, அருணாச்சலப் பிரதேசம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நீர் சுத்திகரிப்பு அமைப்புத் தொடர்பான (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகள், 2023

- ❖ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது, 2023 ஆம் ஆண்டிற்கான நீர் சுத்திகரிப்பு அமைப்புத் தொடர்பான (பயன்பாட்டு ஒழுங்குமுறை) விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

- கழிவு நீர் மற்றும் இந்தச் சுத்திகரிப்பு அமைப்புகளில் உருவாக்கப்படும் கழிவுப் பொருட்களை மேலாண்மை செய்தல், சேமித்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான வழி காட்டுதல்களை இது வழங்குகிறது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இந்த விதிகளானது அமலுக்கு வர உள்ளது.





## 'சாகர் அங்காளன்' வழிகாட்டுதல்கள்

- மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகமானது, 'சாகர் அங்காளன்' வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது இந்திய துறைமுகங்களின் செயல்திறனை நன்கு மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளதோடு, வரைபடமாக்கல், தரநிலைப்படுத்துதல் மற்றும் உலகளாவியத் தரநிலைகளோடு இசைந்து அமைதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய போட்டித் தன்மைக்கு ஏதுவாக இந்தியாவின் கடல்சார் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும் மேம்படுத்தச் செய்வதற்குமான அரசாங்கத்தின் ஒரு ஈடுபாட்டினை இந்த நடவடிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

## GROW இணைய தளம் மற்றும் அறிக்கை

- நிதி ஆயோக் அமைப்பானது, வேளாண் காடு வளர்ப்பு மூலம் தரிசு நிலத்தை பசுமை மயமாக்குதல் மற்றும் புணரமைத்தல் (GROW) அறிக்கை மற்றும் இணைய தளத்தினை சமீபத்தில் தொடங்கியுள்ளது.
- தேசிய அளவிலான முன்னுரிமைக்காக கருப்பொருள் சார்ந்த தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தி வேளாண் காடு வளர்ப்பு ஏற்புநிலைக் குறியீடானது (ASI) உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது, பசுமைமயமாக்கல் மற்றும் புணரமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசுத் துறைகள் மற்றும் தொழிற்துறைகளுக்கு உதவும் வகையில் மாநிலம் மற்றும் மாவட்ட வாரியான பகுப்பாய்வுகளை வழங்குகிறது.

- "வேளாண் காடு வளர்ப்பு மூலம் தரிசு நிலத்தைப் பசுமைமயமாக்குதல் மற்றும் புணரமைத்தல் (GROW) என்ற இணைய தளமானது மாநில மற்றும் மாவட்ட அளவிலான தரவுகளுக்கான பொதுப் பயன்பாட்டு அணுகலை வழங்குகிறது.
- GROW முன்னெடுப்பானது நாட்டின் உறுதிப்பாடுகளுடன் ஒத்துப் போகிறது.
  - 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 26 மில்லியன் ஹெக்டேர் அளவிலான தரமிழந்த நிலத்தினை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - 2.5 முதல் 3 பில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்கு இணையான கூடுதல் கார்பன் உள்ளீர்ப்பு அமைப்புகளை (காடுகள்) உருவாக்குதல்.




## 'SARTHI' இணைய தளம்




- விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களைச் சென்றடையும் வகையில் காப்பீட்டு நிறுவனங்களுக்கு நன்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட 'SARTHI' என்ற இணைய தளத்தினை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

- இது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY) உள்ளிட்ட அரசாங்கத்தின் மானியத்துடன் கூடிய காப்பீட்டுத் திட்டங்களையும், அதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்ட திட்டங்களையும் வழங்குகிறது.
- 'SARTHI' என்பது வேளாண்மை, கிராமப்புறப் பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் காப்பீடு ஆகியவற்றிற்கான சோதனை தளம் என்பதைக் குறிக்கிறது.
- காப்பீட்டுத் திட்டம் சார்ந்தத் தயாரிப்புகளைக் கண்டறிவதற்கும், வாங்குவதற்கும், பெறுவதற்குமான ஒற்றைச் சாளரத் தளமாக இந்த இணைய தளம் விளங்கும்.
- PMFBY திட்டத்தின் கீழான குறை தீர்ப்பு நெறிமுறையை வலுப்படுத்தும் வகையில், விவசாயிகள் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்காக 14447 என்ற உதவி எண்ணையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.


## SWATI இணைய தளம்

- மத்திய அரசானது, SWATI (பெண்களுக்கான அறிவியல் - தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்) என்ற இணைய தளத்தினை தொடங்கியுள்ளது.
- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) மற்றும் மருத்துவத் துறைகளில் இந்தியப் பெண்களின் சாதனைகளை எடுத்துரைக்கும் தரவு தளத்தைக் கொண்டுள்ளது.
- அறிவியல் துறையில் உள்ள பாலின இடைவெளியை நிவர்த்தி செய்வதற்காக தேசிய தாவர மரபணு ஆராய்ச்சி நிறுவனத்தினால் (NIPGR) இந்த ஊடாடும் வகையிலான இணைய தளமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த இணைய தளமானது, அறிவியலில் கல்வித் துறை மற்றும் தொழில்துறைகளில் ஈடுபடுவதற்குப் பெண்களை ஊக்குவிக்க முயல்கிறது.


## இந்தியாவின் தொலைதூரக் கிராமங்களில் APAAR

- கல்வி அமைச்சகமானது, பொதுச் சேவை மையங்கள் (CSCs) மூலம் கிராமப்புறங்களில் தானியங்கு நிரந்தர கல்விக் கணக்கு பதிவேட்டை (APAAR) சமீபத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.
- APAAR திட்டமானது தேசிய கல்விக் கொள்கையின் (NEP 2020) ஒரு பகுதியாக கருத்தாக்கப் பட்டுள்ளது.
- கல்லூரி / பல்கலைக் கழகத்தில் பயிலும் அனைத்து மாணவர்களும் கல்விநிலை தொடர்பான தரவுகளை (Academic Bank of Credits) பதிவு செய்வதை இது கட்டாயம் ஆக்குகிறது.
- கல்வி நிலை தொடர்பான தரவுகள் என்பது எண்ணிமச் சேமிப்பகம் போன்றது என்ற நிலையில் இதன் மூலம் மாணவர்கள் அதன் பலன்களைப் பெறலாம்.
- இந்த எண்ணிமத் தரவு உள்ளீட்டு சேமிப்பகத்தில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் / தரவரிசை அனைத்தும் சேமிக்கப்படும்.
- மாணவர்களின் தனிப்பட்ட தகவல்களும் இங்கு சேமிக்கப்படும்.
- இந்த APAAR அடையாள எண்ணினைக் குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தலாம்.

- மாணவர்கள் இனி எந்த இடத்திலும் சான்றிதழ்களை வழங்கத் தேவையில்லை என்ற நிலையில் வெறும் APAAR அடையாள எண்ணினை மட்டும் கொடுத்தால் போதுமானது.




## சட்ட ஆணையத்தின் 287வது அறிக்கை




- வெளிநாடு வாழ் இந்தியர்கள்/வெளிநாட்டில் உள்ள இந்திய குடிமக்கள் மற்றும் இந்திய குடிமக்கள் ஆகியோருக்கு இடையேயான திருமணத்தைக் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்று இந்தியச் சட்ட ஆணையமானது அதன் 287வது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது.
- நிலுவையிலுள்ள 2019 ஆம் ஆண்டு வெளிநாடு வாழ் இந்தியர்களின் திருமணப் பதிவு மசோதாவினை (NRI மசோதா) திருத்தியமைப்பதன் மூலம் இந்த மாற்றங்களை மேற் கொள்ள இந்த அறிக்கை முன்மொழிகிறது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களுடனான திருமணங்களைப் பதிவு செய்வதற்கான புதிய நடைமுறையையும் இந்த அறிக்கையானது பரிந்துரைக்கிறது.

- மாவட்ட திருமண அதிகாரிகளுக்கு அறிவிப்பு வழங்குவதும், திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் நபர்களுக்கு அதற்கான வாய்ப்பினை வழங்குவதற்காக இந்தத் திருமணம் குறித்த தகவல்களை 30 நாட்களுக்குக் காட்சிப்படுத்த வேண்டுமென்ற சில நடைமுறைகளும் இதில் அடங்கும்.
- 2019 ஆம் ஆண்டு வெளிநாடுவாழ் இந்தியர்கள் மசோதாவின் விரிவாக்கத்துடன், ஒரு நபரின் கடவுச்சீட்டில் அவர்களின் திருமண நிலையைப் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக, 1967 ஆம் ஆண்டு கடவுச் சீட்டு சட்டத்திலும் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென சட்ட ஆணையமானது பரிந்துரைக்கிறது.

## இந்தியாவில் வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு நிகழ்வுகள் தொடர்பான அறிக்கை




- இந்தியா ஹேட் லேப் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராக 668 ஆவணப்படுத்தப்பட்ட வெறுப்பு பேச்சு நிகழ்வுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- 'இந்தியாவில் வெறுப்பினை உண்டாக்கும் பேச்சு நிகழ்வுகள்' என்ற தலைப்பிலான அறிக்கையில், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மட்டும் 255 நிகழ்வுகள் பதிவு செய்யப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் இந்த எண்ணிக்கையானது 413 ஆக உயர்ந்துள்ளது என்ற நிலையில் இது 62% அதிகரிப்பாகும்.
- இதில் 75% நிகழ்வுகளானது (498) பா.ஜ.க ஆளும் மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் டெல்லியில் பதிவாகியுள்ளன.
- 36% (239) நிகழ்வுகள் "முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் நேரடிப் பேச்சுகளை உள்ளடக்கியது".

- 63% (420) நிகழ்வுகளில் " சதி கோட்பாடுகள், முதன்மையாக லவ் ஜிஹாத், நில ஜிஹாத், ஹலால் ஜிஹாத் மற்றும் மக்கள் தொகை ஜிஹாத்" பற்றிய பேச்சுகளும் அடங்கும்.
- சுமார் 25% (169) வெறுப்புப் பேச்சுக்களானது முஸ்லீம் வழிபாட்டுத் தலங்களைக் குறி வைத்து பேசப்பட்ட நிகழ்வுகளாகும்.
- மகாராஷ்டிரா (118), உத்தரப் பிரதேசம் (104), மத்தியப் பிரதேசம் (65), ராஜஸ்தான் (64), ஹரியானா (48), உத்தரக்காண்ட் (41), கர்நாடகா (40), குஜராத் (31), சத்தீஸ்கர் (21), மற்றும் பீகார் (18) ஆகியவை மிகவும் அதிக எண்ணிக்கையிலான வெறுப்புப் பேச்சு நிகழ்வுகள் பதிவான முதல் 10 மாநிலங்கள் ஆகும்.

## பெருந்தொற்று திட்டம் மற்றும் சீர்தரச் செயல்பாட்டு முறைமை

- 286வது சட்ட ஆணைய அறிக்கையானது, எதிர்காலத்தில் ஏற்படும் பல்வேறு பெருந் தொற்றுகளை எதிர்கொள்வதற்காக ஒரு பெருந்தொற்றுத் திட்டம் மற்றும் சீர்தரச் செயல்பாட்டு முறைமையினை உருவாக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.
- இது 1897 ஆம் ஆண்டு பெருந்தொற்றுச் சட்டத்தின் (EDA) வரம்புகளை இது எடுத்து உரைக்கிறது.
- "பெருந்தொற்றுகளின் மேலாண்மை, கட்டுப்பாடு மற்றும் தடுப்பு ஆகியவற்றை ஒரு நூற்றாண்டுக்கும் மேலான பழமையானச் சட்டத்தின் மூலம் நிர்வகிக்க முடியாது" என்று அந்த அறிக்கையானது எடுத்துரைக்கிறது.
- பெருந்தொற்று ஏற்படும் போது மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அதிகாரிகளின் அதிகாரங்களுக்கு இடையே தெளிவான வரையறை நிர்ணயிக்கப்படவில்லை என்ற நிலையில் இது ஒருங்கிணைக்கப்படாத நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கிறது.
- ஒரு சீர்தரச் செயல்பாட்டு முறைமை (SOP) உருவாக்கப்பட்டால், பொது சுகாதார அவசர நிலையின் போது முன் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பங்களிப்புகளுடன் எந்தவொரு பெருந்தொற்றிற்கும் சரியான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்ய முடியும்.

## நெகிழிக் கழிவு மேலாண்மை (திருத்தம்) விதிகள், 2024

- சுற்றுச்சூழல் அமைச்சகம் ஆனது, இந்தியாவின் 2024 ஆம் ஆண்டு நெகிழிக் கழிவு மேலாண்மை (திருத்தம்) விதிகளில் புதிய திருத்தங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உயிரியல் ரீதியாக மக்கும் நெகிழிகளை "... மண், நிலப்பரப்பு போன்ற குறிப்பிட்ட சூழலில் உயிரியல் செயல்முறைகளால் சிதையும் திறன் கொண்டவை" என்று மட்டுமல்லாமல், "எந்த நுண்நெகிழிகளையும்..." விட்டுச் செல்லாதவை என்றும் வரையறுக்கிறது.
- உயிரியல் ரீதியாக மக்கும் நெகிழிகள் என்பது நெகிழிப் பொருட்கள் விற்கப் படுவதற்கு முன் சுத்திகரிப்புச் செயல்முறைக்கு உட்படுத்தப்படுவதாகும்.
- கழிவாக வீசப்படும் போது, அத்தகைய நெகிழிப் பொருட்கள் முற்றிலும் சிதைந்து விடுகிறதா என்பதை தீர்மானிக்க இன்னும் எவ்வித சோதனைகளும் மேற்கொள்ளப் படவில்லை என்றாலும் அந்தப் பொருள் காலப்போக்கில் இயற்கையாக சிதைந்து விடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

- மறுபுறம், மக்கும் நெகிழிகள் முழுவதும் சிதைவடைகின்றன என்றாலும் அவ்வாறு அவை சிதைவுறச் செய்வதற்குத் தொழிற்சாலை அல்லது பெரிய அளவில் நகராட்சிக் கழிவு மேலாண்மை வசதிகள் தேவை.
- நுண் நெகிழிகள் என்பது 1 µm மற்றும் 1,000 µm (1 µm என்பது ஒரு மில்லி மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பங்கு) ஆகிய அளவிற்கு இடைப்பட்ட பரிமாணங்களைக் கொண்ட, நீரில் கரையாத திடமான நெகிழித் துகள் என்று வரையறுக்கப்படுகிறது.





## 'ஒரு வாகனம், ஒரு FASTag' முன்னெடுப்பு

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் (NHAI) 'ஒரு வாகனம், ஒரு FASTag' திட்டம் ஆனது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் செயல்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தக் கருத்தாக்கமானது, பல வாகனங்களுக்கு ஒரு FASTag குறியீட்டினைப் பயன்படுத்துதல் அல்லது ஒரு வாகனத்துடன் தொடர்புடைய பல FASTags குறியீடுகளை இணைக்கும் நடைமுறையைத் தடுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போது, வாகன உரிமையாளர் ஒரு வாகனத்திற்குச் செயலில் உள்ள ஒரு FASTag குறியீட்டினை மட்டுமே வைத்திருக்க அனுமதிக்கப்படுவார்.

## இந்தியாவின் வேகமான உள்நாட்டு IP/MPLS ரவுட்டர்

- இந்தியாவின் விரைவான மற்றும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பல்நெறி முறை அடுக்கு மாற்றச் செயல்முறை/இணைய நெறிமுறை (IP/MPLS) திசைவி (தரவு மாற்றி-ரௌட்டர்) ஆனது பெங்களூரு நகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது வினாடிக்கு 2.4 டெராபிட்கள் (TBPS) என்ற அளவு திறனில் மையத் தரவு மாற்றியைப் பாதுகாக்கிறது.

- MPLS என்பது வலையமைப்பு முகவரிகளுக்குப் பதிலாக அடுக்குகள் (labels) அடிப்படையில் தரவுகளை ஒரு முனையத்திலிந்து அடுத்த முனையத்திற்குப் பரிமாற்றுகின்ற தொலைத்தொடர்பு வலையமைப்புகளில் உள்ள ஒரு தரவு மாற்றி நுட்பமாகும்.
- MPLS (Multiprotocol Label Switching) என்ற நுட்பம் முதன்முதலில் 1990 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப் பட்டது.
- இதன் முக்கியச் செயல்பாடானது, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வலையமைப்புப் பாதைகளில் இலக்க உறைத் தரவுகளை அனுப்பச் செய்வதன் மூலம் வலையமைப்பு இணைப்புகளை விரைவுபடுத்துவது ஆகும்.




## ‘இந்தியாவிற்குள்ளேயே திருமணம் செய்துகொள்ளுங்கள்’ என்ற கருத்து

- நாட்டின் வளம் நாட்டிற்குள்ளேயே இருக்க, திருமணம் செய்து கொள்ள விரும்பும் தம்பதிகளை இந்தியாவிற்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று பிரதமர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.
- ஒவ்வோர் ஆண்டும் வெளிநாட்டின் கண்கவர் பகுதிகளில் நடைபெறும் நடைமுறை சார்ந்த திருமணங்கள் 5,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் நடைபெறுவதாக அதிகாரப் பூர்வமற்ற மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.
- அவற்றிற்கான மொத்தச் செலவினம் 75,000 கோடி ரூபாய் முதல் 1 லட்சம் கோடி ரூபாய் வரை ஆகும்.
- சமீபத்திய அதிக திருமணங்கள் நடைபெறும் காலகட்டத்தில் நடைபெற்ற ஆறு லட்சம் திருமணங்களில் திருமணம சார்ந்த கொள்முதல்கள் மூலம் சந்தையில் சுமார் 4.25 லட்சம் கோடி ரூபாய் பணம் புழக்கத்தில் இருந்ததாக அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு (CAIT) தெரிவித்துள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் ஒரு குடும்பத்தின் ஒரு திருமணத்தையாவது உத்தரகாண்ட் மாநிலத்தில் நடத்துமாறு தொழிலதிபர்களைப் பிரதமர் அவர்கள் வலியுறுத்தினார்.
- இது இந்த மலைப் பிரதேச மாநிலத்தினைத் திருமணம் நடத்தப் படுவதற்கு என்று ஒரு விருப்பமிகு இடமாக மாற்ற உதவும்.

## RoDTEP திட்டத்தின் விரிவாக்கம்

- சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) மற்றும் ஏற்றுமதி சார்ந்த பகுதிகள் (EOUs) ஆகியவற்றில் உள்ள நிறுவனங்களுக்கு RoDTEP திட்டத்தின் கீழான பலன்கள் கிடைக்கப் பெறும் வகையில் அரசாங்கம் அத்திட்டத்தினை விரிவுபடுத்தி உள்ளது.
- இந்த துறைகள் ஆனது மொத்த ஏற்றுமதியில் 25 சதவீதப் பங்கினை கொண்டுள்ளன.
- RoDTEP என்பது ஏற்றுமதி செய்யப்பட்டப் பொருட்கள் மீதான சுங்கம் மற்றும் வரிகள் நீக்கம் என்பதைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஏற்றுமதி ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் கடல்சார் பொருட்கள், நூல் இழைகள் மற்றும் பால் பொருட்கள் போன்ற 8,555 பொருட்களுக்கான கூடுதல் வரிகளை திரும்ப வழங்குவதற்கான விகிதங்களை அரசாங்கம் அறிவித்தது.
- அந்த காலக் கட்டத்தில் அறிவிக்கப்பட்ட விகிதப் பட்டியலில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) மற்றும் ஏற்றுமதி சார்ந்தப் பகுதிகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை.

## 60 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு

- புகழ்பெற்ற பனாரஸ் தண்டை உட்பட இந்தியா முழுவதிலும் இருந்து 60க்கும் மேற்பட்ட தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- ஒரே நேரத்தில் இவ்வளவு அதிக எண்ணிக்கையிலான புவிசார் குறியீடுகள் வழங்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- அசாமில் இருந்து ஆஷாரிகண்டி சுடுமண் கைவினைப்பொருள், பானி மெட்டேகா கைவினைப் பொருள், சர்தேபரி உலோக கைவினை, ஜாபி (அசாமின் கிராமப்புறப் பகுதிகளில் செய்யப்படும் மூங்கில் தலைக்கவசம்), மிஷிங் கைத்தறிப் பொருட்கள் மற்றும் பிஹு தோல் ஆகிய ஆறு பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளன.
- போடோ பெண்களின் பாரம்பரிய உடையான போடோ டோகோனா மற்றும் போடோ எரி பட்டு உட்பட அசாமின் மற்ற 13 தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடுகள் வழங்கப் பட்டுள்ளன.
- திரிபுரா பகுதியில் பச்ரா-ரிக்னாய் மற்றும் மாதாபரி பேடா என்ற இனிப்புத் தயாரிப்பு ஆகிய இரண்டு தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- சமூக-கலாச்சார மற்றும் மதச் சடங்குகளுடன் தொடர்புடைய மேகாலயா கரோ ஜவுளிகள்' நெசவு முறை மற்றும் 'மேகாலயா லைர்னை மட்பாண்டங்கள்' மற்றும் 'மேகாலயா சுபிட்சி' ஆகியவையும் புவிசார் குறியீடுகளைப் பெற்றுள்ளன.
- 69 தயாரிப்புக்கள் புவிசார் குறியீடு பெற்றதுடன், உத்தரப் பிரதேசம் ஆனது தற்போது புவிசார் குறியீடு பெற்ற 58 தயாரிப்புகளைக் கொண்ட தமிழ்நாட்டை விஞ்சியுள்ளது.
- இன்று வரையில் இந்தியாவில் சுமார் 635 தயாரிப்புகளுக்கு வேண்டிப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- நாட்டின் முதல் புவிசார் குறியீடு ஆனது இருபது ஆண்டுகளுக்கு முன்னர் புகழ்பெற்ற டார்ஜிலிங் தேயிலைக்கு வழங்கப்பட்டது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஸ்தாபன தினம்

- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- இது நிதி உறுதித் தன்மை, நாணய மேலாண்மை, பணவீக்க இலக்கு நிர்ணயித்தல், வங்கி அமைப்பை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வட்டி விகிதங்களை நிர்ணயித்தல் ஆகியவற்றிற்கான பொறுப்பினை வகிக்கும் நிறுவனம் ஆகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியை நிறுவுவதற்கான சட்டம் ஆனது 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயற்றப்பட்டது.
- வங்கியை நிறுவுவதற்கான விதிமுறைகள், பங்கு மூலதனம் வெளியீடு மற்றும் மத்திய மற்றும் உள்ளூர் வாரியங்களை நிறுவுதல் தொடர்பான விதிகள் 1935 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் ஆளுநர் இம்பீரியல் வங்கியின் இரண்டு நிர்வாக ஆளுநர்களில் ஒருவரும் ஆஸ்திரேலிய நாட்டவருமான சர் ஆஸ்போர்ன் ஆர்கெல் ஸ்மித் என்பவர் ஆவார்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநரான முதல் இந்தியர் சர் C. D. தேஷ்முக் ஆவார்.

## ‘பாரத்-சக்தி’ பயிற்சி

- இராஜஸ்தானில் உள்ள பொக்ரான் என்னுமிடத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் ஒருங்கிணைந்தச் செயல்விளக்க நடவடிக்கையானது பாரத் சக்தி என்ற முப்படைகளின் நேரடி ஆயுத மற்றும் சூழ்நிலை சார்ந்த இராணுவ வளப் பயன்பாட்டு பயிற்சி வடிவில் நடைபெற்றது.
- கடந்த 10 ஆண்டுகளில் இந்திய நிறுவனங்களிடமிருந்து 6 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- இந்த காலக் கட்டத்தில் நாட்டின் பாதுகாப்பு உற்பத்தியானது சுமார் இரண்டு மடங்கு அதிகரித்து 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக உயர்ந்து இரட்டிப்பாகியுள்ளது.
- 150க்கும் மேற்பட்ட பாதுகாப்புத் துறை சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளன என்பதோடு, பாதுகாப்புப் படைகள் அவற்றுடன் 1800 கோடி ரூபாய்க்கும் மேலான மதிப்பிலான கொள்முதல் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உள்ளன.

## இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, தெலுங்கானா அரசின் T-Hub என்ற புத்தாக்க தொழில்துறை காப்பக அமைப்புடன் இணைந்து, இயந்திரக் கற்றல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப மையத்தினை (MATH) நிறுவ உள்ளது.
- செயற்கை நுண்ணறிவு சார்ந்த பல்வேறு புத்தாக்கங்களை ஊக்குவித்தல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்தப் புத்தொழில் நிறுவனங்களுக்கு உகந்த சூழலை வழங்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு நுட்பச் சந்தையானது 25-35% என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ந்து வருகிறது என்ற நிலையில் மேலும் இது 2027 ஆம் ஆண்டிற்குள் 17 பில்லியன் டாலரை எட்டும்.

## INS துஷில்



- இந்தியாவின் கடற்படையில் சமீபத்தில் புதிதாக இணைக்கப்பட்ட INS துஷில் என்ற கப்பலானது, ரஷ்யாவின் பால்டியிஸ்க் கடற்படைத் தளத்தில் தனது கடல்சார் இயக்க சோதனைகளைத் தொடங்கியது.
- துஷில், ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட இரண்டு கூடுதல் கிரிவாக்/தல்வார் ரக ரேடார் கருவிகளில் சிக்காத போர்க் கப்பல்களில் முதலாவது கப்பலாகும்.
- துஷில் என்றால் சமஸ்கிருத மொழியில் "பாதுகாப்பு கவசம்" என்று பொருள்படும் இது ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்காக இந்திய அரசினால் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்ட தொடர் உற்பத்தி செய்யப்படும் நான்கு போர்க் கப்பல்களில் ஒன்றாகும்.
- இவற்றில் இரண்டு கப்பல்களானவை (INS துஷில் மற்றும் INS தமாலா) ரஷ்யாவால் வடிவமைக்கப் பட்டு வருகின்ற நிலையில் மீதமுள்ள இரண்டு கப்பல்களும் தொழில் நுட்பப் பரிமாற்றம் மூலம் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.
- இந்தியக் கடற்படையானது ஆறு தல்வார் ரக போர்க் கப்பல்களை இயக்குகிற நிலையில் இவை 1997 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் முறையே மூன்று கப்பல்கள் கொண்ட இரண்டு தொகுதிகளாக கொள்முதல் செய்யப் பட்டன.

## சூரியசக்தி ஒளிமின்னழுத்த தகடு உற்பத்தி நிலை 2024

- இந்தியா 2023 ஆம் ஆண்டில் 20.8 ஜிகாவாட் அளவில் சூரிய மின்சக்தி தகடு உற்பத்தித் திறன் மற்றும் 3.2 ஜிகாவாட் அளவில் புதிய ஒளி மின்னழுத்தக் கலன் உற்பத்தி ஆலைகளை நிறுவியது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதியன்று நாட்டின் ஒட்டு மொத்த சூரியசக்தி தொகுப்பு உற்பத்தித் திறன் ஆனது 64.5 ஜிகாவாட்டாக இருந்தது, அதே நேரத்தில் அதன் சூரிய மின்கலத் திறன் ஆனது 5.8 ஜிகா வாட்டை எட்டியது.
- குஜராத் மாநிலம் ஆனது, நாட்டின் ஒட்டு மொத்த ஒளி மின்னழுத்த உற்பத்தித் திறனில் 46.1% பங்கினை கொண்டுள்ளது.
- தெலுங்கானா அனைத்து சூரிய மின்கல உற்பத்தி திறனில் 39% பங்கினைக் கொண்டு உள்ளது.
- இந்தியா 2023 ஆம் ஆண்டில் 16.2 GW தொகுதிகளை இறக்குமதி செய்த நிலையில், இது 2022 ஆம் ஆண்டில் 10.3 GW ஆக இருந்த அளவை விட 158% அதிகமாகும்.

- உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் ஆனது 2023 ஆம் ஆண்டில் 4.8 ஜிகாவாட் சூரியசக்தி தொகுப்புகளை ஏற்றுமதி செய்த நிலையில், இது 2022 ஆம் ஆண்டில் 1.6 ஜிகாவாட்டாக இருந்த அளவை விட 204% அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் சூரியசக்தி மின்கல இறக்குமதி ஆனது 2023 ஆம் ஆண்டில் 15.6 GW ஆக இருந்த நிலையில், இது ஆண்டிற்கு 169% அதிகரித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 10 மெகாவாட்டாக இருந்த சூரியசக்தி மின்கல ஏற்றுமதியானது 2,765% அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் 286.3 மெகாவாட் திறனை எட்டியது.




## INDRA செயலி

- உலக வானிலை நாள் அனுசரிப்பின் ஒரு பகுதியாக, INDRA எனப்படுகின்ற மற்றும் உள்நாட்டிலேயே நன்கு உருவாக்கப்பட்ட ஒரு கைபேசிச் செயலியானது (வானிலை பகுப்பாய்விற்கான இந்தியக் கடற்படையின் மாறுநிலை வளம்) தொடங்கப்பட்டது.
- இது வானிலை தொடர்பான தகவல்களைப் பரப்ப உதவுவதோடு, உகந்த மற்றும் விரைவான முடிவெடுக்கும் திறனை நன்கு மேம்படுத்தும் முன்னெச்சரிக்கைகளை வழங்கும்.
- இந்தச் செயலியானது இந்தியக் கடற்படையின், கடற்படைப் பெருங்கடலியல் மற்றும் வானிலை இயக்குநரகத்துடன் நன்கு ஒன்றிணைந்து BISAG (பாஸ்கராச்சார்யா தேசிய விண்வெளிப் பயன்பாட்டு மற்றும் புவி சார் தகவலளிப்பு நிறுவனம்) நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.

## இந்தியாவின் மின்னணு சாதனம் சார்ந்த விளையாட்டுகள் குறித்த அறிக்கை 2024

- 2023 ஆம் ஆண்டில் சுமார் 568 மில்லியன் அளவிலான மின்னணு சாதனம் சார்ந்த விளையாட்டுப் பயனர் எண்ணிக்கையையும், சுமார் 9.5 பில்லியனுக்கும் அதிகமான விளையாட்டுச் செயலிப் பதிவிறக்கங்கள் எண்ணிக்கையையும் கொண்டு இந்திய நாடானது உலகின் மிகப்பெரிய மின்னணு சாதனம் சார்ந்த ஒரு பெரிய விளையாட்டுச் சந்தையாக உருவெடுத்துள்ளது.
- உலகின் மொத்த கைபேசி விளையாட்டுச் செயலிப் பதிவிறக்கங்களில் இந்தியாவின் பங்கு தோராயமாக 20% ஆகும்.

- ❖ இது அடுத்த இரண்டு இடங்களில் உள்ள அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளின் மொத்தப் பதிவிறக்க கூடுதலை விட அதிகமாக உள்ளது.
- ❖ இந்தத் துறையானது 14 சதவீதம் என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வேகமாக வளர்ந்து வருகிறது.
- ❖ இந்தியாவின் மின்னணு சாதனம் சார்ந்த விளையாட்டுகளின் சந்தையில், 90 சதவீதம் கைபேசி சார்ந்த விளையாட்டுகள் பங்களிக்கிற நிலையில் இது அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் முறையே 37% மற்றும் 62% ஆக உள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் 3.1 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் மின்னணு சாதனம் சார்ந்த விளையாட்டுகள் சார்ந்த தொழில் துறையானது 2028 ஆம் ஆண்டில் சுமார் இரு மடங்காக உயர்ந்து 6 பில்லியன் டாலரை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## இந்தியாவின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி




- ❖ இந்தியாவின் பாதுகாப்புத் துறை சார்ந்த ஏற்றுமதியானது முதல் முறையாக 21,000 கோடி ரூபாய் மதிப்பினைத் (தோராயமாக 2.63 பில்லியன் டாலர்) தாண்டியது.

- 2023-24 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதியானது 21,083 கோடி ரூபாய் மதிப்பினை எட்டி உள்ள நிலையில் இது முந்தைய நிதியாண்டில் பதிவானதை விட சுமார் 32.5% என்ற அளவிலான அதீத வளர்ச்சியாகும்.
- 2013-14 நிதியாண்டுடன் ஒப்பிடும் போது கடந்த 10 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறை சார்ந்த ஏற்றுமதியானது 31 மடங்கு அதிகரித்துள்ளது.
- இருப்பினும், 2014-18 ஆகிய காலக் கட்டத்துடன் ஒப்பிடும்போது, இறக்குமதியானது 4.7% அதிகரித்து, 2019-23 ஆகிய காலக் கட்டங்களில் உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக இந்தியா தொடர்ந்து இடம் பெற்றிருந்தது.


## இந்தியாவின் நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தி 2023-24

- இந்தியாவின் ஒட்டு மொத்த நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தியானது கடந்த நிதியாண்டில் 1,039 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக உள்ள உலகின் இரண்டாவது பெரிய நுகர்வோராக விளங்கும் இந்தியா நாடானது, 2023 ஆம் நிதியாண்டில் 937.22 மில்லியன் டன் நிலக்கரி மற்றும் லிக்னைட்டை உற்பத்தி செய்துள்ளது.
- இந்தியாவின் மொத்த நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தியானது 2022-23 என்ற முந்தைய நிதியாண்டில் 937 மில்லியன் டன்களாக இருந்தது.
- நாட்டின் மாதாந்திர நிலக்கரி உற்பத்தியானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதன்முறையாக 100 மில்லியன் டன்களைத் தாண்டியது.


| Year | No. of operational Coal blocks | Coal Production (MT) |
|---|---|---|
| 2015-16 | 11 | 29.50 |
| 2016-17 | 12 | 32.53 |
| 2017-18 | 19 | 36.85 |
| 2018-19 | 27 | 49.91 |
| 2019-20 | 32 | 58.88 |
| 2020-21 | 39 | 63.14 |
| 2021-22 | 46 | 85.12 |
| 2022-23 | 51 | 116.08 |
| 2023-24(till 17.01.2024) | 57 | 135.70MT |

## இந்தியாவின் அணுசக்தி செயல்திட்டம்

- இந்திய நாடானது தனது அணுசக்தி உற்பத்தியை 2047 ஆம் ஆண்டிற்குள் 1 லட்சம் மெகாவாட்டாக அதிகரிக்க வேண்டும் என்ற ஓர் இலட்சியமிகு இலக்கினை நன்கு நிர்ணயித்துள்ளது.
- இந்த இலக்கு ஆனது தற்போதைய உற்பத்தி அளவான 8,000 மெகாவாட்டிலிருந்து கணிசமான அதிகரிப்பைக் குறிக்கிறது.
- ஈனுலைகள் ஆனது 3 ஜிகாவாட் அணுசக்தியை வழங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிற அதே நேரத்தில் சர்வதேச ஒத்துழைப்புடன் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மென்னீர் உலைகளில் இருந்து 17.6 ஜிகாவாட் ஆற்றல் பெறப்படும்.
- கூடுதலாக 40-45 ஜிகாவாட் அழுத்த கன நீர் உலைகளில் இருந்து பெறப்படும்.




## 2025 ஆம் ஆண்டிற்குள் யூரியா இறக்குமதி நிறுத்தம்




- உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட மாபெரும் உந்துதல் ஆனது வழங்கீட்டிற்கும் தேவைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்துள்ளதால் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் யூரியாவை இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்த உள்ளது.
- பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக என்று இந்தியாவில் கடந்த 60-65 ஆண்டுகளாக இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- ❖ நுண்திரவ யூரியா மற்றும் நுண் திரவ டை-அம்மோனியம் பாஸ்பேட் (DAP) போன்ற மாற்று உரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் ஆனது பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.
- ❖ உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்தியாவிற்கு ஆண்டுதோறும் சுமார் 350 லட்சம் டன் யூரியா தேவைப்படுகிறது.
- ❖ 2014-15 ஆம் ஆண்டில் சுமார் 225 லட்சம் டன்னாக இருந்த இந்தியாவின் நிறுவப்பட்ட உள்நாட்டு உற்பத்தி திறன் ஆனது சுமார் 310 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ தற்போது, வருடாந்திர உள்நாட்டு உற்பத்திக்கும் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியானது சுமார் 40 லட்சம் டன்களாக உள்ளது.
- ❖ முந்தைய ஆண்டில் 91.36 லட்சம் டன்னாக இருந்த யூரியா இறக்குமதியானது 2022-23 ஆம் ஆண்டில் 75.8 லட்சம் டன்னாகக் குறைந்துள்ளது.
- ❖ 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி ஆகியவற்றிற்கு இடைப் பட்ட காலக் கட்டத்தில் மொத்தம் 7 கோடி நுண் யூரியா குடுவைகள் (ஒவ்வொன்றும் 500 மில்லி) விற்பனை செய்யப்பட்டுள்ளன.
- ❖ ஒரு குடுவை நுண் யூரியா ஆனது 45 கிலோ அளவிலான வழக்கமான ஒரு பை யூரியாவுக்குச் சமமாகும்.


## மின்சார வாகனப் பயன்பாட்டு ஊக்குவிப்பு திட்டம் 2024




- ❖ இந்திய அரசின் கனரக தொழில்கள் அமைச்சகம் ஆனது, 2024 ஆம் ஆண்டு மின்சார வாகனப் பயன்பாட்டு ஊக்குவிப்புத் திட்டத்தினை (EMPS 2024) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2024 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி வரையிலான 4 மாத காலத்திற்கு 500 கோடி ரூபாய் என்ற மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய ஒரு வரையறுக்கப்பட்ட நிதி வழங்கீட்டுத் திட்டமாகும்.

- இது நாட்டில் பசுமை ஆற்றல் சார்ந்த போக்குவரத்து மற்றும் மின்சார வாகன (EV) உற்பத்திக்கான சூழல் அமைப்பின் மேம்பாட்டிற்கு மேலும் உத்வேகத்தை அளிப்பதற்காக மின்சார இரு சக்கர வாகனம் (e-2W) மற்றும் மூன்று சக்கர வாகனம் (e-3W) ஆகியவற்றை விரைவாக ஏற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹீரோ மோட்டோகார்ப், பஜாஜ் ஆட்டோ, TVS, ஏத்தர் எனர்ஜி, ஓலா எலெக்ட்ரிக் மொபிலிட்டி மற்றும் கைனெடிக் கிரீன் ஆகிய நிறுவனங்கள் EMPS 2024 திட்டத்தின் கீழ் இரு சக்கர வாகனங்களை விற்பனை செய்வதற்கும் மானியம் கோருவதற்கும் ஒப்புதல் பெற்றுள்ளன.

## காட்டுக் கடுகு உற்பத்தி 2024




- இந்தியாவின் காட்டுக்கடுகு மற்றும் கடுகு உற்பத்தியானது கடந்த ஆண்டை விட 7% அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் 12.09 மில்லியன் மெட்ரிக் டன் என்ற சாதனை அளவை எட்டும்.
- அதிகளவிலான காட்டுக்கடுகு உற்பத்தியானது உலகின் மிகப்பெரிய தாவர எண்ணெய் இறக்குமதியாளராக விளங்கும் இந்தியாவிற்கு மலேஷியா, இந்தோனேஷியா, பிரேசில், அர்ஜென்டினா, உக்ரைன் மற்றும் ரஷ்யாவிலிருந்து மேற்கொள்ளப்படும் விலையுயர்ந்த பாமாயில் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பதற்கு உதவும்.
- இந்தியா தனது வருடாந்திரத் தேவையில் 70 சதவீதப் பங்கினை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்கிறது.
- இந்த உற்பத்தி அதிகரிப்பு ஆனது 10 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் மேலும் 5% அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டது.

## USSD அடிப்படையிலான அழைப்பு பகிர்தல்

- இந்தியாவின் தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி முதல் USSD அடிப்படையிலான அழைப்பு பகிர்தல் சேவைகளை செயலிழக்கச் செய்ய உத்தரவிட்டுள்ளது.
- கைபேசி பயனர்கள் தங்கள் தனிப்பட்டத் தரவு மற்றும் நிதிப் பாதுகாப்பை பாதிக்கும்

மோசடி நடவடிக்கைகளுக்கு ஆளாகாமல் பாதுகாப்பதை இந்த நடவடிக்கை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ USSD (கட்டமைக்கப் படாத துணைச் சேவைத் தரவு) என்பது பயனர்கள் தங்கள் விசைப் பலகைகளில் குறிப்பிட்டக் குறியீடுகளை உள்ளீடு செய்வதன் மூலம் பல்வேறு தொலை பேசிச் சேவைகளை அணுக அனுமதிக்கும் ஓர் அம்சமாகும்.

## NICES திட்டம்




❖ பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகளுக்கான தேசிய தகவல் அமைப்பு (NICES) திட்டம் ஆனது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) மற்றும் விண்வெளித் துறை ஆகியவற்றினால் இயக்கப்படுகிறது.

❖ பிரத்தியேக பல்துறை அறிவியல் ஆய்வுகள் மூலம் பருவநிலை மாற்றம் தொடர்பான சவால்களை எதிர் கொள்வதில் கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்களிப்பை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து, NICES ஆனது நிலப்பரப்பு, பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிலைமைகள் தொடர்பான 70க்கும் மேற்பட்ட புவி இயற்பியல் மாறிகளை உருவாக்கி அணுகக் கூடியதாக மாற்றியுள்ளது.

## நட்பு நாடுகளுக்கான வெங்காய ஏற்றுமதி


❖ இந்திய நாடானது, தேசியக் கூட்டுறவு ஏற்றுமதி லிமிடெட் (NCEL) நிறுவனத்தின் மூலம் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு கூடுதலாக 10,000 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்துள்ளது.

❖ வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை மறு அறிவிப்பு வரும் வரை நீட்டிக்குமாறு அறிவித்த அதே வேளையில் அமீரகத்திற்கு 14,400 டன் வெங்காய ஏற்றுமதியை மேற் கொள்ள அரசாங்கம் முன்னதாக அனுமதித்திருந்தது.

❖ இந்தத் தடையானது, முதலில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 08 முதல் 2024 ஆம் ஆண்டு மார்ச்

31 ஆம் தேதி வரை விதிக்கப்பட்டது.

- வெங்காய ஏற்றுமதி தடை செய்யப்பட்டாலும், சில நட்பு நாடுகளுக்கு குறிப்பிட்ட அளவுகளை ஏற்றுமதி செய்யவும் மற்றும் நாடுகளின் கோரிக்கையின் அடிப்படையில் மற்ற நாடுகளுக்கு அரசாங்கம் வழங்கிய அனுமதியின் அடிப்படையில் ஏற்றுமதி செய்யவும் அரசாங்கம் அனுமதிக்கிறது.
- 187.5 மில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதி வங்காளதேசத்திற்கும், 48.12 மில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதியானது இலங்கைக்கும் மேற்கொள்ளப்பட்டதுடன் 431.78 மில்லியன் டாலர் மதிப்பிலான வெங்காயம் ஆனது 2024 ஆம் நிதியாண்டின் ஏப்ரல் - ஜனவரி மாத காலக் கட்டத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டது.





## தேசத்தின் நலன் குறித்த அறிக்கை

- அப்பல்லோ மருத்துவமனைகள் நிறுவனம் ஆனது, "தேசத்தின் நலன்" எனப்படும் அதன் முதன்மையான 4வது வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது, இந்திய நாட்டினை "உலகின் புற்றுநோயின் தலைநகரம்" என்று குறிப்பிட்டுள்ளது.
- மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் உள்ள மக்கள் தங்களது குறைந்த

வயதிலேயே புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

- இந்தியாவில் புற்றுநோய் பாதிப்பு ஏற்படுவதற்கான சராசரி வயது ஆனது கணிசமாக குறைந்துள்ளது.
- இந்தியாவில் பெண்கள் மத்தியில் ஏற்படும் பொதுவான புற்றுநோய் பாதிப்புகள் மார்பகப் புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் கருப்பைப் புற்றுநோய் ஆகியனவாகும்.
- ஆண்கள் மத்தியில், நுரையீரல் புற்றுநோய், வாய் புற்றுநோய் மற்றும் விதைப்பை (புரோஸ்டேட்) புற்றுநோய் ஆகியவை மிகவும் பொதுவான பாதிப்புகளாகும்.
- 2016 ஆம் ஆண்டில் 9 சதவீதமாக இருந்த உடல் பருமன் விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 20 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- இதே காலகட்டத்தில் 9 சதவீதமாக இருந்த உயர் இரத்த அழுத்த பாதிப்புகள் ஆனது 13 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- இந்தியர்களில் மூன்றில் ஒருவர் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையினால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற நிலையில் மூவரில் இருவர் உயர் இரத்த அழுத்தப் பாதிப்பிற்கு முந்தைய நிலையினால் பாதிக்கப் பட்டுள்ளனர் மற்றும் 10 பேரில் ஒருவர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.





## கருங்காய்ச்சல் ஒழிப்பு

- பொதுவாக கருங்காய்ச்சல் (காலா-அசார்) எனப்படும் உள்ளுறுப்பு லீஷ்மேனியாசிஸ் பாதிப்பினை அகற்றுவதற்கான இலக்கை இந்தியா அடைந்துள்ளது.
- தேசிய நோய்க்கடத்தி மூலம் பரவும் நோய்க் கட்டுப்பாட்டு மையம் (NCVBDC) ஆனது இந்தத் தரவுகளை வெளியிட்டுள்ளது.
- NCVBDC மையத்தின் சமீபத்தியத் தரவு ஆனது, இந்தியா முழுவதும் 2023 ஆம் ஆண்டில் 520 கருங்காய்ச்சல் பாதிப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன என்பதைக் குறிக்கிறது.
- இந்திய நாடானது ஆரம்பத்தில் கருங்காய்ச்சல் பாதிப்பினை 2010 ஆம் ஆண்டிற்குள் ஒழிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது, ஆனால் தொடர்ச்சியான பல சவால்கள் காரணமாக இந்த இலக்கு ஆனது 2023 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது நோய் ஒழிப்பு என்பதனை, 10,000 பேருக்கு ஒன்றுக்கு

மேற்பட்ட பாதிப்புகள் ஏற்படவில்லை என்ற அளவிற்கு கட்டுக்குள் வைத்திருப்பது என வரையறுக்கிறது.

- கருங்காய்ச்சல் என்பது மணல் ஈக்கள் கடிப்பதால் பரவும் புரோட்டோசோவா ஒட்டு உண்ணிகளால் ஏற்படும் நோய்க் கடத்தி மூலம் பரவும் நோய் ஆகும்.
- இது குறிப்பாக பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பல தசாப்தங்களாக குறிப்பிடத்தக்க ஒரு சுகாதாரச் சவாலாக இருந்து வருகிறது.





## பருவநிலை மாற்றத்திற்கு எதிரான உரிமை

- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது, முதன்முறையாக, பருவநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களுக்கு எதிரான உரிமையை அங்கீகரித்துள்ளது.
- இந்த உரிமையானது இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்வு உரிமை மற்றும் சமத்துவ உரிமை ஆகியவற்றுடன் ஒன்றிணைந்துள்ளதாக இந்திய உச்ச நீதிமன்றம் கூறுகிறது.
- 21வது பிரிவானது வாழ்வு உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திர உரிமையினை அங்கீகரிக்கிற அதே சமயம் 14வது சட்டப் பிரிவு ஆனது, சட்டத்தின் முன் அனைத்து நபர்களும் சமம் மற்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.
- இந்த அரசியலமைப்பு சட்டப் பிரிவுகள் ஆனது தூய்மையான சுற்றுச் சூழலுக்கான உரிமை மற்றும் பருவநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளுக்கு எதிரான உரிமை ஆகியவற்றின் முக்கிய ஆதாரங்களாக உள்ளன என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியது.
- அரசியலமைப்பின் 48A சட்டப் பிரிவு ஆனது, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும், நாட்டிலுள்ள காடுகள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கவும் அரசு போதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகிறது.
- காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும், உயிரினங்கள் மீது கருணை காட்டுவதும் இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று 51Aவது சட்டப் பிரிவின் உட்பிரிவு (g) கூறுகிறது.

| | |
|---|---|
| MC Mehta vs Kamal Nath 2000 | SC held that any disturbance of the basic environment elements, namely air, water and soil, which are necessary for 'life', would be hazardous to 'life' within the meaning of Article 21 of the Constitution.<br>SC held that Right to life within Art 21 includes the right to live in a healthy environment, right to enjoy pollution-free water and air, and right to live in a pollution-free environment. |
| Virender Gaur vs State of Haryana1995 | It is the imperative duty of the State governments and municipalities to take adequate measures to promote, protect and improve both the man-made and the natural environment. |
| Karnataka Industrial Areas Development Board vs C Kenchappa, 2006 | Supreme Court took note of the adverse effects of rising sea levels and rising global temperatures. |
| Bombay Dyeing & Mfg. Co. Ltd. (3) v. Bombay Environmental Action Group, 2006 | Supreme Court recognised that climate change posed a "major threat" to the environment. |


## இந்தியாவின் இரண்டாவது வெளிநாட்டுத் துறைமுகம்




- இந்திய அரசானது சாபஹாரை அடுத்து, மியான்மரில் உள்ள சிட்வி எனப்படும் தனது இரண்டாவது வெளிநாட்டுத் துறைமுகத்தினை இயக்குவதற்கான உரிமையை பெற்று உள்ளது.

- இந்தியா போர்ட்ஸ் குளோபல் (IPGL) நிறுவனம் ஆனது கலாதான் ஆற்றில் அமைந்துள்ள துறைமுகத்தின் முழு செயல்பாடுகளையும் கையகப்படுத்தும் ஒரு முன்மொழிதலுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் (MEA) ஒப்புதல் அளித்துள்ளது.
- IPGL என்பது ஜவஹர்லால் நேரு துறைமுக அமைப்பு (JNPT) மற்றும் தீன்தயாள் துறைமுக அமைப்பு (முன்னதாக காண்ட்லா துறைமுக அமைப்பு) ஆகியவற்றின் கூட்டு இணைவு ஆகும்.
- சிட்வி துறைமுகமானது கலாதான் பல்நோக்குப் போக்குவரத்து திட்டத்தின் ஒரு பகுதி ஆகும்.
- இத்திட்டமானது கிழக்கு இந்தியத் துறைமுகமான கொல்கத்தாவைக் கடல் வழியாக மியான்மரில் உள்ள சிட்வி துறைமுகத்துடன் இணைப்பதையும், மேலும் சிட்வி துறைமுகத்தை கலாதான் நதி நீர்வழி வழியாக மியான்மரில் உள்ள பலேட்வாவுடன் இணைப்பதையும், மேலும் பலேட்வாவை சாலை வழியாக மிசோரமில் உள்ள சோரின்புய் என்ற பகுதியுடன் இணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.


## வாக்காளர்கள் மத்தியில் வேட்பாளரின் தனியுரிமைக்கான உரிமை




- வாக்காளர்கள் மத்தியில் தேர்தல் வேட்பாளர்களுக்கு தனியுரிமைக்கான உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- எனவே, வாக்காளர்கள் முழுமையாகப் பகுப்பாய்வு செய்வதற்காக வேட்பாளர்கள் அவரது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் கடந்த கால மற்றும் நிகழ்கால உடைமைகள் குறித்த ஒவ்வொரு தகவல்களையும் வெளியிட வேண்டிய அவசியமில்லை.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 123வது பிரிவின் கீழ் வாக்காளர்களுக்கு தெரிய வேண்டிய அவசியம் இல்லாத அல்லது பொது பதவிக்கான வேட்புமனுவிற்குப் பொருத்தமற்ற பல்வேறு விவகாரங்களில் ஒரு வேட்பாளர் தனது தனியுரிமையைத் தக்கவைத்துக்கொள்வது 'ஊழல் நடைமுறை' ஆகாது.

- அவ்வாறு வெளிப்படுத்தாதது 1951 ஆம் ஆண்டு சட்டத்தின் 36(4) வது பிரிவின் கீழ் "கருத்தில் கொள்ளக் கூடிய குறைபாடு" ஆகாது எனவும் கூறியுள்ளது.


## அரிசி கொள்முதலுக்கான மானிய வரம்பு மீறல் மீதான நடவடிக்கை தடுப்பு விதி




- இந்திய அரசானது, 2022-23 ஆம் ஆண்டின் (அக்டோபர்-செப்டம்பர்) சந்தைப்படுத்தல் காலகட்டத்திற்காக ஐந்தாவது முறையாக உலக வர்த்தக அமைப்பில் (WTO) நெல் கொள்முதலுக்கான மானிய வரம்பு மீறல் மீதான நடவடிக்கை தடுப்பு விதியை செயல் படுத்தியுள்ளது.
- இந்தியாவில் நெல் கொள்முதலுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிர்ணயிக்கப் பட்ட மானிய வரம்பு மீறப்பட்டதே இதற்குக் காரணம் ஆகும்.
- 2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் அரிசி உற்பத்தியின் மதிப்பு சுமார் 52.8 பில்லியன் டாலராக இருந்த நிலையில், அந்த ஆண்டில் விவசாயிகளுக்கு 6.39 பில்லியன் டாலர் மதிப்பிலான மானியம் வழங்கப்பட்டது.
- அதாவது அரிசி மீதான மானியம் ஆனது அதன் உற்பத்தி மதிப்பில் 12 சதவீதமாக இருந்தது என்ற நிலையில் இதன் மூலம் 10 சதவீதம் என்ற உள்நாட்டு மானிய வழங்கலுக்கான உச்ச வரம்பு மீறப்பட்டது.


- இருப்பினும், 2013 ஆம் ஆண்டில் WTO அமைப்பின் பாலி அமைச்சர்கள் சபையில் ஒப்புக் கொள்ளப் பட்ட "நெல் கொள்முதலுக்கான மானிய வரம்பு மீறல் மீதான நடவடிக்கை தடுப்பு விதி- சமாதான விதியை" இந்தியா செயல்படுத்தியதால், அந்த மீறலுக்கு உடனடி நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.
- இது வளர்ந்து வரும் நாடுகளில் கோதுமை மற்றும் அரிசி கொள்முதலுக்கான உச்ச வரம்பை மீறுவதால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இருந்து, அத்தகையப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரையில் அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

## 2024 ஆம் நிதியாண்டில் நெடுஞ்சாலைகள்




- சமீபத்தில் நிறைவடைந்த நிதியாண்டில் (FY24) மேற்கொள்ளப்பட்ட நெடுஞ்சாலை கட்டுமானம் ஆனது 12349 கிலோ மீட்டர் அளவினை தொட்டது.
- இது அதன் கட்டுமானத்தில் பதிவான இரண்டாவது சிறந்த செயல்திறன் ஆக கருதப் பட்டாலும், 13814 கிலோமீட்டர் என்ற ‘உயர் இலட்சிய இலக்கை’ விட குறைவாகவே உள்ளது.
- 2022-23 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 2023-24 ஆம் நிதியாண்டில் நெடுஞ்சாலை கட்டுமானம் ஆனது 20% அதிகரித்துள்ளது.
- அந்த அமைச்சகம் ஆனது கடந்த ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட 2,64,525 கோடி ரூபாய் மதிப்பிலான தனது திருத்தப்பட்ட மூலதனச் செலவினத்தில் 99.98 சதவீதப் பங்கினை செலவிட்டுள்ளது.
- இதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் பயன்பாட்டின் அடிப்படையில் இது மீண்டும் சிறந்த பயன்பாட்டுச் செயல்திறன் ஆக உள்ளது என்ற நிலையில் 2022-23 ஆம் ஆண்டில் இது 99.18% ஆக இருந்தது.
- நாட்டில் 50,000 கிலோ மீட்டர் நீள அதிவேக நெடுஞ்சாலைகள் செயல்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே அரசின் திட்டம் ஆகும்.
- தற்போது 4,000 கிலோ மீட்டர் நீளமான விரைவுச் சாலைகள் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளன என்பதோடு 6,000 கிலோ மீட்டர் நீளத்திலான சாலைகளின் கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

## மொத்த கருவுறுதல் விகிதத்தின் நிலை - லான்செட் அறிக்கை




- 2050 ஆம் ஆண்டில், ஐந்து இந்தியர்களில் ஒருவர் முதியோராக இருப்பார், அதே சமயம் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு இளையோர்கள் குறைவாகவே இருப்பார்கள் அன்று அறிக்கை கூறுகிறது.
- 2050 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவில் உள்ள முதியோர்களின் பங்கு 20 சதவீதத்திற்கும் அதிகமாக, அதாவது ஒரு ஐந்து பேரில் ஒருவர் என்ற வீதத்தில் இருக்கும்.
- இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) - ஒரு பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை – மீள முடியாத வகையில் 1.29 ஆகக் குறைந்து வருகிறது என்ற நிலையில் இது 2.1 என்ற ஈடுநிலை கருவுறுதல் விகிதத்தினை விட மிக குறைவு ஆகும்.
- 1950 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பெண்ணுக்கும் சுமார் ஐந்து குழந்தைகள் என்ற வீதத்தில் இருந்த மொத்த கருவுறுதல் விகிதம் ஆனது, கடந்த 70 ஆண்டுகளில் பாதியாகக் குறைந்து 2021 ஆம் ஆண்டில் 2.2 குழந்தைகள் என்ற வீதத்தில் உள்ளது.
- இந்தியாவில், 1950 ஆம் ஆண்டில் 6.18 ஆக இருந்த மொத்த கருவுறுதல் விகிதம் ஆனது 1980 ஆம் ஆண்டில் 4.60 ஆகவும், 2021 ஆம் ஆண்டில் 1.91 ஆகவும் குறைந்தது.
- 2050 ஆம் ஆண்டில், 204 நாடுகளில் 155 நாடுகள் (உலகின் 76 சதவீத நாடுகள்) ஈடுநிலை கருவுறுதல் வீத நிலையை விடக் குறைவாகவே இருக்கும்.

## புலம்பெயர்ந்தோருக்கான சிறப்பு வாக்குச் சாவடிகள்

- தொண்ணூறுகளில் காஷ்மீரில் இருந்து ஜம்மு மற்றும் உதம்பூர் ஆகிய பகுதிகளுக்கு புலம் பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கான ஆவணப் பதிவுகளை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) எளிதாக்கியுள்ளது.

- ❖ இந்தப் புலம்பெயர்ந்த வாக்காளர்கள் முக்கியமாக புலம் பெயர்ந்த காஷ்மீரி பண்டிதர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- ❖ காஷ்மீரில் இருந்து ஜம்மு, உதம்பூர் அல்லது டெல்லியில் உள்ள வாக்குச் சாவடிக்கு தங்கள் வாக்குகளை மாற்றக் கோருவதற்கு அவர்கள் முன்னதாக அதற்கான படிவத்தை நிரப்ப வேண்டியிருந்தது.
- ❖ ஜம்மு மற்றும் உதம்பூருக்கு வெளியே வசிக்கும் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து படிவம்-M உடன் இணைக்கப்பட்ட சுய-சான்றளிக்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ள ப்படும் என்றும் இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.
- ❖ இதற்காக அரசு அதிகாரியின் சான்றளிப்பு நிலை பெற வேண்டியத் தேவையை இது நீக்கியது.
- ❖ இரு பிராந்தியங்களிலும் உள்ள புலம் பெயர்ந்த வாக்காளர்களுக்காக என்று 22 சிறப்பு வாக்குச் சாவடிகளை (ஜம்முவில் 21 மற்றும் உதம்பூரில் 1) அமைக்க இந்தியத் தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.




## 6 மாநிலங்களில் பருத்தி சோதனை ஆய்வகங்கள்

- ❖ கஸ்தூரி பருத்தி என்ற உலகளாவியத் தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக உயர் தர பருத்திகளைப் பரிசோதிப்பதற்காக பிரத்தியேக ஆய்வகங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ மகாராஷ்டிரா, தமிழ்நாடு, ஹரியானா, பஞ்சாப், குஜராத் மற்றும் கர்நாடகா ஆகிய 6 மாநிலங்களில் இந்த ஆய்வகங்கள் நிறுவப்பட உள்ளன.

- மகத்தான மென்மை, வலிமை மற்றும் நீடித்த உழைப்பிற்காகப் பிரபலமாக அறியப் படுகின்ற சுபிமா மற்றும் கிசா போன்ற உலகளாவியப் பருத்தித் தயாரிப்புகளுடன் இந்தியா போட்டியிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜவுளித் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள சோதனை மையங்கள் இந்தியப் பருத்திக் கழகத்தினால் (CCI) செயல்படுத்தப் படுகிறது.





## இந்தியாவின் பாதுகாப்பு உறவுகள் மேலாண்மைத் திறன்

- இந்திய அரசானது, முக்கியப் பிராந்தியங்களுடனான உத்திசார் உறவுகளை மிகவும் விரிவுபடுத்துவதற்கான அதன் மாபெரும் கொள்கை முன்னெடுப்பிற்கு ஏற்ப வேண்டி எத்தியோப்பியா, மொசாம்பிக், ஐவரி கோஸ்ட், பிலிப்பைன்ஸ், ஆர்மீனியா மற்றும் போலந்து உள்ளிட்ட நாடுகளில் தனது பாதுகாப்பு அதிகாரிகளை நியமிக்க உள்ளது.
- பல ஆப்பிரிக்க நாடுகளானவை இந்திய இராணுவத் தளங்கள், உபகரணங்கள் மற்றும் வன்பொருட்கள் ஆகியவற்றினை வாங்குவதில் ஏற்கனவே ஆர்வத்தை வெளிப்படுத்தி உள்ளன.
- எனவே, தூது இணைஞர் இதில் ஒரு இடைநிலை அதிகாரியாகச் செயல்படுவார்.
- ஓர் இராணுவ தூது இணைஞர் அல்லது பாதுகாப்பு தூது இணைஞர் என்பது ஓர் அரசு முறை உறவுகள் மேலாண்மை (பண்ணுறவாண்மை) சார்ந்த பல்வேறு பணிகளுடன், பெரும்பாலும் ஒரு தூதரகத்துடன் தொடர்புடைய ஓர் இராணுவ நிபுணர் அல்லது ஓர் இராணுவ அதிகாரியாவார்.
- வழக்கமாக, உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் இந்தப் பதவியை வகிப்பர் என்ற நிலையில் ஓர் அரசு முறை உறவுகள் மேலாண்மை (பண்ணுறவாண்மை) சார்ந்த பணிகளில் பணியாற்றும் போது அந்த ஆணையத்தின் கட்டுப்பாட்டினைக் கொண்டு இருப்பர்.

- இந்த அதிகாரி, சில சமயங்களில், நியமனம் செய்த அரசு மற்றும் ஒரு அதிகாரி நியமிக்கப் பட்டுள்ள நாடு ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயான ஒரு தகவல் தொடர்பு ஊடகமாகவும் செயல்படுகிறார்.
- கடந்த ஆண்டு, ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது முதன்முறையாக இந்தியாவில் தனது அரசு முறைப் பணிகளுக்காக ஓர் இராணுவ தூது இணைஞரை நியமித்தது.
- இந்தியக் காலாட்படை, இந்தியக் கடற்படை மற்றும் இந்திய விமானப் படையைச் சேர்ந்த மொத்தம் 16 பாதுகாப்புப் படை தூது இணைஞர்கள் விரைவில் தங்கள் பதவிகளை ஏற்க உள்ளனர்.

## வசதியுரிமை குறித்து உச்ச நீதிமன்றம்




- சார்புரிமை ஆவணம் வைத்திருப்பவர் தனது தனிப்பட்ட அறிவில் அவருக்குத் தெரிந்த உண்மைகளைப் பற்றி மட்டுமே வெளியிட முடியும் என்றும் அவருக்குத் தெரியாத உண்மைகளைப் பற்றி அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது.
- 1882 ஆம் ஆண்டு இந்திய வசதியுரிமைச் சட்டத்தின் கீழ் வசதியாக்கல் கருத்தாக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது.
- அதன் படி, ஒரு வசதியுரிமை என்பது தனது சொந்த நிலம் அல்லாது மற்றொரு நிலத்தின் மீது நில உரிமையாளர் அல்லது நில வசிப்பவர் கொண்டுள்ள உரிமை ஆகும் என்பதோடு இது ஒரு நிலத்தை நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்தச் செய்வதற்காக வழங்கப்படுகிறது.
- இந்த உரிமை இல்லாமல் ஓர் ஆக்கிரமிப்பாளர் அல்லது உரிமையாளர் தனது சொந்த சொத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது என்பதால் இந்த உரிமை வழங்கப் படுகிறது.
- தனது சொந்த நிலத்தைப் பயன்படுத்துவதற்காக, தனக்குச் சொந்தமில்லாத வேறு ஒரு நிலம் தொடர்பான அல்லது சம்பந்தமான எந்த நடவடிக்கையையாவது தொடர்ந்து செய்ய அல்லது தடுக்க அல்லது தொடர்ந்து தடுக்கும் உரிமையும் இதில் அடங்கும்.

## CDP-SURAKSHA

- மத்திய அரசானது தொகுப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக புதிய இணைய தளத்தினை அறிமுகம் செய்துள்ளது.
- இந்த இணைய தளம் CDP-SURAKSHA என அறியப்படுகிறது.
- SURAKSHA என்பது "ஒருங்கிணைந்த வள ஒதுக்கீடு, தகவல் மற்றும் பாதுகாப்பான தோட்டக் கலை உதவி ஆகியவற்றிற்கான அமைப்பு" என்பதைக் குறிக்கிறது.
- இந்தியத் தேசியக் கொடுப்பனவு கழகத்தின் (NPCI) e-RUPI பற்றுச் சீட்டினைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் மானியங்களை உடனடியாக வழங்க இந்த தளம் வழி வகுக்கும்.
- CDP என்பது தேசியத் தோட்டக்கலை வாரியம் சார்ந்த மத்திய அரசின் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.
- இதுவரையில் 55 தோட்டக்கலை தொகுப்புகள் (பகுதிகள்) கண்டறியப்பட்டு, அதில் சோதனை முறையில் மானியம் வழங்கப்படுவதற்காக 12 பகுதிகள் தேர்வு செய்யப் பட்டு ள்ளன.
- மேற்கு வங்காளத்தில் ஒரு மலர் வளர்ப்பு தோட்டங்கள், கேரளா மற்றும் தமிழ்நாட்டில் தேங்காய் தோட்டங்கள் மற்றும் குஜராத்தில் வெள்ளை வெங்காயத் தோட்டங்கள் ஆகியவற்றிற்கு அடுத்தடுத்து என்ற நிலையில் மேலும் நான்கு தொகுப்புகளுக்கு இனி மானியங்கள் வழங்கப்பட உள்ளன.

## சாக்சம் செயலி




- நடைபெற்ற மக்களவைத் தேர்தலை மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் அமைவதை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணையம் ஒரு சில ஏற்பாடு செய்துள்ளது.

- தேர்தல் ஆணையத்தினால் உருவாக்கப்பட்ட சாக்சம் செயலியானது, மாற்றுத் திறனாளி வாக்காளர்களின் பதிவு முதல் தேர்தல் நாளில் அவர்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்குவது வரையிலான பல்வேறு சேவைகளை வழங்குகிறது.
- கண் பார்வைக் குறைபாடு உள்ள வாக்காளர்களுக்கு குரல் ஒலிப்பு உதவி மற்றும் செவித் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு ஒலியை உரையாக மாதிரி வழங்கும் சில அம்சங்களையும் இந்த செயலி வழங்குகிறது.

## 'SPACE' இயங்குதளம்

- ஒலியியல் பண்பு மற்றும் மதிப்பீட்டிற்கான அதிநவீன நீர்மூழ்கி தளம் (SPACE) ஆனது சமீபத்தில் திறக்கப்பட்டது.
- SPACE தளமானது, முதன்மையாக உணர்வுக் கருவிகள் மற்றும் ஆற்றல் மாற்றிகள் போன்ற அறிவியல் கட்டமைப்புகளை விரைவாகப் பயன்படுத்தவும் அதனை எளிதாக மீட்டெடுக்கவும் அனுமதிக்கின்ற சோனார் அமைப்புகளை முழுமையாக மதிப்பிடச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும்.
- நவீன அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி காற்று, மேற்பரப்பு, நடுக்கடல் பகுதி மற்றும் நீர்த்தேக்க நிலப்பரப்பு ஆகியவற்றின் அளவுருக்கள் பற்றிய ஆய்வு, மாதிரி மற்றும் தரவுச் சேகரிப்பு ஆகியவற்றிற்கு இந்தத் தளம் பொருத்தமானதாக இருக்கும்.
- இது இரண்டு தனித்துவமான கட்டமைப்புகளைக் கொண்டிருக்கும்:
  - நீர் மேற்பரப்பில் மிதக்கும் ஒரு தளம், மற்றும்
  - இழுவையேற்றி (வின்ச்) அமைப்புகளைப் பயன்படுத்தி 100 மீ வரையிலான எந்த ஆழத்திற்கும் இறக்கக் கூடிய வகையிலான நீர்மூழ்கித் தளம்.

## பிலிப்பைன்ஸுக்கு பிரம்மோஸ் ஏவுகணைகள் வழங்கல்

- இந்திய நாடானது, சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு பிரம்மோஸ் மீயொலி சீர்வேக எறிகணைகளின் முதல் தொகுதியை வழங்கியுள்ளது.
- இந்தியா மற்றும் ரஷ்யா இடையேயான ஒரு கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட எறிகணையினை இந்தியா ஏற்றுமதி செய்யும் முதல் நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.
- பிரம்மோஸ் என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் ரஷ்யாவின் NPO மசினோஸ்ட்ரோயேனியா ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியால் உருவாக்கப் பட்டதாகும்.
- இந்த எறிகணைக்கு, பிரம்மபுத்திரா மற்றும் மாஸ்க்வா ஆகிய நதிகளின் பெயரால் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த எறிகணையானது, மேற்பரப்பு மற்றும் கடல் சார் இலக்குகளுக்கு எதிராக நிலம், கடல், கடல் சார் பகுதிகள் மற்றும் வான்வழி ஆகியவற்றிலிருந்து ஏவக்கூடிய திறன் கொண்டது என்பதோடு இது இந்திய ஆயுதப் படைகளால் வெகு நீண்ட காலமாக பயன்படுத்தப் பட்டு வருகிறது.
- எறிகணை தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு அமைப்பின் விதிகளின் படி எறிகணையின் வரம்பு முதலில் 290 கி.மீ. ஆக நிர்ணயிக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தியா இக்குழுவில் இணைந்ததைத் தொடர்ந்து, இதன் வரம்பு 450 கி.மீ. வரை நீட்டிக்கப்பட்டுள்ளதோடு மேலும் அதை 600 கி.மீ. மற்றும் அதற்கு மேலான தூர வரம்பிற்கு நீட்டிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## நீண்ட ஆயுள் கொண்ட இந்தியா முன்னெடுப்பு

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது, நீண்ட ஆயுள் கொண்ட இந்தியா என்ற ஒரு முன்னெடுப்பினைத் தொடங்க உள்ளதாக அறிவித்தது.
- இது மனிதரின் ஆரோக்கியமான வாழ்நாளினை அதிகரிப்பதையும், முதுமை தொடர்புடைய சவால்களை எதிர்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்மையாக ஆரம்பகால நோய் குறிகாட்டிகளைக் கண்டறிதல், வயது முதிர்வின் உயிரி குறிகாட்டிகள் குறித்து ஆராய்தல் மற்றும் ஆரோக்கியமான வயது முதிர்விற்கு உதவுவதற்காக புதிய சிகிச்சை முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## ஷோம்பென் பழங்குடியினர் வாக்குப்பதிவு




- அந்தமான் நிக்கோபார் மக்களவைத் தொகுதியில் முதன்முறையாக ஷோம்பென் பழங்குடியினைச் சேர்ந்த 7 பேர் வாக்களித்து தேர்தலில் பங்கு கொண்டனர்.
- எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்களில் (PVTG) ஒன்றான ஷோம்பென் பழங்குடியினர் நாட்டிலுள்ள கிரேட் நிக்கோபார் தீவின் அடர்ந்த வெப்ப மண்டல மழைக்காடுகளில் வசிக்கின்றனர்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி ஷோம்பென் இனத்தவரின் மதிப்பிடப் பட்ட மக்கள்தொகை 229 ஆகும்.
- தற்போது கிடைக்கப் பெற்ற தற்காலிக புள்ளிவிவரங்களின்படி, 63.99% வாக்குகள் பதிவாகியுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் 65.09% வாக்குகள் பதிவாகியிருந்தன.


## திரவ நைட்ரஜன் நுகர்வு

- உணவுப் பாதுகாப்புத் துறையானது, திரவ நைட்ரஜனை எந்த வடிவில் உட்கொண்டாலும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

- ஒரு சிறுவன் திரவ நைட்ரஜனை உட்கொள்ளும் ஒளிப்படக் காட்சி சமூக ஊடகங்களில் வெளி வந்ததையடுத்து இந்த அறிவுரை வெளியிடப் பட்டது.
- உலர் பனிக்கட்டி மற்றும் திரவ நைட்ரஜன் இரண்டும் தீங்கு விளைவிக்கக்கூடியவை.
- உலர் பனிக்கட்டியின் வெப்பநிலை -78.5 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும்.
- ஆனால் திரவ நைட்ரஜனின் வெப்பநிலை -196 டிகிரி செல்சியஸ் வரை குறையும்.
- மேற்கூறிய இரண்டு பொருட்களும் அறை வெப்பநிலையில் தடிமனான வெண்மை நிற நீராவிகளை உருவாக்குகின்றன என்பதோடு மேலும் அவை பெரும்பாலும் உணவு தயாரித்தல் மற்றும் பதப்படுத்துதலில் ஒரு உறைதல் காரணியாகப் பயன்படுத்தப் படுகின்றன.


## எத்திலீன் ஆக்சைடு கலப்பு

- MDH மற்றும் எவரெஸ்ட் ஆகிய இந்தியத் தயாரிப்பு நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் சில மசாலாப் பொருட்களுக்கு சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் தடை விதித்துள்ளன.
- இந்த இரு நிறுவனங்களால் ஏற்றுமதி செய்யப்படும் சில மசாலாப் பொருட்களில் எத்திலீன் ஆக்சைடு (ETO) இருப்பதாக அந்நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.
- சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங் நாடுகளுக்கான மசாலா ஏற்றுமதியில் ETO கலப்படம் இருப்பது குறித்து ஆய்வு செய்வதற்கான கட்டாய சோதனையை அரசு மேற்கொள்ளும் என்று இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.
- ETO என்பது புற்றுநோயினை ஏற்படுத்தக் கூடிய ஒரு பூச்சிக்கொல்லி என வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- எத்திலீன் ஆக்சைடு என்பது $C_2H_4O$ வேதியியல் சூத்திரம் கொண்ட ஒரு இரசாயன கலவை ஆகும்.
- இது அறை வெப்பநிலையில் ஒரு மணமிக்க வாசனையுடன் எளிதில் தீப்பற்றக் கூடிய நிறமற்ற வாயுவாகும்.
- டிஎன்ஏ மூலக்கூறினைச் சேதப்படுத்தும் திறன் கொண்டதால் இது ஒரு பயனுள்ளத் தொற்று நீக்க காரணியாக உள்ளது.
- லிம்போமா, லுகேமியா மற்றும் மார்பக புற்றுநோய் ஆகியவை எத்திலீன் ஆக்சைடின் வெளிப்பாட்டிற்கு உட்படுவதால் ஏற்படும் புற்றுநோய் வகைகள் ஆகும்.



## உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான NOTTO அடையாள எண்

- மத்திய சுகாதார அமைச்சகம் ஆனது, குறிப்பாக வெளிநாட்டுக் குடிமக்கள் சம்பந்தப் பட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் வணிக ரீதியானப் பரிவர்த்தனைகளை அகற்றுவதற்கான உத்தரவினை வெளியிட்டுள்ளது.
- உறுப்பு தானம் செய்யும் உயிருள்ள நபர் அல்லது இறந்த நபர் என யாராக இருந்தாலும் அவர்களுக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான அனைத்து நிகழ்வுகளுக்கும், உறுப்பு வழங்குபவர் மற்றும் பெறுநர் ஆகிய இருவருக்கும் ஒரு தனித்துவமான தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பின் (NOTTO) அடையாள எண் ஒதுக்கப்படும்.
- இது மருத்துவமனையினால் NOTTO இணையதளத்திலிருந்து (www.notto.mohfw.gov.in) உருவாக்கப் பட வேண்டும்.
- இறந்த நபரிடமிருந்து மேற்கொள்ளப்படும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் போது உறுப்புகளை ஒதுக்குவதைக் கருத்தில் கொள்ள NOTTO-ID கட்டாயமாகும்.
- உயிருள்ள நபர்களில் மேற்கொள்ளப்படும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் போது இந்த அடையாள எண் ஆனது, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை முடிந்த பிறகு கூடிய விரைவில் 48 மணி நேரத்திற்குள் உருவாக்கப்படும்.




## கிரிம்சன் பாராகுடா

- இந்தியக் கடற்படைப் போர்க்கப்பலான ஐஎன்எஸ் தல்வார் ஒரு சந்தேகத்திற்கிடமான கப்பலை இடைமறித்து அதில் இருந்து 940 கிலோ போதைப் பொருட்களைக் கைப்பற்றி உள்ளது.
- அந்தக் கப்பலின் சிறப்புக் குழுக்கள் மற்றும் MARCOs (கடல்சார் அதிரடிப் படை) மூலம் துல்லியமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- பஹ்ரைன் நாட்டின் ஒருங்கிணைந்த பணிக் குழுவினால் மேற்கொள்ளப்படும் கிரிம்சன் பாராகுடா நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியக் கடற்படைக் கப்பல் பயன்படுத்தப் பட்டது.

## குழந்தைப் பராமரிப்பிற்கான விடுப்பு





- 180 நாட்கள் அளவிலான கட்டாய மகப்பேறு விடுப்புடன் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் குழந்தைப் பராமரிப்பிற்கான விடுப்பு வழங்கச் செய்வது என்பது பெண் ஊழியர்களுக்கான ஒரு அரசியலமைப்பு உரிமை என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தி உள்ளது.
- பெண்கள் தங்கள் பணியில் சேரவும் அந்தப் பணியை தக்க வைக்கச் செய்வதற்கும் அரசு மற்றும் நிறுவனத்தின் முதலாளிகளுக்கு பொறுப்புகள் உள்ளன என்பதை இந்தத் தீர்ப்பு தெளிவுபடுத்துகிறது.
- 2019 ஆம் ஆண்டு இந்திய நேரப் பயன்பாட்டுக் கணக்கெடுப்பின் படி, ஊதியமில்லாத வீட்டு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக பெண்கள் செலவிடும் 433 நிமிடங்களுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் உள்ள ஆண்கள் வெறும் 173 நிமிடங்களைச் செலவு செய்கின்றனர்.

## ISHAN திட்டம்


- இந்திய விமான நிலைய ஆணையம் ஆனது நாக்பூரில் (இஷான்) (ஒரே நாடு, ஒரே வான்வெளி) ஓர் இந்திய ஒத்திசைக்கப்பட்ட ஒற்றை வான்வெளி விமானப் போக்குவரத்து மேலாண்மைக்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்காக தனது ஈடுபாட்டு அறிக்கையினை ((EoI) சமர்ப்பிக்குமாறு அறிக்கை வெளியிட்டுள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பானது செயல்பாடுகளை நெறிமுறைப்படுத்தவும், செயல்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், நெரிசலைக் குறைக்கவும், விமான நிறுவனங்களுக்கும் பயணிகளுக்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- தற்போது, இந்திய வான்வெளியானது நான்கு விமானத் தகவல் பகுதிகளாக பிரிக்கப் பட்டுள்ளது மற்றும் ஒவ்வொன்றும் தனித்தனியாக நிர்வகிக்கப்படுகின்ற சார் நிலை விமானத் தகவல் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- நாக்பூரில் உள்ள ஒரே ஆணையத்தின் கீழ் இந்த விமானத் தகவல் பகுதிகளை ஒருங்கிணைப்பது விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளில் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் தடையின்மை ஆகியவற்றை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- 2030 ஆம் ஆண்டில் உள்நாட்டு பயணிகள் போக்குவரத்து இரட்டிப்பாகும் என எதிர்பார்க்கப் படுவதுடன், விமானப் போக்குவரத்துத் தொழில் துறை வளர்ச்சியில் உள்ள குறிப்பிடத்தக்க எழுச்சிக்கு மத்தியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு உள்ளது.





## இந்தியாவின் தூய்மையான ஆற்றல் பரிமாற்றம்

- கர்நாடகா மற்றும் குஜராத் ஆகியவை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக புதுப்பிக்கத் தக்க எரிசக்திக்கு திறம்பட மாறுவதன் மூலம் ஆற்றல் மாற்றத்திற்கான வழிமுறையை காட்டியுள்ளன.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள், முக்கியமாக சூரியசக்தி மற்றும் காற்று ஆற்றல் ஆகியவை, கர்நாடகாவின் மொத்த எரிசக்தி நுகர்வில் 37 சதவீதத்தைப் பூர்த்தி செய்கின்றன என்ற நிலையில் இது அனைத்து மாநிலங்களின் மத்தியல் பதிவான அதிக சதவீதப் பங்குகளில் ஒன்றாகும்.
- இருப்பினும், நீர்மின்னாற்றலைச் சார்ந்திருக்கும் உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவற்றினை போல அதன் பங்கு இன்னும் அதிகளவில் இல்லை.
- 2020 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் மொத்தப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில் 24 சதவீத ஆற்றலை குஜராத் உற்பத்தி செய்துள்ளது.
- மாநிலத்தின் மொத்த ஆற்றல் நுகர்வில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நுகர்வின் பங்கு ஆனது 17 சதவீதம் மட்டுமே ஆகும்.
- ஒடிசா, டெல்லி மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் ஆற்றல் உற்பத்தி சூழல் அமைப்பு மற்றும் சந்தையைச் செயல்படுத்துவதற்கான தயார்நிலை போன்ற அளவுருக்களில் சிறப்பான செயல்திறனைக் கொண்டுள்ளன.




## **இண்டஸ் இன்ட் வங்கியின் CBDC**




- இண்டஸ் இன்ட் வங்கியானது, இந்திய ரிசர்வ் வங்கியின் நிரல்படுத்தக்கூடிய மத்திய வங்கி எண்ணிம நாணயத்தினை (CBDC) ஒரு சோதனைமுறை அடிப்படையிலான பயன்முறையாக வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.
- இது வங்கியானது நிதியின் இறுதிப் பயன்பாட்டைக் குறிப்பாக கார்பன் மதிப்பீட்டுக் கடன் உருவாக்கத்திற்காக விவசாயிகளை இலக்காகக் கொண்டப் பயன்பாட்டினை நிரலாக்கக்கூடிய CBDC நாணயத்தின் மாற்று வடிவத்தை உள்ளடக்கியது.

- மகாராஷ்டிராவின் இரத்னகிரி மாவட்டத்தில் 50 விவசாயிகளுக்கு நிரல்படுத்தக் கூடிய CBDC வழங்கும் திட்டத்தினை அந்த வங்கி தொடங்கியுள்ளதோடு, இது மேலும் 1,000 விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது.
- வேளாண் துறைக்கான புதுமையான நிதித் தீர்வுகளை ஏற்றுக் கொள்வதில் இது ஒரு மைல் கல்லைக் குறிக்கிறது.

## கிரேட் நிக்கோபார் தீவு மேம்பாட்டுத் திட்டம்




- 'கிரேட் நிக்கோபார் தீவின் முழுமையான மேம்பாடு' என்ற தலைப்பிலான மாபெரும் உள்கட்டமைப்பு திட்டம் ஆனது, நிதி ஆயோக் அமைப்பினால் தயாரிக்கப்பட்டு, போர்ட் பிளேயரில் அமைந்துள்ள அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக் கழகத்தினால் (ANIIDCO) செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இது ஒரு கப்பல் போக்குவரத்து துறைமுகம், ஒரு சர்வதேச விமான நிலையம், ஒரு நகரக் கட்டமைப்பு மற்றும் ஒரு மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றினைக் கொண்ட உள்கட்டமைப்பின் கட்டுமானச் செயல்முறையினை உள்ளடக்கியது.
- இத்திட்டம் அரசியலமைப்பு விதிகளை மீறுவதாகவும், பழங்குடியினரின் கருத்துகளை புறக்கணிப்பதாகவும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால் இந்தத் திட்டத்திற்கு அனுமதி பெறுவதில் சிக்கல் எழுந்துள்ளது.
- இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டப் பாதிக்கும் மேலான பகுதியானது பழங்குடியினர் வாழ்கின்ற பகுதியில் அமைந்துள்ளது.
- கிரேட் நிக்கோபார் தீவில் உள்ள ஷோம்பென் மற்றும் நிக்கோபரீஸ் உள்ளிட்ட தீவுகளில் ஆறு பழங்குடியினர் வசிக்கின்றனர்.
- சுமார் 200-300 மக்கள் தொகையினை கொண்ட ஷோம்பென் இனத்தினர் ஒரு வேட்டையாடி வாழும் சமூகத்தினர் ஆவர்.
- நிக்கோபாரீஸ் என்பது நிக்கோபார் தீவுகள் முழுவதும் பரவி வாழ்கின்ற சுமார் 27,000 மக்கள்தொகை கொண்ட ஒரு பெரிய பழங்குடியினர் குழுவாகும்.
- கிரேட் நிக்கோபார் தீவில் 751.01 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பழங்குடியினர் வாழ்விடம் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## தன்பாலினத் திருமணத்தினைச் சட்டப்பூர்வமாக்குதல் - தாய்லாந்து

- தாய்லாந்து நாடாளுமன்றாமனது, திருமணச் சமத்துவ மசோதாவிற்கு முழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது ஒரு சட்டமாகி, 120 நாட்களுக்குப் பிறகு அது நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக அதற்கு அதன் மேலவையின் ஒப்புதலும், அந்த நாட்டு அரசரின் ஒப்புதலும் அவசியமாகும்.
- தன்பாலீர்ப்புப் பெண், தன்பாலீர்ப்பு ஆண், இருபாலீர்ப்பாளர் மற்றும் திருநர் ஆகிய விவகாரங்களில் மிகவும் தாராளவாதமான ஆசிய நாடுகளுள் தாய்லாந்து நாடும் ஒன்றாகும்.
- 2019 ஆம் ஆண்டில், தைவானின் பாராளுமன்றம் ஆனது தன்பாலின திருமணத்தைச் சட்டப்பூர்வமாக்கிய ஆசியாவின் முதல் நாடாக மாறியது.




## உலகின் மூன்றாவது பெரிய மசூதி



- அல்ஜீரியா நாட்டில் உலகின் மூன்றாவது பெரிய மற்றும் ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய மசூதி திறக்கப்பட்டுள்ளது.
- அந்நாட்டில் ஜமா எல்- ஜாசீர் என அறியப்படும் இந்த மசூதியானது 120,000 பேர் ஒரே நேரத்தில் இறை தொழுதலை மேற்கொள்ளக் கூடிய அளவிலானது மற்றும் 265 மீட்டர் (869 அடி) உயரம் கொண்ட உலகின் மிக உயரமான ஸ்தூபியினைக் கொண்டுள்ளது.
- சவுதி அரேபியாவில் அமைந்துள்ள மெக்கா மற்றும் மதீனாவில் உள்ள இஸ்லாமியத்தின் புனிதத் தலங்களுக்கு அடுத்தபடியாக உலகின் மிகப்பெரிய மசூதி இதுவேயாகும்.

## கழுதையின் தோல் வர்த்தகத்திற்குத் தடை




- ஆப்பிரிக்க ஒன்றிய ஆணையமானது (AUC), வணிக ரீதியானப் பயன்பாட்டிற்காக கழுதைகள் அவற்றின் தோலுக்காக கொல்லப்படுவதற்கு விதிக்கப்பட்ட 15 ஆண்டு காலத் தடைக்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தினை நிறைவேற்றியுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற முதல் AU-IBAR வாரியத்தின் முழு ஆப்பிரிக்க அளவிலான கழுதை தொடர்பான மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட டார் எஸ் சலாம் பிரகடனத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கை ஆகும்.
- எஜியாவோ எனப்படும் ஒரு பாரம்பரிய சீன மருந்தினைத் தயாரிப்பதற்காக கழுதை தோல் பயன்படுத்தப்படுகிறது.
- 2016 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஐந்து ஆண்டு காலங்களில், எஜியாவோ மருந்தின் உற்பத்தி 160 சதவீதம் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டு உள்ளது.
- சமீபத்தில் சீனாவில் நிலவும் இந்த மருந்திற்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எஜியாவோ தொழிற்துறைக்கு ஆண்டுதோறும் குறைந்தபட்சம் சுமார் 5.9 மில்லியன் கழுதைத் தோல் தேவைப்படுகிறது.
- உலகம் முழுவதும் உள்ள 53 மில்லியன் கழுதைகளில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையிலான கழுதைகள் ஆப்பிரிக்கக் கண்டத்தில் காணப்படுகின்றன.

## புகையிலை எதிர்ப்புச் சட்டம் ரத்து - நியூசிலாந்து

- ❖ எதிர்காலச் சந்ததியினருக்கு புகையிலை விற்பனை செய்வது மீது தடை விதிக்கும் உலகின் முதல் சட்டத்தை நியூசிலாந்து அரசு ரத்து செய்துள்ளது.
- ❖ முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டனின் ஆட்சியில் புகைபிடித்தல் தடைச் சட்டம் நிறைவேற்றப் பட்டது.
- ❖ இந்தத் தடை உத்தரவானது ஜூலை மாதம் முதல் அமலுக்கு வர உள்ளது.
- ❖ இந்தத் தடை உத்தரவானது 2009 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதிக்கு பிறகு பிறந்த நபர்களுக்கு புகையிலை விற்பனையினைத் தடை செய்கிறது.
- ❖ மேலும், இதன் கீழ் புகைபிடிப்பதற்கான புகையிலைப் பொருட்களில் உள்ள நிகோடின் உள்ளடக்கத்தை நன்கு குறைப்பதோடு, நாட்டில் புகையிலை விற்பனையாளர்களின் எண்ணிக்கையை 90 சதவீதத்திற்கும் மேல் குறைத்துள்ளது.
- ❖ 2004 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி அன்று முதல் பணியிடங்களில் அனைத்து வகையான புகைபிடித்தல் செயல்பாடுகளையும் முடிவிற்கு கொண்டு வந்த உலகின் முதல் நாடாக அயர்லாந்து மாறியது.
- ❖ 2023 ஆம் ஆண்டு மெக்சிகோ கடுமையானப் புகையிலை எதிர்ப்புச் சட்டங்களில் ஒன்றை அறிவித்தது.





## எரிசக்தி சாசன ஒப்பந்தத்தில் இருந்து விலகல்

- ❖ எரிசக்தி சாசன ஒப்பந்தத்தில் (ECT) இருந்து விலகுவதாக ஐக்கியப் பேரரசு (UK) நாட்டின் அரசாங்கம் அறிவித்துள்ளது.
- ❖ ECT என்பது எரிசக்தித் துறையில் சர்வதேச முதலீட்டை மேம்படுத்த முயல்கின்ற ஒரு பலதரப்பு ஒப்பந்தமாகும்.
- ❖ எரிசக்தித் துறையில் தனது விதிமுறைகளை மீறும் மாகாண அரசின் பல்வேறு நடவடிக்கைகளிலிருந்து பல முதலீட்டாளர்களின் முதலீடுகள் மீதான பாதுகாப்பை வழங்குகிறது.

- 50க்கும் மேற்பட்ட மாகாணங்கள் இந்த ECT ஒப்பந்தத்தின் ஒப்பந்த உறுப்பினர்களாக உள்ளன.
- சமீபத்திய ஆண்டுகளில் ECT ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கான தனது விருப்பத்தை அறிவித்த 11வது ஒப்பந்த உறுப்பினராக ஐக்கியப் பேரரசு மாறியுள்ளது.
- ECT ஒப்பந்தத்திலிருந்து விலகுவது தொடர்பான பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் போலந்து ஆகிய நாடுகளின் இந்த அறிவிப்பானது 2023 ஆம் ஆண்டின் இறுதியில் நடைமுறைக்கு வந்தது.

## சர்வதேச ஒளி மாசு வழிகாட்டுதல்கள்


- புலம்பெயர்ந்த உயிரினங்கள் மற்றும் காட்டு விலங்குகளின் வளங்காப்பு மீதான மாநாட்டு அமைப்பானது (CMS) புலம்பெயர்ந்த இனங்களுக்கான சர்வதேச ஒளி மாசு வழிகாட்டுதல்களைத் தயாரித்துள்ளது.
- இயற்கையான இருளானது சுத்தமான நீர், காற்று மற்றும் மண்ணுக்குச் சமமான வளங் காப்பு மதிப்பைக் கொண்டுள்ளது என்று CMS அமைப்பின் 14வது பங்குதாரகள் மாநாடு (COP14) குறிப்பிட்டுள்ளது.
- 1992 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், செயற்கை ஒளி உமிழ்வானது 49 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- இது வனவிலங்குகளின் நடத்தை மற்றும் உளவியல் மாற்றங்கள் உள்ளிட்ட மிகவும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும்.
- பறவைகள் தவிர, பாலூட்டிகள், ஊர்வன மற்றும் மீன் போன்ற பிற உயிரினங்களும் செயற்கை ஒளி உமிழ்வினால் பாதிக்கப்படக் கூடும்.




## ஷெங்கன் பகுதியில் புதிய சேர்க்கை

- பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகள் ஆனது தடையற்ற பயணத்திற்கான (போக்குவரத்திற்கான) ஐரோப்பாவின் ஷெங்கன் பகுதியில் பகுதியளவு அங்கத்தினராக இணைந்துள்ளன.


- பகுதியளவு உறுப்பினர் அந்தஸ்து பெற்றுள்ள போதும், இந்த இரு நாடுகளின் வான்வழி மற்றும் கடல் வழி எல்லைகள் மீதான கட்டுப்பாடுகளை அந்நாடுகள் நீக்கியுள்ளன.
- 1985 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஷெங்கன் பகுதியானது, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 400 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டு எல்லைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் சுதந்திரமாகப் பயணிக்க அனுமதிக்கிறது.
- இந்த இரு நாடுகள் பகுதியளவு உறுப்பினர்களாக இணைந்ததையடுத்து, ஷெங்கன் மண்டலம் ஆனது 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளில் சுமார் 25 மற்றும் சுவிட்சர்லாந்து, நார்வே, ஐஸ்லாந்து மற்றும் லிச்சென்ஸ்டைன் உள்ளிட்ட சில நாடுகள் ஆகியவை உட்பட தற்போது 29 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.




## மனிதர்களில் அரிதான வகையில் புபோனிக் பிளேக் நோய் பாதிப்பு

- மிகவும் அரிதான வகையில் மனிதர்களில் புபோனிக் பிளேக் நோய் பாதிப்பு ஆனது அமெரிக்காவின் ஒரேகான் மாகாணத்தில் பதிவாகியுள்ளது.
- செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் பூனைகள் மூலம் இந்தத் தொற்று பரவியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- புபோனிக் பிளேக், 14 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட "கருப்பு மரணம்" என்று அழைக்கப் படும் ஒரு பெருந்தொற்றின் போது ஐரோப்பாவின் மக்கள்தொகையில் குறைந்தது மூன்றில் ஒரு பகுதி மக்களின் உயிரைப் பலி வாங்கியது.
- அபாயகரமானதாக இருந்தாலும் குணப்படுத்தக் கூடியதாக உள்ள இந்த நோய் ஆனது, வளர்ச்சியடைந்த நாடுகளில் மிகவும் அரிதானதாகவே உள்ளது.
- புபோனிக் பிளேக் என்பது யெர்சினியா பெஸ்டிஸ் பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும்.
- பாக்டீரியாவால் பாதிக்கப்பட்ட தெள்ளுப்பூச்சிகள் அல்லது உண்ணிகள் மூலம் இந்த நோய் பரவுகிறது.


## தைவானில் மாபெரும் நிலநடுக்கம்




- ❖ தைவான் நாட்டில் குறைந்தது 25 ஆண்டுகளில் பதிவாகாத மாபெரும் நிலநடுக்கம் (7.2) சமீபத்தில் ஏற்பட்டது.
- ❖ முக்கியமாக தைவான் நாடானது பசிபிக் பெருங்கடலின் "எரிமலை/நெருப்பு வளைய" பகுதியில் அமைந்திருப்பதால் அடிக்கடி நிலநடுக்கங்களுக்கு உள்ளாகிறது என்ற ஒரு நிலையில் இங்கு உலகின் 90% நிலநடுக்கங்கள் நிகழ்கின்றன.
- ❖ இந்தத் தீவுகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் 1980 ஆம் ஆண்டு முதல் 4.0 அல்லது அதற்கும் அதிகமான ரிக்டர் அளவில் 2,000 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன என்பதோடு மேலும் 100க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் 5.5 ரிக்டர் அளவிற்கு மேல் இங்கு பதிவாகியுள்ளன.
- ❖ எரிமலை வளையம் என்பது பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான எரிமலைகள் மற்றும் நிலநடுக்கத் தளங்களின் தொடர் ஆகும்.
- ❖ ஒரு அரை வட்டம் அல்லது குதிரையின் லாடம் போன்ற வடிவத்தில் உள்ள இது கிட்டத் தட்ட 40,250 கிலோமீட்டர்கள் நீண்டுள்ளது.
- ❖ எரிமலை வளையம் பல கண்டத்தட்டுகளின் சந்திப்புப் புள்ளிகளைக் கொண்டுள்ளது.

## CoViNet – உலக சுகாதார அமைப்பு (WHO)

- ❖ உலக சுகாதார அமைப்பானது குறுகிய காலத்தில் பெருகக் கூடிய புதிய கொரோனா வைரஸ்களைக் கண்டறிந்து அதனைக் கண்காணிப்பதற்காக CoViNet (கோவிநெட்) எனப்படும் உலகளாவிய ஆய்வக வலையமைப்பினைத் தொடங்கியுள்ளது.
- ❖ பொது சுகாதார முக்கியத்துவம் வாய்ந்த மத்திய கிழக்கு சுவாச நோய்க்குறி (MERS-CoV) மற்றும் புதிய கொரோனா வைரஸ் ஆகியவற்றினைக் கண்காணிப்பதற்காக மேலும் பல ஆய்வகங்களை உருவாக்குவதற்கு இந்த வலையமைப்பு துணை புரிகிறது.
- ❖ கோவிநெட் (CoViNet) ஆனது மூன்று இந்திய ஆய்வகங்கள் உட்பட உலக சுகாதார அமைப்பின் 6 பிராந்தியங்களில் உள்ள 21 நாடுகளைச் சேர்ந்த 36 ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.




## துல்லிய காலத் தரவு மாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு நெறிமுறைக் கூட்டுறவு

- துல்லிய காலத் தரவு மாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு நெறிமுறை நுட்பத்தினைத் தொழில் துறையில் ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக துல்லிய காலத் தரவு மாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு நெறிமுறைக் கூட்டுறவினை (WRC) ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பு (CERN) அறிமுகப்படுத்தியுள்ளது.
- துல்லிய காலத் தரவு மாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு நெறிமுறைக் கூட்டுறவானது (WRC) பிரத்தியேக ஆதரவு, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) ஆகிய திட்டங்களை வழங்குகிறது.
- WRC தொழில்நுட்பமானது, லார்ஜ் ஹாட்ரான் கொலைடரில் (Large Hadron Collider - LHC) உள்ள முடுக்கத் தொடர்களின் நானோ விநாடிக்கும் குறைவான துல்லியத்தன்மை மற்றும் பிக்கோசெகண்ட் அளவிலான துல்லியமான ஒத்திசைவு ஆகியவற்றை வழங்குகிறது.

## பொழுதுபோக்கு ரீதியிலான கஞ்சா பயன்பாடு சட்டப்பூர்வமாக்கல் – ஜெர்மனி




- கடந்த பத்து ஆண்டுகளில் 12 முதல் 17 வயது வரை உள்ளவர்கள் மற்றும் 18 முதல் 25 வயது வரை உள்ளவர்களின் போதைப் பொருள் (கஞ்சா) நுகர்வு இரட்டிப்பாகியுள்ளது.
- எனவே, ஜெர்மன் நாட்டுப் பாராளுமன்றமானது கஞ்சா பயன்பாட்டினைப் பல்வேறு கட்டுப்பாடுகளுடன் சேர்த்து பகுதியளவுச் சட்டப்பூர்வமாக்குவதற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- இளம் பருவத்தினர் பொது வெளியில் இருக்கும் போது 25 கிராம் வரையும், வீட்டில் 50 கிராம் வரையும் வைத்துக் கொள்ள இச்சட்டம் அனுமதிக்கிறது.
- ஒரு நபர் மூன்று கஞ்சா (மரிஜுவானா) செடிகளை வீட்டில் வளர்க்கலாம்.
- ஆனால் வீட்டில் விளையும் கஞ்சா பொருட்களை வேறு ஒருவருக்கு விற்க முடியாது.

## யுனைட் அவேர் தரவுத் தளம்

- அமைதிப் படையினருக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக் கூறலை ஊக்குவிக்கும் முயற்சியில், 40 உறுப்பினர் நாடுகளை உள்ளடக்கிய இந்தியா தலைமையிலான தோழமைக் குழு (GOF) தனது இரண்டாவது கூட்டத்தை நடத்தியது.
- இந்தக் கூட்டத்தில், அமைதிப் படையினருக்கு எதிரான குற்றங்களைப் பதிவு செய்யவும் குற்றவாளிகளைப் பொறுப்புக் கூற வைப்பதில் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய தரவுத் தளத்தை (யுனைட் அவேர் பிளாட்பார்ம்) இந்தியா அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஓர் இயங்கலை களஞ்சியமாக செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த தரவுத்தளம் ஆனது, அமைதிப் படைக்கு எதிரான தீங்கிழைக்கும் செயல்களின் வழக்குகளைக் கண்காணித்துத் தீர்வு காண்பதற்காக செயலகம் மற்றும் உறுப்பினர் நாடுகளுக்கு அதிகாரம் அளிக்கிறது.

## புலம்பெயர்ந்தோர் உயிரிழப்புகளை ஆவணப்படுத்துதல்

- கடந்த பத்தாண்டுகளில் (2014 ஆம் ஆண்டு முதல்) உலகெங்கிலும் புலம்பெயர் பாதைகளில் 63,000 க்கும் அதிகமானோர் இறந்தனர் அல்லது காணாமல் போயினர்.
- இதன்படி குறைந்தது 63,285 பேர் இறந்துள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர் மற்றும் இறந்ததாகக் கருதப்பட்டனர்.
- 2023 ஆம் ஆண்டில் 8,500 க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளனர்.
- பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 36,000 என்ற அளவைத் தாண்டியதுடன் ஆவணப்படுத்தப்பட்ட உயிரிழப்புகளில் சுமார் 60 சதவிகிதம் ஆனது நீரில் மூழ்கி இறந்த நிகழ்வுகளுடன் தொடர்புடையது.
- கடலில் நிகழ்ந்த உயிரிழப்புகளில் 27,000க்கும் மேற்பட்டவை மத்தியத் தரைக் கடலில் நிகழ்ந்தன.
- மத்தியத் தரைக் கடலின் மத்தியப் பகுதியில் நிகழ்ந்த பெரும்பாலான உயிரிழப்புகள் லிபியாவின் கடற்கரையில் பதிவாகியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் துனிசியக் கடற்கரையில் குறைந்தது 729 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற நிலையில் இது முந்தைய ஆண்டில் 462 ஆக இருந்தது.




## வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் 75வது ஆண்டு விழா




- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு ஆனது ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா முழுவதுமான 75 ஆண்டு கால கூட்டுப் பாதுகாப்பினைக் கொண்டாடுகிறது.

- வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) ஆனது சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான கூட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 1949 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- நேட்டோவின் முதன்மை மற்றும் இராணுவ தலைமையகம் ஆனது பெல்ஜியத்தின் புருஸ்ஸல்ஸ் நகரில் அமைந்துள்ளது.
- சமீபத்தில், சுவீடன் நாடானது இந்த அமைப்பின் 32வது உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## மைக்கேலேஞ்சலோவின் தாவீது சிற்பத்தின் மாண்பு


- 1504 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட கலைஞர் மைக்கேலேஞ்சலோவின் தாவீது சிற்பமானது இத்தாலிய மறுமலர்ச்சிக் கலையின் மிகவும் வெகு பிரபலமான அடையாளங்களில் ஒன்றாகும்.
- கோலியாத்தை எதிர்த்துப் போரிட்டு தோற்கடித்த இளம் ஆநிறை மேய்ப்பரான தாவீது என்ற வேதாகமப் பாத்திரத்தினை இந்தச் சிலை சித்தரிக்கிறது.
- மைக்கேலேஞ்சலோவின் தாவீது போன்ற புகழ்பெற்ற பல்வேறு கலைப்படைப்புகளின் படங்களை அங்கீகரிக்கப்படாத வணிகப் பயன்பாட்டிற்கு என்று பயன்படுத்துவதை எதிர்த்துப் போராடுவதற்காக வேண்டி அதிகாரிகள் பல கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்பு விதிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்தச் சிலையின் நிர்வாணத்தை மையமாக வைத்து அல்லது அதை அவமரியாதை செய்யும் வகையில் சித்தரிக்கும் தாவீது படங்களைக் கொண்ட வணிகப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக அருங்காட்சியகம் வழக்குப் பதிவு செய்துள்ளது.
- இந்த சிலையின் கலை ஒருமைப்பாடு மற்றும் மாண்பினைப் பாதுகாப்பதும், அதன் புகைப் படமானது அற்பமானதாகவோ அல்லது தகாத முறையில் பயன்படுத்தப் படுவதையோ உறுதிப்படுத்துவதும் இதன் குறிக்கோள் ஆகும்.



## மேற்கத்திய குதிரை மூளை அழற்சி வைரஸ்

- அர்ஜென்டினா நாட்டில் சமீபத்தில் மேற்கத்திய குதிரை மூளை அழற்சி வைரஸ் (WEEV) பாதிப்பானது மனிதர்களில் கண்டறியப்பட்டதாக அறிவித்துள்ளது.
- அர்ஜென்டினா மற்றும் உருகுவே ஆகிய நாடுகளில் 21 பேர் மற்றும் 374 விலங்குகள் WEEV நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- WEEV என்பது அரிதான ஆனால் தீவிரமான வைரஸ் நோயாகும் என்பதோடு இது முதன்மையாக குதிரைகள் (குதிரை குடும்பம்) மற்றும் மனிதர்களைப் பாதிக்கிறது.
- கொசுக்கள் ஆனது மனிதர்கள் மற்றும் குதிரைகளில் பாதிப்பினை உண்டாக்கும் வைரஸ்களின் காரணிகளாகச் செயல்படுகின்றன.
- இந்த வைரஸ் டோகாவிரிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்த ஆல்பா வைரஸ் வகையைச் சேர்ந்தது. இதில்
  - கிழக்கத்திய குதிரை மூளை அழற்சி (EEEV) மற்றும்
  - எனிசுலா குதிரை மூளை அழற்சி (VEE) வைரஸ்கள்.




## ZiG – ஜிம்பாவே



- ஜிம்பாவே நாடானது தங்க இருப்பை அடிப்படியாகக் கொண்ட "ஜிம்பாவே தங்கம்" என்று பொருள்படும் ZiG என்ற புதிய மதிப்பிலான ஒரு நாணயத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி நிலையினால் பாதிப்பிற்கு உள்ளான பொருளாதாரத்தினை நிலைபடுத்துவதற்கான ஒரு சமீபத்திய முன்னெடுப்பு ஆகும்.
- முன்னதாக ஜிம்பாவே அரசானது, அதன் சொந்த நாணய மதிப்புகளை ரத்து செய்து கடந்த பல ஆண்டுகளாக அமெரிக்க டாலர் மற்றும் தென்னாப்பிரிக்க ராண்ட் போன்ற வெளிநாட்டு ரூபாய்களை மட்டுமே பயன்படுத்தியது.
- மார்ச் மாதத்தில் ஜிம்பாப்வே நாட்டின் வருடாந்திர பணவீக்கம் 55 சதவீதத்தினை (ஏழு மாத உயர்வு) எட்டியது.


## ஊடுபாலினத்தவர் மீதான UNHRC தீர்மானம்

- ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் ஊடுபாலினத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.
- அரசுமுறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு உரிமைக் குழுக்கள் ஆகியவை மனித உரிமைகளுக்கான முக்கியத் தருணம் என்று வர்ணித்துள்ள இந்தத் தீர்மானம் ஆனது இத்தகைய முதல் வகை முன்னெடுப்பு ஆகும்.
- இந்தத் தீர்மானத்திற்கு 24 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன என்பதோடு, மேலும் 23 நாடுகள் வாக்களிக்காமல் விலகின என்ற நிலையில் எந்தவொரு நாடும் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கவில்லை.
- பின்லாந்து, தென்னாப்பிரிக்கா, சிலி மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து இந்தத் தீர்மானத்தினை முன் வைத்தன.
- சுமார் 1.7% குழந்தைகள், ஆண் அல்லது பெண் என்ற இரண்டு பிரிவுகளிலும் பொருந்தாத வகையிலான பல பாலினப் பண்புகளைக் கொண்டதாக வரையறுக்கப் படுகின்ற ஊடுபாலினத்தவராகப் பிறக்கின்றனர்.



## பாலஸ்தீனிய அரசின் ஐ.நா. உறுப்பினர் விண்ணப்பம்


- ❖ உலகளாவிய அமைப்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் முழு உறுப்பினர் அந்தஸ்தினைப் பெறுவதற்காக 2011 ஆம் ஆண்டில் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை புதுப்பித்து மறு பரிசீலனை செய்யுமாறு பாலஸ்தீனிய அரசு வேண்டுகோள் விடுத்து உள்ளது.
- ❖ பாலஸ்தீனமானது, ஹோலி சீ எனப்படுகின்ற ரோம் நாடு கொண்டுள்ளவாறு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உறுப்பினர் அல்லாத பார்வையாளர் நாடு ஆகும்.
- ❖ 15 உறுப்பினர்களைக் கொண்ட குழுவானத்து இந்த விண்ணப்பத்தை முதலில் மதிப்பிட்டு, ஐ.நா. உறுப்பினர் அந்தஸ்திற்கான தேவைகளை அது பூர்த்தி செய்கிறதா என்பதை ஆய்வு செய்கிறது.
- ❖ இந்தப் பகுப்பாய்விற்குப் பின்னர் இந்த விண்ணப்பம் கைவிடப்படலாம் அல்லது ஐ.நா. பாதுகாப்பு சபையில் முறையான வாக்கெடுப்பிற்கு முன்வைக்கப்படலாம்.
- ❖ இந்த அமைப்பில் ஒரு நாடு உறுப்பினர் ஆவதற்கு ஒப்புதலுக்கு ஆதரவாக குறைந்தது ஒன்பது வாக்குகள் தேவை மற்றும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்சு அல்லது பிரிட்டனின் நிராகரிப்பு (வீட்டோ) அதிகார வாக்குகள் இல்லாமல் இருக்க வேண்டும்.





## உலக சுகாதார அமைப்பின் SARAH செயற்கை நுண்ணறிவு

- ❖ உலக சுகாதார அமைப்பானது S.A.R.A.H (சுகாதாரத்திற்கான திறன் மிகு செயற்கை நுண்ணறிவு வள உதவியாளர்) பணியமர்த்த உள்ளதாக அறிவித்துள்ளது.

- இந்த எண்ணிமச் சுகாதார மேம்பாட்டு முன்மாதிரியானது, ஆக்கப்பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயக்கப்படும் உணர்வுப் பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலான திறன்களைக் கொண்டுள்ளது.
- இது பல்வேறு சாதனங்களில் 8 மொழிகளில் 24/7 மணி நேர சுகாதாரத் தகவல்களை வழங்குகிறது.




## ரஷ்யாவின் கடல்வழி கச்சா எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்யும் நாடுகள்




- சீன நாடானது, கடல் வழிகள் மூலம் ரஷ்யாவின் கச்சா எண்ணெய்யை மிகவும் பெரும்பான்மையாக இறக்குமதி செய்யும் ஒரு நாடாக உருவெடுத்து இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- மார்ச் மாதத்தில், சீனா ரஷ்யாவின் கச்சா எண்ணெயை ஒரு நாளைக்கு 1.82 மில்லியன் பீப்பாய்கள் (bpd) என்ற அளவில் கடல் வழியாக இறக்குமதி செய்த நிலைமையில், இது இந்தியாவின் ஒரு நாளைக்கு 1.36 மில்லியன் பீப்பாய்கள் (bpd) என்ற இந்தியாவின் இறக்குமதி அளவினை விஞ்சியது.

- கூடுதலாக, சீனா குழாய்கள் மூலமும் ரஷ்யாவின் கச்சா எண்ணெயைப் பெறுகிறது.
- இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியில் ஏற்பட்ட சமீபத்திய மந்த நிலைக்கு பல்வேறு தடைகள் மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக கூறப்படுகிறது.
- இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியானது ஈராக், சவுதி அரேபியா உள்ளிட்ட பிற நாடுகளின் இறக்குமதியை மிஞ்சியுள்ளன.


## சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம்

- இந்திய நாட்டினைச் சேர்ந்த ஜக்ஜித் பவாடியா அதிக வாக்குகளைப் பெற்று சர்வதேச போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக மூன்றாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2030 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு அவர் மூன்றாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- இந்திய நாடானது பின்வரும் அமைப்புகளில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது,
  - 2025-2029 ஆகிய காலக் கட்டத்திற்கான பெண்களின் நிலை குறித்த ஆணையம்;
  - 2025-2027 ஆகிய காலக் கட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியத்தின் நிர்வாக வாரியம்;
  - ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் நிர்வாக வாரியம்;
  - 2025-2027 ஆகிய காலக் கட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பெருந் திட்டச் சேவைகளுக்கான அலுவலகம்
  - 2025-2027 ஆகிய காலக் கட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பாலினச் சமத்துவம் மற்றும் பெண்கள் அதிகாரமளிப்பு நிறுவனத்தின் நிர்வாக வாரியம் மற்றும்
  - 2025-2027 ஆகிய காலக் கட்டத்திற்கான உலக உணவுத் திட்டத்தின் நிர்வாக வாரியம்.


## உலக வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவரங்கள் 2024

- உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆனது சமீபத்திய "உலக வர்த்தகக் கண்ணோட்டம் மற்றும் புள்ளி விவரங்கள்" என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளவில் வணிகம் செய்யப்பட்ட சரக்குப் பொருட்களின் அளவு ஆனது 2023 ஆம் ஆண்டில் 1.2% ஆக வீழ்ச்சியடைந்த பின்னர் 2024 ஆம் ஆண்டில் 2.6% ஆகவும், 2025 ஆம் ஆண்டில் 3.3% ஆகவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- எரிசக்திகளின் அதிகபட்ச விலைகள் மற்றும் பணவீக்கம் ஆகியவை உற்பத்திப் பொருட்களுக்கான தேவையின் மீது அதிகத் தாக்கத்தினை ஏற்படுத்தியது.
- இதன் விளைவாக 2023 ஆம் ஆண்டிற்கான உலகளவில் வர்த்தகம் செய்யப்பட்ட சரக்குப் பொருட்களின் அளவில் 1.2% சரிவு ஏற்பட்டது.
- இந்தச் சரிவானது, வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி 5% குறைந்து 24.01 டிரில்லியன் அளவு அமெரிக்க டாலராக குறைந்ததுடன், மதிப்பின் அடிப்படையில் ஒரு மிகப் பெரிய அளவிலான சரிவாகப் பதிவானது.

- வர்த்தகச் சேவைகள் ஏற்றுமதியானது 9% அதிகரித்து 7.54 டிரில்லியன் டாலர்கள் ஆக இருந்ததுடன் சேவைகள் வர்த்தகம் ஆனது மிகவும் உச்ச அளவில் இருந்தது.
- 2022 ஆம் ஆண்டில் சுமார் 3.1 சதவீதமாக இருந்த உலக நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, 2023 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமாக குறைந்து, 2024 ஆம் ஆண்டில் 2.6 சதவீதமாகவும், 2025 ஆம் ஆண்டில் 2.7 சதவீதமாகவும் அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் நிலையானதாக இருக்கும்.




## இந்தியப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பு




- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள், இந்தியப் பெருங்கடல் கண்காணிப்பு அமைப்பினை (IndOOS) மீண்டும் செயல்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளன.
- இது வானிலை முன்னெச்சரிக்கைகளுக்காக உயர் தெளிவுத் திறன் கொண்ட கடல் சார் மற்றும் வளிமண்டலத் தரவுகளைச் சேகரிப்பதற்காக வேண்டி தொலைதூர கடல் பகுதியில் அமைக்கப் பட்டுள்ள 36 பிணைக்கப்பட்ட மிதவை சாதனங்களின் வலை அமைப்பாகும்.

- இந்த மிதவைச் சாதனங்களானது, ஆப்பிரிக்க-ஆசிய-ஆஸ்திரேலியப் பருவமழைப் பகுப்பாய்வு மற்றும் கணிப்பு (RAMA) திட்டத்திற்கான ஆராய்ச்சிக்காக பிணைக்கப் பட்ட மிதவைச் சாதனங்களின் தொடரமைப்பின் ஒரு பகுதியாக உள்ளன.
- பல்வேறு புயல் எச்சரிக்கைகள், பல்வேறு புயல் உருவாக்க எச்சரிக்கைகள், பருவமழை முன்னறிவிப்புகளுக்கான பல்வேறு கட்ட ஆரம்பச் சூழ்நிலைகள் மற்றும் பருவநிலை முன்னறிவிப்புகள், சுனாமி எச்சரிக்கைகள் மற்றும் மிக தீங்கு விளைவிக்கும் பாசிப் பெருக்கத்தினைக் கண்டறிதல் போன்ற செயல்பாடு சார்ந்தச் சேவைகளுக்கு இதன் கண்காணிப்பு முடிவுகள் அவசியமாகும்.

## ஆப்கானிஸ்தானில் நில உரிமைகள்


- ஆப்கானிய இந்து மற்றும் சீக்கியச் சமூகத்தைச் சேர்ந்த குடிமக்களுக்குச் சொத்து உரிமையை மீண்டும் வழங்குவதற்கு தாலிபன் ஆட்சி முடிவு செய்துள்ளது.
- காபூல் நகரில் முந்தைய ஆட்சிக் காலத்தில் போர்க்குடி மக்களால் கைப்பற்றப்பட்ட தனியார் நிலத்தின் பல உரிமைகளை அந்தந்த உரிமையாளர்களுக்குத் திருப்பித் தருவதை உறுதி செய்வதற்காக என்று அந்த நாட்டின் அரசானது ஓர் ஆணையத்தினை அமைத்துள்ளது.
- சோவியத் ஆக்கிரமிப்பு மற்றும் 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் தோன்றிய போர்க்குடி தலைவர்கள் கலாச்சாரம் ஆகிய காலத்தில் தொடங்கி பல தசாப்தங்களில் அவர்கள் தங்களது சொத்துக்களை இழந்தனர்.





## உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணி

- இந்திய அரசானது சிங்கப்பூர், வங்காளதேசம், இத்தாலி, அமெரிக்கா, பிரேசில், அர்ஜென்டினா, மொரிஷியஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியினை தொடங்கியுள்ளது.
- உயிரி எரிபொருளின் மேம்பாடு மற்றும் அதன் பயன்பாட்டினை அதிகளவில் ஏற்பதற்காக உலகளாவிய ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதன் மூலம் இது ஒரு வினையூக்கி தளமாக செயல்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி, உலகப் பொருளாதார மன்றம், சர்வதேச எரிசக்தி முகமை போன்ற சர்வதேச அமைப்புகளும் இதில் அடங்கும்.
- 3வது பெரிய கச்சா எண்ணெய் நுகர்வோர் ஆக உள்ள இந்திய நாடு எரிசக்தி இறக்குமதியைப் பெரிதும் சார்ந்துள்ளது.
- உயிரி எத்தனால் மற்றும் உயிரி டீசல் ஆகிய இரண்டும் இந்தியச் சந்தையில் 5% என்ற கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதத்தில் (CAGR) அதிகரிக்கும் என்று மிகவும் எதிர்பார்க்கப் படுகிறது.




## தூய்மையான ஆற்றல் பயன்பாட்டு மாற்றத்திற்கான திட்டம் 2023





- தூய்மையான ஆற்றல் பயன்பாட்டு மாற்றத்திற்கான திட்டம் (CETP) என்பது உலகளாவிய நிகரச் சுழிய உமிழ்வு கொண்ட ஆற்றல் பயன்பாட்டு அமைப்பினை நோக்கிய

முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான சர்வதேச எரிசக்தி முகமையின் முதன்மையான முன்னெடுப்பாகும்.

- இதன் இலக்குகள் ஆனது, ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப் பட்ட, 2015 ஆம் ஆண்டு பாரீஸ் உடன்படிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையான மேம்பாட்டு இலக்குகளின் நோக்கங்களுக்கு ஏற்ப உள்ளன.
- CETP திட்டத்தின் மூன்று முக்கியத் தூண்கள்:
    - தேசிய அளவில் மாற்றங்களைத் துரிதப்படுத்துதல்,
    - பலதரப்பு ஒருங்கிணைப்பு மற்றும்
    - உலகளாவிய ஆற்றல்சார் பேச்சுவார்த்தைகளைச் செயல்படுத்துதல்

## ஈரான்-இஸ்ரேல் மோதல் 2024




- ஈரானின் மாபெரும் வான்வழித் தாக்குதல் ஈரான் நாட்டில் இருந்து இஸ்ரேலியப் பிரதேசத்தின் மீது ஈரான் நடத்திய முதல் நேரடித் தாக்குதலைக் குறிக்கிறது.
- ஈரான் நாடானது இந்தத் தாக்குதலை ட்ரூ பிராமிஸ் என்று குறிப்பிடுகிறது.
- ஈரானின் தாக்குதலில் 120க்கும் மேற்பட்ட உந்துவிசை ஏவுகணைகள், 170 ஆளில்லா விமானங்கள் மற்றும் 30க்கும் மேற்பட்ட சீர்வேக ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன.
- 300க்கும் மேற்பட்ட எறிகணைகளில் "99%" எறிகணைகள் இடைமறித்து அழிக்கப் பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.
- இஸ்ரேலின் அயர்ன் டோம் பாதுகாப்பு கவச அமைப்பு என்பது குறுகிய தூர வரம்பு உடைய மற்றும் பீரங்கி குண்டுகளிலிருந்து நாட்டினைப் பாதுகாப்பதற்காக என்று வடிவமைக்கப் பட்டுள்ள அந்நாட்டின் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- கப்பல்கள் மற்றும் கடல் சார்ந்தக் கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்காக கடல்வழிப் பாதுகாப்பிற்கான அயர்ன் டோம் என்ற பாதுகாப்பு கவச அமைப்பு 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.


- ரேடாரை (அலை உணர்வி) பயன்படுத்தி பிராந்தியத்திற்குள் நுழையும் ஏவுகணைகளைக் கண்டறிந்து, அவற்றின் பாதை மற்றும் வேகத்தை மதிப்பிட்டு தடுப்பதன் மூலம் இந்தப் பாதுகாப்பு கவச அமைப்பு செயல்படுகிறது.
- இஸ்ரேலின் மற்ற பாதுகாப்பு அமைப்புகள்:
    - அயர்ன் டோம் பாதுகாப்பு கவச அமைப்பினை போலவே, டேவிட் ஸ்லிங் நடுத்தர தொலைவு வரம்புடைய எறிகணை இடைமறிப்பு அமைப்பு ஆனது ரஃபேல் எனப் படும் இஸ்ரேலிய நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டில் செயல் பாட்டுக்கு வந்தது.
    - ஆரோ 2 எனப்படும் மிக நீண்ட தொலைவு தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணைகளை அழிக்கும் நோக்கில் கட்டமைக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்பு என்பது 2000 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்தது.
    - ஆரோ 3 எனப்படும் பாதுகாப்பு அமைப்பானது நீண்ட தொலைவு தாக்குதல் வரம்பு உடைய உந்துவிசை எறிகணைகள் விண்வெளியில் பறக்கும் போதே அவற்றைக் குறி வைத்து தாக்குகிறது.
- 1948 ஆம் ஆண்டில் இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பிறகு, அந்த பிராந்தியத்தில் இஸ்ரேல் நாட்டினை அங்கீகரித்த முதல் நாடுகளில் ஈரானும் ஒன்றாகும்.
- 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சியில் ஷா பதவியிறக்கப்பட்ட பிறகு ஈரானில் ஒரு மதச் சார்பு அரசு நிறுவப்பட்டது.
- அதன் பிறகு இஸ்ரேல் நாட்டின் மீதான ஒரு அணுகுமுறை மாறியது, எனினும் அது பாலஸ்தீனப் பகுதியினை ஆக்கிரமிக்கும் அரசாகவே கருதப்பட்டது.
- 1979 ஆம் ஆண்டிற்குப் பிறகு தான் அந்த நாட்டின் அரசுமுறை உறவுகள் முடிவுக்கு வந்தன.

## Men5CV மூளைக்காய்ச்சல் தடுப்பூசி – நைஜீரியா



- மூளைக்காய்ச்சலுக்கு எதிராக "மாற்றம் மிக்க" புதிய Men5CV தடுப்பூசியை அறிமுகப் படுத்திய உலகின் முதல் நாடாக நைஜீரியா மாறியுள்ளது.
- கடந்த ஆண்டு, மூளைக் காய்ச்சல் பாதிப்பு அதிகம் உள்ள நாடுகளாகக் குறிப்பிடப் பட்டுள்ள 26 ஆப்பிரிக்க நாடுகளில் பதிவான வருடாந்திர நோய்ப் பாதிப்புகளில் 50% அதிகரிப்பு பதிவாகியுள்ளது.
- மூளைக் காய்ச்சல் என்பது மூளை மற்றும் தண்டு வடத்தைச் சுற்றியுள்ள சவ்வுகளின் (மெனிஞ்ச்ஸ்) வீக்கத்தால் ஏற்படும் உயிருக்கு ஆபத்தினை விளைவிக்கும் நோயாகும்.
- மூளைக்காய்ச்சல் ஏற்படுவதற்கு வைரஸ், பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணி நோய்க் கிருமிகள் உள்ளிட்ட பல காரணங்கள் உள்ளன.
- பாக்டீரியாவினால் ஏற்படும் கடுமையான மூளைக் காய்ச்சலுக்கு நான்கு முக்கிய காரணங்கள் உள்ளன:
  - நைசீரிய மூளைக்காய்ச்சல் (மெனிங்கோகோகஸ்)
  - ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா (நிமோகோகஸ்)
  - ஹீமோபிலஸ் காய்ச்சல்
  - ஸ்ட்ரெப்டோகாக்கஸ் அகலாக்டியே (B குழுவினைச் சேர்ந்த ஸ்ட்ரெப்டோகாக்கஸ்)

## செயற்கைக் கோள் வழி கைபேசி அழைப்பு சேவைகள் - சீனா




- நிலத்தில் உள்ள சமிக்ஞை கோபுர உள்கட்டமைப்புகளின் அவசியமில்லாமல், நேரடியாக திறன் பேசி அழைப்புகளை செயல்படுத்தும் திறன் கொண்ட உலகின் முதல் செயற்கைக்கோளை சீன அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இதற்கு "வானத்துடனான நேரடி இணைப்பு" என்று பொருள்படும் வகையில் "டியான்டோங்க்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தகவல் தொடர்பில் இடைவெளிகளை உருவாக்குவதை விட அந்த இடைவெளிகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த முன்னெடுப்பு குறித்த கருத்தாக்கம் ஆனது விவிலியக் கதையில் உள்ள பாபேல் கோபுரம் என்ற கருத்தில் இருந்து பெறப்பட்டது.

- தற்போது 36,000 கி.மீ. தொலைவில் புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் மூன்று செயற்கைக் கோள்களை கொண்டுள்ள டியான்டோங்க்-1 செயற்கைக்கோள் தொடர் அமைப்பானது, ஆசியா-பசிபிக் பிராந்தியம் முழுவதிற்கும் பல்வேறு சேவைகளை வழங்குகிறது.
- ஹூவாவே டெக்னாலஜிஸ் நிறுவனம் ஆனது கடந்த செப்டம்பர் மாதத்தில் செயற்கைக் கோள் அழைப்பு சேவைகள் இயங்கும் வகையிலான உலகின் முதல் திறன் பேசிகளை வெளியிட்டதையடுத்து இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம் நன்கு பலனளித்தது.

## 38வது ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கை உறுப்பினர் – சுவீடன்

- ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட 38வது நாடாக சுவீடன் மாறி உள்ளது.
- தற்போது, அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் மட்டுமே இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட முன்னணி விண்வெளி ஆய்வு சார்ந்த நடவடிக்கை மேற்கொள்ளும் நாடுகளாக உள்ளன.
- உடன்படிக்கைகள் என்பது விண்வெளியில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை நிறுவுவதை இலக்காகக் கொண்ட பிணைப்பு அல்லாத ஒப்பந்தங்களின் தொடர் ஆகும்.
- அவை ஆரம்பத்தில் 2020 ஆம் ஆண்டில் நாசா மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறையினால் அறிவிக்கப்பட்டன.
- தற்போது, இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட 38 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ளன.


## நைஜரில் இருந்து அமெரிக்கா படைகள் திரும்ப அழைப்பு

- மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜரில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்ப அழைக்க அமெரிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது.
- கடந்த ஆண்டு 1,000 அமெரிக்க படையினர் கொண்ட படைப்பிரிவுகள் நைஜரில் இரண்டு தளங்களில் நிலை நிறுத்தப்பட்டன.
- 2018 ஆம் ஆண்டு முதல், சஹேல் பிராந்தியத்தில் உள்ள இஸ்லாமியப் போராளிகள் மற்றும் அல் கொய்தாவின் துணை அமைப்பான ஜமாத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வால் முஸ்லிமீன் ஆகியவற்றைக் குறி வைத்து தாக்குவதற்காக என்று இந்த படைத் தளம் பயன்படுத்தப் பட்டது.
- கடந்த ஆண்டு, நைஜரின் இராணுவம் ஒரு புரட்சி மூலம் அந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது.
- ஆட்சிக் கவிழ்ப்பு வரை, அமெரிக்கா மற்றும் பிரான்சின் ஒரு முக்கிய பாதுகாப்பு பங்கு தாரராக நைஜர் இருந்தது.
- புதிய அரசாங்கமானது, அண்டை நாடுகளான மாலி மற்றும் புர்கினா பாசோவைப் போலவே, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற சில மேற்கத்திய நாடுகளுடனான இராணுவ உறவுகளைத் துண்டித்தன.
- அவை ECOWAS எனப்படும் பிராந்தியப் பொருளாதாரக் கூட்டமைப்பிலிருந்தும் விலகி, ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளைத் தொடர்கின்றன.




## துபாய் வெள்ளம் 2024

- ஐக்கிய அரபு அமீரகத்தில் 75 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிக மழை பெய்து உள்ளது.
- சில பகுதிகளில் 24 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் 250 மிமீ (சுமார் 10 அங்குலம்) மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- 1949 ஆம் ஆண்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட தொடங்கியதில் இருந்து 24 மணி நேரத்தில் பெய்த மிகப்பெரிய அளவிலான மழைப்பொழிவு இதுவாகும்.
- மேக விதைப்பு ஆனது இந்த மழைக்குக் காரணமாக இருக்கலாம் என்ற ஊகங்களை நிபுணர்களும் அதிகாரிகளும் மறுக்கின்றனர்.
- மேக விதைப்பு என்பது மழை அல்லது பனியை அதிகரிக்கச் செய்யும் ஒரு வகை வானிலை மாற்றச் செயலாகும்.
- மேக விதைப்பு என்பது வானத்தில் விமானங்கள் மற்றும் நிலத்தில் சில பீரங்கிகளைப் பயன்படுத்தித் துகள்களை மேகங்களில் நுழைத்து அதிக நீர் ஈர்ப்பு கருக்களை உருவாக்கி ஈரப்பதத்தை ஈர்க்கின்ற செயல்முறையாகும்.
- போதுமான நீர்த்துளிகள் ஒன்றிணைந்தவுடன், அவை கனமாகி, மழை அல்லது பனியாக பூமியில் விழுகின்றன.
- சில்வர் அயோடைடு இந்தச் செயல்பாட்டினைத் தூண்டக்கூடிய திறன் கொண்டது.
- உலர் பனி போன்ற பிற பொருட்களும் இவற்றிற்காகப் பயன்படுத்தப்படலாம்.
- இந்த செயல்முறையில் தெளிவான வானத்திலிருந்து தண்ணீரை உருவாக்க முடியாது, மாறாக மழையாக பொழியச் செய்வதற்கு அல்லது இயற்கையாக பெய்யும் அளவை விட அதிகமாக பொழியச் செய்வதற்குத் துகள்கள் ஏற்கனவே ஈரப்பதத்தை கொண்டு இருக்கும் மேகத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.
- அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு அமீரகம், ஜெர்மனி, இந்தியா, மலேசியா, ரஷ்யா மற்றும் மெக்சிகோ உள்ளிட்ட சுமார் 50 நாடுகள் மேக விதைப்பு முறையைப் பயன்படுத்துகின்றன.




## அரல் கடல் வற்றிய நிலை




- 1960 ஆம் ஆண்டுகளின் ஆரம்பகாலம் வரையில் உலகின் நான்காவது பெரிய ஏரியாக இருந்த அரல் கடல் வறண்டு விட்டது.
- அரல் கடல் வறண்டு வருவதால் கடந்த 30 ஆண்டுகளாக மத்திய ஆசியா 7 சதவீதம் தூசுப் படலம் நிறைந்துள்ளதாக மாறியுள்ளது.
- அரல்கும் பாலைவனம் ஆனது தற்போது புவியில் மனிதனால் உருவாக்கப்பட்ட மிக முக்கியமான தூசுப்படல மூலங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.
- 1985 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், விரிவடைந்து வரும் பாலை வனத்தில் இருந்து வெளியாகும் தூசு 14 டன்னிலிருந்து கிட்டத்தட்ட இரு மடங்காக உயர்ந்து 27 மில்லியன் டன்கள் ஆக அதிகரித்துள்ளது.

- மத்திய ஆசியாவின் இரண்டு பெரிய நதிகளான அமு தர்யா (பழங்காலத்தில் ஆக்ஸஸ்) மற்றும் சிர் தர்யா (ஜாக்ஸார்ட்ஸ்) ஆகியவை அரல் கடலில் கலந்தன.
- உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய ஏழு மத்திய ஆசிய நாடுகளில் அதன் நதிப் படுகை பரவியுள்ளது.

## யூவிச்சோல்-S காலரா தடுப்பூசி

- காலரா பாதிப்புக்கான யூவிச்சோல்-S எனப்படும் புதிய செயலிழந்த நோய்க் கிருமி கொண்ட சொட்டு மருந்தானது உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) முன் தகுதியைப் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பில் 473,000 காலரா பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் பதிவானதை விட இரு மடங்காகும்.
- 2023 ஆம் ஆண்டில் மேலும் 700,000 பாதிப்புகள் பதிவானது.
- தற்போது, கொமொரோஸ், காங்கோ ஜனநாயகக் குடியரசு, எத்தியோப்பியா, மொசாம்பிக், சோமாலியா, சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே ஆகிய நாடுகளில் தீவிரப் பாதிப்புகளுடன் 23 நாடுகளில் காலரா பெருந்தொற்றுகள் பதிவாகியுள்ளன.

## நோயாளிப் பாதுகாப்பு உரிமைகள் சாசனம்

- சுகாதார நலனின் பின்னணியில் அனைத்து நோயாளிகளின் மிகப்பெரும் முக்கிய உரிமைகளையும் குறிப்பிட்டுக் காட்டும் முதல் நோயாளிப் பாதுகாப்பு உரிமைகள் சாசனத்தை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.
- நோயாளிகளின் குறைகள் கேட்கப் படுவதையும், அவர்களது பாதுகாப்பான சுகாதார நலனுக்கான அவர்களின் உரிமை பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்வதற்காக அரசுகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு உதவவும் இந்த சாசனம் முயல்கிறது.
- நோயாளியின் பாதுகாப்பு என்பது சுகாதார நலனின் போது மக்களுக்கு ஏற்படும் எதிர் பாராத தீங்குகளைத் தவிர்ப்பதாகும்.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கருத்தின் படி, சுமார் 10 நோயாளிகளில் ஒருவர் சுகாதாரப் பாதுகாப்பில் பாதிக்கப்படுவதோடு, பாதுகாப்பற்ற சுகாதார நலச் சேவை காரணமாக ஆண்டுதோறும் 3 மில்லியனுக்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகின்றன.
- குறைந்த வருமானம் உள்ள நாடுகள் முதல் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளில், 100 பேரில் 4 பேர் பாதுகாப்பற்ற சுகாதார நலச் சேவையினால் உயிரிழக்கின்றனர்.

## முதல் எல்லை அடையாளக் குறி

- ஆர்மேனியா மற்றும் அஜர்பைஜான் ஆகியவை தமக்கு இடையேயேயான மிகவும் கடுமையான பிராந்திய மோதலுக்குப் பிறகு நாடுகளுக்கு இடையேயான உறவுகளை இயல்பாக்குவதற்கு ஒரு படி முன்னெடுத்து வைத்துள்ளன.

- அஜர்பைஜான் காராபக் மாகாணத்தின் மீதான முழுக் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி-யதையடுத்து, இந்த இரு நாடுகளும் அமைதி ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன.
- இந்தப் பகுதியானது 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து ஆர்மேனியா நாட்டின் ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- அஜர்பைஜான் காராபக்கின் முழுக் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதையடுத்து, அங்கு உள்ள சுமார் 120,000 மக்கள்தொகையில் பெரும்பான்மையானவர்கள் ஆர்மீனியா நாட்டிற்குத் சென்றனர்.
- ஆர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாட்டின் அதிகாரிகள் முதல் எல்லை அடையாளக் குறி நிறுவப்பட்டதாக அறிவித்துள்ளனர்.




## உலகளாவிய சோடியம் அளவுக்குறியீடு



- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, அதன் இரண்டாவது உலகளாவிய சோடியம் அளவுக் குறியீடுகளை வெளியிட்டுள்ளது.
- இது சோடியம் உட்கொள்வதைக் குறைப்பதில் உள்ள முன்னேற்றத்தை மதிப்பிடச் செய்வதற்கும், உயர் இரத்த அழுத்தம் மற்றும் உடல் பருமன் தொடர்பான நாள்பட்ட பல்வேறு உடல்நலப் பாதிப்புகளைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப் படும் சோடியம் உள்ளடக்கத்திற்கான அளவுக் குறியீட்டு மதிப்புகளின் புதுப்பிக்கப்பட்டப் பட்டியல் ஆகும்.
- 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட உலக சுகாதார அமைப்பின் முதல் உலகளாவிய சோடியம் அளவுக் குறியீடு ஆனது, வெவ்வேறு உணவு வகைகளுக்கான 10 முன் தீர்மானிக்கப்பட்ட அளவுக் குறியீடுகளைக் கொண்டுள்ளது.

## உலகளாவிய நெகிழி ஒப்பந்த பேச்சுவார்த்தைகள்

- நெகிழி மாசுபாடு தொடர்பான ஒரு சர்வதேச சட்டப்பூர்வ ஒப்பந்தத்தை உருவாக்கச் செய்வதற்கான அரசுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தைக் குழுவின் (INC-4) நான்காவது அமர்வு ஆனது சமீபத்தில் கனடாவின் ஒட்டாவா நகரில் நடைபெற்றது.
- இக்குழுவின் முந்தைய அமர்வுகள் உருகுவே, பிரான்சு மற்றும் கென்யா ஆகிய இடங்களில் நடைபெற்றன.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், நெகிழி மாசுபாடு குறித்த உலகளாவிய ஒப்பந்தத்தினை உருவாக்குவதற்கான வரலாற்று சிறப்புமிக்கத் தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் சபை ஏற்றுக்கொண்டது.
- உற்பத்தி, வடிவமைப்பு மற்றும் அகற்றல் உள்ளிட்ட நெகிழியின் ஒட்டுமொத்த வாழ்வியல் சுழற்சியை நிவர்த்தி செய்வதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற ஒரு இலட்சிய இலக்குடன் 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரசுகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக் குழு தனது பணியைத் தொடங்கியது.

## UNCTAD அமைப்பின் பெயர் மாற்றம்

- ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டு அமைப்பின் (UNCTAD) "ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு" என மறுபெயரிடப்பட்டது.
- இந்த நிரந்தர அரசுகளுக்கிடையேயான அமைப்பு ஆனது இந்த ஆண்டு தனது 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- 1964 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறுவப்பட்ட இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.
- பலவீனமான பொருளாதாரங்களை கொண்டுள்ள நாடுகளின் செலவினங்களைக் குறைப்பதோடு, உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கலின் பலன்களை அதிகப் படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டது.


## மரகேஷ் ஒப்பந்தத்தின் 30வது ஆண்டு நிறைவு

- உலக வர்த்தக அமைப்பினை நிறுவ காரணமாக அமைந்த மரகேஷ் ஒப்பந்தம் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று கையெழுத்தானது.

- இது 1995 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று உலக வர்த்தக அமைப்பின் உருவாக்கத்திற்கு வழி வகுத்தது.
- உலக வர்த்தக அமைப்பானது, கட்டண வீதங்கள் மற்றும் வணிகம் தொடர்பான பொது ஒப்பந்தத்தின் (GATT) கொள்கைகளை ஒருங்கிணைத்து, அவற்றைச் செயல் படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான மிகவும் நிலையான நிறுவன கட்டமைப்பு முறையினை வழங்குகிறது.
- தற்போது, உலக வர்த்தக அமைப்பானது 164 உறுப்பினர் நாடுகளையும் 23 பார்வையாளர் அரசாங்கங்களையும் கொண்டுள்ளது.

## சீனாவின் இராணுவ மறுசீரமைப்பு

- சீனா தனது புதிய இராணுவ மறுசீரமைப்பு நடவடிக்கையில் தகவல், விண்வெளி மற்றும் இணைய வெளிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக புதிய தன்னிச்சையான மக்கள் விடுதலை இராணுவப் பிரிவுகளை உருவாக்கியுள்ளது.
- இந்த இராணுவமானது தற்போது – நிலப்பரப்பு, கடற்படை, விமானம் மற்றும் ஏவுகலம் ஆகிய நான்கு கிளைகளைக் கொண்டுள்ளது. அத்துடன் தகவல், விண்வெளி, இணைய வெளிப் பாதுகாப்பு மற்றும் கூட்டு தளவாட ஆதரவு ஆகிய நான்கு முக்கிய துணைப் பிரிவுகளையும் கொண்டுள்ளது.
- பழைய உத்திகள் வழங்கீட்டு (துணை) படை என்பது பிரிக்கப்பட்டு மூன்று புதிய பிரிவுகளுடன் கூடிய புதிய படையாக அது மாற்றப்பட்டது.
- "இராணுவ நவீனமயமாக்கலை விரைவுபடுத்துதல் மற்றும் புதிய சகாப்தத்தில் மக்களின் ஆயுதப் படைகள் என்ற திட்டத்தினை திறம்பட செயல்படுத்துதல்" என்பதை தகவல் உதவிப் படை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட உத்திகள் வழங்கீட்டு படைகளிலிருந்து நீக்கப் பட்டது.




## இந்தியர்களுக்கான புதிய ஷெங்கன் விசா விதிகள்

- ஐரோப்பிய ஒன்றியமானது சமீபத்தில் இந்தியக் குடிமக்களுக்கு ஏற்றவாறு தற்போது புதுப்பிக்கப் பட்ட நுழைவு இசைவுச் சீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தப் புதிய விதி முறையானது, இந்தியர்கள் நீண்ட காலத்திற்கு, பல்-நுழைவு ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுக்களைப் பெற வழி வகுக்கிறது.
- பொதுவாக ஒரு ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டு, 180 நாட்கள் வரையிலான காலக் கெடுவிற்குள் 90 நாட்கள் வரை குறுகிய காலம் தங்குவதற்கு அனுமதிக்கிறது.
- இந்தியப் பயணிகள் தற்போது இரண்டு ஆண்டுகால ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டினைப் பெறலாம் என்ற நிலையில் முன்னதாக குறுகிய காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் வகையிலேயே கிடைக்கப் பெற்றது என்பதால் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகும்.
- இந்த நீட்டிக்கப்பட்ட இரண்டு ஆண்டு கால நுழைவு இசைவுச் சீட்டிற்கு தகுதி பெற, விண்ணப்பதாரர்கள் முந்தைய மூன்று ஆண்டுகளுக்குள் இரண்டு ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டுக்களைப் பெற்று அவற்றை சரியான முறையில் பயன்படுத்தியிருக்க வேண்டும்.




## நிம்பஸ் திட்டம்

- நிம்பஸ் திட்டம் என்பது இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு மேகக் கணிம சேவைகளை வழங்குவதற்காக 2021 ஆம் ஆண்டில் கூகிள் மற்றும் அமேசான் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட 1.2 பில்லியன் டாலர் மதிப்பிலான தொழில்முறை ஒப்பந்தம் ஆகும்.
- இது சுகாதாரம், போக்குவரத்து மற்றும் கல்வி போன்ற நாட்டின் பல்வேறு துறைகளில் உள்ள சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இஸ்ரேலுக்குப் பொதுப் பயன்பாட்டு மேகக் கணிம சேவைகளை வழங்குகிறது.
- இஸ்ரேல் நாட்டின் அரசு ஊழியர்கள் மற்றும் நாட்டின் மூத்த தலைவர்களுக்கும் அவர்களது எண்ணிம திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சியும் வழங்கப்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## வெளிநாட்டு நிதி வரவு





- மார்ச் மாதத்தில் அதிக அந்நிய (வெளிநாட்டு) நிதி வரவினைப் பெற்றதன் மூலம் மற்ற ஆசிய நாடுகளை இந்தியா பின்னுக்குத் தள்ளியது.
- அந்நிய நிறுவன முதலீட்டு நிறுவனங்கள் (FIIs) 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து, அதிகப் பங்குகளை வாங்கி முதலீடு செய்ததன் மூலம் இந்தியப் பங்குகளில் 3.63 பில்லியன் டாலர்கள் வரவினை உருவாக்கியுள்ளன.
- சந்தையில் சுமார் 52,467 கோடி ரூபாய் முதலீடு செய்து கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கான நிதி வரவினை எட்டியதன் மூலம் உள்நாட்டு நிறுவனங்கள் ஆனது தொடர்ந்து நிகரப் பங்குகளை வாங்குபவையாக உள்ளன.
- இந்தியாவைத் தவிர, தென் கொரியா, தைவான் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் அந்நிய நிறுவன முதலீடுகளை மேற்கொள்வதற்கான இடங்களாக இருந்தன.
- அதே சமயத்தில் ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, வியட்நாம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் சந்தைகளில் இருந்து அந்நிய நிறுவன முதலீட்டு நிறுவனங்கள் முதலீட்டினைத் திரும்பப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பினைத் தேர்ந்து எடுத்தன.

- தென் கொரியா 2.91 பில்லியன் டாலர், தைவான் 1.14 பில்லியன் டாலர் மற்றும் இந்தோனேசியா 585 மில்லியன் டாலர் என்ற அளவில் நிதி வரவினைப் பெற்றுள்ளன.
- ஜப்பான் நாட்டின் சந்தையில் இருந்து மிகப்பெரிய அளவில் 5.35 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான அந்நிய நிறுவன முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- அதனைத் தொடர்ந்து தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய நாடுகளால் முறையே 1.13 பில்லியன் டாலர்கள் மற்றும் 514 மில்லியன் டாலர்கள் மதிப்பிலான அந்நிய நிறுவன முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- வியட்நாம் நாட்டின் அந்நிய நிறுவன முதலீடுகள் 197 மில்லியன் டாலரையும், பிலிப்பைன்ஸ் நாட்டின் அந்நிய நிறுவன முதலீடுகள் 40 மில்லியன் இழப்பினையும் எட்டியது.

## UPI பரிவர்த்தனைகள் அதிகரிப்பு


- 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகச் செயலியில் (UPI) பரிவர்த்தனைகள் ஆண்டிற்கு (YoY) 56 சதவிகிதம் அதிகரித்துள்ளன என்பதோடு அட்டை வழிப் பரிவர்த்தனைகளில் 6 சதவிகிதம் என்ற மிதமான வளர்ச்சி பதிவாகின.
- 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் சுமார் 42.09 பில்லியனாக இருந்த UPI மூலமான பரிவர்த்தனைகளின் அளவு 65.77 பில்லியனாக உயர்ந்தது.
- அதே காலகட்டத்தில் 69.36 டிரில்லியன் ரூபாயாக இருந்த UPI பரிவர்த்தனை மதிப்பு 44 சதவிகிதம் அதிகரித்து 99.68 டிரில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.





## இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு

- இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 2024 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதி நிலவரப்படி 645.6 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.

- அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 2.95 பில்லியன் டாலர் அதிகரித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் வெளிநாட்டுப் பண மதிப்புகள் (FCAs) ஆனது 2.35 பில்லியன் டாலர் அதிகரித்து 570.62 பில்லியன் டாலராக உள்ளது.
- தங்கம் கையிருப்பு 673 மில்லியன் டாலர் உயர்ந்து 52.16 பில்லியன் டாலராக இருந்த அதே சமயம் சிறப்பு வரைவு உரிமைகள் (SDR) சுமார் 73 மில்லியன் டாலர் குறைந்து 18.15 பில்லியன் டாலராக இருந்தது.
- சர்வதேச நாணய நிதியத்தில் உள்ள கையிருப்பு நிலையானது சுமார் 2 மில்லியன் டாலர் குறைந்து 4.66 பில்லியன் டாலராக உள்ளது.




## இந்தியாவில் கடன் அட்டைகள் எண்ணிக்கை




- இந்திய வங்கிகள் வழங்கிய மொத்தக் கடன் அட்டைகளின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 100 மில்லியனைத் தாண்டியது.


- முந்தைய மாதத்தை விட 1.1 மில்லியன் கடன் அட்டைகள் அதிகரித்துள்ளது.
- பிப்ரவரி மாதம் வரையில், பயன்பாட்டுச் சுழற்சியில் நிலுவையில் உள்ள (திரும்பச் செலுத்தப் படாத) கடன் அட்டைகளின் எண்ணிக்கை 100.60 மில்லியனாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், புழக்கத்தில் இருந்த மொத்த அட்டைகள் 99.5 மில்லியனாக இருந்தன.
- கடன் அட்டைகள் வழங்குவதில் 20.40 மில்லியன் அட்டைகளுடன் HDFC வங்கியானது முன்னணியில் உள்ளது.

## டிஜிட்டல் இந்தியா நம்பகத்தன்மை சரிபார்ப்பு முகமை

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) இணைய வெளிக் குற்றங்களுக்கு எதிரான போராட்டத்தில் எண்ணிம இந்தியா நம்பகத்தன்மைச் சரிபார்ப்பு முகமை (DIGITA) எனப் படும் ஒரு புதிய செயற்கருவியைப் பரிசீலித்து வருகிறது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்த முகமையானது, முறையானவற்றைச் சரிபார்த்து, பொதுப் பதிவேட்டை உருவாக்குவதன் மூலம் சட்டவிரோதக் கடன் செயலிகளின் அதிகரிப்பை குறைப்பதை இலக்காகக் கொள்ளும்.
- எண்ணிம கடன் செயலிகளைச் சரிபார்ப்பதற்கான ஒரு முக்கிய மையமாக DIGITA செயல்படும்.
- இந்த சரிபார்ப்பு செயல்முறையானது அந்தச் செயலிகள் பல்வேறு விதிமுறைகளுக்கு இணங்குவதையும் நெறிமுறைப் படி செயல்படுவதையும் உறுதி செய்யும்.
- சரிபார்க்கப்பட்டச் செயலிகள் மட்டுமே "DIGITA-அங்கீகரிக்கப்பட்டவை" என்ற இந்த முத்திரையைப் பெறும் என்பதால் இதன் மூலம் பயனாளிகள் - கடன் வாங்குபவர்கள் - எளிதாக அவற்றை அடையாளம் காண முடியும்.



## முதல் வணிகரீதியிலான உத்திசார் கச்சா எண்ணெய் சேமிப்பகம்




- உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் நுகர்வோர் மற்றும் இறக்குமதியாளரான இந்திய நாடானது, தனது முதல் வணிக உத்திசார் கச்சா எண்ணெய்ச் சேமிப்பகத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது.
- இந்திய உத்திசார் பெட்ரோலியம் இருப்புகள் லிமிடெட் (ISPRL) நிறுவனமானது, கட்டிடம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றிற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு நோக்கத்திற்கான அமைப்பு ஆகும்.
- இது கர்நாடகாவில் உள்ள படூரில் 2.5 மில்லியன் டன் கொள்ளளவிலான நிலத்தடிச் சேமிப்புக் கிடங்கு அமைக்க ஏலம் கோரியுள்ளது.
- படூர்-II கிடங்கு ஆனது PPP (பொது-தனியார் கூட்டாண்மை) மாதிரியில் கட்டமைக்கப் படும் என்பதோடு இங்கு தனியார் நிறுவனங்கள் அந்தச் சேமிப்பகத்தை வடிவமைத்து, கட்டமைத்து, நிதியளித்து மற்றும் அவற்றை இயக்கும் பல செயல்பாடுகளை மேற் கொள்ளலாம்.
- ஆந்திரப் பிரதேசத்தில் விசாகப்பட்டினம் (1.33 மில்லியன் டன்கள்), கர்நாடகாவில் மங்களூருவில் (1.5 மில்லியன் டன்கள்) மற்றும் படூர் (2.5 மில்லியன் டன்கள்) ஆகிய மூன்று இடங்களில் 5.33 மில்லியன் டன் கச்சா எண்ணெயைச் சேமித்து வைப்பதற்காக ISPRL முதல் கட்டமாக இந்தத் தொடரற்ற நிலத்தடிப் பாறைக் குகைகளில் உத்திசார் பெட்ரோலிய இருப்புக்களை உருவாக்கியது.

## இந்தியா – நிகர முழுமையடைந்த எஃகு இறக்குமதியாளர்


- இந்தியாவின் எஃகு இறக்குமதியானது சுமார் 38 சதவீதம் அதிகரித்து 8.319 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.
- எனவே, இந்தியா 2023-24 ஆம் நிதியாண்டில் நிகர எஃகு இறக்குமதியாளராக மாறி உள்ளது.
- முந்தைய 2022-23 ஆம் நிதியாண்டில் இந்தியா 6.022 மில்லியன் டன்கள் (MnT) அளவிலான நிறைவு செய்யப்பட்ட எஃகு இறக்குமதியை மேற்கொண்டுள்ளது.

- கடந்த நிதியாண்டில் 6.71 மில்லியன் டன்னாக இருந்த எஃகு ஏற்றுமதியானது 11.50 சதவீதம் அதிகரித்து 7.48 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.
- 2022-23 ஆம் ஆண்டில் 123.19 மில்லியன் டன்னாக இருந்த நாட்டின் கச்சா எஃகு உற்பத்தி ஆனது 12.40 சதவீதம் அதிகரித்து 138.48 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.
- முழுமையடைந்த எஃகு பொருட்கள் நுகர்வு ஆனது சுமார் 135.95 மில்லியன் டன்னாக இருந்தது என்ற நிலையில், இது முந்தைய ஆண்டில் இருந்த 119.89 மில்லியன் டன் அளவை விட 13.40 சதவீதம் அதிகமாகும்.
- தேசிய எஃகுக் கொள்கையின் கீழ், இந்தியா தனது வருடாந்திர எஃகு உற்பத்தித் திறனை 2030 ஆம் ஆண்டில் 300 மில்லியன் டன்னாகவும், தனிநபர் எஃகு நுகர்வினை 160 கிலோவாகவும் அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.





## 4வது பெரிய டிஜிட்டல் சேவை ஏற்றுமதியாளர்

- உலக வர்த்தக அமைப்பின் மதிப்பீட்டின்படி, உலகளாவிய எண்ணிமச் சேவைகளின் ஏற்றுமதியானது வருடாந்திர அடிப்படையில் 9 சதவீதம் என்ற அதிகரிப்புடன் 2023 ஆம் ஆண்டில் 4.25 டிரில்லியனாக உயர்ந்துள்ளது.
- இது உலகளாவியச் சரக்குகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியில் 13.8 சதவிகிதம் ஆகும்.
- எண்ணிமச் சேவைகளின் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 17 சதவிகிதம் உயர்ந்து 257 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- இதன் மூலம், இந்தப் பிரிவில் உலகின் நான்காவது பெரிய ஏற்றுமதியாளராக இந்தியா மாறியுள்ளது.
- இந்தியாவின் வளர்ச்சி விகிதம் ஆனது சீனா மற்றும் ஜெர்மனி ஆகியவற்றின் 4 சதவீத அதிகரிப்பை விட அதிகமாக இருந்தது.




## 2024 ஆம் நிதியாண்டில் வர்த்தகச் செயல்திறன்

- ❖ சரக்குப் பொருட்கள் இறக்குமதியில் ஏற்பட்ட அதீத வீழ்ச்சியால் இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையானது கடந்த 11 மாதங்களில் இல்லாத அளவிற்கு மார்ச் மாதத்தில் 15.6 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது.
- ❖ வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 18.96 பில்லியன் டாலராகவும், 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 18.71 பில்லியன் டாலராகவும் இருந்தது.
- ❖ இந்தியாவின் ஒட்டு மொத்த ஏற்றுமதியானது மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் 776.68 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- ❖ 2024 ஆம் நிதியாண்டில் சரக்குப் பொருட்களின் ஏற்றுமதி 437.06 பில்லியன் டாலராக சரிந்தது என்ற நிலையில் அதே சமயம் சேவைகளின் ஏற்றுமதியானது 4.4% அதிகரித்து 339.62 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ 2023 ஆம் ஆண்டில் 121.62 பில்லியன் டாலராக இருந்த நாட்டின் ஒட்டு மொத்த வர்த்தகப் பற்றாக்குறையானது, 2024 ஆம் நிதியாண்டில் 35.77% அதிகரித்து 78.12 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- ❖ 2022-23 ஆம் நிதியாண்டில் 451.07 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் சரக்குப் பொருட்கள் ஏற்றுமதியானது 2023-24 ஆம் நிதியாண்டில் 3.11% குறைந்து 437.06 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ 2022-23 ஆம் நிதியாண்டில் 715.97 பில்லியன் டாலர் ஆக இருந்த சரக்கு இறக்குமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 5.41% குறைந்து 677.24 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ சேவைகள் ஏற்றுமதியானது 2023-24 ஆம் நிதியாண்டில் 339.62 பில்லியன் டாலராக மதிப்பிடப் பட்டுள்ளது என்ற வகையில் இது 2022-23 ஆம் நிதியாண்டில் 325.33 பில்லியன் டாலராக பதிவான சேவைகள் ஏற்றுமதி மதிப்பினை விட 4.39% அதிகம் ஆகும்.
- ❖ 2023 ஆம் நிதியாண்டில் சுமார் 182.05 பில்லியன் டாலராக இருந்த சேவைகள் இறக்குமதியானது 2.46% குறைந்து 2024 ஆம் நிதியாண்டில் 177.56 பில்லியன் டாலராக மதிப்பிடப் பட்டுள்ளது.





## 20 ஆண்டுகளில் இல்லாத அளவில் இந்தியாவின் மிக மோசமான வைப்புத் தொகை நெருக்கடி




- ❖ வீட்டுக் கடன்கள் மற்றும் நுகர்வுக்கான பிற கடன்கள் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் கடன் பெறுதல் அதிகரித்ததால், குறைந்த பட்சம் 20 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடன் மற்றும் வைப்புத் தொகை விகிதம் அதிகபட்சமாக உள்ளது.
- ❖ தற்போதைய கடன் மற்றும் வைப்புத் தொகை விகிதம் ஆனது 80% ஆக உள்ளது என்ற நிலையில் இது 2015 ஆம் ஆண்டில் இருந்த அளவுகளை விட மிக அதிகமாக உள்ளது.
- ❖ தற்போது வங்கிக் கடன் வளர்ச்சியின் வேகம் 2024 ஆம் நிதியாண்டில் வைப்புத் தொகை வளர்ச்சியை விஞ்சியது.
- ❖ 2024 ஆம் நிதியாண்டில், மார்ச் 22 ஆம் தேதியன்று வைப்புத் தொகை 13.5% அதிகரித்து 204.8 டிரில்லியன் ரூபாய் ஆகவும், உணவுத் துறை சாராத கடன் 20.2% அதிகரித்து 164.1 டிரில்லியன் ரூபாய் ஆகவும் இருந்தது.
- ❖ 2023 ஆம் நிதியாண்டில், வைப்புத் தொகை சுமார் 9.6% அளவிலும் மற்றும் கடன் 15.4% அளவிலும் வளர்ந்தது.

## பருப்பு இறக்குமதி 2023-24



**Sharpest Rise Seen From Tanzania**

Pulse imports (In $ million) — Source: Commerce dept

| | Apr-Jan 2022-23 | Apr-Jan 2023-24 | % change |
|---|---|---|---|
| Tanzania | 104 | 281 | 170.2 |
| Australia | 196 | 490 | 150.0 |
| Canada | 290 | 587 | 102.4 |
| Myanmar | 533 | 724 | 35.8 |
| Mozambique | 257 | 216 | -16.0 |

- ❖ இந்தியாவின் பருப்பு இறக்குமதியானது 93% அதிகரித்து 3.7 பில்லியன் டாலராக உள்ளதையடுத்து சில்லறை பணவீக்கத்தின் மத்தியில் பருப்பு விலை நிலையாக உள்ளது.
- ❖ மார்ச் மாதத்தில் பருப்பு வகைகளின் வருடாந்திரப் பணவீக்கம் 17% அதிகரித்துள்ளது. என்பதோடு இது கடந்த ஆண்டு பதிவான 4.3% உயர்வினை விட அதிகமாகும்.
- ❖ நகர்ப்புறங்களில் பருப்பு விலை சுமார் 19% உயர்ந்தது.
- ❖ 2023-24 ஆம் ஆண்டின் பருப்பு இறக்குமதி 93% அதிகரித்து 3.7 பில்லியன் டாலராக இருந்தது.
- ❖ முந்தைய ஆண்டில் இது வெறும் 2 பில்லியன் டாலர் மட்டுமே ஆகும்.
- ❖ நாட்டின் ஏற்றுமதியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு பருப்பு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் அண்டை நாடான மியான்மர் இந்தியாவின் பருப்பு இறக்குமதிக்கான ஒரு முதன்மை ஆதாரமாக உள்ளது.
- ❖ ஏப்ரல்-ஜனவரி மாத காலக்கட்டத்தில் தான்சானியாவின் ஏற்றுமதியானது 2.7 மடங்கு உயர்ந்து 281 மில்லியன் டாலராக இருந்தது.


## 2024 ஆம் நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில் குடும்பக் கடன்




- ❖ இந்தியாவின் குடும்பக் கடன் மதிப்புகள், 2023 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்திற்குள் (Q3FY24) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 40 சதவீதத்தை எட்டியிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ நிகர நிதிச் சேமிப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 5 சதவீதமாகச் சரிந்தது.

- 2022-23 ஆம் ஆண்டின் இதே காலக் கட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.5 சதவீதமாக இருந்த குடும்பங்களின் மொத்த நிதிச் சேமிப்பானது முந்தைய ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், 10.8 சதவீதமாகச் சற்று அதிகரித்தது.
- இருப்பினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.5 சதவீதமாக இருந்த கடன் இருப்புகள் ஆனது 5.8 சதவீதமாக அதிகரித்தன.
- குடும்பங்களின் சொத்து சேமிப்பானது, 2022-23 ஆம் ஆண்டில் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத உச்சத்தை எட்டியது என்பதோடு குடும்பங்களின் மொத்தச் சேமிப்பு ஆனது ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 18.4 சதவீதமாகச் சரிந்தது.

## முன்கூட்டிய பரிமாற்ற விலை நிர்ணய ஒப்பந்தங்கள்



### What are APAs

Advance Pricing Agreements (APAs) are agreements made in advance between tax payer and tax authorities about the pricing of the related party transactions of the taxpayer for a specific period of time. These related party transactions, called transfer pricing, are source of much tax related dispute.

**WHAT ARE THE SAFEGUARDS NEEDED?**

The tax authorities maintain the confidentiality of the information provided or companies will not come forward to seek APA.

The assumptions in the APAs should be broad-based to allow for business peculiarities.

There should not be any roll back of any of the provisions as firms will act on the basis of APAs for years it is entered into

**WHAT IS THE KEY BENEFIT?**

APAs give taxpayers certainty about their transfer prices for their related party transactions, helping cut litigation and trouble.

**HOW IS THE AGREEMENT REACHED?**


The company seeking advance pricing agreements submits its detailed information about costs and margins to the tax authorities. Based on the information submitted and a comparison with what a similar arms length transaction would cost, tax authorities give their opinion.

- மத்திய நேரடி வரிகள் வாரியம் ஆனது 2023-24 ஆம் நிதியாண்டில் அதிக எண்ணிக்கையாக 125 முன்கூட்டிய பரிமாற்ற விலை நிர்ணய ஒப்பந்தங்களில் (APAs) கையெழுத்திட்டுள்ளது.
- இதில் 86 ஒரு தரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் 39 இருதரப்பு ஒப்பந்தங்கள் ஆகும்.
- APA திட்டம், விலையிடல் முறைகளை நிர்ணயிப்பதன் மூலம் பரிமாற்ற விலையிடல் களத்தில் வரி செலுத்துவோருக்கு விலை சார்ந்த உறுதியை வழங்க முயற்சிக்கிறது.
- இது தொடர்புடைய ஒப்பந்தத் தாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விலையானது எந்த தொடர்புமற்ற ஒப்பந்தத் தாரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விலைக்குச் சமமாக இருக்கும் சர்வதேசப் பரிவர்த்தனைகளின் விலையை அதிகபட்சமாக ஐந்து எதிர்கால ஆண்டுகளுக்கு முன் கூட்டியே தீர்மானிக்கிறது.

## மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி

- மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியானது 29.1 பில்லியன் டாலர் மதிப்பில் ஒரு இடம் முன்னேறி இந்தியாவின் ஐந்தாவது பெரிய ஏற்றுமதிப் பிரிவாக மாறியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியன்று நிறைவடைந்த நிதியாண்டில் 27.8 பில்லியன் டாலர் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்களின் ஏற்றுமதியினை விஞ்சியுள்ளது.
- மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியானது 24 சதவீதம் வளர்ச்சியடைந்தது. இது 2023 ஆம் நிதியாண்டில் 23.6 பில்லியன் டாலர் அதிகமாகும்.

- கடந்த ஆண்டை விட சுமார் 38 சதவீதம் அதிகரித்து 15.5 பில்லியன் டாலர்களை எட்டிய கைபேசி ஏற்றுமதியானது, மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 53 சதவீதம் பங்கினைக் கொண்டுள்ளது.




## நேரடி வரி வசூல் 2023-24





- மத்திய அரசானது, உபரி வரிகள் போக 2024 ஆம் நிதியாண்டில் 19.58 டிரில்லியன் ரூபாய் நேரடி வரி வருவாயினை ஈட்டியுள்ளது.
- இது 17.7% என்ற வருடாந்திர வளர்ச்சியைக் காட்டுகிறது என மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) கூறியுள்ளது.
- உபரி வரிகள் போக, தனி நபர் வருமான வரி வருவாய் ஆனது 2024 ஆம் நிதியாண்டில் 10.44 டிரில்லியன் ரூபாயாக இருந்தது என்ற நிலையில் இது 25.23% என்ற அளவில் வருடாந்திர வளர்ச்சியினை காட்டுகிறது.
- 2024 ஆம் நிதியாண்டில் உபரி வரிகள் ஈடு செய்வதற்கு முன்னதாக மொத்த நேரடி வரி வசூல் 23.37 டிரில்லியன் ரூபாயாக இருந்தது.
- அரசாங்கம் ஆனது முதலில் நிகர நேரடி வரி வருவாய் 18.23 டிரில்லியன் ரூபாய் ஆக இருக்கும் என மதிப்பிட்டிருந்தது. ஆனால் 2025 ஆம் நிதியாண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அரசாங்கம் அதனை சுமார் 19.45 டிரில்லியன் டாலராக மறு மதிப்பீடு செய்தது.

## மேம்படுத்தக்கூடிய தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரம்

- ஹிட்டாச்சி பண வழங்கீட்டு சேவை வழங்கல் நிறுவனமானது, இந்தியாவில் மேம்படுத்தக் கூடிய தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரத்தினை அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரங்களை எந்த நேரத்திலும் பண மறுசுழற்சி இயந்திரமாக (CRM) மேம்படுத்தலாம்.
- இந்தியாவின் முதல் மேம்படுத்தக்கூடிய தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரம் இது ஆகும்.
- மேம்படுத்தக் கூடிய தானியங்கு பண வழங்கீட்டு இயந்திரம் ஆனது, வங்கிகள் தங்கள் முதலீட்டைப் பாதுகாக்கவும், அலுவலகம் சாரா இடங்களில் உள்ள பண வைப்பு வசதியை உள்ளடக்கிய தங்கள் சேவைகளை விரிவுபடுத்தவும் வழிவகுக்கும்.



## நிகர குடும்ப சேமிப்பு வீழ்ச்சி




- இந்தியாவின் நிகர குடும்ப சேமிப்பு ஆனது, 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைந்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

- 2023 ஆம் நிதியாண்டில் நிகர குடும்ப சேமிப்பானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 5.3 சதவீதமாக குறைந்துள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 7.3 சதவீதத்தினை விட மிக குறைந்த அளவாகும்.
- இதே காலக்கட்டத்தில் வீட்டுக் கடன்களிலும் அதிகபட்ச மாற்றம் ஏற்பட்டுள்ளது.
- வருடாந்திரக் கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.8% ஆக உள்ளது என்ற நிலையில் இது 1970 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு பதிவான இரண்டாவது மிக உயர்ந்த நிலையாகும்.

## இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 2024


- இந்தியாவின் மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதியானது ஆண்டிற்கு ஆண்டு 9.67 சதவீதம் அதிகரித்து 2023-24 ஆம் ஆண்டில் 27.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ஆனால், கடந்த நிதியாண்டில் மொத்த ஏற்றுமதி 3 சதவீதம் குறைந்துள்ளது.
- மார்ச் மாதத்தில் பதிவான மருந்து ஏற்றுமதி 12.73 சதவீதம் அதிகரித்து, 2.8 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது என்ற நிலையில் 2022-23 ஆம் ஆண்டில், மருந்து ஏற்றுமதி 25.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, நெதர்லாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் பிரேசில் ஆகியாவை கடந்த நிதியாண்டில் இந்தத் துறையில் முன்னணியில் இருந்த முதல் ஐந்து ஏற்றுமதிச் சந்தைகள் ஆகும்.
- அமெரிக்க நாடானது இந்தியாவின் மொத்த மருந்து ஏற்றுமதியில் 31 சதவீதத்திற்கும் அதிகமானப் பங்கினைக் கொண்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு மற்றும் நெதர்லாந்து (தலா 3 சதவீதம்) உள்ளன.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவிற்கான விண்வெளி நிலையம் - நாசா


- நாசா நிறுவனம் ஆனது, சர்வதேச மற்றும் தனியார் பங்குதாரர்கள் குழுவுடன் இணைந்து, நிலவிற்கான (லூனார் கேட்வே) விண்வெளி நிலையம் எனப்படும் சிறிய விண்வெளி நிலையத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளது.
- தற்போதைய திட்டம் ஆனது, இந்த நிலையத்தினை இரு வெவ்வேறு வளைவுகள் கொண்ட நேர்கோட்டு வகையிலான ஒளிவட்ட சுற்றுப் பாதையில் (NRHO) நிலை நிறுத்துவதாகும்.
- இந்த எரிபொருள் செயல்திறன் மிக்கச் சுற்றுப்பாதையானது பூமி மற்றும் சந்திரனால் உருவாக்கப்படும் நடுநிலை வகை ஈர்ப்புப் புள்ளிகளில் உள்ள சாதக நிலையினைப் பயன்படுத்திக் கொள்கிறது.
- NRHO அதிக நீள்வட்டமானது என்பதால் இந்த விண்வெளி நிலையம் ஆனது, நிலவினை நெருங்கும் போது தோராயமாக 1,865 மைல்கள் (3,000 கிலோமீட்டர்) தொலைவிலும், ஆனால் பின்னர் அது சுமார் 43,500 மைல்கள் (70,000 கிலோமீட்டர்) தொலைவு வரை பயணிக்கும்.
- நான்கு விண்வெளி வீரர்கள் 90 நாட்கள் இந்த நிலையத்தில் தங்குவதற்கு ஏற்ற சில சூழல்களை வழங்கும் என்று ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) கூறுகிறது.




## நுண்ணுயிர் எதிர்ப்பி ஜோசுரபால்பின்

- அசினெட்டோபாக்டர் பாமன்னி என்ற மருந்து-எதிர்ப்பு திறன் கொண்ட ஒரு வகை பாக்டீரியத்தை எதிர் கொள்ளும் திறன் கொண்ட ஒரு புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- ஜோசுரபால்பின் ஆனது, எலிகளின் மாதிரிகளில் கண்டறியப்பட்ட CRAB என்ற வகை (கார்பாபேனம்-எதிர்ப்புத் திறன் கொண்ட அசினெட்டோபாக்டர் பாமன்னி) பாக்டீரியாவால் உண்டான நிமோனியா மற்றும் செப்சிஸ் ஆகியவற்றிற்கு எதிரான செயல்திறனை கொண்டதாக கண்டறியப்பட்டுள்ளது.
- A. பாமன்னி புரத மூலக்கூறுகளைத் தடுப்பதன் மூலம் லிப்போபோலிசாக்கரைடு (LPS) மூலக்கூறின் இயக்கம் என்ற ஒரு முக்கிய செயல்முறையைத் தடுக்கிறது.

- கிராம்-நெகட்டிவ் பாக்டீரியாவின் வெளிப்புற-சவ்வு கட்டமைப்பை உருவாக்கச் செய்வதற்காக பாக்டீரியாவின் மேற்பரப்பிற்கு லிப்போபோலிசாக்கரைடுகளைக் கொண்டு செல்வதற்கு இந்த மூலக்கூறுகள் அவசியம் ஆகும்.
- ஜோசுரபால்பின் லிப்போபோலிசாக்கரைடு இயக்கத்தினைத் தடுக்கிறது என்பதோடு இதன் மூலம் செல்களில் லிப்போபோலிசாக்கரைடு மிக அசாதாரணமான வகையில் திரண்டு பாக்டீரியத்தினை அழிக்கும்.




Zosurabalpin

**OpenAI: சோரா**




- OpenAI நிறுவனம் ஆனது சோரா என்ற புதிய ஆக்கப்பூர்வமிக்க செயற்கை நுண்ணறிவு அமைப்பினை உருவாக்கியுள்ளது என்பதோடு இது உரைகளிலிருந்து குறுகிய நேர ஒளிப்படக் காட்சிகளை உருவாக்குகிறது.
- சோரா "டிஃப்யூஷன் டிரான்ஸ்பார்மர் மாடல்" (விரவல் மாற்றி மாதிரி) என்று அழைக்கப் படும் உரை மற்றும் புகைப்படத்தை உருவாக்கும் கருவிகளின் பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைக்கிறது.

- சோரா என்பது உரையிலிருந்து ஒளிப்படக்காட்சிகளை உருவாக்குவதற்கான முதல் வகையிலான மாதிரி இல்லை.
- இதற்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிகள், மெட்டா நிறுவனத்தின் ஈமு, ரன்வே நிறுவனத்தின் ஜென்-2, ஸ்டேபிலிட்டி AI நிறுவனத்தின் நிலையான ஒளிப்படக் காட்சி விரவல் மற்றும் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கூகுளின் லூமியர் ஆகியவை ஆகும்.

## 'ஓல்ட் ஸ்மோக்கர்' இராட்சத செந்நிற நட்சத்திரம்

- அண்டத்தின் மையத்திற்கு அருகில் "ஓல்ட் ஸ்மோக்கர்" என்ற பெயர் கொண்ட புதிய வகை செந்நிற இராட்சத நட்சத்திரத்தினை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த நட்சத்திரத்தின் பிரகாசம் ஆனது புகை மூட்டத்தால் தற்காலிகமாக மறைக்கப் படுகிறது.
- அண்டத்தின் அந்தப் பகுதியில் நட்சத்திரத்தின் வளிமண்டலத்தில் மிக அதிக தூசிப் படலத்தினை உருவாக்கக்கூடிய மேலும் பல கனமான தனிமங்கள் இருக்கக் கூடும் என்று தெளிவுபடுத்துகிறது.
- அவர்கள் இது போன்ற 32 புதிதாக உருவான நட்சத்திரங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- ஆராய்ச்சியாளர்கள் இவற்றினை "ஒரு தொகுதியில் இதுவரையில் யாரும் கண்டறியப் படாத மிகப்பெரிய எண்ணிக்கை" என்று விவரித்துள்ளனர்.




## அலாஸ்கா அம்மை: ஆர்த்தோபாக்ஸ் வைரஸ்

- பெரியம்மை, பசு அம்மை மற்றும் குரங்கம்மை (mpox) போன்ற ஒரே வைரஸ் குடும்பத்தினைச் சேர்ந்த அலாஸ்கா அம்மை என்ற வைரஸ் தொற்றினால் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட முதல் உயிரிழப்பு பதிவானது.
- 2015 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் ஆனது, இதற்கு முன்னதாக இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்ட மற்ற ஆறு நபர்களில் லேசான நோய் அறிகுறிகளையே கொண்டிருந்தது.
- அலாஸ்கா அம்மை என்பது 2015 ஆம் ஆண்டில் அலாஸ்காவின் ஃபேர்பேங்க்ஸ் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்ட ஆர்த்தோபாக்ஸ் வைரஸ் ஆகும்.

- தற்போது, 10,000க்கும் மேற்பட்ட வைரஸ் வகைகள் சர்வதேச வைரஸ் வகைபிரித்தல் குழுவால் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- அவற்றில் சுமார் 270 வைரஸ் வகைகள் மக்களில் தொற்றினை ஏற்படுத்தக்கூடியது என்பதும் அறிந்த ஒன்றாகும்.





## Pi – தனிநபர் பயன்பாடு சார்ந்த செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருள்

- இன்ஃப்லெக்சன் AI நிறுவனமானது, பயனருக்கு ஏற்ற ஒரு சூழல் கொண்ட Pi தனிநபர் பயன்பாட்டு உதவி அமைப்பு என்ற அதன் உரையாடு மென்பொருளினை இயக்கும் ஒரு பெரிய மொழி மாதிரியின் மேம்பட்ட வடிவமான இன்ஃப்லெக்சன் 2.5 என்ற அதன் சமீபத்திய மொழி மாதிரியினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இன்ஃப்லெக்சன் AI என்பது கலிபோர்னியாவில் அமைந்துள்ள டீப்மைன்ட் மற்றும் லிங்க்டுஇன் ஆகியவற்றின் முன்னாள் இணை நிறுவனர்களால் நிறுவப்பட்ட செயற்கை நுண்ணறிவு நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனம் ஆகும்.
- அவை 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில், Pi எனப்படும் அவற்றின் தனிப் பயன்பாட்டு செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளினை அறிமுகப்படுத்தின.
- Pi என்பது ஒரு செயற்கை நுண்ணறிவு நுட்பம் சார்ந்த உரையாடு மென்பொருள் ஆகும் என்ற நிலையில் இதனைப் பயன்படுத்தி ஒருவர் ஆழ்ந்த மற்றும் மிகவும் அர்த்தமுள்ள உரையாடல்களை மேற்கொள்ள முடியும்.

## மைட்டோகாண்ட்ரியல் காக்ஸியெல்லா எதிர்வினையாக்கிகள்


- மைட்டோகாண்ட்ரியல் (உயிரணு ஆற்றல் நுண்ணுறுப்பு) காக்ஸியெல்லா எதிர் வினையாக்கிகள்F (MceF) என்று பெயரிடப்பட்ட இதுவரை அடையாளம் காணப்படாத புரதத்தை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- இது செல்களுக்குள்ளான கிராம்-நெகட்டிவ் பாக்டீரியம் காக்ஸியெல்லா பர்னெட்டியால் உற்பத்தி செய்யப்படும் ஒரு ஆக்ஸிஜனேற்றப் புரதமாகும்.

- ❖ MceF அதிகளவில் பாக்டீரியாக்களைக் கொண்டிருந்தாலும் மனித உயிரணு ஆரோக்கியத்திற்கு உதவும் வகையில் உள்ளது.
- ❖ கோக்ஸியெல்லா பர்னெட்டி ஆனது மைட்டோகாண்ட்ரியாவில் குளுதாதயோன் பெராக்சிடேஸ் 4 (GPX4) உடன் தொடர்பு கொண்டு MceF புரதத்தினை வெளியிடுகிறது.
- ❖ இந்தத் தொடர்பானது மைட்டோகாண்ட்ரியல் செயல்பாட்டை மேம்படுத்தி, பாலூட்டிகளின் உயிரணுக்களில் நோய்க்கிருமி நகலெடுப்புடன் தொடர்புடைய உயிரணு சேதம் மற்றும் உயிரணு இறப்பைத் தடுக்கிறது.





## கார்பன் நுண்குழாய்களின் சோடியம் வினையூக்கி சேர்க்கை முறை

- ❖ 750 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் பிரதான கண்ணாடி மூலக்கூறுகளில் நேரடியாக கார்பன் நுண்குழாய்களை ஒருங்கிணைக்கும் ஒரு புதிய முறையை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ கார்பன் நுண்குழாய்கள் (CNT) அசாதாரணப் பண்புகளைக் கொண்டிருப்பதால் நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ❖ வழக்கமான CNT சேர்க்கை முறைகளுக்கு அதிக வெப்பநிலை (~1000 டிகிரி செல்சியஸ்) மற்றும் உலோக வினையூக்கிகள் (Fe, Co, மற்றும் Ni) தேவைப்படுகிறது.
- ❖ இந்த வினையூக்கிகள் உயிரி இணக்கத் தன்மையினைக் கொண்டதாக இருப்பதால் சாத்தியமான உயிரி மருத்துவத்தில் பயன்படுத்தப்படக் கூடியதாக உள்ளது.




## திரிக்கை வடிவிலான காந்தப் புலம்

- பால்வெளி அண்டத்தின் மிகப்பெரிய கருந்துளையைச் சுற்றி சுழல் வடிவத்தில் திருகியமைந்த வலுவான மற்றும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு காந்தப்புலத்தை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தக் காந்தப்புலத்தின் அமைப்பு ஆனது சாகிட்டாரியஸ் A*, அல்லது Sgr A* எனப் படும் கருந்துளையின் விளிம்பிலிருந்து வெளிப்படுகிறது.
- இது இதுவரை படம்பிடிக்கப்பட்ட ஒரே கருந்துளையைச் சுற்றியுள்ள அமைப்பு ஒன்றை ஒத்திருக்கிறது.
- மிகப்பெரிய கருந்துளையானது மெஸ்ஸியர் 87 அல்லது M87 எனப்படும் அருகிலுள்ள அண்டத்தின் மையத்தில் அமைந்துள்ளது.
- வலுவான காந்தப்புலங்கள் ஆனது கருந்துளைகளுக்கான பொதுவான அம்சமாக இருக்கலாம் என்பதை இது குறிக்கிறது.
- M87* என்ற M87 கருந்துளையைச் சுற்றியுள்ள காந்தப்புலம் ஆனது, சக்தி வாய்ந்த அயனியாக்கப்பட்ட காந்தப்புல தாரைகளை விண்வெளியில் செலுத்துவதற்கு மிகவும் உதவுகிறது.
- Sgr A* கருந்துளையினைச் சுற்றி இன்றுவரை இத்தகைய அயனியாக்கப்பட்ட காந்தப் புல தாரைகள் கண்டறியப்படவில்லை என்றாலும், அவை இருக்கக் கூடும் என்றும், எதிர்காலத்தில் கண்டறியப்படும் என்பதை இது குறிக்கிறது.
- Sgr A* நமது சூரியனை விட 4 மில்லியன் மடங்கு நிறை கொண்டது மற்றும் சுமார் 26,000 ஒளியாண்டுகள் - ஒளியானது பூமியிலிருந்து ஒரு வருடத்தில் பயணிக்கும் தூரம், 5.9 டிரில்லியன் மைல்கள் (9.5 டிரில்லியன் கி.மீ.) - தொலைவில் அமைந்துள்ளது.



## E Ink திரைகள்




- E Ink திரைகள் என்பது அமேசான் கிண்டில் போன்ற இணையவழி வாசிப்பு கருவிகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு வகை திரை தொழில்நுட்பமாகும்.
- இந்த தொழில்நுட்பமானது முதன் முதலில் 1990 ஆம் ஆண்டுகளில் மாசசூசெட்ஸ் தொழில் நட்பக் கல்வி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு தற்போது E Ink கார்பரேசன் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமானதாக உள்ளது.
- நேர் மின்னூட்டம் செய்யப்பட்ட வெள்ளைத் துகள்கள் மற்றும் எதிர் மின்னூட்டம் செய்யப் பட்ட கருப்பு நிறத் துகள்கள் ஆகியவற்றினால் நிரப்பப்பட்ட சிறிய நுண்ணிய குழல்களைப் பயன்படுத்தி இந்தத் திரைகள் செயல்படுகின்றன.
- இது திரையின் வெவ்வேறுப் பகுதிகளுக்கு நேர் அல்லது எதிர் மின்னூட்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம், வெள்ளை அல்லது கருப்பு துகள்கள் மேற்பரப்பில் எழும்பி, திரையில் உரை மற்றும் படங்களை உருவாக்கும்.
- E Ink திரைகள் காகிதத்தைப் போலவே ஒளியைப் பிரதிபலிக்கின்றன.
- பின்னொளிர்வு தேவையில்லை என்பதால், உருவம் மாறும்போது மட்டுமே ஆற்றலைப் பயன்படுத்துவதால் அவற்றிற்கு மிகக் குறைந்த ஆற்றலே தேவைப்படுகிறது.


## கலாம் – 250

- முன்னணி விண்வெளித் தொழில்நுட்ப நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், கலாம் - 250 எனப்படுகின்ற விக்ரம்-1 என்ற விண்வெளி ஏவு கலத்தின் இரண்டாம் நிலையின் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது வளிமண்டல நிலையில் இருந்து விண்வெளியின் தொலைதூர வெற்றிடத்திற்கு ஏவுகலத்தினைச் செலுத்துகிறது என்பதால் ஏவு கலத்தின் உருவாக்கத்தில் இரண்டாம் நிலையானது ஒரு முக்கியமான கட்டமாகும்.
- கலாம்-250 என்பது அதிக வலிமை கொண்ட கார்பன் கலவையிலான ஏவுகல என்ஜின் ஆகும்.
- இது திட எரிபொருள் மற்றும் உயர் செயல்திறன் கொண்ட எத்திலீன்-புரோப்பிலீன்-டைன் டெர்பாலிமர்ஸ் (EPDM) வெப்ப பாதுகாப்பு அமைப்பு (TPS) ஆகியவற்றைப் பயன்படுத்துகிறது.



## PRATUSH தொலைநோக்கி

- வானியலாளர்கள் நிலவின் மீதும், அதைச் சுற்றியுள்ள சுற்றுப்பாதையிலும் உயர் தெளிவுத் திறன் கொண்ட தொலைநோக்கிகளை நிறுவுவதன் மூலம் பேரண்டத்தில் ஒரு புதிய கண்காணிப்பு இடத்தினைத் திறக்க திட்டமிட்டு வருகின்றனர்.
- இதனை உருவாக்குவதற்காக இந்தியாவின் PRATUSH உட்பட, உலகெங்கிலும் உள்ள வானியலாளர்களிடமிருந்து எண்ணற்ற முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.
- PRATUSH (ஹைட்ரஜனில் இருந்து பெறப்படும் சமிஞ்கைகளை நன்கு பயன்படுத்திப் பிரபஞ்சத்தின் மறு அயனியாக்கத்தினை- மறுசீரமைப்பை - ஆய்வு செய்தல்) ஆனது நிலவின் தொலைதூர பகுதியில் அமையும்.
- இஸ்ரோவின் மிக அதீத ஒத்துழைப்புடன் பெங்களூரில் உள்ள இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தினால் PRATUSH கட்டமைக்கப்படுகிறது.




## கொரியாவின் அணுக்கரு இணைவு உலை

- கொரியாவின் மேம்பட்ட அணுக்கரு இணைவு சோதனைக்கான ஆராய்ச்சி (KSTAR) சாதனத்தின் அணுக்கரு இணைவு உலையைப் பயன்படுத்தி அறிவியலாளர்கள் புதிய உலக சாதனை படைத்துள்ளனர்.
- இந்த அணுக்கரு இணைவு உலைகள் ஆனது ஆய்வுகளின் போது 48 வினாடிகளுக்கு 100 மில்லியன் டிகிரி செல்சியஸ் பிளாஸ்மா வெப்பநிலையை உருவாக்கின.

- ❖ இந்த வெப்பநிலையானது சூரியனின் மையப்பகுதியில் உள்ள 15 மில்லியன் டிகிரி செல்சியஸ் என்ற வெப்ப நிலையை விட ஏழு மடங்கு அதிகமாகும்.
- ❖ இந்த அமைப்பின் முந்தையச் சாதனையானது, 2021 ஆம் ஆண்டில் 30 வினாடிகளில் இயக்கப் பட்ட ஆய்வாகும்.



## உலகின் மிகவும் சக்தி வாய்ந்த சீரொளிக் கற்றை




- ❖ ருமேனியா நாட்டில் உருவாக்கப்பட்ட உலகின் மிகவும் சக்திவாய்ந்த சீரொளிக் கற்றையினை பொறியாளர் அன்டோனியா டோமா செயல்படுத்தினார்.
- ❖ இந்த சீரொளிக் கற்றையானது சுகாதாரத் துறை முதல் விண்வெளி வரையிலான அனைத்து துறைகளிலும் புரட்சிகரமான முன்னேற்றங்களுக்கு வழி வகுக்கும்.
- ❖ சீரொளிக் கற்றையின் பல்வேறு கூர்மையான கதிர்கள் உலகை குறித்த ஆழ்ந்த பரந்த தகவலைப் பெறவும், அதை மேலும் நன்கு செம்மைப்படுத்தவும் புதிய வாய்ப்புகளைத் தருகின்றன.
- ❖ இந்த அமைப்பு ஆனது ஒரு ஃபெம்டோசெகண்ட் (ஒரு பில்லியன் வினாடிக்கு ஒரு மில்லியனில் ஒரு பங்கு) என்ற வரிசையில் மிகக் குறுகிய காலத்திற்கு 10 பெட்டாவாட் (10 முதல் 15 வாட்ஸ் திறன்) என்ற அதிகபட்ச அளவை அடையும் திறன் கொண்டது.

## அக்னி-பிரைம் ஏவுகணை 2024

- புதிய தலைமுறை தொழில்நுட்பத்தைச் சார்ந்த அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட 'அக்னி பிரைம்' ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது.
- அக்னி வகை ஏவுகணைகளில் 'அக்னி பிரைம்' அல்லது 'அக்னி-P' என்பது புதிய தலைமுறை தொழில்நுட்பத்தைச் சார்ந்த அணுசக்தித் திறன் கொண்ட மேம்படுத்தப் பட்ட வகையாகும்.
- இந்த ஏவுகணை அதிகபட்சமாக 1,000 முதல் 2,000 கிலோமீட்டர் தொலைவு வரையில் செல்லக் கூடிய உலோகக் கொள்கலன் மூலம் ஏவும் வசதி கொண்ட இரண்டு கட்ட எரி பொருள் கொண்ட ஏவுகணையாகும்.
- 'அக்னி பிரைம்' ஏவுகணை என்பது இதுவரையில் உருவாக்கப்பட்ட அனைத்து அக்னி ரக ஏவுகணைகளையும் விட இலகுவானது.
- இது அக்னி 3 ரக ஏவுகணையை விட சுமார் 50 சதவீதம் குறைவான எடை கொண்டது மற்றும் புதிய வழிகாட்டுதல் மற்றும் உந்துவிசை அமைப்புகளைக் கொண்டுள்ளது.





## வியாழனின் துணைக் கோளில் ஓசோன்

- வியாழனின் துணைக் கோளான கலிஸ்டோவில் ஓசோன் இருப்பதைக் குறிக்கும் வலுவான ஆதாரங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கலிஸ்டோவில் ஓசோன் இருப்பது கண்டறியப்பட்ட நிகழ்வானது அங்கு ஆக்ஸிஜன் இருப்பதைக் குறிக்கிறது.
- சனிக் கோளிற்கு அடுத்தபடியாக, சூரிய குடும்பத்தில் அதிக துணைக் கோள்களைக் கொண்ட கோள் வியாழன் ஆகும்.
- கலிஸ்டோ வியாழனின் மிகப்பெரிய துணைக்கோள்களில் ஒன்றாகும் மற்றும் கேனிமேட் மற்றும் டைட்டனுக்கு அடுத்தப்படியாக சூரிய குடும்பத்தில் உள்ள மூன்றாவது பெரியத் துணைக்கோள் ஆகும்.
- அதன் பிரம்மாண்டமான அளவை விட, கலிஸ்டோ அதன் கட்டமைப்பினால் வேறுபட்டு காணப்படுகிறது.

- அது புதன் கிரகத்தைப் போல் பெரியதாக இருந்தாலும், அதன் நிறை பாதிக்கும் குறைவாகவே உள்ளது.
- கலிஸ்டோ முதன்மையாக உறைந்த பனி, பாறைப் பொருட்கள், சல்பர் டை ஆக்சைடு மற்றும் சில கரிமச் சேர்மங்களால் ஆனது.
- இந்த பொருட்கள் ஆனது இந்தத் துணைக்கோளினைச் சூரிய குடும்பத்தில் பூமியைத் தவிர்த்து உயிர் வாழ்வதற்கு உகந்தச் சூழல்களை ஆதரிப்பதற்கான ஒரு சாத்தியமான கிரகமாக மாற்றுகின்றன.




## CAR T-செல் சிகிச்சை - NexCAR19





- இந்தியாவின் முதல் புற்று நோய் எதிர்ப்பு CAR-T செல் சிகிச்சையை இந்தியக் குடியரசுத் தலைவர் அறிமுகப்படுத்தினார்.

- NexCAR19 CAR-T சிகிச்சையானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் CAR-T சிகிச்சையாகும்.
- மேலும், இது உலகின் மிகவும் மலிவான CAR-T சிகிச்சையாகும்.
- CAR-T செல் சிகிச்சையா ஆனது மருத்துவ அறிவியலில் பல்வேறு மிகவும் சிறப்பான முன்னேற்றங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது சில காலமாக வளர்ச்சிப் பெற்ற நாடுகளில் கிடைக்கப் பெறுகிறது ஆனால் இது மிகவும் விலை உயர்ந்தது என்பதோடு உலகெங்கிலும் உள்ள மிகவும் பெரும்பாலான நோயாளிகளால் அணுக முடியாததாக உள்ளது.

## முழு சூரிய கிரகணம்


- வட அமெரிக்காவில் ஏற்பட்ட முழு சூரிய கிரகணம் ஆனது மெக்சிகோ, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் தென்பட்டது.
- பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் நிலவு நகரும் போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது.
- நிலவு ஆனது சூரியனின் ஒளியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மறைக்கும்போது உலகின் சில பகுதிகளில் பெரும் நிழலை ஏற்படுத்துகிறது.
- முழு சூரிய கிரகணம், வருடாந்திர சூரிய கிரகணம், பகுதியளவு சூரிய கிரகணம் மற்றும் கலப்பு சூரிய கிரகணம் உட்பட நான்கு வெவ்வேறு வகையான சூரிய கிரகணங்கள் உள்ளன.
- நிலவானது சூரிய ஒளியை முழுவதுமாக மறைக்கும் போது, அந்த நேரத்தில் நிலவின் நிழலின் மையத்தில் உள்ள பகுதிகள் முழு சூரிய கிரகணத்திற்கு உள்ளாகின்றன.
- பூமியில் உள்ள ஒரு குறிப்பிட்ட இடம் ஆனது 400 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே முழு சூரிய கிரகணத்தைக் காண்கிறது.




## ஹாலி வகை வால் நட்சத்திரம் : சேய்மை தூரப் புள்ளி

- 1P ஹாலி என்றழைக்கப்படும் ஹாலியின் வால் நட்சத்திரம் சூரியனிலிருந்து அதன் சேய்மை தூரப் புள்ளியை அடைந்து, மீண்டும் சூரியக் குடும்பத்தை நோக்கி நீண்ட பயணத்தைத் தொடங்கவுள்ளது.

- உலகில் மிகவும் நன்கு அறியப்பட்ட வால்மீன்களில் ஹாலியின் வால்மீனும் ஒன்றாகும்.
- இது 75 ஆண்டுகள் முதல் 79 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமிக்கு அருகில் வருகிறது என்ற நிலையில் இது மற்ற வால்மீன்களைப் போலவே சூரியனுக்கு அருகில் வரும் போது இரவில் வானில் தோன்றும்.
- ஹாலியின் வால் நட்சத்திரம் ஆனது தற்போது அதன் சேய்மை தூர நிலையை அடைந்து கொண்டிருப்பதால் அடுத்த 40 ஆண்டுகளுக்கு பூமியில் இருப்பவர்களால் இதனைப் பார்க்க முடியாது.
- ஹாலியின் வால் நட்சத்திரம் ஜூலை 28, 2061 அன்று மீண்டும் சூரியனுக்கு மிக அருகில் வரக் கூடும்.




## OptiDrop இயங்குதளம்




- பெங்களூரில் உள்ள உயிர்மங்கள் மற்றும் மூலக்கூறு தளங்களுக்கான மையம் (C-CAMP) ஆனது OptiDrop என்ற புதிய இயங்கு தளத்தை உருவாக்கியுள்ளது.
- இது சிறு துளிகளுள் ஒன்றிணைக்கப்பட்ட ஒற்றைச் செல்களை மிகவும் எளிதாகவும் துல்லியமாகவும் ஆய்வு செய்ய உதவுகிறது.
- இந்தத் தளமானது நோய் கண்டறிதல், சிகிச்சை முறைகள், வேளாண்மை மற்றும் விலங்குகளின் ஆரோக்கியம் ஆகியவற்றில் பல்வேறு சாத்தியமான பயன்பாடுகளை கொண்டுள்ளது.

## டிராகன்களின் தாய் எனப்படும் வால் நட்சத்திரம்



- அதிகாரப்பூர்வமாக Comet 12P/Pons-Brooks என்று பெயரிடப்பட்ட, "டிராகன்களின் தாய்" எனப்படும் வால் நட்சத்திரம் ஆனது, வடக்கு அரைக்கோளப் பகுதிகளின் வானத்தில் அரிதாகத் தோன்றுகிறது.
- ஒவ்வொரு 71 ஆண்டுகளுக்கும் ஒருமுறை சூரியனைச் சுற்றி வரும் இந்த மிகவும் தனித்துவமான "ஹாலி-வகை" வால் நட்சத்திரம் ஆனது, தற்போது மாலை வேலை நிறைவாகிய பிறகு புலப்படும்.
- இது 1954 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதன் முதல் தோற்றத்தைக் குறிக்கிறது.
- இந்த வால் நட்சத்திரம் சிறிய "கப்பா-டிராகோனிட்ஸ்" விண்கல் பொழிவுடன் தொடர்பு கொண்டுள்ளது.
- இந்த வால் நட்சத்திரம் ஆனது ஒரு நகரத்தின் அளவில் 17 கி.மீ. அகலம் கொண்டது.

## இந்தியாவின் அணு கடிகாரங்கள்



- இந்தியா தனது NVS-1 NavIC செயற்கைக்கோளின் வெற்றிகரமான ஏவுதல் மற்றும் நிலை நிறுத்துதலைத் தொடர்ந்து சுயச் சார்பினை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
- இந்தியாவின் ரூபிடியம் அணுக் கடிகாரம் அந்த செயற்கைக்கோளில் வைக்கப் பட்டு உள்ளது.

- இதுவரையில் 5 நாடுகள் மட்டுமே தங்கள் விண்வெளி ஆய்வுத் திட்டங்களுக்காக இவற்றைப் பயன்படுத்தியுள்ளன.
- ஒரு ரூபிடியம் அணுக் கடிகாரம் ஆனது, சீசியம் தரநிலை அளவிலான மற்ற அணுக் கடிகாரங்களைப் போலவே செயல்படுகிறது.

## Igla-S சுமந்து செல்லக் கூடிய வகையிலான வான்வழி பாதுகாப்பு அமைப்பு

- இந்திய இராணுவம் ஆனது ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 24 Igla-S மனிதனால் சுமந்து செல்லக்கூடிய வகையிலான வான்வழிப் பாதுகாப்பு அமைப்பின் (MANPADS) முதல் தொகுதியைப் பெற்றுள்ளது.
- இந்திய இராணுவத்தின் மிகக் குறுகிய தூர வரம்புடைய வான்வழிப் பாதுகாப்பு (VSHORAD) திறன்களை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு வாங்கப் படுகிறது.
- Igla-S அமைப்பு ஆனது ஓர் ஏவு வாகனம் மற்றும் ஓர் ஏவுகணையைக் கொண்டுள்ளது.
- இதன் முதல் தொகுதியானது ரஷ்யாவிலிருந்து வழங்கப் பட்டுள்ளது என்ற நிலையில் மீதமுள்ள பாதுகாப்பு ஆயுத அமைப்புகள் ரஷ்யாவிலிருந்து தொழில்நுட்ப பரிமாற்றம் (ToT) மூலம் இந்தியாவில் தயாரிக்கப்படும்.




## பெரேக்ரின் ஆய்வுக் கலம்- 1



- தனியார் நிறுவனத்தின் சந்திர தரையிறங்கு கலமான பெரேக்ரின் ஆய்வுக் கலம் -1, 50 ஆண்டுகளுக்குப் பிறகு நிலவில் தரையிறங்குவதற்கான முதல் முயற்சியை மேற் கொண்டது.
- இருப்பினும், விண்கலம் ஏவப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு ஏற்பட்ட ஒரு "முக்கியமான" எரிபொருள் கசிவை தொடர்ந்து அதன் தரையிறங்கும் முயற்சியானது தோல்வியடைந்தது.
- இந்த ஒழுங்கின்மையானது, இந்த தரையிறங்கு கலத்தினை, "ஒரு நிலையான மற்றும் சூரியனை நோக்கிய நோக்குநிலையை அடைவதில்" இருந்து தடுக்கிறது.
- ஆஸ்ட்ரோபோடிக் எனப்படும் அமெரிக்க நிறுவனம் ஆனது, ஒரு தோட்டக் கொட்டகையின் அளவிலான எந்திர தரையிறங்குக் கலத்தின் பல்வேறு கட்டுப்பாட்டு செயல்முறைகளை கையாளுகிறது.
- ஜான் F. கென்னடி மற்றும் ஸ்டார் ட்ரெக் பிரபலங்கள் உள்ளிட்ட நன்கு அறியப்பட்ட முன்னாள் அமெரிக்க அதிபர்களின் டிஎன்ஏ-வினை இந்தத் தரையிறங்கு கலமானது சுமந்து சென்றது.

## அமெரிக்காவின் ஒடிசியஸ்




- நிலவின் தென் துருவத்திற்கு அருகே தரையிறங்கிய பின்னர் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவின் மேற்பரப்பில் அமெரிக்கா தனது முதல் தரையிறக்கத்தினை மேற் கொண்டுள்ளது.
- ஒடிசியஸ் என்ற எந்திர தரையிறங்குக் கலமானது, நிலவின் தென் துருவத்திற்கு அருகில் உள்ள மலாபெர்ட் A என்ற பள்ளத்தில் திட்டமிட்டபடி தரையிறங்கியது.
- இன்று வரை, முன்னாள் சோவியத் ஒன்றியம், சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே நிலவில் விண்கலத்தை வெற்றிகரமாகத் தரையிறக்கி உள்ளன.
- இருப்பினும், நிலவிற்கு மனிதர்களை அனுப்பிய ஒரே நாடு அமெரிக்கா ஆகும்.

## ஜூக்-2 ஏவுகலம்


- ❖ சீனாவின் தனியார் விண்வெளி தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனமான லேண்ட் ஸ்பேஸ் டெக்னாலஜி உருவாக்கிய ஜுக்-2 என்ற ஏவுகலமானது மூன்று செயற்கைக் கோள்களை சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.
- ❖ இந்த ஏவுகலம் ஆனது மீத்தேன் மற்றும் திரவ ஆக்ஸிஜன் கலவை எரிபொருளினால் இயக்கப்பட்டது.
- ❖ வணிக ரீதியிலான செயற்கைக் கோள் ஏவுதல்களில் மீத்தேன்களைப் பயன்படுத்தச் செய்வது குறித்த பல்வேறு செலவுகளைக் குறைக்கவும், ஏவுகலங்களை மீண்டும் பயன்படுத்துவதை எளிதாக்கவும் உதவும்.
- ❖ தற்போது, இந்த ஏவுகலம் ஆனது 1.5 மெட்ரிக் டன் எடையுள்ள விண்வெளிப் பொருட்களை 500 கிலோமீட்டர் சுற்றுப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.
- ❖ எதிர்கால ஜுக்-3 ஏவுகலம் ஆனது, துருப்பிடிக்காத எஃகு உந்து கலன்கள் மற்றும் மீத்தேன்-திரவ ஆக்ஸிஜன் உந்து விசை இயந்திரங்களின் பல்வேறு தொகுப்புகளைப் பயன்படுத்துகிறது.




## 600வது காமா-கதிர் வெடிப்பு


- ❖ இந்தியாவின் ஆஸ்ட்ரோசாட் விண்வெளி தொலைநோக்கியானது, 600க்கும் மேற்பட்ட காமா-கதிர் வெடிப்பினை (GRB) கண்டறிந்ததன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- ❖ ஒவ்வொரு GRB நிகழ்வும் ஒரு மாபெரும் நட்சத்திரத்தின் அழிவினைக் குறிக்கும் அல்லது நியூட்ரான் நட்சத்திரங்களின் இணைவைக் குறிக்கிறது.

- GRB நிகழ்வுகள் ஆனது சூரியன் தனது வாழ்நாள் முழுவதும் வெளியிடும் ஆற்றலை விட நொடிகளில் அதிக ஆற்றலை வெளியிடுகின்ற பேரண்டத்தில் நிகழும் மிகவும் ஆற்றல் வாய்ந்த வெடிப்புகள் ஆகும்.
- GRB நிகழ்வுகள் ஒரு வினாடியின் ஒரு பகுதி முதல் பல நிமிடங்கள் வரை நீடிக்கும் என்பதோடு இதனுடன் சேர்ந்து கருந்துளையின் உருவாக்கமும் நிகழும்.




## புதிய வைரஸ் போன்ற உயிரியல் வடிவங்கள்

- ஒபெலிஸ்க்ஸ் எனப்படும் உயிரியல் மூலக்கூறுகள் ஆனது மனித வாய் மற்றும் குடலின் உள்ளே அதிக எண்ணிக்கையில் மறைந்து காணப்படுகின்றன.
- இந்த நுண்ணிய உட்பொருட்கள் ஒன்று அல்லது இரண்டு மரபணுக்களைக் கொண்ட வட்ட வடிவமான மரபணுப் பொருள்களாகும் என்ற நிலையில் இவை சுயாதீனமாக தண்டு வடிவில் மாறக் கூடியவை.
- வைரஸ்கள் மற்றும் வைராய்டுகளுக்கு இடைப்பட்ட நிலையிலான இந்தப் புதிய வடிவிலான உயிரினமானது எளிமை என்ற அளவீட்டில் இருப்பதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இவை 'ஒபெலிஸ்க்ஸ்' என்று அழைக்கப் படுகின்றன.




- இவை 1898 ஆம் ஆண்டில் வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து ஏறக்குறைய 70 ஆண்டுகளாக, உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றிற்கு இடையிலான நிலையில் உள்ள உயிரினங்கள் ஆகும்.


- 1971 ஆம் ஆண்டில் தியோடர் டைனர் என்ற தாவர நோயியல் நிபுணர் என்பவர் இந்த வைராய்டுகளைக் கண்டுபிடித்தார்.

## வளிமண்டல அலைகள் குறித்த ஆய்வு

- நாசா நிறுவனமானது, விண்வெளி வானிலையின் முக்கிய இயக்கிகளில் ஒன்றான பூமியின் வானிலையை ஆய்வு செய்வதற்காக வளிமண்டல அலைகள் குறித்த ஆய்வினைத் (AWE) தொடங்கியுள்ளது.
- இது பூமியைச் சுற்றி வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ISS) வெளிப்புறத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
- முகட்டு நிலையில் இருந்து, அது பூமியை நன்கு ஆய்வு செய்து, பொதுவாக ஏர்க்ளோ எனப்படும் வண்ணமயமான ஒளிப் பட்டைகளைப் பதிவு செய்கிறது.
- AWE என்பது நிலப்பரப்பு மற்றும் விண்வெளி வானிலைக்கு இடையிலான பல்வேறு தொடர்புகளை ஆய்வு செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்ட முதல்-வகையான நாசாவின் சோதனை முயற்சியாகும்.




## யுரேனஸ் மற்றும் நெப்டியூனைச் சுற்றி மூன்று புதிய துணைக்கோள்கள்





- நமது சூரிய குடும்பத்தில் மிக தொலைவில் உள்ள கோள்களான யுரேனஸ் மற்றும் நெப்டியூனைச் சுற்றி மூன்று புதிய துணைக்கோள்கள் இருப்பதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்தக் கண்டுபிடிப்பில் யுரேனசின் சுற்றுப்பாதையில் ஒரு துணைக்கோளும் - 20 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட இது போன்ற முதல் கண்டுபிடிப்பு - மற்றும் நெப்டியூனின் சுற்றுப்பாதையில் இரண்டு துணைக் கோள்களும் கண்டறியப் பட்டன.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனியன் துணைக்கோள் ஆனது மிக பனி நிறைந்த இந்தப் பெருங்கோளினைச் சுற்றி வருவதாகக் கண்டறியப்பட்ட 28வது துணைக்கோள் ஆகும் என்பதோடு மேலும் இது 5 மைல்கள் (8 கிலோமீட்டர்) விட்டம் கொண்ட சிறிய துணைக்கோள் ஆகும்.
- S/2023 U1 எனப்படும் துணைக் கோள் ஆனது, கிரகத்தை ஒரு முறை சுற்றி வர 680 பூமி நாட்கள் எடுத்துக் கொள்கிறது.
- பிரகாசமான S/2002 N5 துணைக்கோள் ஆனது 14 மைல்கள் (23 கிலோமீட்டர்) விட்டம் கொண்டதாகும் என்பதோடு இது நெப்டியூனின் சுற்றுப் பாதையை நிறைவு செய்ய சுமார் ஒன்பது ஆண்டுகள் ஆகும்.
- சுமார் 8.7 மைல்கள் (14 கிலோமீட்டர்) விட்டம் கொண்ட மங்கலான S/2021 N1 துணைக் கோள் ஆனது சுமார் 27 ஆண்டுகள் நீளமான சுற்றுப்பாதையைக் கொண்டுள்ளது.

## டெராஹெர்ட்ஸ் சேதத் தடுப்பு குறியீடுகள்


- மாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் டெராஹெர்ட்ஸ் அலைகளைப் பயன்படுத்தித் தங்களின் சேதத் தடுப்பு குறியீடுகளின் புதிய பல் செயலாக்கத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்த சிறியக் குறியீடு ஆனது RFIDகளை விட மிக கணிசமான அளவில் சிறியது மற்றும் மலிவானது ஆகும்.




- இது ஒரு பொருளின் குறியீட்டினை ஒட்டியிருக்கும் பசையில் நுண்ணிய உலோகத் துகள்களை இணைப்பதன் மூலம் ஒரு பெரிய பாதிப்பை நிவர்த்தி செய்யும்.
- டெராஹெர்ட்ஸ் அலைகள், பொருளின் மேற்பரப்பில் இந்தத் துகள்களால் உருவாகும் தனித்துவமான வடிவத்தைக் கண்டறியப் பயன்படுகிறது என்பதோடு, இது தனது மேற் பரப்பில் கைரேகை போன்ற அங்கீகார அமைப்பை உருவாக்குகிறது.

- இந்தப் புதிய சேதத் தடுப்புக் குறியீடு ஆனது, இவை அகற்றப்பட்டு, போலியான பொருளுடன் மீண்டும் இணைக்கப்படும் போது, அங்கீகரிப்பு முறையை சேதப்படுத்தி, போலிப் பொருட்கள் விற்கப்படுவதைத் தடுக்கிறது.
- உலோகத் துகள்களானவை டெராஹெர்ட்ஸ் அலைகளுக்கான ஒரு கண்ணாடியாகச் செயல்படுகின்றன என்பதோடு பசையினால் நிரப்பப்பட்ட ஒரு இடைமுகத்துடன் அது இணங்கியவுடன் நகலெடுக்க முடியாத ஒரு தனித்துவமானப் பிரதிபலிப்பு வடிவத்தை உருவாக்குகிறது.

## சூரியனின் முழு வட்டின் புகைப்படம்



- ஐரோப்பிய விண்வெளி முகமையின் ஒரு சூரிய ஆய்வு சுற்றுக்கலம் ஆனது இதுவரை அல்லாத அளவில் சூரியனின் முழு வட்டு மற்றும் வெளிப்புற வளிமண்டலமான கொரோனாவின் மிக விரிவான படத்தைப் படம் பிடித்துள்ளது.
- இந்த விண்கலம் ஆனது பூமிக்கும் சூரியனுக்கும் இடையே 75 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் நேரடியாகச் சென்ற போது இந்தப் படங்களை எடுத்தது.
- இது சூரியனின் மேல் வளிமண்டலத்தின் தீவிரச் சூழலலானது தோராயமாக ஒரு மில்லியன் டிகிரி செல்சியஸ் வெப்பநிலை கொண்டது என்று வெளிப்படுத்துகிறது.


## TSAT-1A செயற்கைக்கோள்

- டாட்டா அட்வான்ஸ்டு சிஸ்டெம்ஸ் லிமிடெட் & சேட்டெலாஜிக் ஆகியவை TSAT-1A எனப்படும் இந்தியாவின் முதல் தனியார், மீட்டருக்கும் குறைவான அளவில் துல்லிய தெளிவுத்திறன் வழங்கும் புவிக் கண்காணிப்புச் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியுள்ளன.
- இது இஸ்ரோவின் செயற்கைக்கோள் புகைப்படங்களின் தெளிவுத் திறனை விஞ்சும் வகையில் இந்திய ஆயுதப் படைகளுக்கு உயர் தெளிவுத் திறன் கொண்ட படங்களை வழங்குகிறது.
- சூரிய ஒத்திசைவுச் சுற்றுப்பாதையுடன் ஒப்பிடும் போது இது சற்று சாய்ந்த சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தப் பட்டுள்ளது.




## பாக்டீரிய நினைவகம் மற்றும் மறுநினைவாக்கம்

- எஸ்கெரிச்சியா கோலி (E. coli) எனப்படும் நன்கு ஆய்வு செய்யப்பட்ட பாக்டீரியத்தில் சாத்தியமானத் தகவல் நினைவக அமைப்பு காணப்படுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மூளை அல்லது நரம்பு மண்டலம் இல்லாவிட்டாலும், கடந்த காலச் செயல்பாட்டு அனுபவங்களின் நினைவுகளை மிகவும் நன்கு உருவாக்கி அவற்றை அடுத்தடுத்தத் தலைமுறைகளுக்கு அனுப்பும் திறன் கொண்டதாக இது உள்ளது.
- அவை தனது சூழலில் இருந்து தகவல்களைச் சேகரித்து சேமித்து, பின்னர் தனது பயன்பாட்டிற்காக அவற்றை அணுகுகின்றன.
- உணர்வு நிலை கொண்ட மனித நினைவகத்திற்கு மாறாக, இந்த பாக்டீரிய நினைவக அமைப்பு ஆனது முன்னதாக எதிர்கொண்டவற்றின் அடிப்படையில் பல செயல்பாட்டு முடிவுகளை எடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.



## நிலவிற்கான ஒருங்கிணைந்த நேர மண்டலம்




- அமெரிக்க அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை அலுவலகம் (OSTP) ஆனது நிலவிற்கான நேரக் குறிப்பு அமைப்பினை உருவாக்க இணையுமாறு சர்வதேச நிறுவனங்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.
- நாசா நிறுவனம் ஆனது 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஒருங்கிணைந்த நிலவு நேரத்தை அமைப்பதற்கான உத்தியினை இறுதி செய்ய உள்ளது.
- இது பூமியில் உள்ளதைப் போன்ற நேர மண்டலம் அல்லாமல் நிலவிற்கான முழுமையான நேரக் குறிப்பறிதல் அமைப்பு ஆகும்.
- நிலவில் ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதால், பூமியுடன் ஒப்பிடும் போது, அங்குள்ள நேரம் மிக விரைவாக - ஒவ்வொரு நாளும் 58.7 மைக்ரோ விநாடிகள் - நகர்கிறது.
- LTC ஆனது, தனது செயல்பாட்டிற்காக அதி துல்லிய நேர நிர்ணயம் தேவைப்படுகின்ற, நிலவிற்கான ஆய்வு விண்கலம் மற்றும் செயற்கைக்கோள்கள் ஆகியவற்றிற்கான ஒரு நேரக் கட்டுப்பாட்டு அளவுருவினை வழங்கும்.

## இயற்கையில் காணப்படும் முதல் கட்டமைப்பு மூலக்கூறு


- சர்வதேச ஆராய்ச்சியாளர்களின் குழுவானது இயற்கையில் காணப்படும் முதல் கட்டமைப்பு (ஒரே மாதிரியான கிளையமைப்புகள்) மூலக்கூறினைக் கண்டறிந்து உள்ளது.
- அவர்கள் ஒரு சயனோபாக்டீரியத்திலிருந்து சிட்ரேட் சின்தேஸ் எனப்படுகின்ற ஒரு நுண்ணுயிர் நொதியைக் கண்டறிந்தனர்.
- இது தன்னியல்பாக சியர்பின்ஸ்கி முக்கோணம் எனப்படும் ஓர் வடிவில் திரள்கிறது.
- அவற்றின் தனிப்பட்டப் பாகங்கள் ஒவ்வொன்றும் ஒரு முழு கட்டமைப்பின் வடிவத்தை ஒத்திருக்கும்.

- ❖ பெரியது முதல் சிறியது வரை மீண்டும் மீண்டும் வரும் இத்தகைய வடிவங்கள் பகுவல் கட்டமைப்பு எனப்படும்.
- ❖ சியர்பின்ஸ்கி முக்கோணம் என்பது சிறிய முக்கோணங்களால் ஆன முக்கோணங்களின் முடிவில்லா தொடரமைப்பு ஆகும்.




## சூரியனுக்கு அண்மை நிலையில் வரும் வால் நட்சத்திரங்கள்

- ❖ பின்னதாக SOHO-5008 என பெயரிடப்பட்ட ஒரு சிறிய "சூரியனுக்கு அண்மை நிலையில் வரும்" வால் நட்சத்திரம் கண்டுபிடிக்கப்பட்டு, புகைப்படம் எடுக்கப்பட்டது, ஆனால் அது சூரியனின் தாக்கத்தினால் 24 மணி நேரத்திற்குள் அழிக்கப்பட்டது.
- ❖ சூரியனிடமிருந்து சுமார் 5 மில்லியன் மைல்கள் (சுமார் 8 மில்லியன் கிலோமீட்டர்) தொலைவில், புதனைக் காட்டிலும் நெருக்கமாகச் சூரியனை நெருங்கி வரும் வால் நட்சத்திரங்கள் சூரியனுக்கு அண்மை நிலையில் வரும் வால் நட்சத்திரங்கள் ஆகும்.
- ❖ அவை சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு துண்டு துண்டாக சிதறிய ஒரு மாபெரும் வால் நட்சத்திரங்களில் இருந்து தோன்றிய க்ரூட்ஸ் சுற்றுப்பாதை நிலை என்ற வால் நட்சத்திரங்கள் குழுவைச் சேர்ந்தவையாகும்.



## ஜோசுரபால்பின்





- அசினெட்டோபாக்டர் பாமன்னி என்ற மருந்து-எதிர்ப்புப் பாக்டீரியத்தை நன்கு எதிர் கொள்ளும் திறன் கொண்ட ஒரு புதிய வகை நுண்ணுயிர் எதிர்ப்பியை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- ஜோசுரபால்பின் ஆனது, CRAB (கார்பபெனெம் மருந்து எதிர்ப்பு அசினெட்டோபாக்டர் பாமன்னி) மூலம் தூண்டப்பட்ட நிமோனியா மற்றும் செப்சிஸ் ஆகியவற்றிற்கு எதிராக எலிகளில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனைகளில் பயனுள்ள தீர்வுகளை வழங்கியிருப்பது கண்டறியப்பட்டது.
- அசினெட்டோபாக்டர் பாமன்னி என்ற பாக்டீரியா ஆனது, நுரையீரல், சிறுநீர்ப் பாதை மற்றும் இரத்தத்தில் கடுமையான தொற்றுகளை ஏற்படுத்தக் கூடியது.


## விக்னர் படிகம்

- ஒரு படிகத்தை உருவாக்க எலக்ட்ரான்களை இணைப்பது கடினமாகும் என்ற வகையில் இந்தக் கட்டமைப்பை அளவிடுவது மிகக் கடினமாகும்.
- ஆனால் இயற்பியலாளர்கள் தற்போது விக்னர் படிகத்தை மிகத் தெளிவான வகையில் நேரடியாகப் படம் பிடித்துள்ளனர்.
- ஆராய்ச்சியாளர்கள், விக்னர் படிகம் உருவாவதை நேரடியாகக் கண்காணிப்பதற்காக ஊடறிதல் ஊடுருவி தொலைநோக்கி (STM) மற்றும் ப்ரிஸ்டைன் கிராபெனின் பல்வேறு மாதிரிகளைப் பயன்படுத்தினர்.
- விக்னர் படிகமானது கணிக்கப்பட்ட பருப்பொருளின் கண்கவர் குவாண்டம் (துளிம) அமைப்புகளில் ஒன்றாகும் என்பதோடு பல ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்படும் பொருட்களில் இதவும் ஒன்றாகும்.
- இருப்பினும், மிகக் குறைந்த வெப்பநிலையில், மின்னியல் தள்ளு விசையானது ஆதிக்கம் பெறுகின்றன என்பதோடு எலக்ட்ரான்கள் தங்களை ஒரு சீரான கட்டமைப்பு அல்லது படிகமாக அமைத்துக் கொள்கின்றன.
- இயற்பியலாளர் யூஜின் விக்னர் 1934 ஆம் ஆண்டில் இந்த நிகழ்வைக் கணித்தார்.

- ஆனால் ஆய்வகத்தில் இந்த விக்னர் படிகங்களை எவ்வாறு உருவாக்குவது என்பதை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் தான் புரிந்து கொள்ளத் தொடங்கினர்.





## கைபேசியுடனான நேரடி தகவல் தொடர்பு செயற்கைக்கோள் - ஸ்பேஸ் எக்ஸ்




- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது, ஃபால்கன் 9 என்ற ஏவுகலம் மூலமாக ஸ்டார்லிங் வலையமைப்பின் கைபேசியுடனான நேரடித் தகவல் தொடர்பு செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- அந்நிறுவனம் ஆனது ஆறு கைபேசியுடனான நேரடி தகவல் தொடர்பு செயற்கைக் கோள்கள் உட்பட 21 புதிய ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தி உள்ளன.
- இது விண்ணில் ஏவப்பட்ட முதல் வகையிலான கைபேசியுடனான நேரடித் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும்.
- கைபேசியுடனான நேரடித் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆனது உரை, இணையம் மற்றும் கைபேசி வலையமைப்புகளுக்கு "வானம் பரவியுள்ள எல்லா இடங்களிலும்" சேவையினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- விண்வெளியில் உள்ள கைபேசி சேவை அலைபரப்பி போன்று செயல்படும் கைபேசி உடனான நேரடி தகவல் தொடர்பு செயற்கைக்கோள் தொழில்நுட்பம் ஆனது LTE கை பேசிகளில் செயல்படும்.
- இது பிற சேவை வழங்கீட்டு நிறுவனங்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்ற பகுதிகளான தொலைதூர மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பயனர்களுக்கு அதிவேக இணையச் சேவையினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உயர் அதிர்வெண் கொண்ட பிளாஸ்மா அலைகள் – செவ்வாய்




- இந்தியப் புவிக் காந்தவியல் ஆராய்ச்சி நிறுவனத்தினைச் சேர்ந்த அறிவியலாளர்கள், நாசாவின் மேவன் விண்கலத்தின் தரவுகளைப் பயன்படுத்தி செவ்வாய்க் கிரகத்தின் மேல் மட்ட வளிமண்டலத்தில் உள்ள உயர் அதிர்வெண் கொண்ட பல்வேறு பிளாஸ்மா அலைகளை ஆய்வு செய்தனர்.
- இந்த அலைகள் ஆனது லாங்முயர் அலைகள் அல்லது உயர்நிலை-கலப்பின வகை அலைகள் எனப்படும் எலக்ட்ரான் அலைவுகளை உள்ளடக்கியிருக்ககும்.
- அவை செவ்வாய்க் கிரகத்தின் காந்த மண்டலத்தில் பின்புலக் காந்தப் புலத்திற்கு இணையாகவோ அல்லது செங்குத்தாகவோ பரவுகின்றன.
- ஆற்றல் பரிமாற்றம், துகள் முடுக்கம் மற்றும் விண்வெளியில் காணப்படும் பிளாஸ்மாக்களுக்குள் மின்னேற்றம் செய்யப்பட்ட துகள்களின் செயல்பாடுகள் ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துவதால் இந்த அலைகள் பல்வேறு பிளாஸ்மா நிகழ்வுகளில் குறிப்பிடத் தக்க பங்கு வகிக்கின்றன.
- பிளாஸ்மா அலைகள் பூமி மற்றும் பிற கிரகங்களைச் சுற்றி பொதுவாக காணப்படும், அலைகளாகும் என்ற வகையில் இது துகள் இயக்கவியல் மீதான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.
- செவ்வாய்க் கிரகத்திற்கென சொந்த காந்தப்புலம் இல்லை என்ற நிலையில் சூரியக் காற்றின் தாக்கத்திற்கு உள்ளாகும் வகையில் பலவீனமான தூண்டப்பட்ட காந்த மண்டலத்தினை இது கொண்டுள்ளது.


## 30 டோராடஸ் B : மீவொளிர் விண்முகில்

- நாசாவின் சந்திரா X கதிர் என்ற ஆய்வகமானது 30 டோராடஸ் B என்ற மீவொளிர் விண்முகிலின் கண்கவர் காட்சியினைப் படம் பிடித்துள்ளது.
- இது சுமார் மில்லியன் கணக்கான ஆண்டுகளாக நட்சத்திரங்கள் உருவாகி வரும் விண்வெளியின் செயல்பாடுகள் மிகுந்த பகுதியின் ஓர் அங்கமான ஒரு மீவொளிர் விண்முகிலின் எஞ்சிய பகுதியாகும்.
- இது பூமியிலிருந்து சுமார் 160,000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள பெரிய சீரற்ற பெரு விண்மீன் திரளில் (மாகெல்லானிக் கிளவுட்) அமைந்துள்ளது.




## மெர்செனரி உளவு மென்பொருள்: ஆப்பிள் நிறுவனம்

- இந்த ஆண்டிற்கான அச்சுறுத்தல் அபாயங்கள் குறித்த முதல் தொகுதி அறிவிப்புகளை இந்தியா உள்ளிட்ட 92 நாடுகளுக்கு ஆப்பிள் நிறுவனம் அனுப்பியுள்ளது.
- மெர்செனரி உளவு மென்பொருளைப் பயன்படுத்தி, தனித்தனியாக பயனர்கள் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்பட்டிருக்கலாம் என்று இது எச்சரிக்கிறது.
- ஒருவர் யார் அல்லது அவர் என்ன செய்கிறார் என்பதைப் பொறுத்து ஒருவரைக் குறி வைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்படும்.




## நீர் ஏற்பு பலபடிச் சேர்மம் - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம்

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள், நீரிலிருந்து நுண் நெகிழிகளை அகற்றுவதற்காக ஒரு நிலையான நீர் ஏற்பு பலபடிச் சேர்மத்தினை (ஹைட்ரோஜெல்) வடிவமைத்துள்ளனர்.
- ஆராய்ச்சியாளர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த நிலையான ஹைட்ரோஜெல் ஆனது ஒரு தனித்துவமான பின்னிப் பிணைந்த பலபடிச் சேர்ம வலையமைப்பினைக் கொண்டுள்ளது என்பதோடு இது மாசுக்களைத் தன்னுடன் பிணைத்து, புற ஊதா ஒளி கதிர்வீச்சைப் பயன்படுத்தி அவற்றைச் சிதைக்கிறது.
- ஹைட்ரோஜெல் ஆனது நீரில் உள்ள இரண்டு வகையான நுண் நெகிழிகளை முறையே சுமார் 95% மற்றும் 93% என்ற அளவில் நடுநிலை அளவிலான அமில கார குறியீடு pH (~6.5) மதிப்பில் அகற்றுவதால் மிகவும் செயல்திறன் மிக்கதாக உள்ளது.
- அறிவியலாளர்கள் நுண் நெகிழிகளை அகற்றுவதற்காக முன்னதாக வடிகட்டுதல் சவ்வுகளைப் பயன்படுத்தி முயற்சித்துள்ளனர்.
- ஆனால், சவ்வுகள் இந்தச் சிறிய துகள்களால் அடைக்கப்பட்டு, அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்த முடியாததாக மாற்றும்.
- இந்த சிறிய நெகிழிக் குப்பைகள் குடிநீரின் மூலம் நம் உடலுக்குள் நுழைந்து நோய் பாதிப்பு அபாயத்தை அதிகரிக்கும் என்பதால் இந்த நுண் நெகிழிகள் என்பவை மனித ஆரோக்கியத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.





## கையா BH3 கருந்துளை

- ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) வானியலாளர்கள் கையா BH3 என பெயரிடப் பட்ட மிகப்பெரிய நட்சத்திரக் கருந்துளையை அடையாளம் கண்டுள்ளனர்.
- சூரியனை விட சுமார் 33 மடங்கு நிறை கொண்ட இது பால்வெளி அண்டத்தில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கருந்துளையானது அக்விலா விண்மீன் திரளில் வெறும் 2000 ஒளி ஆண்டுகள் தொலைவில் நமது புவிக்கு மிக அருகில் உள்ளது.
- இது பூமிக்கு மிக அருகில் உள்ள இரண்டாவது கருந்துளை ஆகும்.




## பேரண்ட விரிவாக்க வீதத்தின் அளவீட்டு முரண்பாடு




- ஹப்பிள் டென்ஷன் எனப்படும் பேரண்ட விரிவாக்க வீதத்தின் அளவீடுகளில் உள்ள முரண்பாட்டிற்கு ஜெர்மனி மற்றும் ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த அறிவியலாளர்கள் ஒரு விளக்கத்தினை முன்வைத்துள்ளனர்.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியின் (JWST) புதிய தரவுகளும் இந்த நீண்ட கால மர்மத்தை உறுதிப்படுத்துகின்றன.
- இன்று உள்ள பேரண்டத்தின் விரிவாக்க வீதம் ஆனது ஆரம்பகாலப் பேரண்டத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் வீதத்துடன் பொருந்தவில்லை.
- ஆரம்பகட்டப் பேரண்டத்தின் கண்காணிப்பு தரவுகளைப் பயன்படுத்தி, அறிவியல் நிபுணர்கள் தற்போது எதிர்பார்க்கப்படும் விரிவாக்க வீதத்தைக் கணக்கிட முடியும்.
- அவர்கள் "ஸ்டாண்டர்ட் கேண்டில்" எனப்படுகின்ற சிறப்புப் பொருள்களைக் கொண்டு தற்போதைய விரிவாக்கத்தையும் நேரடியாக அளவிட முடியும்.
- இந்த இரண்டு மதிப்புகளையும் ஒப்பிடும் போது, இரண்டு தரவுகளும் குறிப்பிடத்தக்க அளவில் உடன்படவில்லை.
- H0 என குறிக்கப்படும் ஹப்பிள் மாறிலியானது, பேரண்டத்தின் விரிவாக்கத்தின் காரணமாக அண்டங்கள் ஒன்றையொன்று விட்டு நகர்ந்து செல்லும் வீதத்தினை விவரிக்கிறது.


## STEVE நிகழ்வின் மர்மம்

- STEVE என்பது வானத்தில் நிகழும் ஒரு தனித்துவமான ஊதா மற்றும் பச்சை நிற ஒளிக் கற்றையினால் வகைப்படுத்தப்படுகின்ற ஒரு ஒளியியல் நிகழ்வு ஆகும்.
- ஆரம்பத்தில் கனடாவில் தென்பட்ட STEVE நிகழ்வானது, ஐரோப்பா மற்றும் அமெரிக்க கண்டம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தென்பட்டது.
- இது நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்திற்கு, கிழக்கு-மேற்கான திசையில், பொதுவாக 20 நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை நீடிக்கும் நிகழ்வாகும்.
- இது கீழ்நிலை துருவ மின்னொளி சார்ந்த அயனி நகர்வு (SAID) எனப்படுகின்ற மிகவும் வெப்பமான துகள்களின் வேகமாக நகரும் கற்றை ஆகும்.
- இந்த தனித்துவமானப் பண்புகள் வழக்கமான துருவ மின்னொளிகளிலிருந்து தனித்து காணப் படுகிறது.




## எபுலோபிசியம் விவிபாரஸ் – இராட்சத பாக்டீரியா

- முதன்முறையாக, அறிவியலாளர்கள் நுண்ணோக்கி இல்லாமல் பார்க்கக் கூடிய வகையிலான ஒரு மர்மமான இராட்சத பாக்டீரியாவின் மரபணுவை வரிசைப்படுத்தி உள்ளனர்.
- எபுலோபிசியம் பாக்டீரியம் ஆனது, வெப்பமண்டலக் கடல் சூழலில் இருந்த நாசோ டோங்கனஸ் என்ற மீனின் குடலின் சூழலில் ஒன்றி காணப்படுகிறது.
- மிகப் பெரும்பாலான பாக்டீரியாக்கள் நுண்ணோக்கி இல்லாமல் பார்க்க முடியாத அளவுக்கு சிறியவை.
- இந்த ஒற்றை செல் கொண்ட பெரிய இனமானது அவற்றின் நன்கு அறியப்பட்ட இணை இனங்களான ஈ.கோலியின் கன அளவைக் காட்டிலும் மில்லியன் மடங்குகளைக் அதிக கன அளவைக் கொண்டுள்ளன என்பதனால் அவற்றை வெறும் கண்களால் பார்க்க முடியும்.





## புவியிடங்காட்டி சேவை முடக்கம் – இஸ்ரேல்




- இஸ்ரேல் மீதான ஈரானின் முதல் நேரடித் தாக்குதலுக்கு முன்னதாக, இஸ்ரேலிய உளவுத் துறையானது தனது நாட்டு எல்லைக்குள், தெஹ்ரானின் எறிகணை இலக்கு நிர்ணயக் குழுவினை குழப்புவதற்காக (புவியிடங்காட்டி) GPS வழிசெலுத்தல் அமைப்பு சமிக்ஞைகளை முடக்கியது.
- இஸ்ரேலை நோக்கி ஈரான் ஏவிய 300க்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் உந்துவிசை மற்றும் சீர்வேக ஏவுகணைகள் அனைத்தும் அவற்றின் இலக்குகளைத் தாக்கத் தவறின.
- இஸ்ரேல், அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு மற்றும் ஜோர்டான் போன்ற நாடுகள் இணைந்து 99 சதவீத எறிகணைகள் இஸ்ரேலை நோக்கி வருவதற்கு முன்பே அவற்றை இடைமறித்தன.
- பொதுவாக, புவியிடங்காட்டிக் கருவியினை முடக்குதல் அல்லது 'குழம்பச் செய்தல்' என்பது போர் மண்டலங்களில் அல்லது இராணுவ நடவடிக்கைகளின் போது தகவல் தொடர்பு மற்றும் புவியிடங்காட்டி கருவிகளின் சமிக்ஞைப் பரிமாற்றங்களை நன்கு சீர்குலைப்பதற்காகப் போரில் பயன்படுத்தப்படுகிறது.

- அவை தகவல்தொடர்புகளை சீர்குலைத்து, சமிக்ஞை இழப்புகள் அல்லது பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தலாம் ஆனால் எதிரி நாடுகளின் பல்வேறு வழிசெலுத்தல் அமைப்புகள் மற்றும் துல்லியமான வழிகாட்டுதல் ஆயுதங்களையும் சீர்குலைக்கும்.
- அமெரிக்காவும் பிற மேற்கத்திய நாடுகளும் இதற்கு முன்னர் பெரிய அளவிலான புவியிடங்காட்டி கருவி முடக்கப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளன, ஆனால் அவை போர்க் காலங்களில் மேற்கொள்ளப்படவில்லை.

## அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ் – உயிர்க்கொல்லி பூஞ்சை





- உலகெங்கிலும் அசோல்-எதிர்ப்பு திறன் கொண்ட அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ் (ARAf) பரவி வருவது ஒரு முக்கியமான பொது சுகாதார நெருக்கடியினை உருவாக்கியுள்ளது.
- அசோல்ஸ் என்பது அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ் என்ற நோய்த்தொற்றுகளுக்கான சிகிச்சைக்காக அவ்வப்போது பயன்படுத்தப்படும் பூஞ்சை எதிர்ப்பு மருந்துகளின் ஒரு முக்கிய வகையாகும்.
- அசோல்-எதிர்ப்புத் திறன் கொண்ட பூஞ்சைத் தொற்று உள்ளவர்களில் உயிரிழப்பு வாய்ப்பு 33% அதிகம் ஆகும்.
- அஸ்பெர்கிலஸ் ஃபுமிகேடஸ் என்பது மனிதர்களில் நோய்களை உண்டாக்கும் ஒரு பூஞ்சைத் தொற்று ஆகும்.
- ஆஸ்பெர்கில்லோசிஸ் ஒவ்வோர் ஆண்டும் 300,000 க்கும் மேற்பட்டவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ளது.
- இது யூரோடியோமைசிடீஸ் வகுப்பினைச் சேர்ந்த பூஞ்சையாகும் என்பதோடு இது இயற்கையில் பரவலாக காணப்படுகிறது.
- இது மண், மக்கும் தாவரங்கள், குளிர் பதன அமைப்புகள் மற்றும் வெப்பமூட்டு அமைப்புகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களில் காணப்படுகிறது.

## UC-POP-Au – ஒளிவழி வேதிவினையூக்கி

- போபால் நகரில் அமைந்த இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) ஆனது, ஒரு பயனுள்ள ஒளிவழி வேதிவினையூக்கியை உருவாக்கியுள்ளது.
- இது ஆய்வகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் வேதியியல் செயல்முறைகளை விரைவுபடுத்துவதற்காக பரந்த அளவிலான சூரிய ஆற்றல் மற்றும் ஒளியை உறிஞ்சும் ஒரு பொருள் ஆகும்.
- இந்தப் புதிய ஒளிவழி வேதிவினையூக்கி 'UC-POP-Au' என அழைக்கப்படுகிறது.
- இது ஒளியின் முழு நிறமாலையையும் உட்கிரகித்து, வேதிச் செயல்முறைகளின் போது அதிக சக்தி வாய்ந்த வினையூக்கியாக மாற்றுவதால், இது குறிப்பிடத்தக்க வலிமை மற்றும் வினையூக்கச் செயல்திறனைக் கொண்டுள்ளது.

## பலபடி சேர்ம மின்பகுளி சவ்வு எரிபொருள் கலன்


- இஸ்ரோ POEM3 எனப்படும் தனது சுற்றுப்பாதைத் தளத்தில் 100 W வகுப்பு பலபடி சேர்ம மின்பகுளி சவ்வு எரிபொருள் கலன் அடிப்படையிலான ஆற்றல் வழங்கீட்டு அமைப்பினை (FCPS) வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- இது விண்வெளியில் பலபடி சேர்ம மின்பகுளி சவ்வு எரிபொருள் கலன் செயல்பாட்டை மதிப்பிடுவதையும் எதிர்காலத் திட்டங்களுக்கான அமைப்புகளின் வடிவமைப்பை எளிதாக்குவதற்கும் தரவுகளைச் சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பலபடி சேர்ம மின்பகுளிச் சவ்வு (PEM) எரிபொருள் கலன்கள் ஆனது, புரோட்டான் பரிமாற்ற சவ்வு எரிபொருள் கலன்கள் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது புரோட்டான்களை கடத்தும் பலபடி சேர்மச் சவ்வை மின்பகுளியாகப் பயன்படுத்துகின்றது.
- பொதுவாக ஹைட்ரஜன் ஆனது எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த கலன்கள் ஒப்பீட்டளவில் குறைந்த வெப்பநிலையில் இயங்குகின்றன மற்றும் மாறிவரும் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவற்றின் வெளியீட்டுத் திறனை விரைவாக மாற்றும் திறன் கொண்டது.



## காந்தவிண்மீனிலிருந்து வெளிவரும் அரிய மாபெரும் ஒளிக்கற்றை

- காந்தவிண்மீனிலிருந்து வெளிவரும் அரிய மாபெரும் ஒளிக்கற்றை எனப்படும் மிகத் தொலைதூரத்தில் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றை அறிவியலாளர்கள் தற்போது கண்டறிந்து உள்ளனர்.
- இந்த காந்தவிண்மீன் மெஸ்ஸியர் 82 அல்லது M82 எனப்படும் அண்டத்தில் உள்ளது.
- இது காமா கதிர்களின் வெளிப்பாடானது, சுமார் 10,000 ஆண்டுகளில் நமது சூரியன் வெளியிடும் ஆற்றலின் அளவை ஒரு வினாடியில் பத்தில் ஒரு பங்கு நேரத்தில் வெளியிட்டது.
- M82 மாபெரும் ஒளிக்கற்றை வெளியீடு மிகவும் தொலைவில் நிகழ்ந்ததாக அறியப் பட்டது என்றாலும் மிகவும் ஆற்றல் வாய்ந்தது அல்ல.
- 2004 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட ஒன்று சூரியனிலிருந்து சுமார் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு வெளிவரும் ஆற்றலுக்குச் சமமான ஆற்றலைக் கொண்டிருந்தது.
- காந்த விண்மீன்கள் பேரண்டத்தின் மிக தொலைதூரப் பொருட்களில் ஒன்றாகும்.
- நியூட்ரான் நட்சத்திரங்கள் எனப்படும் சிறிய நட்சத்திர எச்சங்களின் ஒரு வகுப்பான அவை மிகவும் வலுவான காந்தப்புலங்களைக் கொண்டுள்ளன.
- 2004 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் நமது பால்வெளி அண்டத்தில் இரண்டு உறுதிப் படுத்தப்பட்ட மாபெரும் ஒளிக்கற்றைக்கள் மட்டுமே காணப்பட்டன.
- இவற்றில் ஒன்று மட்டும் மற்றொரு விண்மீன் மண்டலத்தில், 1979 ஆம் ஆண்டில் பால் வெளியின் மிகவும் அண்டைப் பகுதியான பெரிய சீரற்ற பெருவிண்மீன் தொகுதியில் கண்டறியப் பட்டது.







## மூலக்கூறு துளையிடல் விளைவு

- புற்றுநோய் சிகிச்சையில் அறுவைச் சிகிச்சை, கதிர்வீச்சு, கீமோதெரபி (வேதிமுறை நோய் நீக்கம்) மற்றும் நோயெதிர்ப்புச் சிகிச்சை ஆகிய "நான்கு முக்கிய கட்டங்கள்" உள்ளன.
- புற்றுநோய் செல்கள் ஏறக்குறைய அனைத்து வகையான மரபுவழிச் சிகிச்சைக்கும் எதிர்ப்புத் திறன் கொண்டுள்ளது.
- நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் பலனை மேம்படுத்த உதவும் வகையிலான இயந்திர முறை சிகிச்சை என்ற மற்றொரு முக்கியப் புற்றுநோய் சிகிச்சை கட்டத்தினை ஆராய்ச்சியாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

- சையனைன் எனப்படும் ஒரு வகை மூலக்கூறைப் பயன்படுத்திப் புற்றுநோய் செல்களை அழிக்கும் வழியைக் இக்குழு கண்டறிந்துள்ளது.
- சையனைன் சாயங்கள் ஆனது அண்மை அகச்சிவப்பு ஒளிக்கு வெளிப்படும் போது வினாடிக்கு 40 டிரில்லியன் அலைவுகளில் அதிர்வுறும்.
- இந்த மூலக்கூறுகளால் சூழப்பட்ட அனைத்தும் மிக விரைவாக பிரிக்கப்படும்.
- ஆராய்ச்சியாளர்கள் இதை "மூலக்கூறு துளையிடல்" விளைவு என்று அழைக்கின்றனர்.
- மனிதக் கரும்புற்றுநோய் (மெலனோமா) செல்கள் மீது மூலக்கூறுத் துளையிடல் என்ற விளைவினைப் பயன்படுத்தி, 100% புற்றுநோய் செல்களை அழிக்க முடிந்தது.




## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் VASA-1





- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, சமீபத்தில் VASA-1 என்ற புதிய புகைப்படங்களில் இருந்து ஒளிப்படக்காட்சியினை உருவாக்கும் மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு செயற்கை நுண்ணறிவு மாதிரியான VASA-1, 'கேட்பொலியினால் இயங்கும் உயிர் உள்ளவை போன்ற பேசும் முகங்களை நிகழ்நேரத்தில் உருவாக்குகிறது'.
- ‘VAS’ என்பது காட்சி தாக்கத் திறன் (visual affective skill) என்பதைக் குறிக்கிறது.

- இந்த செயற்கை நுண்ணறிவு மாதிரியானது பயிற்சி வழங்கீட்டு தரவுத் தொகுப்பில் இல்லாதப் புகைப்படங்கள் மற்றும் கேட்பொலி உள்ளீடுகளின் பல்வேறு வகைகளை கையாளும் திறன் கொண்டது.

## நாசாவின் ACS3 திட்டம்

- மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சூரிய ஆற்றலைப் பயன்படுத்தும் ஆய்வுப் பயண அமைப்பு (ACS3) என்று அழைக்கப்படும் நாசா நிறுவனத்தின் அடுத்தத் தலைமுறை தொழில்நுட்பத்திற்கான சூரியஒளி ஆற்றல் பயணத் தொழில்நுட்பமானது சமீபத்தில் விண்ணில் ஏவப்பட்டது.
- பூமியிலிருந்து சுமார் 600 மைல்களுக்கு மேலான தொலைவில் உள்ள சூரிய-ஒத்திசைவு சுற்றுப்பாதையை அடைந்ததும், ACS3 விண்கலம் அதன் ஒருங்கிணைந்தக் கருவிகளை இயங்கச் செய்து, அதன் சிக்கல் மிகுந்த செயல்முறையைத் தொடங்கும்.
- தோராயமாக 25 நிமிடங்களுக்குள், சுமார் 860 சதுர அடி தொலைவிற்கு சூரிய ஒளியாற்றலைப் பெறும் செயல்முறை முழுவதுமாக மேற்கொள்ளப்படும்.
- இந்தப் படலங்கள் ஒன்றாக சேர்ந்து, பட்டம் போன்ற வடிவை அடைந்து அதன் மூலம் சூரிய ஒளியைப் பயன்படுத்தி இயங்கத் தொடங்குகின்றது.
- இது சூரியனால் உமிழப்படும் ஃபோட்டான்களின் வேகத்தைப் பயன்படுத்தி, பெரிய, பிரதிபலிப்புத் திறன் கொண்ட மேற்பரப்புகளைப் பயன்படுத்தி வழக்கமாக பயன்படுத்தப் படும் எரிபொருள் இல்லாமல் விண்கலத்தைச் செலுத்துகிறது.



## கிரிஸ்டல் மேஸ் 2 ஏவுகணை

- இந்திய விமானப்படை வானிலிருந்து நிலத்தில் உள்ள இலக்கினைத் தாக்கி அழிக்கும் நடுத்தர தொலைவு வரம்பு கொண்ட புதிய வடிவ ஏவுகணையின் பரிசோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது 250 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டது.
- இந்த ஏவுகணை ROCKS அல்லது கிரிஸ்டல் மேஸ் 2 என்றும் குறிப்பிடப்படுகிறது.
- இதன் முன்னோடியான கிரிஸ்டல் மேஸ் 1 இஸ்ரேலில் இருந்து பெறப்பட்டு இந்திய விமானப் படையில் சேர்க்கப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அரிய வெள்ளை நிற ஜென்டூ பென்குயின்

- மிக அரிதான வெள்ளை நிற பென்குயின் ஆனது சிலி நாட்டின் அண்டார்டிகாவில் கண்டறியப் பட்டுள்ளது.
- கேப்ரியல் கோன்சலேஸ் விடேலா என்ற தளத்தில் கண்டறியப்பட்ட இந்த பென்குயின் ஆனது, ஆங்காங்கே சில வெள்ளை நிறத்துடன் கூடிய கருப்பு நிற இறகுகளைக் கொண்ட ஜென்டூ இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் இனமாகும்.
- இந்த நிலையானது பொதுவாக ஒரு மரபணு சார்ந்ததாக இருந்தாலும், மன அதிர்ச்சி காரணமாக ஏற்பட்டிருக்கலாம்.
- இந்த பென்குவின் இனங்களின் கண்களும் அலகுகளும் வழக்கமான நிறத்தினைக் கொண்டிருப்பதால் இது தோல் வெளிர்தல் நிலையிலிருந்து வேறுபட்டு உள்ளது.
- சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்தப் பகுதியில் ஓர் அரிய வெள்ளை நிறப் பென்குயின் தென்பட்டது.



## டெரோசர் - புதிய இனங்கள்




- பழங்கால ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, ஸ்காட்லாந்தில் உள்ள ஸ்கை தீவில் கண்டறியப்பட்ட புதைபடிவத்திலிருந்து புதிய வகை டெரோசர் இனத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இது டைனோசர்கள் காலத்தில் வாழ்ந்த ஒரு வகை பறக்கும் டைனோசர் ஆகும்.
- சுமார் 165 மில்லியன் ஆண்டுகள் மிகவும் பழமையான இந்தப் புதைபடிவமானது, டார்வினோப்டிரான்ஸ் எனப்படும் டெரோசர்களின் குழுவினைச் சேர்ந்தது.
- இவை முற்கால மற்றும் பிற்கால டெரோசர்களுக்கு இடைப்பட்ட ஒரு இடைநிலை உயிர் வடிவமாக கருதப்படுகின்றன.
- சியோப்டெரா ஸ்காட்லாந்தில் கண்டறியப்பட்ட முதல் மற்றும் ஒட்டு மொத்தமாக இது வரையில் கண்டறியப்பட்ட இரண்டாவது டெரோசர் டார்வினோப்டெரான் டெரோசர் ஆகும்.

## அண்டார்டிக் துருவச்சுழல் நீரோட்டம்

- இந்தியப் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் பசிபிக் பெருங்கடல்களை இணைக்கும் கடல் நீரோட்டம் ஆனது சமீபத்தியப் பத்து ஆண்டுகளில் வெப்பமிகு பருவநிலை காரணமாக வேகமடைந்துள்ளது.
- கடந்த 5.3 மில்லியன் ஆண்டுகளில் அதன் வேகம் குறித்து மதிப்பாய்வு செய்யப்பட்ட ஒரு புதிய ஆய்வில், அந்த நீரோட்டமானது தனது வேகத்தை அதிகரிப்பதன் மூலமோ அல்லது வேகத்தைக் குறைப்பதன் மூலமோ உலகளாவிய பருவநிலைக்கு, மிகப்பெரிய விளைவுகளுடன் கூடிய எதிர்வினைகளை ஆற்றுவதாக கண்டறியப் பட்டு உள்ளது.
- அண்டார்டிக் துருவச் சுழல் நீரோட்டத்தின் தற்போதைய இந்தப் பெரு வேகமானது அண்டார்டிகாவின் பனிப்பரவலின் நிலைத் தன்மைக்குச் சாதகமாக இல்லை.
- அவை ஏற்கனவே ஆண்டிற்கு 150 பில்லியன் டன்கள் என்ற சராசரி வீதத்தில் பனிப் பரவலை இழந்து வருகின்றன என்ற நிலையில், இது கடல் மட்ட உயர்வுக்கு வழி வகுக்கிறது.
- ஒவ்வொரு நொடியும் 165 மில்லியன் முதல் 182 மில்லியன் கன மீட்டர் அளவிலான தண்ணீரை இடம் மாற்றுகின்ற இந்தக் கடல் நீரோட்டமானது மணிக்கு 4 கிலோமீட்டர் வேகத்தில் அண்டார்டிகாவை வலப்புறமாகச் சுழல்கிறது.




## அதிக வெப்பம் குறித்த உலகளாவிய உச்சி மாநாடு

- அமெரிக்க அரசாங்கத்தின் ஒரு தன்னாட்சி நிறுவனமான சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை (USAID) ஆனது, 'அதிக வெப்பம் குறித்த உலகளாவிய உச்சி மாநாட்டினை' காணொளி வாயிலாக ஏற்பாடு செய்தது.
- சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை (USAID) என்பது குடிமக்களுக்கான வெளிநாட்டு உதவி மற்றும் மேம்பாட்டு உதவிகளை நிர்வகிப்பதை ஒரு முதன்மை நோக்கமாகக் கொண்டதாகும்.
- 2023 ஆம் ஆண்டு ஆனது இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக அதிக வெப்பம் கொண்ட ஆண்டாகும்.
- இந்த நிகழ்வானது, பாகிஸ்தான் முதல் துனிசியா வரையிலும், துனிசியாவிலிருந்து டெக்சாஸ் வரையிலுமான அனைத்து கண்டத்திலும் அதிக வெப்ப அலைகள் பதிவான நிகழ்வுடன் ஒன்றி வந்தது.

## சீர்குலைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டமைத்தல் – EU

- 27 நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் உள்ள சீர்குலைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கான முதல் ஐரோப்பிய ஒன்றிய (EU) சட்டத்தினை ஐரோப்பியப் பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தப் புதியச் சட்டமானது, 2030 ஆம் ஆண்டிற்குள் தனது நாட்டின் 20 சதவீத நிலம் மற்றும் கடல் பகுதிகளைப் புணரமைக்கவும், 2050 ஆம் ஆண்டிற்குள் புணரமைப்பு தேவைப் படும் அனைத்து சுற்றுச்சூழல் அமைப்புகளையும் மீட்டெடுக்க வேண்டும் என்ற இலக்கினை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நிர்ணயித்துள்ளது.

- 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தபட்சம் 30 சதவிகிதமும், 2040 ஆம் ஆண்டிற்குள் 40 சதவிகிதமும், 2050 ஆம் ஆண்டிற்குள் 50 சதவிகித சதுப்பு நிலங்களையும் மீட்டெடுக்க வேண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் நாடுகளுக்கு இசட்டம் அழைப்பு விடுக்கிறது.
- ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் குறைந்தபட்சமாக 25,000 கி.மீ. வரையிலான நதிகளை எந்தவொரு கூளங்களும் இன்றி அடைப்பின்றி பாயும் நதிகளாக மாற்ற வேண்டும்.
- மொத்த தேசிய நகர்ப்புறப் பசுமைத் தளங்கள் மற்றும் மர விதானப் பரவல் பகுதியில் நிகரப் பாதிப்பு இல்லை என்பதையும் நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும்.


## சூழல் அழிப்பு - ஒரு குற்றம்

- சூழல் அழிப்பினை (Ecocide - அலட்சியமான மனித நடவடிக்கைகள் மூலம் இயற்கைக் சூழலை அழித்தல்) ஒரு தேசிய மற்றும் சர்வதேசக் குற்றமாக அங்கீகரித்த முதல் ஐரோப்பிய நாடாக பெல்ஜியம் மாறியுள்ளது.
- Ecocide என்பது "சில செயல்களால் சுற்றுச்சூழலுக்கு கடுமையான மற்றும் பரவலான அல்லது நீண்டகால சேதம் ஏற்படுவதற்கான கணிசமான வாய்ப்புகள் இருப்பதாக அறிந்தே செய்யப் படும் சட்டவிரோத அல்லது தேவையற்ற செயல்கள்" ஆகும்.
- இந்தக் குற்றத்தினை மேற்கொள்ளும் தனிநபர்களுக்கு 20 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும், பெருநிறுவனங்களுக்கு 1.6 மில்லியன் யூரோ வரையிலான அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.
- மேலும், போர்க் குற்றங்கள், ஆக்கிரமிப்புக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இந்தச் சூழல் அழிப்பினை ஐந்தாவது 'சர்வதேசக் குற்றமாக' பெல்ஜியம் அரசு அங்கீகரித்துள்ளது.

## தென்கிழக்கு ஆப்பிரிக்க மலைப் பாங்கான தீவுக் கூட்டம் குறித்த ஆய்வு

- தென்னாப்பிரிக்காவில் மேற்கொள்ளப் பட்ட ஒரு சமீபத்திய ஆய்வில், தென்கிழக்கு ஆப்பிரிக்க மலைப்பாங்கான தீவுக் கூட்டம் (SEAMA) என்று அழைக்கப்படும் புதிதாக அடையாளம் காணப்பட்ட சுற்றுச்சூழலமைப்பில் முன்னதாக ஆவணப்படுத்தப்படாத பல்லுயிரியலைக் கண்டறியப்பட்டுள்ளது.
- மலைப்பாங்கான SEAMA ஆனது, வடக்கு மொசாம்பிக் முதல் தென்னாப்பிரிக்காவின் இரண்டாவது உயரமான மலையான மலாவியில் உள்ள முலாஞ்சே மலை வரையில் நீண்டுள்ளது.
- SEAMA சுற்றுச்சூழலின் மையப்பகுதியில் குறைந்தது 30 தளங்கள் (மலாவியில் ஒன்பது, மொசாம்பிக்கில் 21) ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- இந்த ஆய்வு ஆனது 127 தாவரங்கள், 45 முதுகெலும்புகள் (இருவாழ்விகள், ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள்) மற்றும் 45 முதுகெலும்பில்லாத இனங்கள் (பட்டாம்பூச்சிகள், நன்னீர் வாழ் நண்டுகள்) ஆகியவற்றுடன், தாவரங்கள் மற்றும் ஊர்வனவற்றின் இரண்டு உள்நாட்டு வகைகளை ஆவணப்படுத்துகிறது.
- அங்கு கண்டிப்பாக 22 உள்நாட்டு ஊர்வன இனங்கள் உள்ளன என்ற நிலையில் இவற்றில் 19 காடுகளை வாழிடமாகக் கொண்டவை என்பதோடு, அதில் இதர இனங்கள் பெரும்பாலும் மேட்டு நிலங்கள் மற்றும் பாறை போன்ற பகுதிகளில் காணப் படுகின்றன.

- அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுடன் ஒப்பிடும் போது குறிப்பாக வறண்ட காலங்களில், SEAMA பகுதியில் அதிக வருடாந்திர மழைப்பொழிவு மற்றும் ஈரப்பதம் உள்ளது.
- சுற்றுச்சூழல் பகுதிகள் (சூழல் மண்டலங்கள்) என்பவை உலகளாவிய வளங்காப்பு முன்னுரிமைகளை அறிவிப்பதற்காக பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.




## 18 புதிய புவியியல் பூங்காக்கள் வலையமைப்பு


UNESCO
United Nations Educational, Scientific and Cultural Organization
UNESCO Global Geoparks

- யுனெஸ்கோ அமைப்பின் நிர்வாகக் குழுவானது, யுனெஸ்கோ அமைப்பின் உலகளாவிய புவியியல் பூங்காக்கள் வலையமைப்பில் 18 தளங்களைச் சேர்ப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 48 நாடுகளில் உள்ள மொத்த புவியியல் பூங்காக்களின் எண்ணிக்கையை 195 ஆக உயர்த்துகிறது.
- யுனெஸ்கோ அமைப்பின் இரண்டு உறுப்பினர் நாடுகளான நியூசிலாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை இந்த வலையமைப்பில் இணைகின்றன.

- யுனெஸ்கோ அமைப்பின் புவியியல் பூங்காக்கள் அந்தஸ்து ஆனது 2015 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்பதோடு இது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த புவியியல் பாரம்பரியம வாய்ந்த பகுதிகளை அங்கீகரிக்கிறது.
- புவியியல் பூங்காக்கள் ஆனது பொது விழிப்புணர்வு மற்றும் மேம்பாட்டிற்கான நிலையான அணுகுமுறை ஆகியவற்றுடன் சேர்த்து அவர்களின் குறிப்பிடத்தக்கப் புவியியல் பாரம்பரியத்தின் வளங்காப்பினையும் மேற்கொள்வதன் மூலம் உள்ளூர்ச் சமூகங்களுக்கான சேவைகளையும் வழங்குகின்றன.

## ஜிப்ஸ் கழுகுகள் - மோயார் பள்ளத்தாக்கு

- தீபகற்ப இந்தியாவின் காடுகளில் ஜிப்ஸ் கழுகுகளின் மிகப்பெரிய கூடு கட்டும் பகுதி அமைந்த ஒரே பகுதி இதுவாகும்.
- மோயார் பள்ளத்தாக்கு அல்லது மாயார் (புலப்படாத ஆறு) பள்ளத்தாக்கு கூடலூரில் இருந்து முதுமலை புலிகள் காப்பகத்தின் முக்கியப் பகுதி வழியாக நீண்டுள்ளது.
- சுமார் 85 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த முழுப் பகுதியும் நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் உள்ள வனவிலங்குகளின் புகலிடமாகவும் ஒரு மிக முக்கிய உயிரியல் பகுதியாகவும் உள்ளது.
- இது புலி மற்றும் யானை மற்றும் மிகவும் அருகி வரும் இனமான ஜிப்ஸ் கழுகு போன்ற பல முக்கிய உயிரினங்களுக்கான வாழ்விடங்களை அளிக்கிறது.
- மற்ற தென் மாநிலங்கள் எதுவும் இந்தப் பறவைகளுக்கு இவ்வளவு ஏதுவான இனப் பெருக்க இடம் உருவாக்கப்படவில்லை.
- இது மேற்கில் வயநாடு வனவிலங்கு சரணாலயம் (கேரளா), வடக்கே பந்திப்பூர் புலிகள் வளங்காப்பகம் (கர்நாடகம்), தெற்கு மற்றும் கிழக்கில் நீலகிரி வடக்குப் பிரிவு மற்றும் தென்மேற்கில் கூடலூர் வனப் பிரிவு ஆகியவற்றுடன் ஒரு பொதுவான எல்லையைக் கொண்டுள்ளது.



## சிக்காடா வண்ணத்துப்பூச்சி

- இந்தியாவின் மேகாலயா மாநிலத்தில் "வண்ணத்துப்பூச்சி சிக்காடாஸ்" என்று குறிப்பிடப்படும் புதிய வகை சில்வண்டு வண்ணத்துப் பூச்சிக்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பெக்குவார்டினா பைகலர் எனப்படும் இந்தப் புதிய சில்வண்டு வண்ணத்துப்பூச்சி இனமானது இந்தியாவில் முதல் முறையாகப் பதிவான பெக்குவார்டினா இனத்தைக் குறிக்கிறது.
- இந்த கண்டுபிடிப்பு ஆனது மேகாலயாவின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பல்லுயிர்ப் பெருக்கத் திறனை எடுத்துக்காட்டுகிறது.
- சில்வண்டு வண்ணத்துப்பூச்சி இனங்கள் இரண்டு வெவ்வேறு வண்ணங்களைக் கொண்டிருப்பதால் இதற்கு "பைகலர்" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது காரோ மலைகள் மற்றும் ரி போய் ஆகிய மாவட்டங்களில் ஒரு வட்டார இனமாக உள்ளது.



## புலி வடிவ படை வரிப் பூனை

- புலி வடிவ படைவரிப் பூனை என்றும் அழைக்கப்படுகின்ற லியோபார்டாஸ் பார்டிநோய்டுஸ், 2024 ஆம் ஆண்டில் ஒரு புதிய இனமாக முன்மொழியப்பட்ட ஒரு சிறிய காட்டுப் பூனை இனமாகும்.
- இது புலி வடிவப் பூனை இனங்களின் ஒரு பகுதியாகும் என்பதோடு இதில் தெற்கு புலி வடிவப் பூனை (லியோபார்டாஸ் குட்டுலஸ்) மற்றும் வடக்கு புலி வடிவப் பூனை (லியோபார்டாஸ் டைக்ரினஸ்) ஆகியவை அடங்கும்.
- லியோபார்டாஸ் பார்டிநோய்டுஸ் என்பது குறுகிய வட்ட வடிவக் காதுகளைக் கொண்ட நீண்ட வால் கொண்ட புலி வடிவப் பூனையாகும்.



## வளர்க்கப்படும் யானைகளின் மரபணு விவரக் குறிப்பு

- கேரளாவில் தனியாரால் வளர்க்கப்படும் 400க்கும் மேற்பட்ட யானைகளின் மரபணு விவரக் குறிப்பு சேமிப்பு நடவடிக்கையானது விரைவில் தொடங்க உள்ளது.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது, யானைகளின் விவரங்களை தேசிய தரவுத் தளத்தில் சேர்ப்பதற்கான விவரக் குறிப்பு சேகரிப்பை மேற்கொள்ள உள்ளது.
- இது கேரள வனத்துறைக்கு தடயவியல் கருவிகளை வழங்கியுள்ளது.
- தனியாரால் வளர்க்கப்படும் யானைகளை மாநிலங்களுக்குள்ளும் மாநிலங்களுக்கி இடையேயும் இடம் மாற்றுவதைக் கண்காணிப்பதற்காக வேண்டி இந்த விவரக்குறிப்பு மேற்கொள்ளப்படுகிறது.
- கேரளாவில் ஆண்டிற்கு 25 யானைகள் உயிரிழக்கின்றன.
- அம்மாநிலத்தில் தனியாரால் வளர்க்கப்படும் யானைகளின் எண்ணிக்கை இதுவரை இல்லாத அளவுக்கு 407 என்ற குறைந்த அளவை எட்டியுள்ளது.
- கேரளா மாநிலமானது, ஒரு காலத்தில் தனியாரால் வளர்க்கப்படும் யானைகளின் அதிக எண்ணிக்கை கொண்ட மாநிலமாக கருதப்பட்டது.

## குறையும் ஆப்பிரிக்க ஊண் உண்ணும் பறவைகளின் எண்ணிக்கை

- கடந்த 40 ஆண்டுகளில் ஆப்பிரிக்க ஊண் உண்ணும் பறவைகளின் எண்ணிக்கை சுமார் 88 சதவிகிதம் என்ற அளவில் பரவலாக குறைந்து வருகின்றன.
- ஆய்வு செய்யப்பட்ட 42 இனங்களில் 37 இனங்கள் அவற்றின் எண்ணிக்கையில் ஒரு சரிவைக் கண்டுள்ளன.
- மொத்த இனங்களில், 29 இனங்கள் (69 சதவீதம்) கடந்த மூன்று தலைமுறையாக அதன் எண்ணிக்கையில் சரிவைக் கண்டுள்ளன.
- ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் உள்ள 27 இனங்களில் 24 இனங்கள் (89 சதவீதம்) சரிவு வரம்பை மீறியுள்ளன.
- இவற்றில் குறைந்த கவனம் செலுத்தப்பட வேண்டியவை என்ற பிரிவில் பட்டியலிடப் பட்டுள்ள 13 இனங்கள், அவற்றின் நிலையை மீண்டும் மறுமதிப்பீடு செய்ய வேண்டிய சிக்கலையும் எழுப்புகிறது.



## ஒரு மில்லியன் இளையோர் நடவடிக்கைகளுக்கான சவால்





- 1 மில்லியன் இளையோர் நடவடிக்கைகளுக்கான சவால் (1MYAC) ஆனது 10 முதல் 30 வயது வரையிலான இளையோர்களை மிகவும் நிலையான எதிர்காலத்திற்கான பல உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் பருவநிலை மாற்றக் கற்றல் கூட்டாண்மை மூலம் தொடங்கப் பட்டது (UN CC: Learn).
- 1.000.000 இளையோர் நடவடிக்கைகளை எட்டுவதே இதன் நோக்கம் ஆகும்.
- 1MYAC நான்கு நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) ஊக்குவிக்க வேண்டிப் பணியாற்றுகிறது:
  - 'தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்' குறித்த SDG 6,
  - 'பொறுப்புணர்வு மிக்க நுகர்வு மற்றும் உற்பத்தி' குறித்த SDG 12,
  - 'பருவநிலை நடவடிக்கை' (பருவநிலை மாற்றம்) குறித்த SDG 13 மற்றும்
  - 'புவியில் உயிர்கள்' (பல்வகைமை) குறித்த SDG 15.

## ஆர்க்டிக் துருவ சூழல் காற்றின் திசை மாற்றம்

- துருவப் பகுதியை சூழ்ந்து காணப்படும் காற்றோட்டம் ஆன துருவச் சுழல் ஆனது, 21 நாட்களுக்கு மர்மமான முறையில் திசை மாறியது.
- இது கடந்த நாற்பது ஆண்டுகளில் பதிவான மிகப்பெரிய நிகழ்வுகளில் ஒன்றாகும்.
- துருவச் சுழல் என்பது இது படை அடுக்கு மண்டலம் என்று அழைக்கப்படும் ஒரு பகுதியில் மேற்பரப்பில் இருந்து பல கிலோமீட்டர் உயரத்தில் ஒவ்வொரு குளிர் காலத்திலும் துருவப் பகுதியைச் சுற்றி வீசும் உயர்மட்டக் காற்றைக் குறிக்கின்ற பூமியின் வளிமண்டலத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.
- படையடுக்கு மண்டல துருவச் சுழல் ஆனது பூமியின் துருவப்பகுதி, சூரியனிடமிருந்து விலகி இருக்கும் போது புவியின் அரைக்கோளத்தில் குளிர்காலத்தில் தோன்றுகிறது.

- இது நிகழும்போது, துருவ படையடுக்கு மண்டலமானது வெப்பமண்டல படையடுக்கு மண்டலத்துடன் ஒப்பிடுகையில் இருள் சூழ்ந்தக் கட்டத்தில் நுழைவதால் குளிர்ச்சி அடைகிறது.
- இந்த வெப்பநிலை மாறுபாடு ஆனது படையடுக்கு மண்டலத்தில் வலுவான மேற்கு - கிழக்கு நோக்கிய காற்றோட்டம் உருவாக வழிவகுக்கிறது.
- இந்த குளிர்காலப் படையடுக்கு மண்டலக் காற்று பொதுவாக ஆர்க்டிக் துருவச் சுழல் என்று குறிப்பிடப்படுகிறது.





## India Flora இயங்கலை தரவுத் தளம்



- இந்திய அறிவியல் கழகம் ஆனது "India Flora online" எனப்படும் இந்தியாவில் உள்ள தாவரங்கள் குறித்த எண்ணிம தரவுத்தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது இந்தியாவில் உள்ள தாவர வளங்களை ஆவணப்படுத்துவதற்கான ஒரு விரிவான முன்னெடுப்பு ஆகும்.
- இது இந்தியாவில் உள்ள தாவரங்கள் அல்லது மலர் வகைகளின் வளங்களை ஒரே தேடல் முகப்பில் இடுவதற்கான இந்தியாவின் தேவையை இது பூர்த்தி செய்கிறது.

## கடல்சார் நினோ குறியீடு

- அமெரிக்கத் தேசிய கடல்சார் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பானது கடல்சார் நினோ தாக்கத்தின் 83% வாய்ப்புகளைக் கணித்துள்ளது.
- இது எல் நினோ-தெற்கத்திய அலைவின் (ENSO) முக்கிய அளவீடு ஆகும் என்பதோடு, வெப்ப மண்டலத்தில் உள்ள பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்ப நிலையை இது கண்காணிக்கிறது.
- எல் நினோ-தெற்கு அலைவின் (ENSO) எதிர் நிலைகளான எல் நினோ மற்றும் லா நினோ என்பவை உலகளாவிய வானிலை, சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பொருளாதாரங்களைப் பாதிக்கின்றன.
- எல் நினோ வெப்பமான நீரையும், அதே சமயம் லா நினோ குளிர்ச்சியான சூழ்நிலையையும் ஏற்படுத்துகின்றன என்பதோடு, இவை இரண்டும் இரண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒழுங்கற்ற முறையில் ஏற்படுகின்றன.



## 'Forever chemicals' – இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம்

**HOW DO THESE CHEMICALS GET INTO WATER?**

- These products release PFAS into the Perungudi dumpyard soil, and start contaminating leachate and groundwater
- Sewage also has PFAS, which explains the presence of these chemicals in the Adyar river and Buckingham canal, where untreated domestic wastewater is discharged.
- Many industries, including polymer manufacturing industries are situated near the Chembarambakkam lake, polluting it with PFAS.
- Health effects | liver damage, low infant birth weights, hormonal imbalance, fertility issues, immune system effects, and even cancer
- How to identify if the product you use has these chemicals? Look for ingredients 'perfluoro-' or 'polyfluoro-'

(Source: IIT-M study)

- ❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் சமீபத்திய ஆய்வானது, ' 'forever chemicals' (அழியாத வேதிப் பொருட்கள்) என்றழைக்கபடும் ப்ரீ மற்றும் பாலி ஃப்ளுரோஅல்கைல் பொருட்கள் (PFAS) பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு ஆறு மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றில் மிகப் பரவலாக காணப்படுவதை நன்கு வெளிப்படுத்தி யுள்ளது.
- ❖ ப்ரீ மற்றும் பாலிஃப்ளுரோஅல்கைல் பொருட்கள் (PFAS) என்பது ஒட்டாதத் தன்மை உடைய சமைக்கும் கலங்கள், மெத்தை விரிப்பான்கள், உணவுப் பொதிகள், தண்ணீர் அல்லது கறை படாமல் தடுக்கும் வண்ணப்பூச்சுகள் மற்றும் தொழில்துறைப் பொருட்கள் போன்ற அன்றாடப் பயன்பாட்டு தயாரிப்புகளில் காணப்படும் செயற்கை இரசாயனங்களின் பரந்த பிரிவு வகைகளில் ஒன்றாகும்.
- ❖ இந்த இரசாயனங்கள் சுற்றுச்சூழலில் எளிதில் சிதைவதில்லை.
- ❖ அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் (EPA) பாதுகாப்புத் தர நிலைகளுடன் ஒப்பிடும் போது சென்னை மாநகரத்தில் உள்ள நீர்நிலைகளில் 'forever chemicals' என்று அழைக்கப் படும் இந்த ப்ரீ மற்றும் பாலிஃப்ளுரோஅல்கைல் பொருட்கள் (PFAS) செறிவு சுமார் 19,400 மடங்கு அதிகமாக உள்ளது.

## துளையிடும் வாய்ப்பகுதிகளுடன் கூடிய ஆண் கொசுக்கள்

- ❖ லெபனானில், சுமார் 125 மில்லியன் ஆண்டுகள் பழமையான ஆம்பரில் (மரப்பிசின்) கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய வகை கொசு குறித்து பழங்கால ஆராய்ச்சியாளர்கள் விவரித்துள்ளனர்.
- ❖ இந்தப் புதிய இனங்களின் ஆண் கொசுக்களில் எதிர்பாராதவிதமாக கூர்மையான தாடைகளுடன் கூடிய துளையிடும் வாய்ப்பகுதிகள் கொண்டு காணப்படுகின்றன என்ற நிலையில் அவை இரத்த உறிஞ்சுக் குழாய்களாக இருக்கக் கூடும்.

- கடந்த காலத்தில் ஆண் கொசுக்களும் இரத்தத்தை உட்கொண்டதாக அது தெரிவிக்கிறது.
- இந்தப் புதிய மாதிரிகள் ஆனது லிபனோகுலெக்ஸ் இன்டர்மீடியஸ் என்ற புதிய வகை கொசுக்களைக் குறிக்கின்றன.
- கொசுக்கள் ஆனது குலிசிடே குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 3,600 வகையான சிறிய ஈக்கள் இனமாகும்.
- பெண் கொசுக்கள் ஆனது, மிகவும் மோசமான ஹெமாட்டோபாகஸ் (இரத்த உண்ணி) பூச்சிகளில் ஒன்றாகும் என்பதோடு இவை சில நேரங்களில் கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகளை ஏற்படுத்தும்.



## நெப்டிஸ் ஃபிலிரா

- நெப்டிஸ் பிலிரா என்ற அரிய வகை வண்ணத்துப் பூச்சி இனம் ஆனது, அருணாச்சலப் பிரதேசத்தின் தாழ்மட்ட சுபன்சிரி மாவட்டத்தில் உள்ள டேல் பள்ளத்தாக்கு வனவிலங்குச் சரணாலயத்தில் இந்தியாவிலேயே முதல் முறையாக கண்டறியப் பட்டு உள்ளது.
- இது பொதுவாக நீண்ட கோடுகள் கொண்ட பயணி என்று அழைக்கப்படுகிறது.
- இன்றுவரையில், கிழக்கு சைபீரியா, கொரியா, ஜப்பான், மத்திய மற்றும் தென்மேற்கு சீனா உள்ளிட்ட கிழக்கு ஆசியாவின் பல்வேறு பகுதிகளில் இந்த வண்ணத்துப் பூச்சி இனங்கள் காணப் படுவதாக அறியப்பட்டது.



## புதிய உண்ணக் கூடிய காளான் வகைகள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் மத்தியத் தோட்டப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, கோப்ரினோப்சிஸ் சினிரியா என்ற புதிய உண்ணக் கூடிய காளான் இனத்தினை அடையாளம் கண்டு உள்ளது.
- இது இயற்கையாகவே பாக்குகளின் உமிகள் (தோல் பகுதி) வளரும் காளான் வகை ஆகும்.
- கோப்ரினோப்சிஸ் என்பது கரிமப் பொருட்களைச் சிதைப்பதில் அவை கொண்டுள்ள முக்கிய சுற்றுச்சூழல் பங்கிற்காக அறியப்படுகின்ற காளான்களின் ஒரு இனமாகும்.



## மத்தி மீன்களின் மிகப்பெரிய இடம் பெயர்வு

- கோவாவில் உள்ள ஒரு கடற்கரைக்கு அருகில் திடீரென ஆயிரக்கணக்கான மத்தி மீன்கள் தென்பட்டன.
- இது ' மத்தி மீன்களின் மிகப்பெரிய இடம் பெயர்வு-சார்டின் ரன்' எனப்படும் "அரிதான" நிகழ்வு ஆகும்.
- கெரி-தெரெகோல் கடற்கரையோரத்தில் உள்ள ஆழமற்ற நீரில் இந்தக் கடல் இனங்களின் திரள்கள் அவ்வப்போது தென்படுகின்றன.
- கோடை மழையின் நீர் வழிந்தோடும் போது நிலத்தில் இருந்து ஊட்டச்சத்துக்கள் கடலில் சேர்வதன் காரணமாக இந்நிகழ்வு ஏற்படுகிறது.
- கடந்த ஆண்டு சாவக்காடு மற்றும் மலப்புரம் மற்றும் இதற்கு முன்பு ஆலப்புழாவிலும் இது போன்ற நிகழ்வுகள் கேரளாவில் பதிவாகியுள்ளன.



## எரிமலை சுழல் வளையங்கள்




- ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையான மவுண்ட் எட்னாவிலிருந்து வெளிவரும் புகை காற்றில் புகை சூழ் வளையங்களை உருவாக்குகிறது.
- இந்த வளையங்கள் ஆனது எரிமலை சுழல் வளையங்கள் என்று அறிவியலாளர்களால் குறிப்பிடப்படும் ஓர் அரிய நிகழ்வு ஆகும்.
- வாயு என்பது, முக்கியமாக நீராவியானது, பள்ளத்தில் உள்ள ஒரு துவாரம் வழியாக வேகமாக வெளியேறும் போது சுழல் வளையங்கள் உருவாகின்றன.
- எட்னாவின் பள்ளத்தில் உருவான துவாரம் கிட்டத்தட்ட முழு வட்டமானதாகும்.
- இந்த நிகழ்வு ஆனது முதன்முதலில் இத்தாலியில் உள்ள எட்னா மற்றும் வெசுவியஸ் ஆகியவற்றில் 1724 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது என்பதோடு அது 1755 ஆம் ஆண்டு முதல் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.
- எட்னா எரிமலையின் வெடிப்பு நிகழ்வுகள் ஆனது 500,000 ஆண்டுகளுக்கு முன்னதில் இருந்தே ஏற்படத் தொடங்கியது என்ற நிலையில் குறைந்தது 2,700 ஆண்டுகள் இந்த நடவடிக்கை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.


## உலக வனக் கண்காணிப்பு இணைய தளத்தின் அறிக்கை

- உலக வனக் கண்காணிப்பு இணைய தளமானது செயற்கைக்கோள் தரவு மற்றும் பிற ஆதாரங்களைப் பயன்படுத்தி வனங்களில் ஏற்படும் ஒரு நிகழ்நேர மாற்றங்களைக் கண்காணிக்கிறது.
- இந்தியாவில் 2000 ஆம் ஆண்டு முதல் சுமார் 2.33 மில்லியன் ஹெக்டேர் அளவிலான மரங்களின் பரவல் குறைந்துள்ளது என்பதோடு, இந்தக் காலக் கட்டத்தில் மரங்களின் பரவலில் ஆறு சதவிகிதம் குறைந்ததற்கு இது சமம் ஆகும்.
- 2001 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவில் உள்ள காடுகள் ஆண்டுக்கு 51 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடை வெளியேற்றியது மற்றும் ஓராண்டிற்கு 141 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடை அகற்றியது.
- இது ஓராண்டிற்கு 89.9 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான நிகர கார்பன் ஈரப்பினைக் குறிக்கிறது.

- தேசிய சராசரியான 66,600 ஹெக்டேர்களுடன் ஒப்பிடுகையில், அசாமில் அதிக பட்சமாக 324,000 ஹெக்டேர் மரங்கள் அழிந்துள்ளது.
- மிசோரம் மாநிலத்தில் 312,000 ஹெக்டேர் மரங்களும், அருணாச்சலப் பிரதேசத்தில் சுமார் 262,000 ஹெக்டேர் மரங்களும், நாகாலாந்தில் 259,000 ஹெக்டேர் மரங்களும், மணிப்பூரில் 240,000 ஹெக்டேர் மரங்களும் அழிந்துள்ளன.
- GFW தளத்தின் தரவு ஆனது, 2001 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் அழிந்த மரங்களின் அளவில் ஐந்து மாநிலங்கள் 60 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.
- இந்தியாவில் காடழிப்பு விகிதம் ஆனது, 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 668,000 ஹெக்டேர் என்ற வருடாந்திர வீதத்தில் இருந்தது என்ற நிலையில் இது உலகளவில் இரண்டாவது மிக உயர்ந்த அளவாகும்.
- 2001 முதல் 2022 ஆம் ஆண்டு வரை, ஒடிசா மாநிலத்தில் ஆண்டிற்கு 238 ஹெக்டேர் என்ற சராசரி இழப்புடன், தீ விபத்துகளால் ஏற்பட்ட மரங்களின் இழப்பு ஆனது அதிக விகிதத்தில் இருந்தது.





## ரிங்வுடைட்




- பூமியின் கண்ட மேலோட்டிற்கு அடிப்பகுதியில் ஒரு மாபெரும் பெருங்கடல் மறைந்து காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பூமியின் மேற்பரப்பிலிருந்து 700 கிலோமீட்டர் கீழே அமைந்துள்ள ரிங்வுடைட் எனப் படும் பாறையில் தண்ணீர் சேமிக்கப்படுகிறது.
- இந்த நிலத்தடி நீர்த்தேக்கம் ஆனது புவியின் மேற்பரப்பில் அமைந்த கடல்களின் அளவை விட மூன்று மடங்கு அதிகமாகும்.
- ரிங்வுடைட்டின் ஹைட்ரஜனை ஈர்த்து தண்ணீரைத் தேக்கவும் வழி வகுக்கும்.
- ரிங்வுடைட்டின் படிக அமைப்பில் மிகவும் சிறப்பு வாய்ந்த அம்சம் இருப்பதால் ரிங்வுடைட் தண்ணீரை உறிஞ்சும் ஓர் உறிஞ்சு பொருள் போல செயல்படுகிறது.
- பூமியின் மூடக இடைமாற்று மண்டலத்தில் (410 முதல் 660-கிலோமீட்டர் ஆழம் வரை) உள்ள கனிமங்களின் அதிக நீர்ச் சேமிப்பு திறன் ஆழமான பகுதியில் $H_2O$ தேக்கத்தின் உருவாக்கத்திற்கான சாத்தியத்தைக் குறிக்கிறது.

## கரிபா ஏரியின் நீர் மட்டம்




- சமீபத்திய எல் நினோ வறட்சியின் காரணமாக ஜிம்பாப்வேயில் உள்ள கரிபா ஏரியின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.
- ஏரியின் நீர் மட்டமானது அதன் கொள்ளளவில் வெறும் 13.52% ஆகக் குறைந்துள்ளது.
- மழைக்கு ஏற்றவாறு அந்த ஏரியின் நீர்மட்டம் மாறுகிறது என்ற நிலையில் கடந்த ஆண்டு, ஏரி 21.94% நிரம்பியிருந்தது, ஆனால் 2015 ஆம் ஆண்டில் அந்த ஏரியின் நீர் மட்டம் 12% ஆகக் குறைந்திருந்தது.
- 280 கிலோமீட்டர் நீளமுள்ள, மனிதனால் உருவாக்கப்பட்ட கரிபா ஏரி என்பது கரிபா அணையின் ஒரு பகுதியாகும்.
- கரிபா ஏரி என்பது உலகின் மிகப்பெரிய, மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரி மற்றும் நீர்த் தேக்கம் ஆகும்.
- இது 1955 மற்றும் 1959 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே இடையே ஜாம்பேசி நதிப் படுகையில் கட்டமைக்கப்பட்டது.

## 4வது உலகளாவிய மாபெரும் பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு





- அமெரிக்காவின் தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக (NOAA) முகமையின் பவளப்பாறை கண்காணிப்பு (CRW) அமைப்பு மற்றும் சர்வதேச பவளப் பாறை முன்னெடுப்பு (ICRI) அமைப்பு ஆகியவை இணைந்து 2023-2024 ஆம் ஆண்டில் நான்காவது உலகளாவிய மாபெரும் பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வு ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளன.
- கடந்த 10 ஆண்டுகளில் நிகழ்ந்த இதுபோன்ற இரண்டாவது நிகழ்வான இது 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் உலகப் பெருங்கடல்களில் முன்னப்போதும் இல்லாத அளவிற்கு வெப்பம் பதிவான காலக் கட்டத்தில் நிகழ்ந்துள்ளது.
- இதற்கு முன்னதான பவளப்பாறை நிறமாற்ற நிகழ்வானது 2014 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் நீடித்தது.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில், பெருங்கடலின் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமான பகுதிகள் ஆண்டின் ஒரு கட்டத்தில் வெப்ப அலை சூழ்நிலைகளை எதிர்கொண்டன.
- மிக சமீபத்தியப் பருவநிலை மாதிரிகள் ஆனது 2040-2050 ஆம் ஆண்டுகளில் எங்காவது ஒரு பகுதியில் உள்ள பெரும்பாலானப் பாறைகளில் நிறமாற்ற நிகழ்வுகள் வருடாந்திர வீதத்தில் நிகழக் கூடிய நிகழ்வாக இருக்கலாம் என்று கூறுகின்றன.


## சலாஸ் ஒய் கோமேஸ்

- சர்வதேச அறிவியலாளர்கள் குழுவானது, 2,900 கிலோமீட்டர் நீளமுள்ள சலாஸ் ஒய் கோமேஸ் என்ற கடலடி மலைத் தொடரில் உள்ள 10 கடல் குன்றுகள் மற்றும் இரண்டு தீவுகளை ஆய்வு செய்த போது 160 புதிய உயிரினங்களைக் கண்டறிந்தது.
- அவற்றில் குறைந்தது 50 இனங்கள் அறிவியலுக்குப் புதியவை என்று அந்தக் குழு கருதுகின்றது.
- அவர்கள் ஆழமான பகுதியில் காணப்படும் ஒளிச்சேர்க்கையினைச் சார்ந்துள்ள உயிரினம் ஆன லெப்டோசெரிஸ் அல்லது ரிங்கில் பவளப் பாறைகளைக் கண்டறிந்த சாதனையையும் படைத்துள்ளனர்.

- சலாஸ் ஒய் கோம்ஸ் மலைத் தொடர்கள் ஆனது, ஐக்கிய நாடுகள் சபையின் நடுக்கடல் பகுதிக்கான ஒப்பந்தத்தின் ஒப்புதலின் பேரில் நடுக்கடல்களில் உள்ள பாதுகாக்கப் பட்ட பகுதியாக நியமிப்பதற்கான பரிசீலனையில் உள்ள பல உலக இடங்களில் ஒன்று ஆகும்.




## பனிப்பாறை ஏரிகளின் விரிவாக்கம்




- 1984 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான இந்திய இமயமலை ஆற்றுப் படுகைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் படம் பிடித்த இஸ்ரோவின் நீண்ட கால செயற்கைக்கோள் புகைப்படங்கள் ஆனது பனிப்பாறை ஏரிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளன.
- 2016-17 ஆம் ஆண்டுகளில் அடையாளம் காணப்பட்ட 10 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பிளவிலான 2,431 ஏரிகளுள், 676 பனிப்பாறை ஏரிகள் 1984 ஆம் ஆண்டு முதல் விரிவடைந்துள்ளன.
- குறிப்பாக, இவற்றில் 130 ஏரிகள் இந்தியாவிற்குள் அமைந்துள்ளன என்ற நிலையில், இவற்றில் 65, 7 மற்றும் 58 ஏரிகள் ஆகியவை முறையே சிந்து, கங்கை மற்றும் பிரம்ம புத்திரா நதிப் படுகைகளில் அமைந்துள்ளன.

- இந்த ஏரிகளில் சுமார் 601 ஏரிகள் (89%) இரண்டு மடங்குக்கு மேலாக விரிவடைந்து உள்ளன என்பதோடு சுமார் 10 ஏரிகள் 1.5 முதல் 2 மடங்கும், 65 ஏரிகள் 1.5 மடங்கும் விரிவடைந்துள்ளன.
- 314 ஏரிகள் 4,000 முதல் 5,000 மீ என்ற உயரத்திலும், 296 ஏரிகள் 5,000 மீ உயரத்திற்கு மேலான பகுதிகளிலும் உள்ளதாக உயர அடிப்படையிலான ஒரு பகுப்பாய்வு என்பது வெளிப்படுத்துகிறது.


## பிரேசிலில் புலி வடிவப் படைவரிப் பூனை

- பிரேசிலின் அடர்ந்த மழைக்காடுகளில் ஒரு புதிய புலி இனம் என்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இதற்கு புலி வடிவப் படைவரிப் பூனை (லியோபார்டஸ் பார்டினாய்டுஸ்) எனப் பெயரிடப் பட்டது.
- புலி வடிவப் படைவரிப் பூனையானது தோராயமாக வீட்டுப் பூனையின் அளவில் காணப் படும் ஒரு சிறிய காட்டுப்பூனையாகும்.
- புலி வடிவப் படைவரிப் பூனையானது கோஸ்டாரிகாவிலிருந்து பனாமா, கொலம்பியா, பெரு, பொலிவியா மற்றும் அர்ஜென்டினா ஆகிய பகுதி வரை காணப் படுகின்றது.
- இதன் வாழ்விடமானது அதன் தொடர்பு இனங்களான வடக்கு புலி வடிவப் பூனை மற்றும் அட்லாண்டிக் வனப்புலி வடிவப் பூனைகள் காணப்படுகின்ற புல்வெளிகள் மற்றும் புதர் நிலங்களின் புறப்பகுதி ஆகும்.



## அண்டார்டிகா பனிப்படலத் துள்ளல்

- ராஸ் பனிப்படலங்கள் ஆனது ஒரு நாளைக்கு இரண்டு முறை திடீரென நன்கு மேல் எழும்புவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவை பனிப்பாறை நிலநடுக்கங்களை (பனிக்கட்டிக்குள் ஏற்படும் பல நில அதிர்வு இடையூறுகள்) ஏற்படுத்தக் கூடும்.
- மேலும், இந்த துள்ளல் ஆனது பனிப்படலங்களில் பெரும் பிளவுகளை ஏற்படுத்தி அதன் நிலைத் தன்மையை சீர்குலைக்கக் கூடும்.
- ராஸ் பனிப்படலங்கள் என்பது பிரான்சு நாட்டின் அளவுள்ள ஒரு பெரிய பனிப்பாறை ஆகும்.




## மீனுருவ நீர்வாழ் பாலூட்டி இனங்களின் உரிமைகள் பிரகடனம்

- 2010 ஆம் ஆண்டில், செட்டாசியன் உரிமைகள் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பின்லாந்தின் ஹெல்சிங்கி நகரில் நடைபெற்ற மாநாட்டில் மீனுருவ நீர்வாழ் பாலூட்டி இனங்களின் உரிமைகளுக்கான பிரகடனம் ஆனது சமார்பிக்கப்பட்டது.
- இந்தப் பிரகடனம் ஆனது மீனுருவ நீர்வாழ் பாலூட்டி இனங்களுக்குக் குறிப்பாக ஓங்கில்கள் மற்றும் திமிங்கலங்கள், ஆகியவற்றிற்கு வாழ்வதற்கான உரிமை மற்றும் சட்டப்பூர்வ ஆளுமை ஆகியவற்றை வழங்குகிறது.
- தற்போது, ஒரு புதிய ஒப்பந்தத்தில் திமிங்கலங்கள் மற்றும் ஓங்கில்கள் அதிகாரப் பூர்வமாக "சட்டப்பூர்வ நபர்கள்" என அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் குக் தீவுகள், பிரெஞ்சு பாலினேசியா, அயோடேரோவா (நியூசிலாந்து) மற்றும் டோங்கா ஆகிய சில நாடுகளைச் சேர்ந்த பசிபிக் தன்னாட்டு அமைப்பின் தலைவர்களால் உருவாக்கப்பட்டது.



## கார்பனை உறிஞ்சும் துந்த்ரா பகுதி முதன்மை மூலமாக மாற்றம்





- ஆர்க்டிக் மற்றும் அல்பைன் துருவப்பகுதிப் பாலைவன (துந்த்ரா) சூழல் அமைப்புகள் மிகப் பெரிய அளவிலான கரிம கார்பன் தேக்கங்களாக அறியப்படுகின்றன.
- புவியின் வெப்பமயமாதல் ஆனது துருவப்பகுதி பாலைவனச் சூழல்களின் பண்புகளை மாற்றலாம் மற்றும் அவற்றைக் கார்பன் உறிஞ்சு பகுதியிருந்து கார்பன் உமிழ்வு மூலங்களாக மாற்றலாம்.
- உயரும் வெப்பநிலைகள் ஒரு பகுதியின் நைட்ரஜன் அளவுகள் மற்றும் Ph அளவினை மாற்றுவதால் அப்பகுதியின் உயிர் வேதியியல் மாற்றத்தை ஏற்படுத்துகிறது.
- காற்றின் வெப்பநிலையில் சராசரியாக ஏற்படும் 1.4 டிகிரி செல்சியஸ் அதிகரிப்பு ஆனது, மண்ணின் வெப்பநிலையில் 0.4 டிகிரி செல்சியஸ் மற்றும் மண்ணின் ஈரப் பதத்தில் 1.6 சதவிகிதம் குறைவினை ஏற்படுத்தி பயிர் வளரும் பருவத்தில் அவற்றின் சுவாச இயக்கத்தில் 30 சதவிகிதம் அதிகரிக்க வழிவகுக்கிறது.
- துருவப்பகுதி பாலைவனப் பகுதியின் உயிரி கட்டமைப்பில் வெப்பமயமாதல் விகிதம் ஒரு தசாப்தத்திற்கு 0.73° C வெப்பநிலையினை எட்டக் கூடும் என்பதோடு, இது ஒரு தசாப்தத்திற்கு 0.19° C என்ற உலகளாவிய சராசரி விகிதத்தைக் கணிசமான அளவில் விஞ்சுகிறது.
- மேலும், மண்ணின் ஈரப்பதம் 1.6 சதவிகிதம் குறைந்து, கார்பன் உறிஞ்சியாகச் செயல் படும் துருவப்பகுதி பாலைவனப் பகுதியின் திறனைப் பாதிக்கிறது.

## கடல் சார் பொருளாதாரம் பற்றிய IUCN அமைப்பின் அறிக்கை

- IUCN அமைப்பானது, "ஒரு மீளுருவாக்கம் மிக்க கடல்சார் பொருளாதாரத்தை நோக்கி – கடல்சார் பொருளாதாரத்தை வடிவமைத்தல்" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது ஒரு மீளுருவாக்கம் மிக்க கடல்சார் பொருளாதாரத்திற்கான (RBE) வரையறை மற்றும் கொள்கைகளை முன்மொழிந்துள்ளது.

- RBE மாதிரியானது, நிலையான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நியாயமான செழுமையுடன் கூடிய, பெருங்கடல் சூழல் அமைப்புகளின் பயனுள்ள மீளுருவாக்கம் மற்றும் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெருங்கடல் சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் மீள் தன்மை ஆகியவற்றை வலியுறுத்துவதோடு, உள்ளடக்கம், நேர்மை மற்றும் பழங் குடியினர் உரிமைகள் மற்றும் சூழலமைப்பு வளங்காப்பிற்கு பெருமளவு முன்னுரிமை அளிக்கிறது.
- இது கார்பன் உமிழ்வுக் குறைப்பிற்காக எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் ஆழ்கடல் சுரங்க நடவடிக்கை போன்ற செயல்பாடுகளைத் தவிர்க்கிறது.





## பாரோ அறிக்கை

- புலிகள் வளங்காப்புக் கூட்டணியுடன் இணைந்து நடத்தப்பட்ட புலிகளின் வாழ்விட நிலப்பரப்புகளுக்கான நிலையான நிதி மாநாடானது, பூடான் அரசாங்கத்தின் பாரோ அறிக்கையுடன் நிறைவடைந்தது.
- அடுத்தப் பத்து ஆண்டுகளில் புலிகள் மற்றும் புலிகளின் வாழ்விட நிலப்பரப்புகளைப் பாதுகாப்பதற்காக கூடுதலாக 1 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் திரட்டுவதற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டில் இணையுமாறு இது பங்கேற்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.
- இந்த நிதியானது உலகளவில் உள்ள புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பது மற்றும் அதிகரிப்பதோடு, புலிகளின் வாழிட வரம்பை விரிவுபடுத்துவதற்கும் சேர்த்து பங்களிக்கும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவுக் கழிவுகள் குறியீட்டு அறிக்கை 2024


- 2022 ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள குடும்பங்கள் ஒரு நாளைக்கு சுமார் ஒரு பில்லியனுக்கும் அதிகமான உணவை வீணாக்குகின்றன.
- இந்த ஆண்டில் 783 மில்லியன் மக்கள் பட்டினி நிலையை எதிர்கொண்டனர் மற்றும் மூன்றில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர்.
- 2022 ஆம் ஆண்டில், சுமார் 1.05 பில்லியன் டன் உணவுக் கழிவுகள் அளவில் (உட்கொள்ள முடியாத உணவுகள் உட்பட) உருவாக்கப்பட்டன.
- இது ஒரு நபருக்கு 132 கிலோகிராம் கழிவுகள் ஆகவும், நுகர்வோருக்கு கிடைக்கப் பெறும் அனைத்து உணவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஆகவும் உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் வீணடிக்கப் படும் மொத்த உணவில், வீடுகளில் 60 சதவீதமும், உணவுச் சேவை நிறுவனங்களில் 28 சதவீதமும், சில்லறை விற்பனைகளில் 12 சதவீதமும் வீணடிக்கப் படுகின்றன.
- உணவு வீணடிக்கப்படுதல் மற்றும் உணவுக்கழிவுகள் ஆனது, விமானத் துறையில் பதிவான உமிழ்வினை விட சுமார் 5 மடங்கு அதிகமாக, சுமார் 8 முதல் 10% வருடாந்திர உலகளாவியப் பசுமை இல்ல வாயு உமிழ்வினை ஏற்படுத்தியுள்ளன.




## வாரிசுரிமை வரி: ஆக்ஸ்ஃபாம் அறிக்கை

- 70% நாடுகளில் செல்வ வளம் மீது எந்த விதமான வாரிசுரிமை வரியும் விதிக்கப் பட வில்லை என்று ஆக்ஸ்ஃபாம் அறிக்கை குறிப்பிடுகிறது.
- வாரிசுரிமை வரி என்பது ஒரு குறிப்பிட்ட சொத்தானது வாரிசுகளுக்கு பெயர் மாற்றப் படும் போது அதன் மீது விதிக்கப்படும் வரியினை குறிக்கும்.
- இறந்தவரின் உயில் அல்லது தன் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் ஒருவர் வாரிசு உரிமையினைப் பெற இயலும்.


- இது நேரடி வரியின் கீழ் வருகிறது.
- இந்தியாவில் வாரிசுரிமை வரி விதிப்பானது தற்போது நடைமுறையில் இல்லை.
- வாரிசுரிமை அல்லது சொத்துரிமை வரியானது 1985 ஆம் ஆண்டில் ரத்து செய்யப் பட்டது.
- மேலும், 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டமானது குறிப்பாக உயில் அல்லது வாரிசு உரிமையின் கீழ் சொத்துக்களைப் பெயர் மாற்றம் செய்வதை பரிசுகள் வரியின் வரம்பிலிருந்து விலக்குகிறது.




## ஒழுங்கற்ற பருவநிலை: FAO அறிக்கை

- ஆண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் ஆனது வெப்பநிலை ஈடுசெய்தல் இழப்பு நிலையால் 8 சதவீதம் அதிகமாகவும், வெள்ளத்தால் 3 சதவீதம் அதிகமாகவும் இழப்புகளைச் சந்திக்கின்றன.
- முதியோர்களைக் காட்டிலும், இளைஞர்கள் (35 வயதுக்கு உட்பட்டவர்கள்) தலைமை தாங்கும் குடும்பங்கள், தீவிர வானிலை நிகழ்வுகளால் வேளாண் சார் வருமானத்தை இழக்கும் வாய்ப்புகள் அதிகம் கொண்டுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.
- வெப்பம் மற்றும் வெள்ளம் போன்ற பருவநிலை சார்ந்த நெருக்கடிகளால் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு ஏற்படும் வருமான இழப்பு, வெப்பநிலை ஈடு செய்தல் இழப்பு நிலையால் 83 டாலர் மற்றும் வெள்ளத்தினால் 35 டாலர் என்ற தனிநபர் வருமான இழப்பு நிலையில், முறையே மொத்தமாக 37 பில்லியன் டாலர் மற்றும் 16 பில்லியன் டாலர் இழப்பு கொண்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
- சராசரி வெப்பநிலை 1 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால் கூட, ஆண்களுடன் ஒப்பிடும் போது, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் மொத்த வருமானத்தில் 34 சதவீதம் அதிக இழப்பினைச் சந்திக்க நேரிடும்.

- 2017-18 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட பருவநிலை நிதியில் 7.5% மட்டுமே பருவ நிலை மாற்ற ஏற்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது என்ற நிலையில் இதில் வேளாண்மை, வனவியல் மற்றும் இதர பிற நிலப் பயன்பாடுகளுக்கு சுமார் 3 சதவீதத்திற்கும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், 68 குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட சுமார் 80% வேளாண் கொள்கைகள் பெண்கள் மற்றும் பருவ நிலை மாற்றம் குறித்து கருத்தில் கொள்ளவில்லை.



## EIU வணிக சூழல் தரவரிசை 2024

**Top ten geographies by business environment score**
(10 represents the best possible score)

| Geography | Total score | Rank |
|---|---|---|
| Singapore | 8.56 | 1 |
| Denmark | 8.41 | 2 |
| US | 8.40 | 3 |
| Germany | 8.35 | 4 |
| Switzerland | 8.33 | 5 |
| Canada | 8.31 | 6 |
| Sweden | 8.29 | 7 |
| New Zealand | 8.26 | 8 |
| Hong Kong | 8.24 | 9 |
| Finland | 8.22 | 10 |

- உலகளவில் சிங்கப்பூர், டென்மார்க் மற்றும் அமெரிக்கா ஆகியவை வர்த்தகம் செய்ய ஏற்ற வகையிலான முன்னணி நாடுகளின் பட்டியலில் மூன்று இடங்களில் இடம் பெற்றுள்ளன.

- ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுள்ளன.
- கனடா, சுவீடன், நியூசிலாந்து, ஹாங்காங் மற்றும் பின்லாந்து ஆகியவை உலகின் முதல் 10 இடங்களைப் பெற்றுள்ளன.
- கிரீஸ், கத்தார் மற்றும் இந்தியா ஆகியவை கடந்த ஒரு வருடத்தில் வணிகங்களுக்கான ஒரு சிறந்த சூழலை வழங்குவதில் உலகளவில் அதிகம் மேம்பட்டு உள்ளன.
- சீனாவுடன் ஒப்பிடக்கூடிய வகையிலான ஒரு வணிகச் சூழலை வழங்கும் ஒரே நாடு இந்தியா மட்டுமே ஆகும்.


## எண்ணிம மய சிறு தீவு நாடுகள் - UNDP

- ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு (UNDP) ஆனது 'எண்ணிம மய சிறு தீவு நாடுகள்: எண்ணிம உலகம் எவ்வாறு SIDS நாடுகளின் மேம்பாட்டினை ஊக்குவிக்கும்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது வளர்ந்து வரும் சிறு தீவு நாடுகளுக்கான (SIDS) எண்ணிமப் பரிமாற்றத் திறனை எடுத்துக் காட்டுகிறது.
- எண்ணிமப் பரிமாற்றத்திற்கான ஐந்து முக்கியத் தகவல்களை இந்த அறிக்கையானது எடுத்துக் காட்டுகிறது.
    - எண்ணிமத்தின் மதிப்பு மற்றும் பரவலை அங்கீகரித்தல்
    - தொழில்நுட்பத்தை விட மக்களுக்கு முன்னுரிமை அளித்தல்.
    - ஒவ்வொரு துறையின் பங்குகள், பொறுப்புகள் மற்றும் ஒப்பீட்டு நன்மைகளை அடையாளம் கண்டறிதல்.
    - எண்ணிமப் பரிமாற்றம் ஆனது பெரும்பாலும் 'ஒத்த செயல்' மற்றும் எண்ணிமம் அல்லாத அடித்தளங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை அங்கீகரித்தல்.
    - நீண்ட காலத்திற்கான திட்டங்களை வகுத்தல்.



## WADA ஊக்கமருந்து எதிர்ப்பு அறிக்கை

- ❖ உலக ஊக்கமருந்து தடுப்பு முகமையின் (WADA) தரவுகளின் படி, ஊக்கமருந்து உபயோகிக்கும் நபர்களை மிகவும் அதிக சதவீதத்தில் கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- ❖ அதிகளவில் விளையாட்டு பங்கேற்பாளர்களை கொண்ட ரஷ்யா (85), அமெரிக்கா (84), இத்தாலி (73) மற்றும் பிரான்சு (72) போன்ற சில முக்கிய நாடுகளை விட இந்தியாவில் ஊக்கமருந்து பயன்பாட்டு மீறல்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
- ❖ இந்தியர்களின் மொத்தச் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் 4,064 (சிறுநீர், இரத்தம் மற்றும் விளையாட்டு வீரர்களின் உயிரியல் தரவு பதிவேடு ஆகியவை) ஆக உள்ளது.
- ❖ தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளைப் பயன்படுத்தியதாக என்று 127 இந்திய விளையாட்டு வீரர்கள் கண்டறியப்பட்டனர் என்ற நிலையில் இது சேகரிக்கப்பட்ட மாதிரி அளவின் 3.26% ஆகும்.
- ❖ இந்தியாவைத் தொடர்ந்து, தென்னாப்பிரிக்கா இதில் இரண்டாவது இடத்தையும், பாங்காக்கின் சோதனை ஆய்வகம் மூன்றாவது இடத்தையும் பிடித்தது.
- ❖ அமெரிக்கா மற்றும் கத்தார் ஆகியவை முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றன.




## ஹுரூன் அமைப்பின் உலக யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2024

- ❖ இந்தியாவில் 1 பில்லியன் டாலர் மதிப்பிலான புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை நான்கு ஆண்டுகளில் முதல் முறையாக குறைந்துள்ளது.
- ❖ ஹுரூன் அமைப்பின் 2024 ஆம் ஆண்டிற்கான உலக யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீட்டின் படி, கடந்த ஆண்டு 68 ஆக பதிவான யூனிகார்ன் நிறுவனங்களின் எண்ணிக்கை ஒன்று குறைந்து தற்போது 67 ஆக உள்ளது.
- ❖ உலகளவில் யூனிகார்ன் நிறுவனங்களுக்கான மூன்றாவது பெரிய மையம் என்ற நிலையை இந்தியா தொடர்ந்து தக்க வைத்துள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில் இருந்த எண்ணிக்கையில் இருந்து 37 அதிகரித்து, 703 யூனிகார்ன் நிறுவனங்களுடன் உலகப் பட்டியலில் அமெரிக்க நாடு முன்னணியில் உள்ளது என்ற நிலையில் 340 யூனிகார்ன் நிறுவனங்களுடன் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.

- ஐக்கியப் பேரரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளன.
- உலகின் யூனிகார்ன் நிறுவனங்களின் கூட்டு மதிப்பு ஆனது கடந்த ஆண்டு ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இணையாக 5 டிரில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- ஸ்விகி மற்றும் டிரீம்11 ஆகியவை ஒவ்வொன்றும் 8 பில்லியன் டாலர் மதிப்புடன் இந்தியாவின் அதிக மதிப்பு மிக்க யூனிகார்ன் நிறுவனங்களாக உள்ளன.




## உலக கல்லீரல் அழற்சி நோய் குறித்த அறிக்கை, 2024 – WHO

- 2022 ஆம் ஆண்டில் சீனாவிற்கு அடுத்தபடியாக 3.5 கோடி நோய்த்தொற்றுகளுடன் B மற்றும் C வகை கல்லீரல் அழற்சி (ஹெபடைடிஸ்) நோயாளிகளின் எண்ணிக்கையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- அந்த ஆண்டு உலக அளவிலான மொத்த நோய்ப் பாதிப்பில் இந்தியாவின் பங்கு 11.6% ஆக இருந்தது.
- கல்லீரலில் ஏற்படும் ஒரு வீக்கமான கல்லீரல் அழற்சி என்பது பலவிதமான உடல்நலப் பிரச்சனைகளை ஏற்படுத்தி உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடும்.
- 2022 ஆம் ஆண்டில் உலகளவில் 254 மில்லியன் மக்கள் B வகை கல்லீரல் அழற்சி மற்றும் 50 மில்லியன் பேர் C வகை கல்லீரல் அழற்சியினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் 2.98 கோடி B வகை கல்லீரல் அழற்சி பாதிப்புகள் பதிவு செய்யப் பட்டுள்ளன என்ற அதே நேரத்தில் C வகை கல்லீரல் அழற்சி நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை 55 லட்சமாக இருந்தது.
- சீனாவில் 8.3 கோடி எண்ணிக்கையிலான B மற்றும் C வகை கல்லீரல் அழற்சி நோய்ப் பாதிப்புகள் பதிவு செய்யப்பட்டதையடுத்து மொத்த நோய் பாதிப்பு எண்ணிக்கையில் சீனா 27.5% பங்கினை கொண்டுள்ளது.

- கல்லீரல் அழற்சி நோய் ஏற்படுத்தும் வைரஸின் ஐந்து முக்கிய திரிபுகள் உள்ள நிலையில் அவை A, B, C, D மற்றும் E என குறிப்பிடப்படுகின்றன.
- இவை அனைத்தும் கல்லீரல் நோயை ஏற்படுத்தினாலும் அவை பரவும் முறைகள் உள்ளிட்ட முக்கிய பண்புகளில் அவை வேறுபடுகின்றன.
- B மற்றும் C வகைகள் கோடிக்கணக்கான மக்களில் நாள்பட்ட நோய்ப் பாதிப்பிற்கு வழி வகுக்கும்.
- B மற்றும் C வகை கல்லீரல் அழற்சி நோய்த் தொற்றுகளால் உலகளவில் தினமும் 3,500 பேர் உயிரிழக்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| Hepatitis B (total) | 2.97 crore | Hepatitis C (total) | 0.55 crore |
| Proportion of global infections | 11.7% | Proportion of global infections | 11.2% |
| Hepatitis B (incidence) | 50,083 | Hepatitis C (incidence) | 1,44,187 |
| Deaths due to Hepatitis B | 98,305 | Hepatitis C deaths | 26,206 |
| Hep B diagnostics coverage | 2.4% | Diagnosis coverage | 28% |
| Hep B treatment coverage | 0% | Treatment coverage | 21% |

## QS அமைப்பின் பாடத்தின் அடிப்படையிலான உலகப் பல்கலைக்கழகத் தர வரிசை 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் இடம் பெற்றுள்ள 424 உள்ளீடுகளுடன் 69 இந்தியப் பல்கலைக்கழகங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.
- இந்த ஆண்டிற்கான தரவரிசையில் அதிக அளவில் இடம் பெற்ற இந்தியப் பல்கலைக் கழகங்கள் டெல்லி பல்கலைக் கழகம் (30 உள்ளீடுகள்), மும்பையின் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் (28 உள்ளீடுகள்) மற்றும் காரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (27 உள்ளீடுகள்) ஆகியனவாகும்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் 22 பாட உள்ளீடுகளைக் இந்தத் தரவரிசை கொண்டிருந்தது.
- இந்தியாவின் மிக உயரிய தரவரிசைப் பெற்ற பல்கலைக்கழகம் ஆனது ஜவஹர்லால் நேரு மேம்பாட்டு ஆய்வுகளுக்கான பல்கலைக்கழகம் (உலக அளவில் 20வது இடம், இந்தத் துறையில் ஒரு புதிய உள்ளீடு) ஆகும்.
- சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் கல்வி நிறுவனம் (நிகர்நிலை பல்கலைக் கழகம்) பல் மருத்துவத்தில் உலகளவில் 24வது இடத்தைப் பிடித்தது.

- QS அமைப்பின் குறிகாட்டிகளில் ஒன்றான H குறியீட்டில் சரியான மதிப்பெண்ணை (100/100) பெற்ற ஒரே இந்தியப் பல்கலைக்கழகம் இதுவாகும்.




## உலக இணையவெளிக் குற்றங்கள் அறிக்கை



CYBERCRIME INDEX

*Ranking countries by cybercrime threat level*


| Ranking | Country | WCI score | Ranking | Country | WCI score |
|---|---|---|---|---|---|
| 1 | Russia | 58.39 | 11 | Iran | 4.78 |
| 2 | Ukraine | 36.44 | 12 | Belarus | 3.87 |
| 3 | China | 27.86 | 13 | Ghana | 3.58 |
| 4 | United States | 25.01 | 14 | South Africa | 2.58 |
| 5 | Nigeria | 21.28 | 15 | Moldova | 2.57 |
| 6 | Romania | 14.83 | 16 | Israel | 2.51 |
| 7 | North Korea | 10.61 | 17 | Poland | 2.22 |
| 8 | United Kingdom | 9.01 | 18 | Germany | 2.17 |
| 9 | Brazil | 8.93 | 19 | Netherlands | 1.92 |
| 10 | India | 6.13 | 20 | Latvia | 1.68 |

- நாடு வாரியாக இணையவெளிக் குற்றங்கள் தொடர்பான பல அச்சுறுத்தல்களை தர வரிசைப் படுத்தும் ஒரு புதிய குறியீடு ஆனது, இணையவெளிக் குற்றங்கள் அதிகம் காணப்படும் இடத்தினை வெளிப்படுத்தும் வகையில் ரஷ்யாவை முதலிடத்தில் தர வரிசைப் படுத்தியுள்ளது.
- ரஷ்யாவைத் தொடர்ந்து உக்ரைன் மற்றும் சீனா ஆகிய நாடுகளும் அதனைத் தொடர்ந்து நான்காவது இடத்தில் அமெரிக்காவும் உள்ளது.

- நைஜீரியா, ருமேனியா போன்ற நாடுகளுக்கு அடுத்தப்படியாக ஐக்கியப் பேரரசு 8வது இடத்தில் இடம் பெற்றுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 10வது இடத்தில் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இணையவெளிக் குற்றங்களால் உலக நாடுகளுக்கு சுமார் 9.22 டிரில்லியன் டாலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேலும் இது 2028 ஆம் ஆண்டில் 13.82 டிரில்லியன் டாலர் ஆக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## நோய்க் கண்காணிப்புச் செயல்முறைக்கான நுண் உணர்விகள்

- ஜோத்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது மதுபானம் அருந்தி இருப்பதைக் கண்டறிதல் மற்றும் சுகாதாரக் கண்காணிப்பு ஆகியவற்றிற்காக என்று வடிவமைக்கப் பட்ட மனித சுவாச உணரவிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த உணர்விகள் உலோக ஆக்சைடுகள் மற்றும் நுண்ணிய சிலிகான் ஆகியவற்றினைப் பயன்படுத்துகிறது என்ற நிலையில் பல்வேறுப் பயன்பாடுகளுக்கு செலவு குறைந்த மற்றும் அறுவை சிகிச்சை சாராத தீர்வை வழங்குகின்றன.
- இந்த உணர்விகளின் முதன்மை செயல்பாடு ஆனது குடிபோதையில் வாகனம் ஓட்டும் போது சுவாசத்தில் ஆல்கஹால் கலப்பினை அளவிடுவதாகும்.
- ஆனால் இந்த சாதனம் ஆனது ஆஸ்துமா, நீரிழிவு சார் கீட்டோ அசிடோசிஸ், நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய், தூக்கத்தில் மூச்சுத் திணறல் மற்றும் மாரடைப்பு போன்ற நோய்களை வகைப்படுத்தும் திறனையும் கொண்டுள்ளது.





## உருவாகும் நெகிழிக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தின அறிக்கை

- EA எர்த் ஆக்சன் எனப்படும் சுவிட்சர்லாந்து நாட்டின் இலாப நோக்கற்ற அமைப்பானது, நெகிழிக் கழிவு உற்பத்தியானது உலகக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தின அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலக நெகிழி கழிவு உற்பத்தியானது 2021 ஆம் ஆண்டு முதல் 7.11 சதவீதம் அதிகரித்து உள்ளது.
- இந்த ஆண்டில் உலகளவில் 220 மில்லியன் டன் நெகிழிக் கழிவுகள் உருவாக்கப்பட்டு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்ற நிலையில் அதில் 70 மில்லியன் டன்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்தக்கூடியவையாகும்.

- புவியில் தவறான முறையில் கையாளப்படும் நெகிழிக் கழிவுகளில் 60 சதவீதத்திற்குக் காரணமான 12 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது.
- ஆனால் அதன் தனிநபர் நெகிழிக் கழிவு உற்பத்தியானது ஆண்டிற்கு சுமார் 8 கிலோ அளவிலான தனிநபர் நெகிழி உற்பத்தி என்ற அளவில் உலகிலேயே மிகக் குறைவாக உள்ளது.
- இந்தியாவின் தவறாக நிர்வகிக்கப்படும் நெகிழிக் கழிவுகள் ஆனது, சீனாவின் ஐந்தில் ஒரு பங்கிற்கும், அமெரிக்காவின் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவாகவே உள்ளது.
- நெகிழிக் கழிவுகளை உற்பத்தி செய்வதில் பெல்ஜியம் நகரம் முதலிடத்தில் உள்ளது என்பதோடு அங்கு ஒரு நபரினால் உருவாக்கப்படும் வருடாந்திரக் கழிவு உற்பத்தி 147.7 கிலோ ஆகும்.
- இது இந்தியாவை விட 16 மடங்கு அதிகம் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில், தவறான முறையில் கையாளப்படும் நெகிழிக் கழிவுகளின் அளவின் அடிப்படையில் ஓமன் நாடானது ஒரு நபருக்கு 111 கிலோ என்ற அளவுடன் உலக நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- இது நார்வே நாட்டின் அளவை விட 30 மடங்கு அதிகம் ஆகும்.
- இதில் இந்தியா கடைசி 12 நாடுகளுள் ஒன்றாக உள்ளது.
- ஒவ்வொரு நாட்டிற்குமான "நெகிழிக் கழிவு உற்பத்தியானது உலகக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தினம்" உள்ளது.
- இது அந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெகிழிக் கழிவுகளின் அளவு மற்றும் அதை மேலாண்மை செய்யும் திறன் ஆகியவற்றினை நன்கு அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது.
- இந்தியாவில் நெகிழிக் கழிவு உற்பத்தியானது உலகக் கழிவு மேலாண்மைத் திறனை விஞ்சும் தினம் ஏப்ரல் 23 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படும்.



## நிலையான மேம்பாட்டிற்காக நிதியளித்தல் அறிக்கை 2024




- 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பினர் நாடுகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட 17 நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) 2030 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டுமென்றால் டிரில்லியன் கணக்கான டாலர்கள் தேவைப் படும்.
- மேம்பாட்டு நிதி இடைவெளியை நிகர் செய்வதற்கு 4.2 டிரில்லியன் டாலர் முதலீடுகள் தேவைப்படுகிறது.
- கோவிட்-19 பெருந்தொற்று தொடங்குவதற்கு முன்னதாக இந்த மதிப்பு 2.5 டிரில்லியன் டாலராக இருந்தது.
- குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் (LDC) 2023 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வருடாந்திர வீதத்தில் 40 பில்லியன் டாலர் கடன் சேவை வழங்கப்படுகிறது.
- இது 2022 ஆம் ஆண்டில் 26 பில்லியன் டாலராக இருந்த நிதி வழங்கீட்டினை விட 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும்.
- 2021 ஆம் ஆண்டில் 185.9 பில்லியன் டாலர் ஆக இருந்த அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவி (ODA) ஆனது, 2022 ஆம் ஆண்டில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சுமார் 211 பில்லியன் டாலரை எட்டியது.
- தற்போதையப் போக்குகள் தொடர்ந்தால், 2030 மற்றும் அதற்குப் பிறகும் சுமார் 600 மில்லியன் மக்கள் (அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள்) கடுமையான வறுமை நிலையில் வாழ்வார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிடுகிறது.
- 1944 ஆம் ஆண்டு பிரெட்டன் வூட்ஸ் என்ற மாநாட்டில் அமைக்கப்பட்ட சர்வதேச நிதிய அமைப்பு இந்த நோக்கத்திற்கு ஏற்றதாக இல்லை.
- இதனால் அமெரிக்காவில் நடைபெற்ற பிரெட்டன் வூட்ஸ் மாநாடு, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு வழி வகுத்தது.

## உலகின் பரபரப்பான முதல் 10 விமான நிலையங்கள் 2023

- சர்வதேச விமான நிலைய சபையின் அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 8.5 பில்லியன் பயணிகள் விமானத்தில் பயணித்தனர்.
- இது முந்தைய ஆண்டை விட 27.2% அதிகமாகும்.
- டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில், 2023 ஆம் ஆண்டில் 72.2 மில்லியன் பயணிகள் பயணித்ததன் மூலம் இந்தப் பட்டியலில் 10வது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 104.65 மில்லியன் பயணிகள் பயணித்ததுடன் அட்லாண்டா விமான நிலையம் மீண்டும் உலகின் பரபரப்பான விமான நிலையம் என்ற இடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள DBX இரண்டாவது இடத்திற்கு உயர்ந்துள்ளது மற்றும் டல்லாஸ்-ஃபோர்ட் வொர்த் சர்வதேச விமான நிலையம் அதற்கு அடுத்த இடத்தில் உள்ளது.

**PASSENGERS***


| 2023 | 2022 | 2019 | AIRPORT | 2023 | % CHANGE VS 2022 | % CHANGE VS 2019 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | ATLANTA, USA (ATL) | 104 653 451 | 11.7 | -5.3 |
| 2 | 5 | 4 | DUBAI, UAE (DXB) | 86 994 365 | 31.7 | 0.7 |
| 3 | 2 | 10 | DALLAS/FORT WORTH, USA (DFW) | 81 755 538 | 11.4 | 8.9 |
| 4 | 8 | 7 | LONDON, UK (LHR) | 79 183 364 | 28.5 | -2.1 |
| 5 | 16 | 5 | TOKYO, JAPAN (HND) | 78 719 302 | 55.1 | -7.9 |
| 6 | 3 | 16 | DENVER, USA (DEN) | 77 837 917 | 12.3 | 12.8 |
| 7 | 7 | 28 | ISTANBUL, TURKEY (IST) | 76 027 321 | 18.3 | 45.7 |
| 8 | 6 | 3 | LOS ANGELES, USA (LAX) | 75 050 875 | 13.8 | -14.8 |
| 9 | 4 | 6 | CHICAGO, USA (ORD) | 73 894 226 | 8.1 | -12.7 |
| 10 | 9 | 17 | NEW DELHI, INDIA (DEL) | 72 214 841 | 21.4 | 5.4 |

* Total passengers enplaned and deplaned, passengers in transit counted once

## உலக மக்கள் தொகை குறித்த நிலை - 2024

- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) ஆனது 2024 ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை குறித்த நிலை என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கைக்கு "ஒன்றிணைந்த வாழ்க்கை முறைகள், நம்பிக்கையின் இழைகள்: பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகளில் உள்ள பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருதல்" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- 144.17 கோடி மக்கள்தொகையுடன் உலகளவில் இந்தியா முன்னணியில் உள்ளது என்ற நிலையில் அதனைத் தொடர்ந்து 142.5 கோடி மக்கள் தொகையுடன் சீனா இடம் பெற்று உள்ளது.
- இந்திய மக்கள் தொகையில் 24 சதவீதம் பேர் 0 முதல் 14 வயதிற்குட்பட்டவர்கள், 17 சதவீதம் பேர் 10 முதல் 19 வயதிற்குட்பட்டவர்கள் ஆவர்.
- இந்தியாவின் மக்கள் தொகையானது 77 ஆண்டுகளில் இரட்டிப்பாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

- 10 முதல் 24 வயதிற்குட்பட்டப் பிரிவினர் 26 சதவிகிதமும், 15 முதல் 64 வயதிற்குட்பட்டப் பிரிவினர் 68 சதவிகிதமும் உள்ளனர்.
- கூடுதலாக, இந்தியாவின் மக்கள்தொகையில் 7 சதவீதம் பேர் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் ஆவர் என்ற நிலையில் ஆண்களின் ஆயுட்காலம் 71 ஆண்டுகள் மற்றும் பெண்களின் ஆயுட்காலம் 74 ஆண்டுகள் ஆகும்.
- 2006-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் குழந்தைத் திருமண சதவீதம் 23 ஆக இருந்தது.
- இந்தியாவில் பேறுகாலத் தாய்மார் இறப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளன என்ற வகையில் இது உலகளாவிய அனைத்து உயிரிழப்புகளில் 8 சதவிகிதம் ஆகும்.
- 100,000 பிறப்புகளுக்கு சுமார் 1,671 என்ற அதிகபட்ச அளவிலான உயிரிழப்புகளானது அருணாச்சலப் பிரதேசத்தின் திராப் மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.





## ஆர்க்டிக் பகுதியில் நிலவும் நெகிழி மாசு நெருக்கடி குறித்த அறிக்கை

- ஆர்க்டிக் பகுதியில் நிலவும் நெகிழி மாசு நெருக்கடி: பெட்ரோவேதியியல் தொழில் துறை மூலம் உடல்நலம், மனித உரிமைகள் மற்றும் உள்நாட்டு நிலங்களுக்கு விளையும் நச்சு மிகுந்த அச்சுறுத்தல்கள் என்ற தலைப்பில் அமைந்த இது ஒரு புதிய அறிக்கையாகும்..
- இது நச்சுப் பொருட்கள் மீதான நடவடிக்கைக்கான அலாஸ்கா குழு (ACAT) மற்றும் சர்வதேச மாசு ஒழிப்பு வலையமைப்பு (IPEN) ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- ஆர்க்டிக் என்பது உள்நாட்டு மற்றும் உலகளாவிய மூலங்களில் இருந்து இப்பகுதியில் குவியும் இரசாயனங்கள் மற்றும் நெகிழிகளுக்கான 'புவி அரைக்கோள மடு' ஆகும்.
- இவை இப்பகுதியில் காணப்படும் 13 மில்லியன் உயிரினங்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

❖ புதைபடிவ எரிபொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு ஆனது, ஆர்க்டிக் பகுதி எதிர் கொள்ளும் நெகிழி, இரசாயனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகளுக்கான தொடக்கப் புள்ளியாக உள்ளது.




## உணவு நெருக்கடி பற்றிய உலகளாவிய அறிக்கை





❖ 2024 ஆம் ஆண்டின் உணவு நெருக்கடி குறித்த உலகளாவிய அறிக்கையினை (GRFC) உணவுப் பாதுகாப்பு தகவல் வலையமைப்பினால் தயாரிக்கப்பட்டு, உணவு நெருக்கடிகளுக்கு எதிரான உலகளாவிய வலையமைப்பினால் வெளியிடப்பட்டது.

❖ 2023 ஆம் ஆண்டில் 59 நாடுகளில் சுமார் 282 மில்லியன் மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டனர்.

- ஒட்டு மொத்தமாக, மதிப்பிடப்பட்ட 5 பேரில் ஒருவர் தீவிர அவசர நடவடிக்கை மேற் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருந்தனர்.
- 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான தரவுகளின் அடிப்படையில், 12 நாடுகளில் நிலவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலை மோசமடைந்து உள்ளது.
- இந்த நாடுகளில், பெரும்பாலும் சூடானில் உள்ள 13.5 மில்லியன் மக்களுக்கு அவசர உதவியின் தேவையுள்ளது.
- இதற்கிடையில், 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான தரவுகளின் அடிபிப்படையில் 17 நாடுகளில் உணவுப் பாதுகாப்பு நிலை மேம்பட்டுள்ளது.


## மலிவான கடவுச் சீட்டு தரவரிசை




- ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அடுத்தப் படியாக இந்தியக் கடவுச்சீட்டு ஆனது உலகில் இரண்டாவது மலிவான கடவுச் சீட்டாக கூறப் படுகிறது.
- இந்தியக் கடவுச்சீட்டுகள் என்பது செல்லுபடியாகும் ஆண்டிற்கான செலவினங்களின் அடிப்படையில் மலிவானவையாகும்.
- தென்னாப்பிரிக்கா மற்றும் கென்யா ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.
- இருப்பினும், இந்தியக் கடவுச்சீட்டு மூலம், மக்கள் 62 நாடுகளுக்கு மட்டுமே நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணம் செய்ய முடியும்.

- முதல் இடத்தில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் கடவுச் சீட்டு, பெறுதல் மற்றும் நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயண அணுகல் உள்ள நாடுகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் மலிவானது ஆகும்.


## ஆசியாவின் பருவநிலை 2023




- உலக வானிலை அமைப்பு ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான 'ஆசியாவின் பருவநிலை' அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஆசிய கண்டம் ஆனது அதன் நாடுகளில் பதிவுசெய்யப்பட்ட அதிகளவிலான வெப்ப நிலை மற்றும் மழைப்பொழிவுகளினால் வெள்ளப்பெருக்கு மற்றும் வெப்ப அலைகள் போன்ற தீவிரப் பருவநிலை நிகழ்வுகளுடன் போராடி வருகிறது.
- 2023 ஆம் ஆண்டானது உலகளவில் பதிவாகியதில் மிகவும் வெப்பமான ஆண்டு ஆக பதிவானது.
- 2023 ஆம் ஆண்டில் ஆசியா முழுவதும் தீவிர பருவநிலை நிகழ்வுகளால் 2,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் ஒன்பது மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.
- இந்த நிகழ்வுகளில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவை புயல் மற்றும் வெள்ளம் தொடர்பானவையாகும்.
- இந்தியாவில், ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களில் ஏற்பட்ட கடுமையான வெப்ப அலைகளால் சுமார் 110 பேர் அதிவெப்ப தாக்கத்தினால் உயிரிழந்தனர்.
- பெய்ஜிங் ஆய்வகத்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை 41.1 டிகிரி செல்சியஸ் ஆகும் என்ற நிலையில் இது 1951 ஆம் ஆண்டில் இந்தப் பதிவுகள் தொடங்கியதிலிருந்து பதிவான இரண்டாவது அதிகபட்ச வெப்பநிலையாகும்.

- ஜப்பான் நாட்டிலும் 1898 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதிக வெப்பமான கோடை காலம் பதிவானது.
- ஹாங்காங் ஆய்வகத்தின் தலைமையகத்தில் செப்டம்பர் 07 ஆம் தேதியன்று ஒரு மணி நேரத்திற்கு 158.1 மிமீ என்ற அளவில் மழைப் பொழிவு பதிவானது என்ற நிலையில் இது 1884 ஆம் ஆண்டில் பதிவுகள் தொடங்கியதிலிருந்து பதிவான அதிக பட்ச மழைப்பொழிவாகும்.

## உலக நாடுகளின் இராணுவச் செலவினம் 2023





- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் ஆனது மிகச் சமீபத்தில் ஓர் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் 83.6 பில்லியன் டாலர் மதிப்பிலான இராணுவச் செலவினத்துடன், உலகளவில் நான்காவது அதிக இராணுவச் செலவினம் கொண்ட நாடாக இந்தியா திகழ்ந்தது.
- இந்தியாவின் செலவினம் ஆனது 2022 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 4.2 சதவீதமும், 2014 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 44 சதவீதமும் அதிகரித்துள்ளது.
- அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உலக அளவில் இராணுவச் செலவினத்தில் முதல் மூன்று இடங்களில் உள்ளன என்ற நிலையில் அவற்றைத் தொடர்ந்து இந்தியா மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் உள்ளன.
- உக்ரைன் 2023 ஆம் ஆண்டில் எட்டாவது பெரிய இராணுவச் செலவின நாடாக ஆனது, மேலும் அதன் செலவினத்தை 51% அதிகரித்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## AFSPA சட்டத்தின் நீட்டிப்பு

- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளில் ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தை (AFSPA) மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- AFSPA ஆனது "தொந்தரவுகள் நிறைந்த பகுதிகளில்" ஆயுதப் படைகளுக்கும் மத்திய ஆயுதக் காவல் படைகளுக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குகிறது.
- இந்த சட்டத்தின் கீழ், சட்டத்திற்கு முரணாகச் செயல்படும் எவரையும் அப்படையினர் கொல்லலாம், கைது செய்யலாம் மற்றும் ஆணை இல்லாமல் எந்த வளாகத்தையும் சோதனை செய்யலாம்.
- மேலும் இது அவர்களுக்கு மத்திய அரசின் அனுமதியின்றி வழக்கு மற்றும் சட்ட வழக்காடல்களில் இருந்து பாதுகாப்பினையும் உறுதி செய்கிறது.




## நிலம் சார் துறைமுகம் - சப்ரூம்

- இந்திய-வங்காளதேச எல்லையில், தெற்கு திரிபுராவில் உள்ள சப்ரூம் என்னுமிடத்தில் 3வது நிலம் சார் துறைமுகமானது திறக்கப்பட்டுள்ளது.
- இது ஃபெனி ஆற்றின் மீதுள்ள மைத்ரீ பாலம் வழியாக வங்காளதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் துறைமுகமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை மேம்படுத்தும்.

- நிலம் சார் துறைமுகம் என்பது தேசிய, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் பிற சாலைகள் மற்றும் இரயில்வே பகுதிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய வகையில் சர்வதேச எல்லைகளில் நிறுவப்படும் ஒரு பகுதி ஆகும்.
- இது 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டம் அல்லது 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் நிலம் சார் சுங்க நிலையம் அல்லது குடியேற்றச் சோதனைச் சாவடி என அறிவிக்கப்பட்டுள்ளது.




## முத்தரப்பு ஒப்பந்தம் - திரிபுரா

- மத்திய அரசானது, சமீபத்தில் திரிபுரா அரசு மற்றும் TIPRA மோத்தா எனப்படுகின்ற திரிபுரா மாநிலத்தின் முக்கிய எதிர்க்கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து ஒரு முத்தரப்பு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இந்த ஒப்பந்தமானது, பொருளாதாரம், அரசியல், நிலம், மொழியியல் மற்றும் கலாச்சார உரிமைகள் உள்ளிட்ட, மாநிலத்தின் பழங்குடியின மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு என்று சரியான நேரத்திலான "சிறந்த முறையிலானத் தீர்வுகளை வழங்குவதற்காக" இது கையொப்பமாகியுள்ளது.
- TIPRA மோத்தா கட்சியின் நிறுவனர் மற்றும் பிரத்யோத் கிஷோர் மாணிக்ய தெபர்மா ஆகியோர் தொடங்கிய ஒரு காலவரையற்ற உண்ணாவிரதத்திற்கு இது முற்றுப்புள்ளி வைத்துள்ளது.
- TIPRA மோத்தா கட்சியின் பல்வேறு கோரிக்கைகளில், "கிரேட்டர் திப்ராலாந்து" என்ற திரிபுராவின் பழங்குடியினருக்கான தனி மாநிலம் ஆகியவை அடங்கும்.
- திரிபுரா பழங்குடியினர் பகுதிகள் தன்னாட்சி மாவட்டச் சபை (TTAADC) பகுதிக்கு வெளியே வசிப்பவர்களையும் இதனுள் சேர்க்க முயல்கிறது.
- மத்திய அரசின் நேரடி நிதி, அதன் சொந்த காவல் படை மற்றும் மாநிலத்தில் மேற் கொள்ளப்படும் எரிவாயு எடுப்பின் மூலம் கிடைக்கும் வருவாயின் பங்கு போன்றவை உட்பட TTAADC சபைக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க அக்கட்சி கோரியுள்ளது.
- ரோமானிய எழுத்து வடிவத்தினைப் பழங்குடியின கோக்போரோக் மொழிக்கான அதிகாரப்பூர்வ எழுத்து வடிவமாக அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அந்தக் கட்சி கோருகிறது.





## 5,200 ஆண்டுகள் பழமையான ஹரப்பா குடியிருப்பு



- கேரளா பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 2019 ஆம் ஆண்டில் குஜராத்தில் முற்கால ஹரப்பா நெக்ரோபோலிஸ் (புதைவிட) ஜூனா காதியாவைக் கண்டறிந்துள்ளனர்.
- கச் மாவட்டத்தில் உள்ள காதியா கிராமத்திற்கு அருகில் உள்ள பட்டா பெட் என்ற இடத்தில் 5,200 ஆண்டுகள் பழமையான ஹரப்பா குடியேற்றத்தினைச் சேர்ந்த மிகவும் முக்கியமான கண்டுபிடிப்புகளின் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தப் பகுதிகளிலிருந்து கண்டறியப்பட்ட ஏராளமான மட்பாண்டங்கள், கலைப் பொருட்கள் மற்றும் சில விலங்குகளின் எலும்புத் துண்டுகள் ஆனது, முற்கால ஹரப்பா முதல் பிற்கால ஹரப்பா காலம் வரை, அதாவது கி.மு. 3200 முதல் கி.மு. 1700 ஆம் ஆண்டு வரை இந்தப் பகுதியில் வாழ்ந்த ஹரப்பா மக்களின் தொழில்முறையைக் குறிக்கிறது.
- இந்த அகழ்வாராய்ச்சியில் கால்நடை, செம்மறி அல்லது ஆடு மற்றும் உண்ணக் கூடிய சங்குகளின் ஓட்டுத் துண்டுகள் ஆகியவற்றைக் குறிக்கும் சில விலங்கு எலும்புகளின் எஞ்சியப் பாகங்கள் கண்டறியப்பட்டன.

## மாற்றீடு பயிர் முறை




- நெல் பயிரிடப்பட்ட தரிசு அல்லது நெல் அறுவடைக்குப் பின்னதாக பயிர் செய்யப் படாத நிலம் ஆனது கிழக்கு இந்தியாவில் ஒரு முக்கிய வேளாண் பிரச்சினையாக உள்ளது.
- இருப்பினும், நிலப்பரப்பிற்குப் பொருந்துவதன் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட வேளாண்மையுடன் கூடிய பல்வேறு தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்களை அறிமுகப் படுத்துவது அதை ஒரு வாய்ப்பாக மாற்ற உதவுகிறது.
- இது பண்ணை வருமானத்திற்கும் உதவச் செய்வதோடு, உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.
- ஒடிசா மாநிலத்தின் கடலோரப் பகுதிகள் இந்த மாற்றீடு பயிர் முறையை மேற் கொள்கின்றன.
- பயறு வகை பயிர்கள் ஆனது, அறுவடைக்கு முன்னதாக அறுவடைக்குத் தயாராக உள்ள நெல் வயல்களில் கிடைக்கக் கூடிய ஈரப்பதத்தைப் பயன்படுத்தி, குறைந்தபட்ச தலையீடு மற்றும் செலவுடன் விதைக்கப்படுகின்றன.
- இத் திட்டத்தின் கீழ் பச்சைப்பயறு, உளுந்து, கடலைப்பருப்பு, கடுகு உள்ளிட்ட எட்டுப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.
- இந்த மாநிலத்தில் 6.18 மில்லியன் ஹெக்டேருக்கு மேலான பரப்பளவிலான பயிர் நிலங்கள் உள்ளன என்ற நிலையில் இது 10 வேளாண் பருவநிலை மண்டலங்களைக் கொண்டுள்ளது.

## லடாக்கிற்கான குறுகிய தொலைவு பாதை

- எல்லைச் சாலைகள் அமைப்பு (BRO) ஆனது லடாக்கில் உள்ள 298 கி.மீ. நீளமுள்ள நிம்மு-படாம்-தர்ச்சா சாலையில் போக்குவரத்து இணைப்பை நிறுவி வருகிறது.

- லடாக் பகுதியினை நாட்டின் மற்ற பகுதிகளுடன் இணைப்பதற்கான அனைத்து வானிலைகளிலும் செயல்படும் வகையிலான முதல் சாலையாக இந்தச் சாலை அமையும்.
- இது குளிர்காலங்களில் வான்வழி போக்குவரத்தினைச் சார்ந்திருப்பதை வெகுவாகக் குறைப்பதோடு, இராணுவ வீரர்களின் இயக்கத்தினையும் இது எளிதாக்கும்.




## முரியா பழங்குடியினர் பிரச்சினைகள்

- சத்தீஸ்கரின் தண்டகாரண்யா பகுதியில் உள்ள சுக்மா, தண்டேவாடா மற்றும் பீஜப்பூர் மாவட்டங்களில் இருந்து வெளியேறிய முரியா பழங்குடியினர், ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்டங்களில் குடியேறினர்.
- முரியா குடியேற்றங்கள் என்பவை உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்த மக்களின் (IDPs) வாழ்விடங்களாக அறியப் படுகின்றன என்ற நிலையில் ஆந்திரப் பிரதேசத்தில் அவர்களின் மக்கள் தொகை சுமார் 6,600 ஆகும்.
- இங்குள்ள முரியா இனத்தவர்கள் அந்தப் பகுதியின் பூர்வீக பழங்குடியினரால் 'குட்டி கோயாஸ்' என்று குறிப்பிடப்படுகிறார்கள்.
- முரியாக்கள் உணவுப் பயிர்களை வளர்ப்பதற்காக வேண்டி காப்புக் காடுகளுக்குள் உள்ள காடுகளை அழித்துள்ளனர்.
- வனத் துறையினர் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்க மறுப்பதற்காக முன் வைக்கும் முக்கியப் பிரச்சினையாகும்.
- ஒரு பத்தாண்டு கால சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, சில முரியா குடியேற்றங்கள் இதற்கான தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.
- இடதுசாரி தீவிரவாதிகளுக்கும், நக்சல் அமைப்புகளை எதிர்கொள்வதற்காக என்று நியமிக்கப் பட்ட சல்வா ஜூடும் என்ற மாநில அரசு ஆதரவு பெற்ற அமைப்புகளுக்கும் இடையிலான மோதலின் போது அவர்கள் சத்தீஸ்கரின் பஸ்தார் பகுதியில் உள்ள தங்கள் சொந்தக் கிராமத்திலிருந்துத் தப்பி வெளியேறினர்.
- நந்தினி சுந்தர் & பிறர் எதிர் சத்தீஸ்கர் மாநில அரசிற்கும் இடையிலான வழக்கில் (2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம்), உச்ச நீதிமன்றம் ஆனது சல்வா ஜூடும் அமைப்பானது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று அறிவித்து, அதை உடனடியாகக் கலைக்குமாறு சத்தீஸ்கர் மாநில அரசிற்கு உத்தரவிட்டது.

## போஹாக் பிஹு




- ரோங்காலி பிஹு என்றும் அழைக்கப்படும் போஹாக் பிஹு ஆனது வடகிழக்கு இந்திய மாநிலமான அசாமில் கொண்டாடப்படும் ஒரு முக்கியப் பண்டிகையாகும்.
- இது அசாமியப் புத்தாண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் கொண்டாடப் படுகிறது.
- போஹாக் பிஹுவின் முதல் நாளான "கோரு பிஹு", கால்நடைகளை, குறிப்பாக பசுக்களை வணங்கும் நாளாகும்.
- இந்த நாளில் தான் இளவேனிற்காலம் தொடங்குகிறது.

## உத்தரப் பிரதேச மாநிலத்தின் மதரசா கல்வி வாரியச் சட்டம், 2004


- 2004 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநில மதரஸா கல்வி வாரியச் சட்டமானது "அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானது" என்று அறிவித்த அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது.
- உயர் நீதிமன்ற உத்தரவு ஆனது இந்த (மதராஸா) கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் 17 லட்சம் மாணவர்களின் எதிர்காலக் கல்விக்கு இடையூறாக இருக்கும்.
- "மதச்சார்பின்மைக் கொள்கை" மற்றும் அரசியலமைப்பின் 14வது சட்டப்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறுவதாகக் கூறி உயர் நீதிமன்றம் இந்தச் சட்டத்தை அரசியலமைப்பிற்குப் புறம்பானது எனக் கருதியது.
- மதராசா பாடத் திட்டத்தை ஆய்வு செய்த நீதிமன்றம் ஆனது, இந்தச் சட்டம் "1996 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தின் 22வது சட்டப் பிரிவினை மீறுவதாக உள்ளது" என்று கூறியது.
- அம்மாநிலத்தில் உள்ள மொத்தம் 16,513 அங்கீகரிக்கப்பட்ட மதராஸாக்கள் மற்றும் 8,449 அங்கீகரிக்கப்படாத மதராஸாக்கள், சுமார் 27 லட்சம் மாணவர்களுக்குக் கல்வி அளிக்கின்றன.
- அங்கீகரிக்கப்பட்ட 16,513 மதராசாக்களில், 558 மதராஸாக்களுக்கு மாநில அரசால்

முழுமையாக நிதியளிக்கப் படுகின்றன என்ற நிலையில் இந்த மதரஸாக்களில் சுமார் 9,000 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

- அங்கீகரிக்கப்பட்ட மற்ற மதரஸாக்கள் அரசு உதவிகளைப் பெறும் தனியார் நடத்தும் மதரஸாக்கள் ஆகும்.
- உத்தரப் பிரதேச மதரஸா கல்விச் சட்டமானது 2004 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது என்ற வகையில் அதற்கான வாரியம் ஆனது 2007 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.




## பசுமைக் கடன் வழங்கீட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்





- மத்தியப் பிரதேசமானது மத்திய அரசின் பசுமைக் கடன் வழங்கீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ளது.
- கடந்த இரண்டு மாதங்களில் 10 மாநிலங்களில் 4,980 ஹெக்டேர் பரப்பளவில் 500க்கும் மேற்பட்ட நிலப் பகுதிகளில் மரங்களை நடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்த மாநிலங்கள் மற்ற மூன்று மாநிலங்களுடன் சேர்ந்து, இந்தத் திட்டத்திற்காக 10,000

ஹெக்டேர் பரப்பிலான நிலப் பகுதியினை அடையாளம் கண்டுள்ளன.

- ❖ மத்தியப் பிரதேசமானது, இதுவரையில், தோட்டமாக்குதல்/பசுமைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக என்று அங்கீகரிக்கப்பட்ட 954 ஹெக்டேர் வளமிழந்த வன நிலத்தினைப் பதிவு செய்துள்ளது.
- ❖ அதனைத் தொடர்ந்து தெலங்கானா (845 ஹெக்டேர்), சத்தீஸ்கர் (713 ஹெக்டேர்), குஜராத் (595 ஹெக்டேர்) மற்றும் அசாம் (454 ஹெக்டேர்) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

## மணிப்பூரில் ஓபியம் சாகுபடி

- ❖ 2021-22 ஆம் ஆண்டில் 28,599 ஏக்கராக இருந்த ஓபியம் (ஓபியம் பாப்பி- கசகசா) செடி சாகுபடி பரப்பளவானது 2022-23 ஆம் ஆண்டில் 40 சதவீதம் சரிந்து 16,890 ஏக்கராக உள்ளது.
- ❖ முந்தைய ஆண்டில் இருந்த அளவை விட 2023-24 ஆம் ஆண்டில் அபின் சாகுபடி 32 சதவீதம் குறைந்து 11,288 ஏக்கராக இருந்தது.
- ❖ வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் ஓபியம் (கசகசா) சாகுபடியின் மொத்த பரப்பளவு ஆனது 2021 ஆம் ஆண்டில் இருந்து 60 சதவீதம் குறைந்துள்ளது.




## புதிய புவிசார் குறியீடுகள் - உத்தரப் பிரதேசம்

- ❖ உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் ஆறு தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- ❖ வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது சுதந்திரப் போராட்ட வீரர்களால் ஒரு கருத்தை நிரூபிக்க விற்கப்பட்ட காசியின் புகழ்பெற்ற 'திரங்கி பர்ஃபி' என்ற மூவர்ண இனிப்பு வகையும் இதில் அடங்கும்.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் புவிசார் குறியீடு பெற்ற பிற பொருட்கள்
    - ○ பனாரஸ் உலோக வார்ப்பு கைவினைப் பொருள்,
    - ○ லக்கிம்பூர் கெரி தாரு பூவேலைப்பாடுகள்,

- ○ பரேலி கரும்பு மற்றும் மூங்கில் கைவினைப் பொருள்,
- ○ பரேலி சர்தோசி கைவினைப் பொருள், மற்றும்
- ○ பில்குவா கை அச்சு வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்படும் துணிகள்.

- ❖ இந்த ஆறு புதிய தயாரிப்புகளுடன், உத்தரப் பிரதேசம் இந்தியாவில் அதிக புவிசார் குறியீடுகளைக் கொண்ட தயாரிப்புகளைக் (மொத்தம் 75) கொண்ட மாநிலமாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டது.
- ❖ 58 புவிசார் குறியீடுகளைப் பெற்றத் தயாரிப்புகளுடன் தமிழ்நாடு அடுத்த இடத்தில் உள்ளது.




## புதிய தொல்லியல் தளங்கள் – தெலுங்கானா

- ❖ தெலுங்கானாவில் மூன்று புதிய தொல்லியல் தளங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- ❖ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குழுவானது, பந்தலா கிராமத்திற்கு அருகில் உள்ள ஊரகுட்டா எனுமிடத்தில் தனித்துவமான இரும்புப் பெருங்கற்கால (மெகாலிதிக்) தளத்தைக் கண்டறிந்ததாகக் கூறினர்.
- ❖ இங்கு சுமார் 200க்கும் மேற்பட்ட மெகாலிதிக் நினைவுச் சின்னங்கள் இருப்பதாகத் தெரிகிறது.
- ❖ வழக்கத்திற்கு மாறாக, இந்த இடத்தில் (ஊரகுட்டா) கண்டுபிடிக்கப்பட்ட தளம் மிகவும் தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது.
- ❖ பக்கவாட்டுக் கற்கள் தொப்பிக் கல்லின் வடிவத்தைப் பின்பற்றிக் கற்கள் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன.
- ❖ எனவே, ஒவ்வொரு 'உயர் கல் பதுக்கைகளும்-டால்மெனாய்டு சிஸ்டு' தொப்பிக் கல்லினைப் போன்ற ஒரு தனித்துவமான வடிவத்தைக் கொண்டுள்ளது.
- ❖ இந்த நினைவுச் சின்னங்கள் சுமார் கி. மு. 1,000 காலத்தினைச் சேர்ந்தவையாகும்.
- ❖ பத்ராத்ரி கோத்தகுடம் என்ற மாவட்டத்தில் உள்ள குண்டலா மண்டலத்தில் உள்ள தாமரடோகுவில் இரண்டு புதிய குடைவறைத் தளங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.



## இலட்சுமண தீர்த்த நதி




- ❖ கடும் வறட்சி மற்றும் கடும் வெப்பம் காரணமாக கர்நாடகாவில் உள்ள காவேரியின் துணை நதியான இலட்சுமண தீர்த்த நதி முற்றிலும் வறண்டுள்ளது.
- ❖ இது பிரம்மகிரி மலையில் உருவாகி 180 கி.மீ கிழக்கு நோக்கிப் பாய்ந்து கிருஷ்ண இராஜ சாகர ஏரியில் காவேரி ஆற்றுடன் கலக்கிறது.
- ❖ புகழ்பெற்ற இந்த இலட்சுமண தீர்த்த நீர்வீழ்ச்சி, அல்லது இருப்பு நீர்வீழ்ச்சியானது, கேரளாவின் எல்லைக்கு அருகில் அதன் பாதையில் அமைந்துள்ளது.

### பஹாரியா பழங்குடியினர்

- 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், மலைப்பாங்கான மாவட்டங்களான பாகூர் மற்றும் கோடாவில் நான்கு சமூகங்களின் தலைமையிலான விதை வங்கிகள் அமைக்கப் பட்டன.
- முன்பு அந்த சமூகத்தினர் வட்டிக்காரர்களிடம் விதைகளை வாங்கினர் என்ற நிலையில் அவர்கள் அறுவடையில் மூன்றில் இரண்டு பங்கை எடுத்துக் கொள்வர்.
- தற்போது, 90 கிராமங்களில் உள்ள 1,350க்கும் மேற்பட்டக் குடும்பங்களுக்குச் சேவை வழங்கும் வகையில் இந்த விதை வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- இந்த மாவட்டங்களில் வசிப்பவர்கள் பஹாரியா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- அவர்கள் சில ஆண்டுகளாக வேளாண்மைக்காக தாவரங்களை எரிப்பதன் மூலம் நிலத்தைச் சுத்தம் செய்யும் செயல்முறையினை உள்ளடக்கிய ஜூம் அல்லது மாற்று முறை சாகுபடியை பின்பற்றுகின்றனர்.
- மலைகள் என்று பொருள்படும் பஹார் என்ற வார்த்தையிலிருந்து இது உருவானதாக அவர்கள் கருதுகின்றனர்.
- அவர்கள் முதன்மையாக ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் வாழ்கின்றனர்.
- உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகிய பகுதிகளிலும் இவர்களின் பிரிவினர் சிதறிக் காணப்படுகின்றனர்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### பல்வேறு படைப்பிரிவுகளில் புதிய நியமனங்கள்

- தேசியப் புலனாய்வு முகமை (NIA), தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) மற்றும் காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வாரியம் (BPRD) ஆகியவற்றுக்கான புதிய தலைவர்களின் பெயர்களுக்கு அமைச்சரவையின் நியமனக் குழுவானது அங்கீகாரம் அளித்துள்ளது.
- தேசியப் புலனாய்வு முகமையின் புதியத் தலைவராக மகாராஷ்டிர பணிப் பிரிவு அதிகாரி சதானந்த் வசந்த் டேட் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 26/11 மும்பை தீவிரவாதத் தாக்குதலின் போது மக்களின் உயிர்களைக் காப்பாற்றச் செய்ததற்காகவும் தீவிரவாதிகளை வெகுவாக எதிர்க்கச் செய்ததற்காகவும் அவருக்கு குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கப்பட்டது.
- 1991 ஆம் ஆண்டு பணித்தொகுதியைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரி பியூஷ் ஆனந்த் தேசியப் பேரிடர் மீட்புப் படையின் புதிய தலைமை இயக்குனராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- 1990 ஆம் ஆண்டு பணித் தொகுதியைச் சேர்ந்த இந்தியக் காவல் பணி அதிகாரியான ராஜீவ் குமார் ஷர்மா காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 14வது வருடாந்திர ஏஜிஸ் கிரஹாம் பெல் விருதுகள்

- 14வது வருடாந்திர ஏஜிஸ் கிரஹாம் பெல் விருது வழங்கும் விழாவில் மூன்று விருதுப் பிரிவுகளில் தகவல் தொலைத்தொடர்பு மேம்பாட்டு மையமானது (C-DOT) முதல் இடத்தினைப் பெற்றுள்ளது.
- அதன் முன்னோடிமிக்க ASTR என்ற திட்டத்திற்காக "செயற்கை நுண்ணறிவு நுட்பத்தில் புதுமை" என்ற பிரிவில் கூகுள் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து இந்த முதல் விருதினைப் பெற்றது.
- "சமூக நலனில் புதுமை" என்ற பிரிவில் வழங்கப்பட்ட இரண்டாவது விருதானது, அதன் CEIR (மத்திய உபகரண அடையாளப் பதிவேடு) தீர்வுக்காக வழங்கப்பட்டுள்ளது.
- குவாண்டம் அடிப்படையிலான விசை பகிர்வு (QKD) தயாரிப்புப் பொருளுக்காக "தொலைத் தொடர்புகளில் புதுமை" என்ற பிரிவில் மூன்றாவது விருது வழங்கப்பட்டு உள்ளது.
- இந்த விருதானது ஏஜிஸ் தரவு அறிவியல் கல்வி நிறுவனத்தினால் 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த விருதானது தொலைபேசியின் தந்தை மற்றும் சிறந்தக் கண்டுபிடிப்பாளரான அலெக்சாண்டர் கிரஹாம் பெல் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் வழங்கப் படுகிறது.

## தேசியப் படைப்பாளிகளுக்கான விருதுகள்

- எண்ணிம கலைஞர்கள் மற்றும் எண்ணிம ஊடகத்தில் மிகுந்த கருத்து தாக்கத்தினை செலுத்துபவர்களின் அதிகரித்து வரும் தாக்கத்தை நன்கு அங்கீகரிப்பதற்காகவும், இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரத்திற்கு ஆதரிப்பதற்காகவும் மத்திய அரசு தேசியப் படைப்பாளிகளுக்கான விருதினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் எதிர்காலத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் மற்றும் எண்ணிம ஊடகத்தில் நேர்மறையான சமூக மாற்றத்தை ஊக்குவிக்கும் பல நபர்களின் கருத்துக்கள் மற்றும் திறன்களை முன்னிலைப்படுத்துவதற்காக இந்த விருதானது வழங்கப் படுகிறது.
- 20 பிரிவுகளில் பலவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் கருத்துக்களை தேசியப் படைப்பாளிகள் விருது அங்கீகரிக்கிறது.
- இது கதை சொல்லல், சமூக மாற்றத்தை வலியுறுத்துதல், சுற்றுச்சூழல் நிலைத் தன்மை, கல்வி, விளையாட்டு மற்றும் பிறவற்றை உள்ளடக்கிய களங்களில் சிறந்து விளங்குதலையும் அதன் தாக்கத்தையும் அங்கீகரிக்கிறது.
- இது தவிர, சர்வதேசப் படைப்பாளிகள் விருது ஒன்றும் வழங்கப்பட உள்ளது.

## அறிவியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கான G.D. பிர்லா விருது 2023

- பிரயாக்ராஜ் நகரில் உள்ள ஹரிஷ் சந்திரா ஆய்வுக் கல்வி நிறுவனத்தின் புகழ்மிக்க இயற்பியலாளரான டாக்டர் அதிதி சென் தே, 2023 ஆம் ஆண்டிற்கான அறிவியல் துறையில் சிறந்து விளங்குவோருக்கான G.D. பிர்லா விருதினைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதானது 1991 ஆம் ஆண்டு முதல் K.K. பிர்லா அறக்கட்டளையால் ஆண்டு தோறும் வழங்கப்படுகின்றது.

- 50 வயதுக்குட்பட்ட இந்தியாவில் வாழ்ந்து, பணிபுரியும் இந்திய அறிவியலாளர்களின் சிறந்தப் பங்களிப்புகளை இது அங்கீகரிக்கிறது.
- இவர் இந்த விருதினைப் பெறும் 33வது அறிவியலாளர் மற்றும் முதல் பெண்மணி ஆவார்.
- குவாண்டம் (துளிமம்) தொழில்நுட்பங்களின் மேம்பாட்டில் அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.




## முதலாவது பே ஜல் சர்வேக்சன் விருதுகள்

- முதலாவது பே ஜல் சர்வேக்சன் விருதுகளை இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் வழங்கினார்.
- பல்வேறு நகரங்கள் மற்றும் மாநிலங்களின் பல்வேறு குறிப்பிடத்தக்க சாதனைகளை அங்கீகரிப்பதற்காக சுமார் 130 விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- மதிப்புமிக்க பே ஜல் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல நகர விருதுகள் ஆகிய பல்வேறு பிரிவுகளில் இந்த விருதுகளானது வழங்கப்பட்டுள்ளது.
- சிறந்த நீர் நிலை, நிலைத்தன்மையில் முதன்மை வகித்தல், மறுபயன்பாட்டில் முதன்மை வகித்தல், நீரின் தரம், நகர நீர் வழங்கீட்டில் நிறைவு மற்றும் புகழ்பெற்ற அம்ருத் 2.0 சுழற்சி முறை கோப்பை என பல பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.

## டேனியல் கான்மேன்

- உளவியல் மற்றும் பொருளாதார ஆராய்ச்சியின் முன்னோடிகளில் ஒருவரான டேனியல் கான்மேன் சமீபத்தில் காலமானார்.
- 2011 ஆம் ஆண்டில் வெளியான 'Thinking, Fast and Slow' என்ற அவரது புத்தகம் ஆனது உளவியல் மற்றும் வணிகப் பிரிவில் அதிகம் விற்பனையாகும் புத்தகங்களில் ஒன்று ஆகும்.

- 1996 ஆம் ஆண்டில் காலமான கணித உளவியலாளரான அமோஸ் ட்வெர்ஸ்கியுடன் இணைந்து அவர் தனது சில சிறந்தப் படைப்புகளை இயற்றினார்.
- மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வு பற்றிய ஆய்விற்கு கான்மேன் கணிசமான அளவிலான பங்களிப்பினையும் ஆற்றியுள்ளார்.
- நுகர்வோர் பொருளாதாரத்தின் மீதான அவரது படைப்பிற்காக அவர் நன்கு அறியப் படுகிறார்.
- அதற்காக அவருக்கு 2002 ஆம் ஆண்டில் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசானது வெர்னான் L ஸ்மித் என்பவருடன் சேர்த்து அளிக்கப் பட்டது.


## ஃபோர்ப்ஸ் இதழின் உலகின் பில்லியனர்கள் பட்டியல் 2024

- தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பெர்னார்ட் அர்னால்ட் உலகின் மிகவும் பெரிய பணக்காரரர் என்ற இடத்தினைத் தக்க வைத்துள்ளார்.
- சமீபத்திய '2024 ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் இதழின் உலகின் பில்லியனர்கள் பட்டியலின்' படி, முகேஷ் அம்பானி சுமார் 116 பில்லியன் டாலர் சொத்துக்களுடன் இந்தியாவின் பணக்கார மனிதராக உள்ளார்.
- மேலும் அம்பானி உலகின் 9வது பணக்கார மனிதர் ஆவார்.
- பிரத்தியேக 100 பில்லியன் டாலர் சொத்து மதிப்பு உள்ளவர்களின் பட்டியலில் இடம் பிடித்த முதல் இந்தியர் இவராவார்.
- இரண்டாவது இடத்தில் 84 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி இடம் பெற்றுள்ளார்.
- சாவித்ரி ஜிண்டால் இந்தியாவின் பணக்காரப் பெண்ணாகத் தொடர்ந்து இடம் பெற்று உள்ளார் என்பதோடு அவர் நாட்டின் 4வது பணக்கார மனிதராக தனது நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளார்.
- ஒட்டு மொத்தமாக, இந்தப் பட்டியலில் சுமார் 200 இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர் என்ற நிலையில் இது முந்தைய ஆண்டில் 169 ஆக இருந்தது.
- இந்தியா உலக அளவில், பில்லியனர்களின் (கோடீஸ்வரர்களின்) எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள 200 இந்தியர்களில் 25 பேர் முதல் முறையாக அப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

## மன்மோகன் சிங் ஓய்வு

- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தனது 33 ஆண்டு காலப் பாராளுமன்ற மாநிலங்களவை பதவியை நிறைவு முடித்துள்ளார்.
- அவர் 1982-1985 ஆகிய காலக் கட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகப் பணி ஆற்றினார்.
- அவர் முதல் முறையாக 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாராளுமன்ற உறுப்பினரானார்.

- அவர் நரசிம்மராவ் அவர்களின் ஆட்சியில் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையில் நிதி அமைச்சராகவும், 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரை பிரதமராகவும் பணியாற்றினார்.
- இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு முக்கியப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்தியதில் மன்மோகன் சிங் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தார்.
- அவர் திட்டக் குழுவின் துணைத் தலைவராகவும், பல்கலைக் கழக மானியக் குழுவின் (UGC) தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MNREGA) போன்ற வேலை வாய்ப்பு உறுதித் திட்டங்கள் மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி பெறும் உரிமை போன்ற பல சமூக நல முன்னெடுப்புகளை மேற்கொண்ட பெருமைக்குரியவர் மன்மோகன் சிங் ஆவார்.




## FIDE தரவரிசைகள்

**India's top chess players in FIDE rankings list for April 2024**

| India Rank | Overall Rank | Player | Standard Rating |
|---|---|---|---|
| 1 | 9 | Arjun Erigaisi | **2756** |
| 2 | 11 | Viswanathan Anand | **2751** |
| 3 | 14 | Praggnanandhaa | **2747** |
| 4 | 16 | Gukesh | **2743** |
| 5 | 25 | Vidit Santosh Gujrathi | **2727** |

- அர்ஜுன் எரிகைசி, உலக சதுரங்க நிர்வாகக் குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய FIDE தரவரிசையில் முன்னணி இடத்தில் உள்ள இந்தியர் என்ற ஒரு பெருமையினைப் பெற்றுள்ளார்.
- அர்ஜுன் எரிகைசி உலகத் தரவரிசையில் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.
- ஐந்து முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்த், இந்த FIDE தர வரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியர் ஆவார்.
- இதில் ஆனந்தைத் தொடர்ந்து R. பிரக்ஞானந்தா, D. குகேஷ் மற்றும் விதித் சந்தோஷ் குஜ்ராத்தி ஆகிய மூன்று பேர் இடம் பெற்றுள்ளனர்.

## உலகளாவிய இளம் தலைவர்கள் சமூகம் 2024

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது அதன் 20வது உலகளாவிய இளம் தலைவர்கள் சமூக திட்டம் குறித்து அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு உலகளாவிய ஈழம் தலைவர்கள் திட்டத்திற்கு ஐந்து இந்தியர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- இவர்கள் தங்களது அற்புதமான முயற்சியின் மூலம் எதிர்காலத்தினை மிகவும் நன்கு வடிவமைக்கின்ற, நேர்மறையான ஒரு மாற்றத்தைத் தூண்டுகின்ற 40 வயதிற்குட்பட்ட மாற்றத்தினை ஏற்படுத்தும் சுமார் 90 நபர்கள் ஆவர்.

## பீட்டர் ஹிக்ஸ்

- நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ் சமீபத்தில் காலமானார்.
- கடவுள் துகள் எனப்படும் ஹிக்ஸ் போசான் துகளைக் கண்டுபிடித்ததற்காக பீட்டர் ஹிக்ஸ் 2013 ஆம் ஆண்டில் நோபல் பரிசினைப் பெற்றார்.
- 1964 ஆம் ஆண்டில், ஹிக்ஸ் ஒரு புதிய துகள் இருப்பதைக் கணித்தார்.
- மற்ற துகள்கள் மற்றும் அண்டத்தில் உள்ள அனைத்து நட்சத்திரங்களும் கோள்களும் எவ்வாறு தனது நிறையைப் பெற்றன என்பது குறித்து விளக்கும் ஒரு குறிப்பிட்டப் பரிமாணத்தின் அணு சார் துகள் இருக்க வேண்டும் என்று அவர் முன்மொழிந்தார்.
- ஆனால் 2012 ஆம் ஆண்டு வரை அவரது கோட்பாடு உறுதிப்படுத்தப் படவில்லை.
- 2012 ஆம் ஆண்டில், CERN அமைப்பின் அறிவியலாளர்கள், இறுதியாக ஹிக்ஸ் போசான் துகளைக் கண்டறிந்ததாக அறிவித்தனர்.
- 1992 ஆம் ஆண்டில் இயற்பியலாளர் டாக்டர் லியோன் லெடர்மேன் என்பவர் எழுதிய "The God Particle: If the Universe is the Answer, What Is the Question?" என்ற புத்தகத்தில் ஹிக்ஸ் போசான் கடவுள் துகள் என்று குறிப்பிடப் பட்டது.




## சாகர் சம்மான் விருதுகள் 2024

- 61வது தேசிய கடல்சார் தினத்தின் போது, கடல்சார் துறையில் ஆற்றப்பட்ட சீரியப் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக சாகர் சம்மான் விருதுகள் வழங்கப்பட்டன.
- இதில் விருது பெற்றவர்கள்
    - சாகர் சம்மான் வருணா விருது: ஸ்ரீ. திரேந்திர குமார் சன்யால்
    - சிறந்த பங்களிப்பிற்கான சாகர் சம்மான் விருது: கேப்டன் கமல் காந்த் சௌத்ரி
    - துணிச்சல் மிகு பங்களிப்பிற்கான சாகர் சம்மான் விருது: கேப்டன் சுபிர்சாஹா, கேப்டன் O.M. தத்தா.
- திறன் சார் கல்விப் படிப்புகளை வழங்கும் கடல் சாராப் பயிற்சி வழங்கீட்டு நிறுவனங்கள் பிரிவில்,
    - இந்துஸ்தான் கடல்சார் பயிற்சி நிறுவனம், டைடல் பார்க், திருவான்மியூர், சென்னை முதல் இடத்தைப் பிடித்தது.
    - இந்துஸ்தான் கடல்சார் பயிற்சி நிறுவனம், கீழ்ப்பாக்கம், சென்னை 2வது இடத்தினைப் பெற்றுள்ளது.
    - FOSMA கடல்சார் கல்வி நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், கொல்கத்தா ஆனது 3வது இடத்தைப் பெற்றுள்ளது.
- கடந்த 9 வருடங்களில் கடல்சார் பணியாளர்களின் எண்ணிக்கை 140% அதிகரித்து உள்ளது.
- 2014 ஆம் ஆண்டில், பணியில் இருந்த இந்தியக் கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 117,090 ஆக இருந்த நிலையில், இது 2023 ஆம் ஆண்டில் 280,000 ஆக இருந்தது.

## ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் NS-25 விண்வெளிப் பயணம்

- அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸின் ப்ளூ ஆரிஜின் என்ற நிறுவனத்தின் NS-25 விண்வெளிப் பயணத்தில், ஒரு சுற்றுலாப் பயணியாக விண்வெளிக்குச் செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையை கோபி தோட்டகுரா பெற உள்ளார்.
- இந்த விண்வெளிப் பயணத் திட்டத்தில் விண்வெளிக்குப் பயணிக்கும் ஆறு நபர்களில் ஒருவராக தோட்டகுரா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இது 1984 ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தின் விமானப் படைத்தளபதி ராகேஷ் சர்மாவிற்கு அடுத்தபடியாக விண்வெளிக்குச் செல்லும் முதல் இந்திய விண்வெளிச் சுற்றுலாப் பயணி மற்றும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமையினை இவர் பெற உள்ளார்.




## IRDAI வெள்ளி விழா

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது ஏப்ரல் 19 ஆம் தேதியன்று தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது.
- மல்ஹோத்ரா குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு இணங்க, காப்பீட்டுத் துறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும் முன்னேற்றிக் கொண்டு செல்வதற்காகவும் 1999 ஆம் ஆண்டில் ஒரு தன்னாட்சி அமைப்பாக IRDAI ஆனது அமைக்கப்பட்டது.
- 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் தேதியன்று, இது ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- IRDAI இந்தியாவின் காப்பீட்டுச் சூழலை வடிவமைப்பதிலும் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட செயல்பாட்டினை மேம்படுத்துவத்திலும் முன்னணியில் உள்ளது.

## பெருங்கடல்களுக்கான பத்தாண்டு கால இலக்கு மாநாடு 2024

- 2024 ஆம் ஆண்டு பெருங்கடல் பத்தாண்டு கால மாநாடு ஆனது ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனாவில் நடைபெற்றது.
- இது ஸ்பெயின் நாட்டு அரசாங்கம் மற்றும் யுனெஸ்கோ அமைப்பின் அரசுகளுக்கு இடையேயான கடல்சார் ஆணையம் ஆகியவற்றினால் நடத்தப்பட்டது.

- இது ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டிற்கான பெருங்கடல் அறிவியலின் பத்தாண்டு கால (2021-2030) இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பிடுவதையும், பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு "நாம் விரும்பும் வகையிலான பெருங்கடலுக்கு தேவையான அறிவியலை வழங்குதல்" என்பதாகும்.
- இந்த நிகழ்வின் போது, பிராந்தியம் சார்ந்த கடல் கண்காணிப்பு மையத்தை நிறுவச் செய்வதற்கான கருத்தினை இந்தியா முன்வைத்தது.
- மேலும் இது மக்களை மையமாகக் கொண்ட பலவகைப் பேரழிவுகளுக்கான பல்வேறு முன்னெச்சரிக்கை அமைப்புகள் மற்றும் கரையோரப் பகுதிகளின் பேரிடர் நெகிழ் திறனை அதிகரிக்கத் தகவமைப்பு திட்டமிடல் உத்திகளை வடிவமைக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.



# விளையாட்டுச் செய்திகள்

## ஹாக்கி இந்தியா விருதுகள் 2023

- இந்திய ஹாக்கி நட்சத்திரங்கள் ஆன ஹர்திக் சிங் மற்றும் சலிமா டெடே ஆகியோர் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் ஆண்டின் சிறந்த ஹாக்கி நாயகர்களாக தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- 6வது வருடாந்திர ஹாக்கி இந்தியா விருதுகளான இது ஒவ்வோர் ஆண்டின் சிறந்த இந்திய ஹாக்கி வீரர்களையும் கொண்டாடுகிறது.
- முனிச் 1972 ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அசோக் குமாருக்கு, விளையாட்டுத் துறைக்கு ஆற்றியப் பங்களிப்பிற்காக அவரது தந்தை தியான் சந்த் அவர்களின் பெயர் சூட்டப்பட்ட ஹாக்கி இந்தியா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பட்டது.
- இதில் விருது பெற்ற மற்ற வீரர்கள் பின்வருமாறு:
  - ஆண்டின் சிறந்த கோல்கீப்பருக்கான ஹாக்கி இந்தியா பல்ஜித் சிங் விருது: P.R. ஸ்ரீஜேஷ்
  - ஹாக்கி இந்தியா பர்கத் சிங், ஆண்டின் சிறந்த டிஃப்பெண்டர் (எதிரணியின் இலக்கினைத் தடுப்பவர்) விருது: ஹர்மன்பிரீத் சிங்
  - ஹாக்கி இந்தியா அஜீத் பால் சிங் சிறந்த மிட்ஃபீல்டருக்கான (நடு கள வீரர்) விருது: ஹர்திக் சிங்
  - ஹாக்கி இந்தியா தன்ராஜ் பிள்ளை சிறந்த முன் கள வீரர் விருது: அபிஷேக்
  - ஹாக்கி இந்தியா அசுந்தா லக்ரா விருது ஆண்டின் புகழ்பெற்று வரும் சிறந்த வீராங்கனைகளுக்கான விருது (மகளிர் - 21 வயதுக்குட்பட்டோர்): தீபிகா சோரெங்
  - ஹாக்கி இந்தியா ஜுக்ராஜ் சிங் விருது ஆண்டின் புகழ்பெற்று வரும் சிறந்த வீரருக்கான விருது (ஆடவர் - 21 வயதுக்குட்பட்டவர்கள்): ஆரைஜீத் சிங் ஹண்டால்.

## விஸ்டன் புத்தகத்தில் இடம் பெற்ற உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்கள்




- 2024 ஆம் ஆண்டு விஸ்டன் கிரிக்கெட் வீரர்களின் அல்மனாக் புத்தகத்தில் பாட் கம்மின்ஸ் (ஆடவர்) மற்றும் நாட் ஸ்கிவர்-பிரண்ட் (மகளிர்) ஆகியோர் உலகின் முன்னணி கிரிக்கெட் வீரர்களாக இடம் பெற்றுள்ளனர்.

- ஸ்கிவர் ப்ரண்ட், மகளிருக்கான ஆஷஸ் போட்டியில் அவரது ஆட்டத்திற்காக சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.
- விஸ்டன் புத்தகத்தின் ஆண்டின் சிறந்த ஐந்து கிரிக்கெட் வீரர்களில் மிட்செல் ஸ்டார்க், உஸ்மான் கவாஜா மற்றும் ஆஷ்லே கார்ட்னர் ஆகிய மூன்று ஆஸ்திரேலிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- மேற்கிந்திய அணிகளின் ஆல்ரௌண்டர் ஹேலி மேத்யூஸுக்கு டி20 கிரிக்கெட் போட்டிகளின் முன்னணி வீரர் விருது வழங்கப் பட்டுள்ளது.

## காமன்வெல்த் போட்டிகளை நடத்தும் நாடு

- 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள அடுத்த காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான நாட்டினைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி தொடர்ந்து வருகிறது.
- முதலில், இந்தப் போட்டியை நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்திரேலிய மாகணமான விக்டோரியா அதிலிருந்து பின்வாங்கியது.
- தற்போது செலவினங்கள் மற்றும் போதிய நிதியானது வழங்கப்படவில்லை என்பதால் மலேசியாவும் இந்த வாய்ப்பினை நிராகரித்துள்ளது.
- இங்கிலாந்து நகரமான பர்மிங்காம் நகரம், 2026 ஆம் ஆண்டில் இந்தப் போட்டியினை நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
- ஆனால் தென்னாப்பிரிக்காவிடம் இருந்து 2022 ஆம் ஆண்டுப் போட்டிகளை நடத்தச் செய்வதற்கான உரிமையைப் பறித்த பிறகு 2022 ஆம் ஆண்டு போட்டிகளை நடத்த முன்வர வேண்டிய பர்மிங்ஹாம் நகரத்திற்கு கட்டாயம் ஏற்பட்டது.
- சமீபத்திய ஆண்டுகளில் மற்றும் கடந்த ஆறு போட்டிகளில் ஐந்து போட்டிகள் ஆஸ்திரேலியா அல்லது பிரிட்டனில் நடைபெற்றன.
- அதிகரித்து வரும் செலவுகள் காரணமாக கனடாவின் ஆல்பர்ட்டா அரசு, 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான முயற்சிக்கான ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளது.




## லாரூஸ் உலக விளையாட்டு விருதுகள் 2024

- 24 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டம் வென்ற நோவக் ஜோகோவிச் 5வது முறையாக லாரூஸ் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதை வென்றுள்ளார்.

- FIFA உலகக் கோப்பையை வென்ற ஸ்பெயின் நாட்டின் ஐடானா பொன்மட்டி, ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை விருதை வென்ற முதல் கால்பந்து வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- இங்கிலாந்தின் நட்சத்திரக் கால்பந்து வீரர் ஆன ஜூட் பெல்லிங்ஹாம், ரியல் மாட்ரிட் நகரில் தனது ஆரம்பகாலத் தாக்கத்திற்காக லாரூஸ் ஆண்டின் திருப்புமுனை விருதை வென்றுள்ளார்.
- மிகவும் பிரபல ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான சிமோன் பைல்ஸ்க்கு, கடந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் அவரின் மறு அறிமுகத்திற்காக இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.
- லாரூஸ் ஆண்டிற்கான உலகின் மிகச் சிறந்த அணி விருது ஸ்பெயின் நாட்டின் மகளிர் கால்பந்து அணிக்கு வழங்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## ஒடிசா மாநில உருவாக்க தினம் – ஏப்ரல் 01

- உத்கல் திவாஸ் என்றும் அழைக்கப்படுகின்ற ஒடிசா மாநில உருவாக்க தினமானது, ஆண்டுதோறும் ஏப்ரல் 01 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகின்றது.
- 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று, ஒருங்கிணைந்த பீகார் மற்றும் ஒரிசா மாகாணத்திலிருந்து ஒடிசா தனி மாகாணமாக உருவாக்கப்பட்ட தினத்தினை இது நினைவு கூருகிறது.
- இந்தத் தினமானது ஒடிசா மக்களின் கலாச்சார அடையாளம், வரலாற்று பாரம்பரியம் மற்றும் அதன் தொடக்கத்திலிருந்து மாநிலம் அடைந்த முன்னேற்றத்தை வெகுவாகக் குறிப்பதால் ஒடிசா மக்களுக்கு இது முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும்.

## பார்வைத் திறன் இழப்பு தடுப்பு வாரம் 2024

- ஜவஹர்லால் நேரு மற்றும் இராஜா குமாரி அம்ரித் கௌர் ஆகியோர் 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் 1960 ஆம் ஆண்டில் தேசியப் பார்வைத் திறன் இழப்பு தடுப்புச் சங்கத்தை நிறுவினர்.
- இந்திய அரசானது, ஏப்ரல் 01 முதல் ஏப்ரல் 07 ஆம் தேதி வரையிலான தேதிகளை பார்வைத் திறன் இழப்பு தடுப்பு வாரமாக அறிவித்துள்ளது.
- பார்வைத் திறன் இழப்பிற்கு காரணாமன பல்வேறு எண்ணற்ற காரணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த வாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கண்ணில் ஏற்படும் பல்வேறு காயங்கள், பார்வைக் குறைபாடுகள், பயன்மிக்க தடுப்பு நடவடிக்கைகள், சிகிச்சை முறைகள் மற்றும் பல சாத்தியமான சிகிச்சைகள் குறித்து மக்களுக்குக் கற்பிக்க முயல்கிறது.

## உலக மதியிறுக்க நிலை விழிப்புணர்வு தினம் – ஏப்ரல் 02

- மதியிறுக்க நோயால் பாதிக்கப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளைக் கொண்டாடுவதற்காகவும், அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- மதியிறுக்கம் என்பது தகவல் தொடர்பு மற்றும் சமூகம் சார்ந்த தகவல் தொடர்பு ஆகியவற்றினைப் பாதிக்கின்ற நரம்பியல் வளர்ச்சிக் கோளாறு ஆகும்.
- மதியிறுக்க நோயின் அறிகுறிகளில் சமூகம் சார்ந்த மனக் குழப்பம், பயம் மற்றும் கவனம் செலுத்துவதில் சிரமம் ஆகியவை அடங்கும்.
- இந்த நிலையானது, ஒரு நபரின் அன்றாட வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கின்ற மற்றும் குறிப்பிடத் தக்க பிரச்சனைகளை ஏற்படுத்தும்.
- உலக மதியிறுக்க நோய் விழிப்புணர்வு தினமானது, மதியிறுக்கம் கொண்டவர்களின் தனித்துவத்தை அங்கீகரித்து அவர்களின் வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்குமான ஒரு வாய்ப்பாகும்.
- மதியிறுக்கம் என்பது ஒருவரின் வாழ்நாள் முழுவதும் இருக்கும் குறைப்பாட்டு நிலை என்பதையும், அதற்கு சிகிச்சை இல்லை என்பதையும் நினைவூட்டுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Empowering Autistic Voices" என்பதாகும்.

## சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் - ஏப்ரல் 02


- இந்த நாள் குழந்தைகளிடையே வாசிப்பு ஆர்வத்தை நன்கு ஊக்குவிப்பதற்காகவும், குழந்தைகளுக்கான புத்தகங்களையும் இளம் மனங்களையும் நன்கு வடிவமைப்பதில் அவற்றின் முக்கியத்துவத்தினைக் கௌரவிப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது.
- இளையோர்களுக்கான புத்தகங்களுக்கான ஜப்பான் வாரியம் (JBBY) ஆனது 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் அதிகாரப்பூர்வ நிதி ஆதரவாளராக உள்ளது.
- முதல் சர்வதேச குழந்தைகள் புத்தக தினம் ஆனது 1967 ஆம் ஆண்டு ஏப்ரல் 02 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Cross the Seas on the Wing of your Imagination" என்பதாகும்.

## சர்வதேச கண்ணிவெடி விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 04




- 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் தேதியன்று, கண்ணிவெடி பயன்பாட்டுத் தடை ஒப்பந்தம் என்றும் அழைக்கப் படும் ஒட்டாவா ஒப்பந்தம் கையெழுத்தானது.
- இந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமானது, மனிதக் கொல்லி கண்ணி வெடிகளின் பயன்பாடு, கையிருப்பு, உற்பத்தி மற்றும் பரிமாற்றத்தைத் தடை செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டது.
- இந்த நாள் கண்ணிவெடிகளின் வகைதொகை கண்டறியா தன்மை மற்றும் போரில் வெடிக்காத எஞ்சிய கண்ணி வெடிகள் (ERW) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உயிர்களைப் பாதுகாத்தல், அமைதியை உருவாக்குதல் " என்பதாகும்.

## தேசிய கடல்சார் தினம் - ஏப்ரல் 05




- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதியன்று, கடல்சார் வணிகம் மற்றும் வர்த்தகத்தை நோக்கிய இந்தியாவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையினைக் குறிக்கும் வகையில் SS லாயல்டி கப்பல் தனது பயணத்தைத் தொடங்கியது.
- 1964 ஆம் ஆண்டில், வரலாற்றுச் சிறப்புமிக்க SS லாயல்டி கப்பலினைக் கௌரவிக்கும் வகையில் அரசாங்கம் இந்த நாளை அறிவித்தது.

- இன்று, சுமார் 200 சிறிய துறைமுகங்கள் மற்றும் 12 பெரிய துறைமுகங்களைக் கொண்டுள்ள உலகின் 16வது பெரிய கடல்சார் நாடாக இந்தியா மாறியுள்ளது.

## சர்வதேச மனசாட்சித் தினம் - ஏப்ரல் 05

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதியன்று முதல் சர்வதேச மனசாட்சித் தினம் கொண்டாடப் பட்டது.
- மனசாட்சி என்பது எது சரி எது தவறு என்று பகுத்தறியும் ஒரு நபரின் திறன் ஆகும்.
- இது ஒருவர் மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்க வேண்டும் அத்துடன் மற்ற உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனசாட்சியுடன் வாழச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு "அன்பு மற்றும் மனசாட்சியுடன் கூடிய அமைதி கலாச்சாரத்தை ஊக்குவித்தல்" என்பதாகும்.

## சர்வதேச மேம்பாட்டிற்கான விளையாட்டு தினம் - ஏப்ரல் 06




- இது நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் உலகெங்கிலும் உள்ள சமூகங்களிலும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை வெகுவாக அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நம்மை மிகவும் சுறுசுறுப்பாகவும், போட்டித் தன்மையுடனும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கின்ற விளையாட்டு ஆனது சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அமைதியான மற்றும் உள்ளார்ந்த சமூகங்களை மேம்படுத்துவதற்கான விளையாட்டு" என்பதாகும்.

## 1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற டுட்சிகளுக்கு எதிரான இனப் படுகொலையின் சர்வதேச பிரதிபலிப்பு தினம் - ஏப்ரல் 07

- 2024 ஆம் ஆண்டில் 1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற டுட்சிகளுக்கு எதிரான இனப் படுகொலையின் 30வது ஆண்டு நினைவேந்தல் அனுசரிக்கப்பட்டது.

- 1994 ஆம் ஆண்டில் ருவாண்டாவில் நடைபெற்ற இனப்படுகொலையை நினைவு கூரும் வகையில் 2003 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இத்தினம் நிறுவப் பட்டது.
- டுட்சிகளுக்கு எதிரான இனப்படுகொலை என்று அழைக்கப்படும் ருவாண்டா இனப் படுகொலையானது, ருவாண்டாவில் உள்ள ஹுட்டு என்ற ஒரு பெரும்பான்மையினச் சமூகத்தினை சேர்ந்த அரசாங்கத்தினால் டுட்சி இனத்தவர் மீது மேற்கொள்ளப்பட்ட ஓர் இனப்படுகொலை ஆகும்.
- 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 முதல் ஜூலை மாதத்தின் நடுப்பகுதி வரையிலான 100 நாட்கள் அளவிலான காலப்பகுதியில் சுமார் 800,000க்கும் அதிகமான அளவில் மக்கள் கொல்லப் பட்டனர்.




## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07


- 1948 ஆம் ஆண்டில் இந்த நாளன்று தான் உலக சுகாதார அமைப்பானது நிறுவப்பட்டது.
- எந்தவொரு நாட்டின் அரசாங்கத்தின் தலையீடும் இல்லாமல் முக்கியத்துவம் வாய்ந்த சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவும் மிகவும் சுதந்திரமாக நன்குச் செயல்படுவதற்காகவும் உலக சுகாதார அமைப்பானது நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது பல்வேறு சுகாதாரப் பிரச்சனைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்காகவும், தரமான சுகாதாரத்திற்கான ஒரு உலகளாவிய அணுகலுக்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'எனது ஆரோக்கியம், எனது உரிமை' என்பதாகும்.




## உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10

- இந்தத் தினமானது ஆண்டுதோறும் டாக்டர் சாமுவேல் ஹானிமனின் பிறந்தநாளில் அனுசரிக்கப் படுகிறது.
- ஒரு பழங்கால மருத்துவமான ஹோமியோபதி என்பது மனித உடலின் தானாகவே குணப்படுத்தும் திறனைச் செயல்படுத்துகிறது மற்றும் உடலின் செயல்பாடுகளை வலுப்படுத்தி அதன் மூலம் தானாகவே குணமடையச் செய்கிறது.
- 2024 ஆண்டிற்கான கருத்துரு "ஹோமியோபரிவார்: ஓர் ஆரோக்கியம், ஓர் குடும்பம்" என்பதாகும்.

## உலக நடக்குவாத நோய் தினம் - ஏப்ரல் 11



- இந்த நாள் 1817 ஆம் ஆண்டில் முதன்முதலில் நரம்பியக் கடத்தல் (நியூரான் சிதைவு) கோளாறைக் கண்டறிந்த டாக்டர் ஜே பார்கின்சனின் பிறந்தநாளை குறிக்கிறது.
- உலக நடக்குவாத நோய் தினம் முதன்முதலாக 1997 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- உலக நடக்குவாத நோய் தினமானது உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய பார்கின்சன் (முடக்குவாத) நோய் சங்கம் (EPDA) ஆகிய அமைப்புகளின் பெரும் ஒரு ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது.
- முடக்குவாத நோய் என்பது மத்திய நரம்பு மண்டலத்தின் ஒரு நாள்பட்ட சிதைவுக் கோளாறு ஆகும் என்ற நிலையில், இது நரம்பு இயக்கவியல் அமைப்பு மற்றும் நரம்பு இயக்கவியல் அல்லாத அமைப்புகளை பாதிக்கிறது.
- 2024 ஆண்டிற்கான கருத்துரு என்பது – 'நடக்குவாத நோயுடன் சிறப்பாக வாழ்வதை ஊக்குவித்தல்' ஆகும்.

## பாதுகாப்பான தாய்மார்களுக்கான தேசிய தினம் - ஏப்ரல் 11

- இந்த நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் மனைவியான கஸ்தூரிபா காந்தியின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- ஒயிட் ரிப்பன் அலையன்ஸ் இந்தியா (WRAI) என்ற அமைப்பால் பாதுகாப்பான தாய்க்கான தேசிய தினம் தொடங்கப்பட்டது.
- இந்த நாளானது தாய்மார்களுக்கு ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் நாட்டில் தாய்மார்களின் இறப்பு விகிதங்கள் குறைவதை எடுத்துக் காட்டுகிறது.
- இந்திய அரசாங்கம் 2003 ஆம் ஆண்டில் பாதுகாப்பான தாய்க்கான தேசிய தினத்தை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்தது.
- இந்த நாளானது கர்ப்பக் காலம் அல்லது பிரசவ கால சிக்கல்களால் ஏற்படக் கூடிய தாய்மார்களின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## சர்வதேச மனித விண்வெளிப் பயண தினம் - ஏப்ரல் 12


- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது, 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 ஆம் தேதியன்று, இந்த நாளை நிறுவுவதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- மனிதகுலத்தின் விண்வெளி பயண சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் இந்த நாள் ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூரப்படுகிறது.
- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியன்று, சோவியத் ஒன்றியத்தினைச் சேர்ந்த யூரி ககாரின் என்பவர் விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்த முதல் மனிதர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- பின்னர், 1969 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதியன்று, நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் கால் பதித்த முதல் நபர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'அறிவியல் ஆர்வத்தை ஊக்குவித்தல்' என்பதாகும்.




## ஜாலியன் வாலாபாக் படுகொலை தினம் - ஏப்ரல் 13

- ஜாலியன் வாலாபாக் படுகொலை ஆனது 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரில் நடைபெற்றது.
- ஆயிரக்கணக்கான இந்திய எதிர்ப்பாளர்கள் பைசாகி என்ற வசந்த கால விழாவைக் கொண்டாடுவதற்காக அமைதியான முறையில் திரண்டிருந்தனர்.
- அனைத்துப் பக்கங்களிலும் சுவர்களால் சூழப்பட்ட இப்பகுதியில் ஒரே ஒரு குறுகிய நுழைவாயில் மட்டுமே இருந்தது.
- எந்தவித முன் எச்சரிக்கையின்றி, படைப் பிரிவுத் தளபதி ரெஜினோல்ட் டயர், ஐம்பது ஆயுதம் ஏந்திய வீரர்களுடன் ஜாலியன்வாலாபாக் பகுதிக்குள் அணி வகுத்துச் சென்று, அங்கு திரண்டிருந்த கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார்.

- சுமார் 10 நிமிடங்கள் தொடர்ந்த அந்தத் துப்பாக்கிச் சூட்டில், சுமார் 379 பேர் கொல்லப் பட்டனர் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.





## உலக துளிமம் தினம் - ஏப்ரல் 14




- துளிம (குவாண்டம்) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பற்றிய பொதுமக்களின் புரிதலை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 4.14 வடிவத்தில் உள்ள ஏப்ரல் 14 ஆம் தேதியானது, குவாண்டம் இயற்பியலின் அடிப்படை மதிப்பான பிளாங்க் என்ற மாறிலியின் முதல் மூன்று இலக்கங்களின் ஒரு மதிப்பினைக் குறிக்கிறது.
- பிளாங்க் மாறிலியின் மதிப்பு என்பது $4.1356677 \times 10^{-15}$ eV·s ஆகும்.
- ஆற்றல் மற்றும் நேரம் ஆகியவற்றின் பெருக்கல் பலனான இது குவாண்டம் இயற்பியலில் பயன்படுத்தப் படும் ஒரு அடிப்படை மாறிலியாகும்.

## B.R. அம்பேத்கர் ஜெயந்தி - ஏப்ரல் 14

- டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கும் விதமாக இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- அவர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று, மத்தியப் பிரதேசத்தில் உள்ள மோவ் (தற்போது அம்பேத்கர் நகர்) என்னுமிடத்தில் பிறந்தார்.
- 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று புனே நகரில் இதன் முதலாவது பொதுக் கொண்டாட்டம் நடைபெற்றது.
- 1990 ஆம் ஆண்டில், அம்பேத்கர் அவர்களின் மரணத்திற்குப் பின் இந்தியாவின் உயரிய குடிமை விருதான பாரத ரத்னா வழங்கப்பட்டது.
- மேலும், 1990-91 காலப்பகுதியானது "சமூக நீதி ஆண்டாக" அறிவிக்கப்பட்டது.





## 40வது சியாச்சின் தினம் - ஏப்ரல் 13




- உலகின் மிக உயரமான பகுதிகளில் அமைந்த போர்க்களத்தில் பணியாற்றும் இந்திய இராணுவ வீரர்களின் வீரம் மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையில் சியாச்சின் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் 'மேக்தூத் நடவடிக்கையின்' ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- இது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று இந்திய இராணுவத்தினால் தொடங்கப் பட்டது.
- இது இந்திய-பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த சியாச்சின் பனிப்பாறையைப் பாதுகாப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டது.
- சியாச்சின் பனிப்பாறையானது, கடல் மட்டத்திலிருந்து சராசரியாக சுமார் 17,770 அடி உயரத்தில் காரகோரம் மலைத் தொடரில் அமைந்துள்ளது.

## உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினம் - ஏப்ரல் 14

- 1909 ஆம் ஆண்டில் கார்லோஸ் சாகாஸ் என்பவரால் டிரிபனோசோமா க்ரூசி என்ற ஒரு ஒட்டுண்ணியால் ஏற்படும் சாகாஸ் (இரத்த ஒட்டுண்ணி நோய்) என்ற நோயினைக் கண்டறிந்தார்.
- அமெரிக்க டிரிபனோசோமியாசிஸ் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த நோய் ஆனது, டிரிபனோசோமா க்ரூசி எனப்படும் ஒரு புரோட்டோசோவா ஒட்டுண்ணியால் ஏற்படக் கூடிய உயிருக்கு ஆபத்தினை விளைவிக்கக் கூடிய நோயாகும்.
- 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதியன்று முதன்முறையாக ஒரு நபரில் இந்த நோய் பாதிப்பு இருப்பதைக் கண்டறிந்த பிரேசிலிய மருத்துவரும் ஆராய்ச்சியாளருமான கார்லோஸ் சாகாஸின் பெயரால் இதற்கு இப்பெயரிடப்பட்டது.
- இந்த நோய் இதில் முதன்மையாகப் பாதிக்கப்பட்ட ட்ரைடோமைன் ஒட்டுண்ணிகள் கடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது என்பதோடு இவை முத்தமிடும் பூச்சிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.



## உலக கலை தினம் - ஏப்ரல் 15





- இது கலைஞர்களின் பங்களிப்பை நன்கு கௌரவித்து, நம் வாழ்வில் கலையின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் மிகப் பெரிய ஓவியரான லியோனார்டோ டா வின்சி அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இந்த நாள் குறித்து, 2011 ஆம் ஆண்டில் மெக்ஸிகோவில் நடைபெற்ற 17வது பொதுச் சபையில் சர்வதேச கலைச் சங்கத்தினால் (IAA) முன்மொழியப்பட்டது.
- முதலாவது உலக கலை தினம் ஆனது 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- கலை மற்றும் கலைஞர்களை உலகளவில் மேம்படுத்துவதற்காக 1954 ஆம் ஆண்டு பாரீசு நகரில் உள்ள யுனெஸ்கோ அமைப்பின் தலைமையகத்தில் சர்வதேச கலைச் சங்கம் நிறுவப்பட்டது.

## தேசிய தீயணைப்புச் சேவை தினம் - ஏப்ரல் 14

- 1944 ஆம் ஆண்டு மும்பை துறைமுகத்தில் நிகழ்ந்த கப்பல் வெடித்து சிதறிய நிகழ்வில் உயிரிழந்த அனைத்து துணிவு மிக்க தீயணைப்பு வீரர்களையும் நினைவு கூரும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது தீ பாதுகாப்பு மற்றும் தடுப்பு பற்றிய விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதற்கான ஒரு மன்றத்தையும் வழங்குகிறது.
- கூடுதலாக, ஏப்ரல் 14 முதல் ஏப்ரல் 20 ஆம் தேதி வரையில் தீயணைப்பு சேவை வாரம் அனுசரிக்கப் படுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Ensure Fire Safety to contribute towards nation building' என்பதாகும்.




## உலக இரத்தம் உறையாமை நோய் தினம் - ஏப்ரல் 17




- உலக இரத்தம் உறையாமை நோய்க் கூட்டமைப்பு (WFH) ஆனது இந்த உலகளாவிய நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது.
- நோய் கண்டறிதல், சிகிச்சை மற்றும் விரிவான சிகிச்சை ஆகியவற்றிற்கான ஒரு அணுகலைப் பெறுவதற்காக மக்களுக்கு உதவும் வகையில் இந்த நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இந்த நாள் முயற்சிக்கிறது.
- இரத்தம் உறையாமை நோய் என்பது ஒரு மரபுவழி இரத்தப் போக்கு கோளாறு ஆகும் என்பதோடு இந்த நிலையில் இரத்தம் சரியாக உறைவதில்லை.

- இது தானாக ஏற்படும் இரத்தப்போக்கு மற்றும் பல்வேறு காயங்கள் அல்லது அறுவை சிகிச்சைக்குப் பிறகான இரத்த ப்போக்குக்கு வழிவகுக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்திற்கான கருத்துரு, "அனைவருக்கும் சமமான அணுகல்: அனைத்து இரத்தப் போக்குக் கோளாறுகளையும் அடையாளம் காணுதல்" என்பதாகும்.

## சர்வதேச வணிக நோக்கம் சாரா வானொலி தினம் - ஏப்ரல் 18

- வணிக நோக்கம் சாரா வானொலியின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் அதன் அலைக்கற்றைச் சலுகைகளை மேம்படுத்துவதற்கும் என்று இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- வணிக நோக்கம் சாரா வானொலி என்பது குறுகிய அலைவரிசையிலான ரேடியோ அலைகளைப் பயன்படுத்தும் முதல் வகை கம்பிவட இணைப்பில்லா தகவல்தொடர்பு ஆகும்.
- இந்தத் தினமானது முதன்முதலில் 1925 ஆம் ஆண்டில் பயில்முறை வானொலி ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டது.
- சர்வதேச வணிக நோக்கம் சாரா வானொலி ஒன்றியமானது (IARU) பாரீஸ் நகரில் 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.


## உலகப் பாரம்பரியத் தினம் - ஏப்ரல் 18




- சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் தினம் ஆனது, உலகப் பாரம்பரியத் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்தத் தினம் ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (UNESCO) 1983 ஆம் ஆண்டில் முதன்முதலில் கொண்டாடப் பட்டது.

- புவியின் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் பன்முகத் தன்மை பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Disasters & Conflicts Through the Lens of the Venice Charter" என்பதாகும்.
- இந்தியாவில் மொத்தம் 3691 பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் உள்ளன.
- இவற்றில் 40 தளங்கள் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப் பட்டுள்ளன.

## உலக கல்லீரல் தினம் - ஏப்ரல் 19





- ஆரோக்கியமான கல்லீரலின் முக்கியத்துவம் மற்றும் உலகளவில் கல்லீரல் நோய் பரவுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் படி, இந்தியாவில் ஏற்படும் உயிரிழப்பிற்கான முதல் பத்து காரணங்களில் ஒன்றாக கல்லீரல் சார்ந்த நோய்கள் இடம் பெற்றுள்ளன.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “விழிப்புணர்வுடன் இருங்கள், பல்வேறு வழக்கமான கல்லீரல் பரிசோதனைகளைப் பெறுதல் மற்றும் கொழுப்பு படிந்த கல்லீரல் நோய்களைத் தடுத்தல்” என்பதாகும்.

## தேசிய குடிமைப் பணிகள் தினம் - ஏப்ரல் 21

- நமது குடிமைப் பணியாளர்கள் ஆற்றிய மகத்தான மற்றும் சிறப்பான பணிகளைக் கொண்டாடுவதற்காகவும், குடிமக்களின் நலனுக்காக அவர்கள் தங்களை மீண்டும் அர்ப்பணிப்பதற்கான வாய்ப்பாகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- 1947 ஆம் ஆண்டு இதே நாளில் தான், சுதந்திர இந்தியாவின் அப்போதைய உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேல் தகுதிகாண் நிர்வாக அதிகாரிகளிடம் உரையாற்றினார்.

- தனது உரையின் போது அவர் குடிமைப் பணியாளர்களை 'இந்தியாவின் எஃகு சட்டகம்' என்று குறிப்பிட்டார்.




## உலக பூமி தினம் - ஏப்ரல் 22

- இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புவி எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1970 ஆம் ஆண்டில், அமெரிக்க மேலவை உறுப்பினரான கெய்லார்ட் நெல்சனின் கொள்கையில் இருந்து புவி நாள் அனுசரிப்பு கருத்தாக்கம் உருவானது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Planet vs. Plastics” என்பதாகும்.




## உலகப் புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23

- இந்த நாள் வாசிப்பு, வெளியீடு மற்றும் பல்வேறு அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதை ஊக்குவிக்கிறது.


- இத்தினத்தன்று இலக்கியத்திற்கான நேசம் மற்றும் பாராட்டுக்கான அடையாளமாகப் புத்தகங்கள் மற்றும் ரோஜாக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகிறது.
- இது 1995 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அறிவிக்கப்பட்டது மற்றும் 1996 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் கொண்டாடப் படுகிறது.

## உலக ஆய்வக தினம் - ஏப்ரல் 23

- இந்த நாள் அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் பல்வேறு ஆய்வகங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சமூகத்திற்கு ஆய்வகங்கள் மற்றும் ஆய்வக வல்லுநர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதோடு, மக்களின் வாழ்க்கையை நன்கு மேம்படுத்துவதில் அறிவியலின் மதிப்பை மேம்படுத்துகிறது.
- இந்தத் தேதியானது, வரலாற்றில் மிகவும் பிரபலமான அறிவியலாளர்களில் ஒருவரான சர் வில்லியம் லாரன்ஸ் பிராக்கின் பிறந்தநாளுடன் ஒன்றி வருகிறது.
- ஒரு பிரிட்டிஷ் இயற்பியலாளர் மற்றும் வேதியியலாளரான சர் ப்ராக் அவர் ஊடுகதிர் படிகவியலில் ஆற்றியப் பணிக்காக 1915 ஆம் ஆண்டில் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றார்.

## ஐக்கிய நாடுகள் சபையின் ஆங்கிலம் மற்றும் ஸ்பானிய மொழி தினம் - ஏப்ரல் 23

- ஆங்கில மொழி தினமானது, வில்லியம் ஷேக்ஸ்பியர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் இறந்த தேதியாக என வழக்கமாக அனுசரிக்கப்படுகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள பிரெஞ்சு மொழியையும் சேர்த்த இரண்டு பயன்பாட்டு மொழிகளில் ஆங்கிலமும் ஒன்றாகும்.
- அரபு, சீனம், ஆங்கிலம், பிரஞ்சு, ரஷியம் மற்றும் ஸ்பானியம் ஆகியவை ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு அலுவல் மொழிகள் ஆகும்.
- ஸ்பானிய எழுத்துக்களின் மாபெரும் மேதை மிகுவேல் டி செர்வன்டெஸ் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு ஐநா ஸ்பானிய மொழி தினம் அனுசரிக்கப் படுகிறது.




## உலக ஆய்வக விலங்குகள் தினம் - ஏப்ரல் 24

- 1875 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அறிவியல் ஆய்விற்காக உயிருள்ள விலங்குகளைப் பயன்படுத்துவதற்கு எதிரான தேசியச் சங்கமானது விலங்குப் பரிசோதனைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்யும் உலகின் முதல் அமைப்பாகும்.
- இது 1973 ஆம் ஆண்டில் மனித ஆராய்ச்சிக்கான லார்ட் டவுடிங் நிதியை (LDF) நிறுவியது.
- அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியின் மேம்பட்ட விலங்கு சோதனை சாராத முறைகளை ஆதரித்து நிதியளிப்பதை இந்த நிதியம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1979 ஆம் ஆண்டில், NAVS உலக ஆய்வக விலங்குகள் தினத்தை நிறுவியது (ஆய்வக விலங்கு தினம் என்றும் குறிப்பிடப் படுகிறது).
- உலகெங்கிலும் உள்ள ஆய்வகங்களில் விலங்குகளுக்கு இழைக்கப்படும் துன்பங்கள் மற்றும் அவை கொல்லப்படுவது மீதான கவனத்தை ஈர்ப்பதை இந்த நாள் பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அழகியல், மருத்துவம், விமானப் போக்குவரத்து மற்றும் இராணுவத் தொழில் துறைகளில் கூட விலங்குகள் மீதான பல்வேறு பரிசோதனைகள் பல ஆண்டுகளாக நடைபெறுகிறது.





## தேசியப் பஞ்சாயத்து தினம் - ஏப்ரல் 24



- இந்தத் தினமானது பஞ்சாயத்துராஜ் அமைப்புகளை நிறுவிய அரசியலமைப்பு மாற்றத்தை நினைவு கூரும் நாள் ஆகும்.
- பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் அரசாங்கத்தின் மூன்றாம் அடுக்குகளாகக் கருதப் படுகின்றன.
- இது கிராமப்புறங்களில் உள்ளூர் அளவிலான நிர்வாகத்தை மேலாண்மை செய்கிறது.
- முதல் பஞ்சாயத்து இராஜ் அமைப்பு ஆனது 1993 ஆம் ஆண்டில் இந்நாளில் தான் தொடங்கப் பட்டது.
- 1959 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு அவர்களின் தலைமையில் தற்கால இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின் 73வது திருத்தச் சட்டம் ஆனது பஞ்சாயத்து இராஜ் அமைப்புக்கு அரசியலமைப்பு அந்தஸ்தை வழங்கியது.

## உலக மலேரியா தினம் - ஏப்ரல் 25




- உலகம் முழுவதும் மலேரியா பரவுவதை அங்கீகரித்து, அந்த நோயை ஒழிப்பதற்கான ஒரு உலகளாவியப் பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த நாள் முதன்முதலில் 2008 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இந்தத் தினம் 2001 ஆம் ஆண்டு முதல் ஆப்பிரிக்க நாடுகளால் அனுசரிக்கப்பட்ட ஆப்பிரிக்க மலேரியா தினத்திலிருந்து உருவானது.
- உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்கப் பிராந்தியத்தில் இந்த நோயின் பாதிப்பு அதிகளவில் உள்ளது. என்ற நிலையில் 2022 ஆம் ஆண்டில் பதிவான மலேரியா பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகள் முறையே 94% மற்றும் 95% ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் 6,08,000 மலேரியா உயிரிழப்புகள் பதிவாகின.

- 2022 ஆம் ஆண்டில் 249 மில்லியன் புதிய மலேரியா பாதிப்புகள் உறுதி செய்யப் பட்டு உள்ளன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Accelerating the fight against malaria for a more equitable world" என்பதாகும்.

## உலக பென்குயின் தினம் - ஏப்ரல் 25

- ராஸ் தீவில் உள்ள மெக்முர்டோ நிலையம் என்ற அமெரிக்க ஆராய்ச்சி மையத்தில் இந்த நாள் உருவாக்கப்பட்டது.
- இந்த நிலையத்தில் உள்ள அறிவியலாளர்கள், அடேலி பென்குயின்கள் ஒவ்வோர் ஆண்டும் இதே நாளில் தான் வடக்கு நோக்கி இடம்பெயரத் தொடங்குவதைக் கண்டு அறிந்தனர்.
- இந்த இடம் பெயர்வினைக் கொண்டாடச் செய்வதற்காகவும், அதன் இருப்பிடத்தில் பென்குயின்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்த நாளை உருவாக்க அவர்கள் முடிவு செய்தனர்.


## உலக அறிவுசார் சொத்து தினம் - ஏப்ரல் 26

- அன்றாட வாழ்வில் காப்புரிமைகள், பதிப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- அறிவுசார் சொத்துரிமை (IP) உரிமைகளின் செயல்பாடு ஆனது உலகில் உள்ள பல்வேறு நாகரிகங்களில் புதுமை மற்றும் படைப்பாற்றலை தூண்டுவதற்கு வேண்டிய ஒன்றாகும்.
- அறிவுசார் சொத்து (IP) என்பது ஒரு நபர் அல்லது நிறுவனம் கொண்டிருக்கும் புலப்படாத வகை சொத்து ஆகும்.
- அவை அறிவாற்றலின் திறனுக்காக தனிநபர்களுக்கு வழங்கப்படும் பல உரிமைகள் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'IP and the SDGs: Building Our Common Future with Innovation and Creativity' என்பதாகும்.

## சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு தினம் - ஏப்ரல் 26


- 1986 ஆம் ஆண்டில் இதே நாளில் நிகழ்ந்த கொடிய அணுசக்தி பேரிடரின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானம் 71/125 மூலமாக இந்த நாள் நியமிக்கப்பட்டது.
- 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் தேதியன்று, சோவியத் ஒன்றியத்தில் உள்ள செர்னோபில் அணுமின் நிலையத்தில் இருந்த அணு உலை வெடித்தது.
- பல்வேறு அதிகாரப்பூர்வ அறிக்கைகளின் அடிப்படையில், பெலாரஸ், ரஷ்யா மற்றும் உக்ரைனில் சுமார் 8,400,000 பேர் அணுக்கதிர்வீச்சின் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளனர்.
- மூன்று நாடுகளிலும் சுமார் 155,000 ச.கி.மீ பரப்பளவிலான பிரதேசங்கள் அணுக் கதிர் வீச்சினால் மாசுபட்டன.

- சுமார் 52,000 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட வேளாண் பகுதிகள் சீசியம்-137 மற்றும் ஸ்ட்ரோண்டியம்-90 ஆகியவற்றினால் மாசுபட்டுள்ளன என்ற நிலையில் இவற்றின் அரை வாழ்நாள் காலம் முறையே 30 ஆண்டுகள் மற்றும் 28 ஆண்டுகள் ஆகும்.




## நிழல்கள் இல்லா தினம் 2024 - ஏப்ரல் 24

- சூரியன் நேரடியாக உச்ச நிலையில் இருக்கும் போது, எந்தப் பொருளின் மீதும் நிழல் படாது. இந்நிகழ்வு ஆனது பெங்களூரில் மதியம் 12:17 முதல் 12:23 மணி நேரத்திற்குள் தென்பட்டது.
- இது +23.5 மற்றும் -23.5 டிகிரி அட்சரேகைக்கு இடையில் அமைந்துள்ள இடங்களில் வருடத்திற்கு இரண்டு முறை நிகழும் ஒரு அரிய வான நிகழ்வு ஆகும்.
- இந்த நிகழ்வின் போது, சூரியன் வானத்தில் மிக உச்சி நிலையை அடையும் போது அனைத்துப் பொருள்கள் மற்றும் உயிரினங்களின் நிழல்கள் மறைந்துவிடும்.
- சூரியனின் இந்தச் சாய்வானது இரண்டு முறை அட்சரேகைக்கு இணையாக இருக்கும், அதாவது உத்தராயணத்தின் போது ஒரு முறையும், தட்சிணாயணத்தின் போது ஒரு முறையும் நிகழும்.
- சூரியனின் இந்தச் சாய்வானது ஓர் இடத்தின் அட்சரேகையுடன் பொருந்தும் போது இந்த நிகழ்வு ஏற்படுகிறது.
- பெங்களூரு தவிர, கன்னியாகுமரி, போபால், ஐதராபாத் மற்றும் மும்பை போன்ற இடங்களிலும் இந்த நிகழ்வு தென்பட்டது.




## சர்வதேச ICT துறையில் பெண்கள் தினம் - ஏப்ரல் 25

- ஏப்ரல் மாதத்தின் நான்காவது வியாழன்தோறும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) எனப்படும் தொழில்நுட்ப உலகில் பெண்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதைக் தெரிவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த தினத்தினைக் கொண்டாடுவது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகியவற்றில் பங்கு பெற அதிக பெண்கள் மற்றும் இளம் பெண்களை ஊக்குவிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Digital Skills for Life" என்பதாகும்.

## உலக கால்நடை தினம் - ஏப்ரல் 27

- இந்தத் தினமானது ஒவ்வொரு ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- விலங்குகள், மக்கள் மற்றும் சுற்றுச்சூழலின் நலனிற்கு கால்நடை மருத்துவர்களின் பங்களிப்பைக் கொண்டாடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Veterinarians are essential health workers' என்பதாகும்.


## கோங்ஜோம் தினம் - ஏப்ரல் 23

- இத்தினமானது 1891 ஆம் ஆண்டு ஆங்கிலேய-மணிப்பூரிப் போரில் போராடிய ராணுவ வீரர்களின் துணிச்சலை நினைவுபடுத்தும் விதமாக அனுசரிக்கப்படுகிறது.
- மணிப்பூரின் தௌபால் மாவட்டத்தில் உள்ள கோங்ஜோம் என்ற இடத்தில் இந்தப் போர் நடைபெற்றது.
- இது இப்பகுதியில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் தொடக்கத்தைக் குறித்தது.




## உலக நோய்த்தடுப்பு வாரம் - ஏப்ரல் 24 - 30

- தடுப்பூசி வழங்கீட்டு விகிதங்களை நன்கு அதிகரிப்பதும் அனைத்து வயதினரையும் தொற்று நோய்களுக்கு எதிராகப் பாதுகாப்பதும் இதன் குறிக்கோள் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பின் விரிவாக்கப்பட்ட நோய்த் தடுப்புத் திட்டம் (EPI) ஆனது அதன் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Humanly Possible: Immunization for All" என்பதாகும்.




## உலகப் பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான உரிமை தினம் - ஏப்ரல் 28

- 2003 ஆம் ஆண்டில், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) இந்த நாளை நியமித்தது.
- பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 1971 ஆம் ஆண்டு இந்த நாளில் தான், தொழில் சார்ந்தப் பாதுகாப்பு மற்றும் சுகாதார உடன்படிக்கையானது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.




## ஆயுஷ்மான் பாரத் திவாஸ் - ஏப்ரல் 30


- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்று இந்திய அரசினால் ஆயுஷ்மான் பாரத் திட்டம் தொடங்கப்பட்டது.
- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜ்னா அல்லது PM-JAY என்பது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் முக்கிய அங்கமாகும்.
- PM-JAY திட்டம் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- முறையான மருத்துவ வசதிகளை வாங்க முடியாத கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு சுகாதார நலன்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய ஒரு சுகாதாரத் திட்டமாகும்.
- இது சுமார் 10.74 கோடிக்கும் அதிகமான அளவில் ஏழ்மை மற்றும் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் சுகாதாரக் காப்பீடு வழங்குகிறது.



# இதரச் செய்திகள்

## இதுவரை கண்டறியப்படாத மிகப் பழமையான தோல் படிமம்

- குறைந்தது சுமார் 286 மில்லியன் ஆண்டுகள் பழமையான ஒரு படிமமாக்கப்பட்ட முதலையின் தோலினை ஒத்த வகையிலான தோலை தற்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பேலியோசோயிக் கால நில வாழ் விலங்குகளின் தோல் படிமமாக்கப்பட்ட நிகழ்வு மிக மிக அரிதாகும்.
- ஒக்லஹோமாவில் உள்ள ஒரு சுண்ணாம்புக்கல் குகையில் இந்த ஊர்வன இனத்தின் படிமமாக்கப்பட்ட தோல் பகுதி கண்டறியப் பட்டது.




## 900 ஆண்டுகள் பழமையான சாளுக்கியர் காலக் கல்வெட்டு



- தெலங்கானாவின் மகபூப்நகர் மாவட்டத்தின் ஜாட்செர்லா மண்டலத்தில், கல்யாண சாளுக்கியர் வம்சத்தினைச் சேர்ந்த 900 ஆண்டுகள் பழமையான கன்னட மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டு ஆனது கண்டறியப்பட்டுள்ளது.
- இது கி.பி. 1134 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் தேதியன்று (வெள்ளிக்கிழமை) கல்யாண சாளுக்கிய வம்சத்தின் பேரரசர் 'பூலோகமல்லர்' என்றழைக்கப் படும் மூன்றாம் சோமேஸ்வரரின் மகன் மூன்றாம் தைலபாவின் சுங்க அதிகாரிகளால் பொறிக்கப் பட்ட கல்வெட்டாகும்.
- இது சோமநாத கடவுளின் அணையா தீபம் மற்றும் தூபத்தின் மீது விதிக்கப்பட்ட வட்டரவுலா மற்றும் ஹெஜ்ஜுங்கா எனப்படும் சுங்க வரிகளை ரத்து செய்வது குறித்த பதிவுகளைக் கொண்டுள்ளது.

## இந்தியப் பெருங்கடலில் 'புவிஈர்ப்புத் துளை'


- இந்தியப் பெருங்கடலில் உள்ள 'புவிஈர்ப்புத் துளை' என்று குறிப்பிடப்படும் குழிவு ஆனது சுமார் 1.2 மில்லியன் சதுர மைல்கள் வரை பரவியுள்ளது.
- இந்தியாவின் தெற்கு முனையில் இருந்து இந்த வட்ட வடிவக் குழிவு நிலை உருவாகி உள்ளது.
- இது அதிகாரப்பூர்வமாக இந்தியப் பெருங்கடல் புவிக்கோளக் குழிவு என்று அழைக்கப் படுகிறது மற்றும் இது உலகின் மிகப்பெரிய புவிஈர்ப்புக் குழிவு (ஒழுங்கின்மை நிலை) ஆகும்.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தைச் (IISc) சேர்ந்த அறிவியலாளர்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள "புவிஈர்ப்புத் துளைக்கான" மிகவும் நம்பகமான விளக்கத்தை அளித்துள்ளனர்.
- பூமியின் அடி ஆழத்திலிருந்து வெளிவரும் இந்தப் பாறைக் குழம்பின் குவியல்கள், எரிமலைகளின் உருவாக்கத்திற்கு காரணமானவையாகும்.
- பூமியின் ஈர்ப்பு விசை பலவீனமாக இருக்கும் இடத்தில் 'புவிஈர்ப்பு துளை' ஏற்படுகிறது என்ற நிலையில் இதன் விளைவாக கடல் மட்டத்தில் 328 அடிக்கு மேற்பட்ட அளவிலான ஒரு குழிவு ஏற்படுகிறது.



## EEG கண்டுபிடிக்கப் பட்டதன் 100வது ஆண்டு நிறைவு

- ஜெர்மனியின் மனநல மருத்துவர் ஹான்ஸ் பெர்கர் 1924 ஆம் ஆண்டில் மனிதர்களின் உச்சந்தலையில் ஒத்திசைவான மின் செயல்பாடுகள் இருப்பதைக் கண்டறிந்தார்.

- அவர் தன் மூளைக்குள் இருந்து தான் இந்தச் செயல்பாடு உருவானது என்று கருதி, "எலக்ட்ரோ என்செபலோகிராம்" (மூளை மின்னலைப் பதிவு) என்ற சொல்லினை அவர் உருவாக்கினார்.
- முதல் மருத்துவ EEG ஆய்வகம் ஆனது 1937 ஆம் ஆண்டில் மாசாசூசெட்ஸ் பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டது.
- EEG என்பது நரம்பியல் கோளாறுகள் உள்ள அல்லது உள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நோயாளிகளுக்கு மூளையின் மின் செயல்பாட்டை அளவிடுவதற்கான ஒரு மருத்துவப் பரிசோதனையாக பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.




## ஃபனிகிரியில் இக்ஷ்வாகு கால நாணயங்கள்



- தெலுங்கானாவின் பாரம்பரியத் துறையானது சமீபத்தில் புகழ்பெற்ற பௌத்தப் பாரம்பரியத் தளமான ஃபனிகிரியில் நாணயப் புதையல் ஒன்றைக் கண்டறிந்துள்ளது.

- 3,730 எண்ணிக்கையிலான நாணயங்களின் முன்பக்கத்தில் யானைச் சின்னமும், பின்புறத்தில் உஜ்ஜயினி சின்னமும் இருந்தன.
- இந்த நாணயங்கள் இக்ஷ்வாகு காலத்தைச் சேர்ந்தவை என்று இந்த ஆய்வுகள் முடிவு செய்தன.
- இந்தக் கிராமம் ஆனது கி.மு. 1000 முதல் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரையில் அதிக செயல்பாடு மிக்க வாழ்க்கை முறையைக் கொண்டிருந்ததாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## இராட்சத ப்ளியோசர் மண்டை ஓடு கண்டுபிடிப்பு

- இங்கிலாந்தின் டோர்செட்டின் ஜுராசிக் கடற்கரையின் செங்குத்துப் பாறைகளில் வரலாற்றுக்கு முந்தைய காலக் கட்டத்தில் வாழ்ந்த ஒரு இராட்சத கடல் வாழ் உயிரினத்தின் பிரம்மாண்டமான மண்டை ஓடு கண்டறியப் பட்டுள்ளது.
- இந்த மண்டை ஓடு ஆனது சுமார் 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ப்ளியோசர் எனப்படும் கடல் வாழ் ஊர்வன இனத்தின் ஓடாகக் கருதப்படுகிறது.
- டைனோசர்கள் நிலப்பகுதியில் சுற்றித் திரிந்த காலத்தில் ப்ளியோசர்கள் பூமியில் உள்ள பெருங்கடல் பகுதிகளில் காணப்பட்டன.



## எகிப்தில் பதனிடப்பட்ட வாலில்லாப் பெருங்குரங்குச் சடலம்


- 1900 ஆம் ஆண்டுகளில், நைல் நதிக்கரையில் உள்ள கபனாட் எல்-குருத் (குரங்குகளின் பள்ளத்தாக்கு) என்ற இடத்தில் பதனிடப்பட்ட வாலில்லாப் பெருங்குரங்குச் சடலங்கள் கண்டறியப் பட்டன.
- அறிஞர்கள் இங்கு ஆச்சரியப் படும் விதமாக வாலில்லாப் பெருங்குரங்கு இனங்களின் 17 மண்டை ஓடுகள் மற்றும் பெரிய அளவிலான எலும்புகளை கண்டெடுத்தனர்.
- பதனிடப்பட்ட சடலங்களாக கண்டறியப்பட்ட குரங்குகள் பாபியோ அனுபிஸ் மற்றும் பாபியோ ஹமத்ரியாஸ் ஆகிய இனங்களாகும்.
- அவை உண்மையில் ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதி மற்றும் தென்மேற்கு அரேபிய தீபகற்பம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவை.

- மைட்டோகாண்ட்ரியா டிஎன்ஏவைப் பயன்படுத்துவதன் மூலம், இவை இன்றைய கடலோர எரித்திரியாவில் உள்ள பண்டைய நகரமான அடுலிஸ் என்ற பகுதிகளைச் சேர்ந்தவை என்று கண்டறிய முடிந்தது.




## "டெரர் பீஸ்ட்ஸ்" புழுக்களின் புதைபடிவங்கள்

- அறிவியலாளர்கள் முன்னதாக அறியப்படாத, விலங்குகளை வேட்டையாடி உண்ணும் ஒரு புழு இனத்தின் புதைபடிவங்களை கண்டறிந்துள்ளனர்.
- வடக்கு கிரீன்லாந்தின் முற்கால கேம்ப்ரியன் சிரியஸ் பாஸ்செட் புதைபடிவம் கண்டறியப் பட்ட பகுதியில் இந்தப் புதைபடிவங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இலத்தீன் மொழியில் 'பயங்கரமான விலங்கு' என்று பொருள்படுகின்ற டைமோரெ பெஸ்டியா என்று இதற்குப் பெயரிடப்பட்டது.
- இந்தப் பெரிய உயிரினங்கள் 518 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கடல் பகுதியில் வசித்த முற்கால மாமிச உண்ணி விலங்குகளில் சிலவற்றைக் குறிக்கிறது.
- இந்த கண்டுபிடிப்பு ஆனது முன்னர் அறியப்படாத, வேட்டையாடி உண்ணும் இனங்கள் குறித்த தகவல்களை வழங்குகிறது.
- துடுப்புகளுடன் கூடிய டெரர் பீஸ்ட்ஸ் (30 செ.மீ.), நீண்ட உணர் இழைகளுடன் கூடிய ஒரு தனித்துவமான தலையையும், அதன் வாயினுள் மிகவும் வலிமையான தாடை அமைப்புகளையும் கொண்டிருந்தது.
- மகத்தான நீச்சல் திறனுடன் கூடிய இந்த அம்சங்கள், சுமார் அரை பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு முற்கால கேம்ப்ரியன் சகாப்தத்தில் மிகப்பெரிய வேட்டையாடி இனங்களில் ஒன்றாக இவை திகழக் காரணமாயிருந்தன.



## வாசுகி இண்டிகஸ்

- குஜராத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதுகெலும்புடைய உயிரியின் புதைபடிவமானது, டி-ரெக்ஸ் இனத்தை விட நீளமான பாம்பின் எஞ்சிய பாகங்கள் என்று அறிவியலாளர்கள் கூறியுள்ளனர்.
- 2005 ஆம் ஆண்டில் ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அறிவியலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட 'வாசுகி இண்டிகஸ்' என்ற கண்டுபிடிப்பு மிகச் சமீபத்தில் ஒரு மாபெரும் பாம்பு என உறுதிப்படுத்தப்பட்டது.
- அவை 47 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கட்ச் சதுப்பு நிலங்களில் வாழ்ந்தன.
- பல்வேறு உயிரினங்களின், குறிப்பாக ஊர்வனவற்றின் தோற்றம் மற்றும் பரிணாம வளர்ச்சியில் இந்தியாவின் முக்கியமான இணைப்பை இது நிறுவுகிறது.
- ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பாம்பின் 27 முதுகெலும்புகளைக் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் அவற்றில் சில பெரிய மலைப்பாம்பு போல தோற்றமளிப்பதாகவும் விஷமற்றதாகவும் உள்ளன.
- அறிவியலாளர்கள் இந்தப் பாம்பின் நீளம் 11-15 மீட்டர் (சுமார் 50 அடி) என்ற வரம்பில் இருக்க வேண்டும் என்றும் அது சுமார் 1 டன் எடை இருந்திருக்க வேண்டும் என்றும் மதிப்பிடுகின்றனர்.
- அளவின் அடிப்படையில், வாசுகி இண்டிகஸ் ஆனது அழிந்து போன 42 அடி நீளமுள்ள தற்போது வரையில் நீளமானதாக கருதப்பட்ட டைட்டனோபோவா என்ற மிகப்பெரிய பாம்பை விட பெரியதாக இருக்கலாம்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★